வெளியீடு : 27-1-2017 Issued : 27-1-2017

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 1, 2016—தொகுதி 15—எண் 2

Thursday, the 1st September 2016—Volume 15—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை -600 009.

Legislative Assembly Secretariat, Chennai - 600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

1–9–2016

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	401-435
2. தகவல் கோரல்—	
உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்	435-437
3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—	
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு, 2016	437-438
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	437
4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
(அ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை *(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு*	438-489 513-646
மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	438-440, 450, 455, 457, 458, 459, 461-468, 471, 472-474, 475, 522-523, 527-530, 532, 569, 580-585, 592-593, 594, 600-602, 604-640, 643-644

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

*திரு. கு. பிச்சாண்டி	447, 455-460, 462-464, 466-471, 473-477, 639
திரு. துரைமுருகன்	469, 470
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	472, 473, 602-603, 646
திரு. என்.டி. வெங்கடாச்சலம்	478-490
திரு. மு. கோதண்டபாணி	513-521
திருமதி எஸ். விஜயதரணி	521-534, 537-540, 640, 642
மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா	524-526
*மாண்புமிகு திரு. இரா. காமராஜ்	528
மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்	534-579, 590-591, 597, 598
*திரு. எம். தமிமுன் அன்சாரி	535-536, 540-548, 550
திரு. கரி. இராமசாமி	536
*மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்	536,581, 592-593
*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ	549-550
*மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்	550-551
*திரு. எ.பி. சக்திவேல்	551-565

	பக்கங்கள்
4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி*	566
திரு. பெ. சுப்ரமணி	446, 566-569, 573-574, 577-583,5 95, 603-604, 641-642
திரு. அர. சக்கரபாணி	569-570
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	570-572, 591-592
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	572-574
**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்*	574-577
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	578
திரு. மு.க. ஸ்டாலின்	587, 596-597, 646
திரு. இ. பெரியசாமி	588-590, 598-600
**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்*	641
**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்*	643
5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—	491-503
(அ) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைக்க திட்டங்கள், இரத்த வங்கிகளுக்குக் கூடுதல் உபகரணங்கள், ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் தொடங்குதல், நகர்ப்புற ஆரம்ப சுகாதார	491-498

பக்கங்கள்

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்——தொடர்ச்சி

நிலையங்களை மேம்படுத்துதல், மாவட்ட மன நலத் திட்ட விரிவாக்கம், மது போதை மாற்று சிகிச்சை மையங்கள் விரிவாக்கம், பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் புற்றுநோய் கண்டறியும் வசதி, அரசு யோகா மற்றும் இயற்கை வைத்தியக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

(ஆ) சுற்றுலா பெருந்திட்டம் தயாரித்தல் கோயம்புத்தூரில் புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்துதல், அரசு கவின் கலைக் கல்லூரியில் வகுப்பறைகள் புதுப்பித்தல், அரசு அருங்காட்சியகங்களில் தானியங்கி தீத்தடுப்பு ஒலிப்பான்கள், மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்துதல், சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் காட்சியமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், இராமநாதபுரம், அழகன்குளத்தில் விரிவான தொல்லியல் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 498-501

(இ) சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் இயக்குதல் மற்றும் போக்குவரத்துக் கழகங்களில் கருணை அடிப்படையில் பணியிடங்கள் நிரப்புதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 501-502

(ஈ) பூந்தமல்லி மற்றும் திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் இலுப்பூர், ஆம்பூர் மற்றும் முசிறி போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 502-503

பக்கங்கள்

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்——*தொடர்ச்சி*

(உ) அரசு பணிபுரியும் மகளிருக்கு மகப்பேறு விடுப்பினை 9 மாத காலமாக உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 503

6. மக்கள் நல்வாழ்வு, சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகள் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் அரசு பணிபுரியும் மகளிருக்கு மகப்பேறு விடுப்பு கால உயர்வு– முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 504-513

**திரு. எம். தமிமுன் அன்சாரி* 504

திரு. உ. தனியரசு 505-506

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 507

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் 507-508

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்* 508-509

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்* 509-510

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் 510

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்* 511

7. அறிவிப்பு—

சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, குறிப்பேடுகள் வழங்குதல் 646-647

8. அரசினர் தீர்மானம்—

விதி 32–ஐத் தளர்த்துதல் 647

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 648-650

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 16, திருவள்ளுவர் ஆண்டு-2047

2016 செப்டம்பர் 1, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்."

ஒருவரின் கண்ணிற்கு ஆபரணமாக இருப்பது இரக்கம் என்னும் உயரிய பண்பாகும். அந்த இரக்கம் இல்லாத கண்கள் புண்கள் என்றே கருதப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

உயர்மட்ட பாலம்

***463—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், சொக்கனாவூர் அருகில் காட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 செப்டம்பர் 1

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், சொக்கனாவூர் புளியக்குடி கிராமத்தில் கண்ணாற்றின் (காட்டாறு) குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவியில் பூமியின் சுழற்சிக்கு அச்சாணியாகத் திகழும் ஆற்றலரசி; தமிழும், தமிழரும், தமிழ் நிலமும், தலைநிமிர தன்னையே அர்ப்பணித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தவ வாழ்வு வாழும் தங்கத் தாரகை; வெற்றித் தேர் ஏறி தினமும் வீர உலா வரும் வேதா நிலையத்து வீரத்தாய் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தில், சொக்கனாவூர் அருகே, கண்ணாற்றின் குறுக்கே இருக்கும் தரைப்பாலத்தில் மழைக்காலங்களில் அதிக நீர் வரத்து ஏற்படுவதால், மதுக்கூர்-பெருகவாழ்ந்தான் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, மக்கள் அவதியுறும் நிலையுள்ளது. இந்தச் சாலை தஞ்சை மாவட்டத்தையும், திருவாரூர் மாவட்டத்தையும் இணைக்கும் சாலையாகவும் இருந்துவருவதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அந்த இடத்தில் ஓர் உயர்மட்ட பாலத்தை இந்த நிதியாண்டிலேயே அமைத்துத்தர முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், சொக்கனாவூர் புளியக்குடி கிராமத்தில் காட்டாற்றின்*

குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கக் கோரும் சாலை, பாப்பாநாடு-மதுக்கூர்-பெருகவாழ்ந்தான் சாலை கிலோ மீட்டர் 0/0-லிருந்து, 24/8 வரையுள்ள மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கிலோ மீட்டர் 22/2-ல், காட்டாற்றின் குறுக்கே 200 மீட்டர் நீர்வழிப் பாதையில் தற்போது தாம்போக்கி பாலம் உள்ளது. போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் 5.5 மீட்டர் அகலத்தில் ஓடுதளம் உள்ளது. ஆகவே, இந்தத் தாம்போக்கி பாலம் நல்ல நிலையில் உள்ள காரணத்தினாலே, அங்கே மேற்கொண்டு புதிய பாலம் அமைக்கத் தேவையில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் காலங்களிலாவது அதைப் பரிசீலனை செய்து, அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, திட்டக்குடி ஊராட்சி, சூரங்காட்டிலிருந்து எட்டுபுள்ளிகாடு கிராமத்தை இணைக்கும் வகையில், நசுவிணி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கின்ற அந்தப் பகுதியிலே அதிகப் போக்குவரத்து செறிவு, அதிக மக்கள் தொகை இருக்கின்றனவா என்பதையெல்லாம் கணக்கிலேகொண்டு, அங்கே சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, பாலம் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால், நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை. சந்திரசேகர் அவர்கள்.

[2016 செப்டம்பர் 1

திரு. வாகை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியில் அடங்கிய வேளச்சேரி-அடையாறு-திருவான்மியூர் ஆகிய மூன்று பகுதிகளையும் இணைக்கும் சாலை, தரமணி லிங்க் ரோடு. அந்தப் பகுதியில் எப்போதும் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, வேளச்சேரி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, தரமணி லிங்க் ரோடில் மேம்பாலம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பாலப் பணி 108 கோடி ரூபாயில் தற்போது நடைபெற்றுவருகிறது. இப்பணி 23-12-2014-ல் தொடங்கப்பட்டது. தரமணி சாலையில் பொதுப் பணித் துறையால் மிகப்பெரிய வடிகால்வாய் கட்டும் பணி; வேளச்சேரி பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பக்கிங்காம் கால்வாயுடன் இணைக்கும் பணி தரமணி சாலையின் கீழே அமைகிறது. இப்பணி முடியும் தருவாயில் உள்ளது. வேளச்சேரி பாலத்தின் ஒரு தூண் மேற்படி பொதுப் பணித் துறையின் வடிகால்வாயின் அருகில் வருவதால், இரண்டு துறைகளும் இணைந்து, இப்பணியை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வேளச்சேரி பாலம் 33 மாதங்களுக்குள், அதாவது, 22-9-2018-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணைமிகு கோயில், மாண்புமிகு அம்மா அவர்களே தெய்வம், நான் நித்தம் நித்தம் வணங்கும் ஆராதனைக்குரிய இதய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட*

2016 செப்டம்பர் 1]

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து மழைக் காலங்களில் உபரி நீரைத் திறக்கின்றபோது, குன்றத்தூரிலிருந்து நந்தம்பாக்கம் செல்லும் சாலையில் போக்குவரத்துத் தடங்கல் ஏற்படுகிறது. அந்தப் போக்குவரத்துத் தடங்கலைச் சீர்செய்யவும், அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும், அங்கே ஒரு மேம்பாலத்தை அரசு அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ளம் ஏற்படுகின்றபோது அங்கே மக்கள் பாதிக்கப்படுவதாகவும், அங்கே மேம்பாலம் கட்டப்பட வேண்டுமென்றும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஒவ்வோராண்டும் நபார்டு திட்ட உதவியுடன் ஓடையின் குறுக்கே, நதியின் குறுக்கே பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுகூட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ், 80 பாலங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பைத் தந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அங்கே பாலம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றபட்சத்தில், நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

சொந்தக் கட்டடம்

***849—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டையில் உள்ள மின் வாரிய அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில், கந்தர்வகோட்டையில் உதவி மின் பொறியாளர், கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் ஆகிய நான்கு அலுவலகங்கள் உள்ளன. அதில் கிழக்குப் பிரிவிற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு, 25-6-2016 முதல் இயங்கி வருகின்றது. மீதி மூன்று அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அங்கே அரசு நிலம் கண்டறியப்பட்டால், நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை வெற்றிக்குத் தேவையில்லை இந்த ஆறுமுகம்; வெற்றியைத் தேடி தந்ததெல்லாம் வீரத்தாயின் ஒரே முகம்; முகராசியின் திருமுகம், என்றும் ஏறுமுகம், (மேசையைத் தட்டும் ஒலி) வையகத்தில் இதற்கு ஈடில்லை, ஒரு மறுமுகம். பாரதப் போரில் பாண்டவர்கள் பரந்தாமன் கண்ணனின் உதவி கொண்டுதான் வென்றார்கள். இராம காவியத்தில் இராமன், குகன் முதல் அனுமன் உதவியைப் பெற்றுதான் களம் கண்டார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக நிரந்தர முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தங்கத் தாரகை அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தன்னந்தனியாய் நின்று, எண்ணிய காரியம் முடித்து, களம் கண்டார்கள்; வென்றார்கள். ஆதவனை மறைக்க ஆயிரம் கைகள் தேவையில்லை; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் இரட்டை விரல்கள் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) பகலவனே பதுங்கிவிட்டான்; மனித நாகரிகம் பரிணாம*

2016 செப்டம்பர் 1]

வளர்ச்சி, கற்காலம், உலோகக் காலம் முதல் சக்கரம், நெருப்பு, மின்சாரம் என படிகளைக் கொண்டு வளர்ச்சி கண்டது. ஆனால், கடந்த அரசு, நவீன டிஜிட்டல் காலத்திற்கு அழைத்துச் செல்லாமல், நாட்டை பின்னோக்கி கற்காலத்திற்கே அழைத்துச் சென்றது. அதில் ஒரு முக்கிய காரணம் மின் தட்டுப்பாடு. இரவுகளில் ஒளியேற்ற மின்சாரம் இல்லை. (குறுக்கீடுகள்) மெழுவர்த்திதான் ஏற்றலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரிடம் நான் சொல்லிவிட்டேன்; நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

திரு. பா. ஆறுமுகம்: தமிழ்நாடு மின்சார வாரியம் பிச்சைப் பாத்திரமாக இருந்தது; அதை அட்சயப் பாத்திரமாக மாற்றியவர் மாண்புமிகு தமிழக நிரந்தர முதல்வர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக உள்ளது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. சு. புகழேந்தி, உங்கள் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பா. ஆறுமுகம், நீங்கள் கேள்வி மட்டும் கேளுங்கள். கேள்வி நேரத்தில், குற்றச்சாட்டு கூடாது. கேள்வி கேளுங்கள்.

முற்பகல் 10-10

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை பகுதி வானம் பார்த்த பூமி. ஆண்டு முழுவதும் சூரிய சக்திமூலம் மின்சாரத்தை அதிகம் பெற வாய்ப்பு உள்ளது. மின் உற்பத்தியை மேலும் பெருக்கி, அண்டை மாநிலங்களுக்கு அனுப்பும்வகையில், சூரிய சக்தி மின் உற்பத்தியை இப்பகுதியில் ஏற்படுத்த வழிவகை செய்யப்படுமா என்று தாயுள்ளம் கொண்ட தமிழக நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

[2016 செப்டம்பர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படுமா என்று மூலக் கேள்வி கேட்டுவிட்டு, இப்போது சோலார் உற்பத்தி செய்யப்படுமா என்று கேட்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 6,000 மெகாவாட் சோலார் உற்பத்தி செய்யப்படுமென அறிவித்திருக்கிறார்கள். அங்கே சோலார் உற்பத்தி செய்வதற்கு தொழில் முனைவோர் யாரேனும் முன்வந்தால், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் குற்றச்சாட்டாக யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. நான் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. நான் அவரைக் கண்டித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அவரைக் கண்டித்துவிட்டேன். இனிமேல் அப்படிப் பேசாதீர்கள் என்றும் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேட்கச் சொல்லி நான் அறிவுரை வழங்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) பரவாயில்லை. உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள் (குறுக்கீடுகள்).*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பது மரபு. அதைத்தான் நீங்களும் தொடர்ந்து கடைபிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'கடந்த கால ஆட்சி' என்று சொன்னார்கள். கடந்த காலத்திலே அ.தி.மு.க.-தான் ஆட்சியிலே இருந்திருக்கிறது. எனவே, அதைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன்.*

2016 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2461—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகள் மற்றும் 5,068 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 21 இலட்சத்து 79 ஆயிரம் மக்கள் பயன்பெறும்வகையில், காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவடையும்போது, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வாழும் மக்கள் அனைவரும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு அவர் கேட்டிருக்கக்கூடிய திட்டம் மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அல்ல; அது வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் போன்ற இலட்சோப லட்ச இளைஞர்களைத் தன்னுடைய இதய சிம்மாசனத்தில் அமரவைத்து, அரவணைத்துச் செல்லும் எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் தளபதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, ஒரு நகராட்சியையும், 54 கிராம ஊராட்சிகளையும் கொண்ட தொகுதியாகும். ஏறத்தாழ 3 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட தொகுதியாகும். இந்தத் தொகுதியில் சரிவர பருவமழை பொழியாத காரணத்தினாலும், பாம்பாற்றில் நீர்வரத்து இல்லாததாலும், பாலாற்றின் குறுக்கே அணை கட்டியதன் காரணத்தினாலும்,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *நிலத்தடி நீர்மட்டம் கீழே போய்விட்டது. சுமார் ஆயிரம் அடிக்கு ஆழ்துளைக் கிணறு-Bore-well அமைத்தாலும், தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை உள்ளது. எனவே, இந்த அரசு திருப்பத்தூர் நகராட்சிக்கு வழங்கிக்கொண்டிருக்கும் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய 54 கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்திட வேண்டும். எனவே, பொது மக்களின் நலனைக்கருதி, சீரான குடிநீர் விநியோகம் செய்திட, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியினை விரிவாக்கம் செய்து தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலே வறட்சி நிலவுவதாகவும், 1,000 அடிக்கு* Bore-well *போட்டாலும் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய*

பொற்கால ஆட்சியில், சாதனையாக கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 21 ஆயிரத்து 478 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டு, எங்கெங்கு Bore-well தேவையோ, அங்கெல்லாம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட அந்தப் பகுதியிலே ஆய்வு செய்யப்பட்டு, அங்கே தேவை இருப்பின், Bore-well அமைக்கக்கூடிய பணிகள் செய்யப்படும்.

முற்பகல் 10-15

அதேபோல், வேலூர் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகள் மற்றும் 5,068 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள 4 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 4,753 குடியிருப்புகளில் வசிக்கும் 47 இலட்சத்து 34 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன: இதுவொரு மிகப் பெரிய திட்டம். இதுதொடர்பாக, அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்திட, 2015-2016 ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய திட்டம். ஆக, இப்போது அங்கு இருக்கக்கூடிய ஊராட்சிகளிலோ, பேரூராட்சிகளிலோ, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு குடிநீர் வழங்கப்பட வேண்டுமோ, அந்த அளவிற்குக் குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருப்பினும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்ற நிலைமை இருந்தால், கண்டிப்பாக அந்தப் பகுதிகளில் உடனடியாக துறை அதிகாரிகளால் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விடுபட்ட அனைத்துப் பகுதிகளும், காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது பயனடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருப்பத்தூர் கிராம ஊராட்சியிலிருந்து நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 32, 33, 34, 35, 36 வார்டுகளில் உள்ள

பகுதிகளுக்கு, திருப்பத்தூர் நகராட்சியில் செயல்படுத்தப்படும் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கிடும் வகையில், இந்தப் பகுதியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை வருகிற நிதியாண்டில் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த அளவில், எந்தெந்த பேரூராட்சி, எந்தெந்த ஊராட்சி என்று முடிவு செய்யப்பட்டு, குடிநீர்த் திட்டத்திலே தற்போது 16 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் சேர்க்கப்பட்டு, வேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும் மற்றும் 928 ஊரகக் குடியிருப்புகளுக்கும் முறையாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய-NHAI-யினுடைய அனுமதி கிடைக்காததால், வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட அலமேலுமங்காபுரம் மற்றும் 16 ஊராட்சி ஒன்றியங்கள், ஆற்காடு ஊராட்சி ஒன்றியங்கள் 12, (குறுக்கீடு) எனக்குத் தெரியும். அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் எவ்வளவு பகுதிகள் பயனடைகின்றன; அதற்குப்பிறகு இதை எப்படிச் செய்யமுடியாது என்பதை நான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமானால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அனுமதி வாங்கி விட்டுப் பேசுங்கள். வேலூர் ஊராட்சியில் மேலும் நான்கு ஊரகக் குடியிருப்புகள் இருக்கின்றன. இதற்கு NHAI-யினுடைய அனுமதி வழங்கப்படவில்லை. பொதுவாக, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக்கொள்ளும்போது, இந்த இந்த ஊர்களுக்கு, இவ்வளவு குடிநீர் வேண்டும் என்று கணக்கிட்டு, அதற்கேற்ப டிசைன் போட்டு, மதிப்பீடு தயாரித்து செய்கிறோம். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அதன்மூலம் தரமுடியாது. அதனால்தான், 2015-2016-ல் இன்னொரு திட்டத்தை ஆய்வுக்கு எடுத்திருக்கிறோம். அந்தத் திட்டத்திற்கான

2016 செப்டம்பர் 1]

ஆய்வெல்லாம் முடிந்து, அது செயல்பாட்டிற்கு வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் இருக்கக்கூடிய, அவர் சொல்லக்கூடிய பகுதிகளுக்கு குடிநீர் தரக்கூடிய வாய்ப்பை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அவசியமிருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திலே கடுமையான குடிநீர்ப் பிரச்சினை நிலவி வருகிறது. தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தால், இன்றைக்கு ஆயிரம் அடி ஆழ்துளைக் கிணறு அமைத்தாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. ஏற்கெனவே வேடசந்தூர் தொகுதி மற்றும் ஆத்தூர் பகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, நான் சட்டமன்றத்திலே அதை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். இன்றைக்கு அதிகாரிகள் எல்லாம் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தற்போது அந்தச் சாலைகளை எல்லாம், அதாவது, ஒருவழிப் பாதையை இருவழிப் பாதையாக அகலப்படுத்துகின்ற நேரத்திலே, ஏற்கெனவே போடப்பட்ட குழாய்கள் எல்லாம் சேதமடைந்துவிட்ட காரணத்தினால், அதற்கும் போதுமான நிதியொதுக்கி, அவற்றை மாற்றித் தருவதற்குண்டான பணிகளையும் விரைவிலே முடித்துத் தர வேண்டும்.

அதேபோல, பாலாறு-பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம்; ஒட்டன்சத்திரம், பழனி மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியம் பயன்படக்கூடிய வகையிலே 175 கிராமங்களுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. அந்தப் பணிகளிலும் இன்றைக்குத் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அதையும் விரைந்து முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இன்றைக்கு நத்தம், ஆத்தூர், நிலக்கோட்டை, ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய ஐந்து தொகுதிகளுக்கும் ஒரு புதிய திட்டத்தை அறிவித்து, இப்பொழுது

அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பணிகளையும் விரைந்து முடித்தால், அந்த மாவட்டத்திலே இருக்கிற குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீரும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மூன்று பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும். அந்த மாவட்டத்திலே நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், மக்கள் தினந்தோறும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வெளியூரிலே சென்று தண்ணீர் எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர. சக்கரபாணி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். ஆனால், நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவது போன்று பேசாதீர்கள்.

திரு. அர. சக்கரபாணி: எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்கு பலமுறை நானும் பதில் சொல்லியிருக்கின்றேன். கடந்த கால தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட மெயின் திட்டம் முழுமையாக முடிவடையாமலும், 5 கிளைத் திட்டங்கள் முழுமையாக முடிவடையாமலும் உள்ளன. மெயின் திட்டம் முடிந்தால்தான், கிளைத் திட்டங்களுக்குத் தண்ணீர் வழங்க முடியும். இதுகுறித்து ஏற்கெனவே நான் விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்காக விரிவான பதிலைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில், ஒட்டன்சத்திரம் நகராட்சி, கீரனூர் பேரூராட்சி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களைச்

2016 செப்டம்பர் 1]

சார்ந்த 509 ஊரகக் குடியிருப்புகள் உள்ளன. காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வேடசந்தூர், கண்டிவாடி, பாளையம், ஸ்ரீராமபுரம் ஆகிய பேரூராட்சிகளும் மற்றும் ஒட்டன்சத்திரம் நகராட்சியும் பயன்பெறும்வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 7-4-2016 முதல் வாரியப் பராமரிப்பில் உள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குத் தற்போது சராசரியாக நாள்தோறும் சுமார் 0.54 மில்லியன் லிட்டர் M.L.D. தண்ணீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் வழங்கப்பட்டுவருகிறது. மேலும், இந்த நகராட்சியில் பரப்பலாறு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் உறிஞ்சும் கிணறுகள்மூலம் சுமார் 1.80 மில்லியன் லிட்டர் M.L.D. நாள்தோறும் குடிநீர் வழங்கப்பட்டு, அந்த நகராட்சிமூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 70 லிட்டர் வீதம், 32,000 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கீரனூர் பேரூராட்சியில் உள்ள 7,400 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் தினந்தோறும் 5 இலட்சம் லிட்டர் குடிநீர் பேரூராட்சியின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கீரனூர் பேரூராட்சிக்குக் கூடுதலாக 6.50 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும்பொருட்டு, கீரனூர், நெய்க்காரன்பட்டி பேரூராட்சி மற்றும் பழனி ஒன்றியத்தைச் சேர்ந்த 136 குடியிருப்புகளுக்கும், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த 117 குடியிருப்புகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க ரூ.108.08 கோடிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 23-3-2015-ல் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான பணிகள் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நடைபெறுகின்றன. கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு எதுவும் சொல்லக்கூடாது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்தாலும், உடனடியாகச் செயல்பாட்டிற்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.636 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டத்தைச் செயல்படுத்திட

உத்தரவிட்டிருக்கிறார்கள். 23-3-2015 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன், மேற்கூறிய திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்படும்.

ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களைச் சேர்ந்த 509 ஊரகக் குடியிருப்புகளில், 446 குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்படும் 10 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 30 லிட்டர் மற்றும் உள்ளாட்சித் துறையின்மூலம் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வீதம் மொத்தம் 40 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 63 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும்பொருட்டு, நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்திட்டம் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில், 109 குடியிருப்புகளில், 59,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.08 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கான பணிகள் இதுவரையில் 90% முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவடையும்போது, ஊரகக் குடியிருப்புகளில் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் கிடைக்கப்பெறும்.

மேலும், காவேரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தொப்பம்பட்டி ஒன்றியத்தில் 101 குடியிருப்புகளில் உள்ள 43,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்திட்டத்திற்கான 85% பணிகள் இதுவரை முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள பணிகள் இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவடையும்போது, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும்.

மேற்கண்ட திட்டங்களெல்லாம் முடிவடையும்போது, அந்த இடங்களில் தண்ணீர்ப் பிரச்சினையே இருக்காது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

2016 செப்டம்பர் 1]

தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். இனியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசவே கூடாது என்பதற்காகத்தான் விளக்கமாகப் பதிலளித்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

பசுமை வீடுகள்

***4369—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குக் கூடுதலாக பசுமை வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எனது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்கி, பதிலைத் தொடங்குகின்றேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சொந்த நிதியிலிருந்து 260 கோடி ரூபாயை ஒதுக்கி, 10,000 பசுமை வீடுகளை நெசவாளர் பெருமக்களுக்காகக் கட்டிக் கொடுத்து, பணிகள் முடிக்கப்பட்டு, அவர்கள் அந்த வீடுகளில் குடியேறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு வீடும் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 365 சதுர அடி பரப்பளவில், கட்டப்படுகின்றன. நெசவாளர் பெருமக்கள் சொந்த இல்லங்களிலே நெசவுத் தொழிலைச் செய்கிற வசதியோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பசுமை வீடுகளைச் சிறப்பாகக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

செய்யாறு தொகுதியில் 5 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கமும், 4 பருத்தி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சங்கம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவருவது சிறப்புக்குரிய ஒன்றாகும். செய்யாறு தொகுதியில் இருக்கக்கூடிய 5 கூட்டுறவுச் சங்கங்களும், கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.3.81 இலட்சம் இலாபத்தை ஈட்டியிருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 98 வீடுகளை அந்தப் பகுதியிலே கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாள் சாதனை கண்ட பொன்னாளில், நன்மைகள் பல விளைந்த நன்னாளில், முதல் பரிசாக 100 கோடி ரூபாயை நான் சார்ந்திருக்கின்ற தொகுதியான செய்யாறு* SIPCOT *வளாகத்திற்கு வாரி வழங்கி, 100 ஆண்டுகள் ஆட்சி நடத்தப்போகும் அறிவியல் அதிசயமே! (மேசையைத் தட்டும் ஒலி) அற்புதத் தலைவியே! கொடை உள்ளமும், கருணைப் பார்வையும், (மேசையைத் தட்டும் ஒலி) கூர்ந்த மதியும், உயர்ந்த உள்ளமும் கொண்ட, உலகம் வியக்கும் உன்னதத் தலைவியே! நெசவாளர்களின் நேசமே! தொழிலாளர்களின் பாசமே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஏழையெளிய, கூட்டுறவு மற்றும் தனியார் கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலே, கடந்த ஆண்டு, 98 பசுமை வீடுகளைக் கட்டித் தந்ததாகக் கூறினார்கள். நான்

சார்ந்திருக்கின்ற செய்யாறு பகுதியில் நெசவாளர்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, தயவுகூர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நெசவாளர்களின் நலன் கருதி, பசுமை வீடுகள் வழங்கிய பாசத் தாய், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) என் அன்புத் தாய், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம், அம்மா அவர்களால் வழங்கப்படுகின்ற பசுமை வீடுகள் திட்டத்தை விரிவுபடுத்திட வேண்டும். மானம் காக்கும் நெசவாளர்களின் மனம் நிறைந்த மக்கள் தலைவராக வாழும், எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, தனியார் நெசவாளர்களுக்கும் மற்றும் ஏழையெளிய நெசவாளர்களுக்கும் பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற குடிசை வீடுகள் அனைத்தையும் முழுமையாக மாற்றி, அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 செப்டம்பர் 1

133—

புதிய குடியிருப்புகள்

***1846—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 60-வது வட்டம், கிளைவ் பேட்டரி அருகில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளை அகற்றிவிட்டு, புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை, துறைமுகம் தொகுதி 60-வது வட்டம், கிளைவ் பேட்டரி அருகில் துறைமுகம் பகுதி திட்டத்தில் 234 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1993 ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. இதுபோன்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித் தன்மையை, அதாவது, structural stability*-யைக் கண்டறிய, 8-8-2016 அன்று குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்தொழில்நுட்பக் குழு, துறைமுகம் திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித் தன்மையை ஆராய்ந்து வருகிறது. இக்குழுவின் பரிந்துரைக்கேற்ப, சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை மீண்டும் கட்ட, குடிசை மாற்று வாரியத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

2016 செப்டம்பர் 1]

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கித் தந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) இனிமையும், வலிமையும் ஒருசேரப் பெற்ற, அடக்குமுறைக்கு அஞ்சாமல், கூப்பிடும் தூரத்தில் பயணிக்கின்ற, அபயக் குரலுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்ற எங்கள் அன்புத் தளபதி அவர்களுக்கு இரண்டாம் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) துறைமுகம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட கிளைவ் பேட்டரி, கல்யாணபுரம், எல்லீஸ் நகர் போன்ற பகுதிகளில் கட்டப்பட்டிருக்கின்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் அனைத்தும் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட குடியிருப்புகள் என்பதாலும், அந்தக் குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதி கடற்கரையை ஒட்டிய பகுதி என்பதாலும், உப்புக் காற்றினால் இந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் குறைந்த ஆண்டுக் காலமே தரம் வாய்ந்தவையாக இருப்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்திருக்கின்ற structural stability-ஐ கண்டறிவதற்கான ஆய்வுக் குழு, அந்தப் பகுதியோடு மாத்திரம் தனது ஆய்வுப் பணியை நிறுத்திவிடாமல், ஒட்டுமொத்தமாக—குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக-அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கின்ற 1,69,000 குடியிருப்புகளும், அதில் 60 சதவிகிதத்திற்குமேல் காமராஜர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகள் முதற்கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட குடியிருப்புகள் முதற்கொண்டு, கிட்டத்தட்ட 80,000-க்கும் மேற்பட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அதைப்பற்றியெல்லாம் மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுங்கள். (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: கேள்வியைத்தானே கேட்கிறேன். Controversial ஆக நான் எதையும் சொல்லவில்லையே? அண்மையில் JICA என்ற அமைப்பின் வாயிலாக வழங்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.400 கோடியை இந்தத் திட்டங்களுக்குச் செலவிடப்பட இருப்பதாக அறிகிறோம். அதில் துறைமுகம் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, பழுதடைந்த மற்றும் சிதிலமடைந்த குடிசை மாற்று வீடுகளுக்குப் பதிலாக, நொச்சிக்குப்பத்தில் தலைவர் கலைஞர் ஆட்சியில் 450 சதுர அடி கொண்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சேகர்பாபு, ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு அமருங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *நான்* controversial *ஆக எதையும் சொல்லவில்லையே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுகிறமாதிரி பேசினால், நான் என்ன செய்யமுடியும்? (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *அதுபோன்று, தற்போது 300 சதுர அடியில் இருக்கின்ற இந்த வீடுகளுக்குப் பதிலாக, 450 சதுர அடி கொண்ட வீடுகளைக் கட்டித் தருமாறும், குடிசை மாற்று வாரியத்திலே கழிவுநீர் அடைப்பு ஏற்படுகின்றபோது, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இப்படிப் பேசிக்கொண்டேயிருந்தால், இதற்குமேல் நான் என்ன செய்வது?*

திரு. பி.கே. சேகர்பாபு: *நான் கேள்வியைத்தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேட்காமல், நீங்கள் 5 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஒரு கேள்வியைக் கேளுங்கள் என்றால், நீங்கள் இதுமாதிரி பேசிக்கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்?*

திரு. பி.கே. சேகர்பாபு: *அந்தக் கழிவுநீர் அடைப்புகளை விரைவாக எடுப்பதற்கு போதிய பணியாட்கள் இல்லை. போதிய பணியாட்களைக் கொண்டு கழிவுநீர் அடைப்பை எடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா என்பதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, நான் பதிலளித்தபோது, 8-8-2016 அன்று இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.*

2016 செப்டம்பர் 1]

அதுபோல், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட சில அடுக்குமாடிக் குடியிருப்புகள் காலக்கடப்பு, பயன்பாடு, தேய்மானம் மற்றும் காற்று மண்டலத்தின் விளைவுகளின் காரணமாக சிதிலமடைந்து வருகின்றன. இக்குடியிருப்புகளின் பாதிப்புத் தன்மை குறித்து தொழில்நுட்பக் குழுவினரால் அறியப்பட்டு, அதன் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு, பழுதடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்குடியிருப்புகளைக் கட்டும் பணிகள் மைய மற்றும் மாநில அரசுகளின் நிதியாதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 3,518 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கழிவுநீரைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, அனைத்துப் பகுதிகளிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையில் பேசுவதைப் பின்னர் பேசலாம். கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 355 குடியிருப்புகள் கட்டப்பட்டதாக அறிவித்திருக்கிறீர்கள். தொடர்ந்து இந்த ஆண்டு, குறைந்தபட்சம் 10 ஆயிரம் குடியிருப்புகளையாவது புதுப்பித்துக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்-I, II, தமிழ்நாடு புறநகர் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டப் பகுதிகளில்,

வீட்டுமனைகள் என்று புதிதாக 394 மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த 394 மனைகளில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சேகர்பாபு, நீங்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் என்ன பதிலைச் சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காதில் வாங்கிக்கொள்ள வேண்டும். கடந்த ஐந்தாண்டுகளில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 3,518 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் 355 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன என்று சொல்கிறார்கள். ஆகவே, 3,518 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜாதோட்டம் பகுதியில் 84 குடியிருப்புகளும், ஜமாலியா லைன் பகுதியில் 128 குடியிருப்புகளும் மற்றும் கௌதமபுரம் பகுதியில் 448 குடியிருப்புகளும் இருக்கின்றன. இவையெல்லாம் 1973, 1976 ஆம் ஆண்டிகளிலே கட்டப்பட்ட குடியிருப்புகளாகும். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, பழுதடைந்த நிலையில் இருக்கக்கூடிய குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிதாகக் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தக் குடியிருப்புகளில் உள்ள கட்டடங்களெல்லாம் நாற்பது ஆண்டுக் காலத்திற்கு முன்பாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களாக இருப்பதால், இப்பொழுது மிக, மிக பழுதடைந்த நிலையிலே, ஆபத்தான ஒரு சூழ்நிலையிலே*

இருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் உடனடியாக இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டிய அவசியத்தை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கொளத்தூர் பகுதிகளிலும் வல்லுநர் குழு ஆய்வு செய்து, தேவைப்படுமாயின், நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

134—

பன்னோக்கு மருத்துவமனை

***2039—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை பன்னோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2016 செப்டம்பர் 1

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகும். மேற்படி மருத்துவமனை 543 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகின்றது. மேலும், அந்த மருத்துவமனை, மருத்துவர்கள், மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள், போதுமான உபகரணங்களைக் கொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகின்ற காரணத்தால், தற்போது, இந்த மருத்துவமனையை Multi-Speciality *மருத்துவமனையாக தரம் உயர்த்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி என்பது இந்த அவையிலே இருக்கக்கூடிய அத்தனைபேரையும் உருவாக்கித் தந்திருக்கக்கூடிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்திட்ட பூமியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மண்ணை மாவட்டத் தலைநகரமாக மாற்றி, சற்றேறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபிறகும், மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையாக இருக்கக்கூடிய காஞ்சிபுரம் மருத்துவமனையில், இன்னும் மேம்படுத்தப்பட வேண்டிய வசதிகள் இருக்கின்றன. அதைக் கோரித்தான் இந்தக் கேள்வியை நான் எழுப்பியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதிலினை வழங்கியிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையில் 400-க்கும் மேற்பட்டவர்கள் உள் நோயாளிகளாகவும், 2,800-க்கும் மேற்பட்டவர்கள் வெளி நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அங்கே பல்வேறு அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், தனியாக* Ortho Department *என்ற ஒன்று இல்லை. அதேபோல தலைக்காய சிகிச்சைப் பிரிவும் இல்லாமல் இருக்கிறது.*

2016 செப்டம்பர் 1]

முற்பகல் 10-40

ஒரு மாதத்திற்கு சராசரியாக எடுத்துக்கொண்டோமேயானால், ஜூலை மாதத்தின் புள்ளிவிவரத்தின்படி 168 பேர் விபத்தில் அடிபட்டு அம்மருத்துவமனைக்கு வந்து, 12 பேர் head injury-க்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், அங்கே தலைக்காய சிகிச்சைப் பிரிவு இல்லாத காரணத்தால், மேல் சிகிச்சைக்காக அவர்கள் higher institution-க்கு refer செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று, Chest மற்றும் organs crush injury மூலமாக பாதிக்கப்பட்டவர்கள் 5 நபர்கள்; both bones injury என்று சொல்லக்கூடிய கை, கால் முறிவுகள் ஏற்பட்டிருக்கக்கூடியவர்கள் 3 பேர். ஆக, விபத்தினால் பாதிக்கப்பட்ட 168 பேர் சிகிச்சைக்காக வந்த நிலையில், சற்றொப்ப 20 பேருக்கும் மேற்பட்டவர்களை higher institution-க்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைக்கக்கூடிய நிலையில்தான் இன்றைக்கும் அந்த மாவட்ட தலைமை மருத்துவமனை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அங்கே Trauma Care-க்கென தனியாக சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்தித் தந்து, அதன்மூலமாக காஞ்சிபுரத்திலுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை பன்னோக்கு மருத்துவமனையாக மேம்படுத்தித் தரவேண்டும். ஏனென்றால், சற்றொப்ப நான்கரை இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய தொகுதி அது. அதோடுமட்டுமல்லாமல், அந்தத் தொகுதிக்கு அருகில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள். இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: இதோ முடித்துவிடுகிறேன். காஞ்சிபுரத்திற்கு அருகில் இருக்கக்கூடிய உத்திரமேரூர், தூசி, வந்தவாசி, காவேரிப்பாக்கம் போன்ற பகுதிகளிலுள்ளவர்களும் காஞ்சிபுரத்திற்கு வந்து சிகிச்சை பெறவேண்டிய நிலை இருப்பதனால், கிட்டத்தட்ட 6 இலட்சம், 7 இலட்சம் மக்களுக்கான ஒரு மருத்துவமனையாக அங்கே அது இருக்கக்கூடிய நிலையில், அந்த மருத்துவமனையை multi-speciality மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 செப்டம்பர் 1

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே திட்டங்களை அள்ளிக் கொடுக்கக்கூடிய ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு என்னென்ன தேவைகள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறாரோ, அத்தனை தேவைகளையும், அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் உருவாக்க வேண்டுமென்ற சிந்தனை 2014 ஆம் ஆண்டே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உதித்தது. காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையை* multi-speciality *மருத்துவமனையாக உருவாக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கின்ற அந்த எண்ணம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சிந்தனையில் ஏற்கெனவே உருவாகிய காரணத்தால்தான், மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மொத்தம் 16 மருத்துவமனைகளை, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு ஆணை எண் 127-ன்மூலம், ரூ.78 கோடியை ஒரே நேரத்தில் கொடுத்து, அவற்றை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையான மருத்துவமனைகளாக உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய காஞ்சிபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரிக்கு இணையான தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு, புதிய கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டு, புதிய உபகரணங்கள் எல்லாம் வழங்கப்பட்டு செயலாற்றிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வந்த தகவல் முற்றிலும் தவறான தகவல். அவர் Ortho Department *தனியாக வேண்டுமென்று கேட்கிறார். ஆனால், அவர் கேட்ட விபத்துக்கான சிகிச்சைப் பிரிவு* (Accident Trauma Centre) *காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இருக்கிறது. இன்னொன்று;* Ortho Department *தனியாக அங்கே வேண்டுமென்றும் அவர் சொல்கிறார். தயவு செய்து ஒரு முறை அவர் அங்கே ஆய்வு செய்யவேண்டும். அங்கே மிகச் சிறப்பாகச் செயல்படுகிற துறை* Ortho Department. *நான் தகவலுக்காகச் சொல்கின்றேன்; மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே 67 பேர்களுக்கு*

2016 செப்டம்பர் 1]

hip replacement - இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை அங்கே சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது; 20 பேர்களுக்கு knee replacement- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மிகச் சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த 24 X 7 மகப்பேறு பிரிவு, கண் பரிசோதனைப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, ENT பிரிவு, விஷ முறிவுப் பிரிவு ஆகியவை இருக்கின்றன; Yoga and Naturopathy பிரிவும் இருக்கிறது. ஒரு மருத்துவமனைக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமென்று அவர் விரும்புகின்றாரோ, அத்தனை வசதிகளும் காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு மிகச் சிறப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அவர் மூலக் கேள்வி கேட்டிருக்கிறார். அவருக்கு வாய்ப்புத் தராமல் எப்படி உங்களுக்குத் தர முடியும்?

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய பதிலில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. Total hip replacement அதிகமாக செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, laproscopic surgery-யும் செய்யக்கூடிய அளவுக்கு வசதிகள் அங்கே இருந்தாலும், அங்கே தற்போது உள்ள நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கு, MRI scan வசதி இல்லை; Mammogram scan வசதி கிடையாது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அந்த மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மின் தடை ஏற்பட்டால், தொடர்ந்து மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான D.G set வசதிகூட போதுமான அளவுக்கு அங்கு இல்லை என்று சொல்கிறார்கள். அந்த D.G. set-க்குப்பதிலாக, மின்சாரத் துறைமூலம் separate feeder வழங்கி தடையில்லா மின்சாரம் வழங்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை வழங்க வேண்டுமென்று சொன்னால், 37 இலட்சம் ரூபாய் அளவில் deposit செய்யவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், மகப்பேறு பிரிவு அங்கே சிறப்பாக இருக்கிறது. ஆனால் அது இரண்டாவது, மூன்றாவது தளத்தில் செயல்படுவதால், நோயாளியை அறுவை சிகிச்சை அரங்கிற்கு ramp மூலமாகத்தான்

கொண்டுசெல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அங்கே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு lift அமைத்துத் தரும்பட்சத்தில், அது நிச்சயமாக மகப்பேறுக்காக வருகின்ற நோயாளிகளை அழைத்துச் செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். அதைப்போல, அங்கே 3 Dialysis machines இருக்கின்றன. கூடுதலாக ஒரு Dialysis machine வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவற்றுக்கெல்லாம் மேலாக. . .

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி கேளுங்கள் என்று சொன்னால், இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி? (குறுக்கீடு) இப்படி ஒத்துழைக்காமல் இருந்தால், நான் எல்லோருக்கும் எப்படி வாய்ப்புத் தர முடியும்? உங்களை ஒரு கேள்வி கேட்பதற்கு அனுமதித்தால், நீங்கள் 5, 10 நிமிடங்களாக ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களுக்கு நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்?

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: அங்கே 63 மருத்துவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். M.N.A., F.N.A. போன்ற பணியிடங்களெல்லாம் காலியாக இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சிறப்பான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த ரூ.37 இலட்சம் deposit தொகை மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சார்பிலே உடனடியாக வழங்கப்படும். தேவையான அனைத்து வசதிகளையும் செய்வது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் (குறுக்கீடு) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். பிறகு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்

2016 செப்டம்பர் 1]

திரு. ஆர். கணேஷ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் கேள்வி கேட்டு முடித்துவிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலும் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இந்த அவையிலுள்ள 90 சதவீதம் பேர் நிச்சயமாக உதகை நகருக்கு வந்து சென்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன். குறிப்பாக, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் தோட்டக்கலைத் துறையில் மட்டும் 25 இலட்சம் பேர் சுற்றுலாப் பயணிகளாக உதகைக்கு வந்து, கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு வருவாய் ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில், உதகையில் ஏதாவதொரு அசம்பாவிதம் நடந்தாலும், பாதிக்கப்பட்டவர்களை அங்கிருந்து கோவைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. கோயம்புத்தூர் வந்து சேர்வதற்குள் 4 மணி நேரம், 5 மணி நேரம் ஆகிவிடுகிறது. கூடலூர் போன்ற பகுதிகளிலிருந்து வருவதற்கும் 7, 8 மணி நேரம் ஆகிறது. ஆகவே, உதகையில் ஒரு Multi-Speciality Hospital-ஐ அமைத்துத் தந்தால், நிச்சயமாக உதகைக்கு வருகின்ற மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் உதகைக்கு வந்து செல்கிறார்கள். எனவே, சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, உதகையில் ஒரு Multi-Speciality Hospital-ஐ அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உதகையில் parking வசதியும் சரியாக இல்லை. Race Course பகுதியில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில், இரண்டு ஏக்கரில் parking வசதி செய்து கொடுத்தால், சுற்றுலா மேம்பாட்டிற்குச் சிறப்பாக இருக்கும். அனைத்துச் சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். இதன்மூலம் அரசுக்கு வருவாய் பெருகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசம் என்றாலும்கூட, மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய நீலகிரி மாவட்டத்தை சிறப்பு நிகழ்வாகக் கருதி, கூடலூர், கோத்தகிரி போன்ற பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளிலெல்லாம் M.R.I., C.T. scan வசதிகளை தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறுவி, தனது பொற்கரங்களால் அவற்றைத் திறந்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது மலைப் பிரதேசம் என்ற காரணத்தினாலே, அங்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசால், படிப்படியாக அனைத்து வசதிகளும், தேவைக்கேற்ப, நிதிநிலைமைக்கேற்ப ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

135—

வேளாண்மைக் கல்லூரி

***60—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 *செப்டம்பர் 1]*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, நீங்கள் இருளில் இருப்போரை வெளிச்சத்திற்கு மாற்றும் மெழுகுவர்த்தி! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் விரல் அசைவால் வரங்களைப் பொழியும் கார்மேகம்! அம்மா, நீங்கள் ஆழ்ந்த ஞானத்தால், தாழ்ந்த சமூகத்தை உயர்த்திக் காட்டும் கோபுரம்! (மேசையைத் தட்டும் ஒலி) மெழுகுவர்த்தி, கார்மேகம், கோபுரம் இவை யாவும் தனக்காக வாழ்வதில்லை. தாயே! நீங்கள் எங்களுக்காக உழைத்து வாழ என்றும் தயங்குவதில்லை. நீதியான செங்கோல், நேர்மையான மணிமகுடம், நிம்மதியான ஆட்சி, அதுவே தமிழகத்தின் காட்சி! கலிபோர்னியா நாட்டின் சுதந்திர தின விழாவில் 'மக்கள் தலைவர்' என்ற உயரிய விருதினைப் பெறவிருக்கின்ற மகத்தான மக்கள் தலைவி, மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர் பாதங்களைப் பணிவோடு பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-50

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியானது, நாகை, தஞ்சை மற்றும் அரியலூர் மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்ட தொகுதி; வேளாண் தொழிலை ஆதாரமாகக் கொண்ட தொகுதி; ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களை உள்ளடக்கிய மிகவும் பின்தங்கிய தொகுதி. ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கத் தேவையான இடம் இருக்கிறது. இப்பகுதியிலுள்ள மாணாக்கர்களின் எதிர்கால நலன் கருதி, கருணையே வடிவமான மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.*

ஒரு வேளாண்மைக் கல்லூரியைப் புதிதாகத் தொடங்க வேண்டுமானால், ரூபாய் 50 கோடி நிதியும், குறைந்தது 110 ஏக்கர் விவசாய நிலமும் தேவைப்படுகிறது. ஒவ்வொரு கூடுதல் பட்டப் படிப்பினையும் அளிக்க வேண்டுமானால், 50 ஏக்கர் நிலம் அதிகப்படியாகத் தேவைப்படுகிறது. மேலும், காட்டுமன்னார்கோவிலுக்கு அருகில், திருவண்ணாமலை, வாழவச்சனூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, கடலூர் மாவட்டத்தில் தனியார் வேளாண் கல்லூரிகளும் இருக்கின்றன. காட்டுமன்னார்கோவில் தொகுதியில் உள்ள மாணவர்கள் இந்தக் கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெறலாம்.

மேலும், கடலூரில் செயல்பட்டுவரும் கரும்பு ஆராய்ச்சி நிலையம், திண்டிவனத்தில் செயல்பட்டுவரும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம், கடலூர் மாவட்டம், பாலூரில் செயல்பட்டுவரும் காய்கறிப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையம், கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் செயல்பட்டுவரும் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையங்களைத் தொடர்பு கொண்டு விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கான விளக்கங்களையும், தொழில்நுட்ப வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தத் தருணத்தில், இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாதவகையில், மகளிருக்கென தனியே ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை ஏற்படுத்தி, மகளிரின் கல்விக்கு ஏற்றம் தந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்வதில் பெருமை அடைகிறேன்.

எனவே, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கக் கருத்துரு தற்போது எதுவும் பரிசீலனையில் இல்லை என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச்சென்று சமர்ப்பிப்பேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி தந்த கலைச்செல்வி, காவியம் கண்ட பெருந்தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கவனத்திற்கு என்னுடைய கோரிக்கை கொண்டு செல்லப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையிலே இதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து raise பண்ண நான் அனுமதி தரமுடியாது. ** குறித்தெல்லாம் அவையில் பேசமுடியாது. நீங்கள் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதுகுறித்து பேசுவதையெல்லாம் நான் அவைக்குறிப்பில் ஏற்ற முடியாது. (குறுக்கீடுகள்) ** குறித்துப் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிற்கு நான் கொண்டுவரமுடியாது. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதுகுறித்துப் பேசாமல், வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசவும். (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அனுமதியில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 1

அதுகுறித்துப் பேச நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) ** குறித்தெல்லாம் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்) ** பற்றியெல்லாம் நீங்கள் இங்கு அவையில் raise பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அதற்கு நான் அனுமதி அளிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. அர. சக்கரபாணி அவர்கள் இன்று காலையில் என்னுடைய அறையில் என்னிடம் இதைக் கொடுத்து கேட்டவுடனே, நான் தெளிவாக அவருக்குச் சொல்லிவிட்டேன். "எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து அவையில் பேசுவதற்கு அனுமதி கேட்டால், நான் அனுமதிக்க முடியாது" என்று சொல்லிவிட்டேன். எனவே, நீங்கள் அவையில் இதை record செய்வதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால் சொல்லுங்கள்; நான் பேச அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் நீங்கள் அவையில் record செய்ய முடியாது. நீங்கள் ** சம்பந்தமாகப் பேசியது உட்பட அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அதுகுறித்து அவையில் பேச அனுமதிக்கமுடியாது. (குறுக்கீடுகள்) அவையில் அதுகுறித்துப் பேச அனுமதிக்கமுடியாது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச எழுந்துவிட்டார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 செப்டம்பர் 1]

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 2016 ஆம் ஆண்டு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் அவைக் குறிப்பிற்கு வராது, அது நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு ஏதாவது பேசுகின்றீர்களா? (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாக அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) அது சம்பந்தமாக பேச அனுமதி இல்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(அ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41 - வருவாய்த் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தின் தலைசிறந்த பேச்சுகளாக சில அறிஞர்கள், தலைவர்களின் பேச்சுகள் இன்னும் வரலாற்றின் பக்கங்களில் பேசப்படுகின்றன. 1863 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாளில், அமெரிக்காவின்* Kettle Park *போர்க்களத்தில் ஆப்ரஹாம்*

லிங்கன் அவர்கள் பேசிய 2 நிமிட பேச்சு, இன்னும் வரலாற்றின் பக்கங்களில் பேசப்படுகின்றது. அதேபோல, 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் அமெரிக்காவின் Chicago நகரத்தில் Illinois மாநிலத்தில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் பேசிய சுவாமி விவேகானந்தர் "Sisters and Brothers of America" என்று சொன்னவுடன், அங்கே அமர்ந்திருந்த 7,000 பேரும் எழுந்து நின்று கைதட்டியது இன்றும் வரலாற்றின் பக்கங்களில் பேசப்படுகின்றது. அதேபோல, 1940 ஆம் ஆண்டு, மே மாதம் 13 ஆம் நாள், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் Winston Churchill பேசினார்; - "You can ask me one question; what is your aim? உன்னுடைய குறிக்கோள் என்னவென்று என்னிடம் கேளுங்கள்: I will answer in one word; நான் ஒரே வார்த்தையில் பதில் கூறுகின்றேன்" என்றார். That is victory-அதுதான் வெற்றி என்ற ஒரே சொல். இன்றைக்கு இந்தப் பேச்சு வரலாற்றின் பக்கங்களில் பேசப்படுகின்றது.

அதேபோல, உலக வரலாற்றிலே வாழும் மனித தெய்வம் நம் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், தனி மனித இராணுவமாய் தமிழகம் முழுவதும் சூறாவளியாய் சுழன்று சுற்றி வந்து, "அமைதி, வளம், வளர்ச்சி" என்பதை வலியுறுத்தி, சத்தியத்தை முன்வைத்து, கோடிக்கணக்கான மக்கள் மத்தியில், "மக்களால் நான்; மக்களுக்காக நான்" என ஆற்றிய தேர்தல் பிரச்சார உரை, (மேசையைத் தட்டும் ஒலி) "மக்களால் நான், மக்களுக்காக நான்" என ஆற்றிய தேர்தல் பிரச்சார உரை, வஞ்சகர்களின் சூழ்ச்சிகளையெல்லாம் உடைத்து, தவிடுபொடியாக்கி, 32 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசியல் புரட்சியாக அன்னைத் தமிழகத்தில், ஆளுகின்ற கட்சியே தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிற்கு வர முடியும் என்பதை இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்டியதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டின் வரலாற்றில் ஆறாவது முறையாக அன்னைத் தமிழகத்தின் தன்னிகரில்லா முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்ற நம் அம்மா அவர்கள்தான், இனி அன்னைத் தமிழகத்தை எந்நாளும் புகழோடு ஆள வேண்டும் என்று மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைக்கு உருவம் தந்து, தர்மத்திற்குத் தலைமை தாங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய தேர்தல் பிரச்சார உரைதான் இன்று உலக வரலாற்றின் பக்கங்களில் என்றைக்கும் பேசப்படும் வகையில் வெற்றிச் சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கின்றது.

(மேசையைத் தட்டும் ஒலி) இது வெறும் வார்த்தைகள் அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வார்த்தைகளாலான புகழுரை அல்ல; கோடானுகோடி தமிழக மக்களின் சத்திய வாக்கு என்பதை இங்கே எடுத்துச் சொல்லி, எங்கள் உயிரினும் மேலான தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின், மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின், தமிழர்குல சாமி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.*

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3659, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3829, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3884, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4261, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 354, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 573, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 841, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் தற்போது வழங்கப்படும் முதியோர் உதவித் தொகையை ரூ.1,000/-த்திலிருந்து ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 980, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1012, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேத்துப்பட்டு தாலுகாவிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1168, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1365, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி தொகுதி, லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1619, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2135, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வருவாய்க் கிராமங்களில் வழங்கப்படும் முதியோர் உதவித் தொகையை தகுதி வாய்ந்த அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2358, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2539, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2694, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2711, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2735, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1969 ஆம் ஆண்டு, கூடலூர் ஜெமி ஒழிப்புச் சட்டப் பிரிவு 17-ன்கீழ் உள்ள பூமிக்கு திருத்தாணை வெளியிட்டு, பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2769, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பென்னாகரம் தொகுதியில், வட்டுவனஅள்ளி ஊராட்சி, காந்திநகர் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு அவர்கள் உழவு செய்கின்ற நிலத்திற்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2871, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2891, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கி. சரவணன்.

திரு. துரை கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2918, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஒலக்கூர் ஊராட்சியின் துணை கிராமமான, எஸ். கடூரை மைலம் தொகுதிக்குப் பதிலாக, திண்டிவனம் தொகுதிக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2957, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதியில் முதியோர்/விதவை ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு ஓய்வூதியம் விரைந்து ஒப்பளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3037, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3128, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் நகரம், சின்னச்சுரைக்காய் பட்டித் தெரு, சத்துரணைப் பகுதி, அண்ணாநகர் பகுதிவாசிகளுக்குப் பட்டா வழங்குதல், முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளி உதவித் தொகை, விதவை உதவித் தொகை ஆகியவற்றைக் கோரிய மனுக்களை விரைந்து பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3135, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் குருமன்ஸ், குரும்பர் இன மக்களுக்குப் பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3429, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3481, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

***திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்பெண்ணாத்தூர் தாலுகா அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3717, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாற்றில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3745, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதியில் உள்ள சில ஊர்களை முசிறி தாலுகாவில் இருந்து துறையூர் தாலுகாவில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3803, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3822, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதியில் முதியோர் உதவித் தொகை மற்றும் விதவை உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்த ஆதரவற்ற பயனாளிகளுக்கு மேற்படி சலுகைகள் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3900, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3914, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதியில் வேம்பங்குடி மேற்கு ஊராட்சிப் பகுதியில் நிலமற்ற மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3939, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை தபால் துறைமூலம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3981, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் (எ) தாயகம் கவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4008, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4032, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வந்தவாசி தொகுதியில் பெரணமல்லூரைத் தனித் தாலுகாவாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4060, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி வருவாய்த் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.*

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 51. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய மானியக் கோரிக்கை எண் 51-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,079,52,75,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.*

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3621, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3685, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3830, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4260, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2148, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, சோழமாதேவி கிராமத்தில் மழை வெள்ளப் பெருக்கை சமாளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2747, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2810, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2896, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பேரிடர் மீட்புக் குழு அமைத்து, பயிற்சி அளித்து, தயார் நிலையில் வைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2967, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதியில் இயற்கைச் சீற்றங்கள் துயர் தணிப்பு மையங்கள் துவங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2979, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியில், இயற்கைச் சீற்றம் துயர் தணிப்பு மையம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3063, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3129, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.*

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசத்தில் சமீபத்தில் சுழலில் சிக்கி இறந்த*

இராசபாளையம் இளைஞர்கள் மூவருக்கு நிவாரணம் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3165, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி தொகுதியில் கடுமழையால் பாதிக்கப்பட்ட விரூர், காட்டுப்பாளையம் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3323, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3493, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3660, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போரூர் ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீர் மவுலிவாக்கம் வழியாக மணப்பாக்கத்தான் கால்வாய்மூலம் அடையாற்றில் தடையின்றிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,079,52,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3908, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

முற்பகல் 11-05

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1957 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி

@ 653 முதல் 758 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பெற்று, வரலாறுகளைப் படைத்த, விரைவில் சட்டமன்ற மணிவிழா காணவுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) சமத்துவப் பெரியார், முத்தமிழ் அறிஞர், முத்தமிழ்ச் செம்மல், எங்கள் தலைவர், கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தந்தையின் புகழொளியால் பெருமைகொள்ளும் உரிமையும், வாய்ப்பும் பெற்றிருந்தாலும், அயராத உழைப்பினாலும், தகுதியினாலும் தன்னை உயர்த்திக் கொண்டு பொதுத் தொண்டின் புகழேணியின் உச்சியில் கொலு வீற்றிருக்கும் எங்களது விடிவெள்ளி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், இந்தச் சட்டமன்றத்திலே 5-வது முறையாக நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக எனக்குப் பெருவாரியான வாக்குகள் அளித்து வெற்றி பெறச் செய்த கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், உழைத்திட்ட கழகத் தோழர்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோருக்கும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, என் உரையைத் துவக்குகிறேன்.

வருவாய்த் துறை என்பது சிறப்பான துறையாக, மக்களுக்கு எல்லாத் திட்டங்களையும் கொண்டு சேர்க்கின்ற துறையாகும். அரசு அலுவலர்கள்தான் அனைத்துத் திட்டங்களையும் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய வருவாய்த் துறையில், இன்றைக்கு நில அளவைத் துறையிலே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 475 நில அளவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்வட்ட நில அளவர்களாகப் பணி நியமனம் செய்யப்படுபவர்கள், குறைந்தபட்சம் 2 ஆண்டுக் காலம் நில அளவர்களாகப் பணியாற்றி, அரசுத் தகுதித் தேர்வை நிறைவு செய்த பின்பு பதவி உயர்வின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். ஆனால், எவ்வித அனுபவமில்லாத 475 நில அளவர்கள், உள்வட்ட நில அளவர் பணியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். நில எல்லைத் தகராறுகள், பட்டா மாறுதலுக்கு உட்பிரிவு அளத்தல், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டா வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாவிற்கு அளத்தல் மற்றும் நில உச்சவரம்பு போன்ற

சட்டப்பூர்வமான, அங்கீகாரம் பெற்ற பணிகளை அனுபவமில்லாத நில அளவர்களைப் பயன்படுத்திச் செய்வதனால், சட்டப்பூர்வமான தாவாக்கள் ஏற்படும்போது சிக்கல் ஏற்படும். ஆகவே, நில அளவர்களை உள்வட்ட நில அளவர்கள் பணியிடத்தில் நியமனம் செய்வதற்கு ஏற்கெனவே உள்ள விதிகள் தளர்த்தப்பட்டுள்ளனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

கேரள மாநில அரசு 1-7-1998-லிருந்து கிராம நிருவாகத்தையும், வருவாய் நிருவாகத்தையும் இணைத்து, Common Revenue Service என்று அமைத்துள்ளது. இந்த அமைப்பின்படி, உள்வட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் இரத்து செய்யப்பட்டு, கூடுதல் வட்டாட்சியர் பணியிடத்தை உருவாக்கி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவைத் துறையிலே பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதிலே விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றனவா என்கின்ற ஓர் ஐயப்பாட்டினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே முன்வைத்திருக்கின்றார். நில அளவைப் பதிவேடுகள் துறையிலே இதுவரை 1,232 நில அளவர் மற்றும் 455 வரைவாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. தற்போது 224 நில அளவர் மற்றும் 184 வரைவாளர் பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தகவலைச் சொல்லிவிட்டு, மற்றொன்றையும் குறிப்பிட்டார்கள். அதற்காகத்தான் புதிதாகப் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்குப் புலத்திலும், கணினியிலும் பயிற்சியளிக்கும்விதமாக, ஏற்கெனவே நில அளவைப் பதிவேடுகள் துறையிலே பணிபுரிந்து ஓய்வு பெற்ற 100 சார்-ஆய்வாளர்களை மறு நியமனம் செய்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலே, ஓய்வு பெற்று, மறு நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் புதிய நில வரைவாளர்களுக்குப் பயிற்சி வழங்குகிறார்கள் என்பதையும், பயிற்சி வழங்குவதிலே விதிகள் தளர்த்தப்படவில்லை என்பதையும், உரிய பயிற்சிகள் வழங்கியதற்குப் பின்புதான் அவர்கள் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். பயிற்சி இல்லாததால், அவர்களால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கேரளாவில் உள்வட்ட அளவிலே மக்களுக்குத் தேவையான வருவாய் நிருவாகத்தின் பயன்கள் கிடைக்கக்கூடிய வகையில் இத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும் அதேபோன்று செயல்படுத்த அரசு முன்வர வேண்டும். அதேபோல, கணினி வசதிகள் கீழ்மட்டத்தையும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்தில், கிராமத்தில் தொடங்கி மாவட்டத் தலைநகர் வரை அனைத்து நில நிருவாக நடைமுறைகளையும் கணினிமயமாக்கும் முன்னோடித் திட்டம், 42 இலட்சம் ரூபாய் செலவில், பெரம்பலூர் மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது. பாரம்பரியமான* cadastral *நில அளவை முறை அதிகமான காலத்தை எடுத்துக்கொள்வதுடன், மிகப் பழமையான கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதால், சில சமயங்களில் துல்லியமாக இல்லாததாலும், நில அளவையில் குறியீடு இல்லாததும் ஒரு பெரும் குறை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தகவலை முடித்துவிட்டு, அடுத்த* subject-*க்கு போய்விட்டார். அவர் விவரங்களை மிக விரைவாகப் பதிவு செய்கிறார். நில ஆவணங்களைக் கணினியில் பதிவு செய்யும் முன்னோடித் திட்டம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தொடங்கப்பட்டது என்று சொன்னார். அது சரியான தகவல் இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலே, கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி தந்திட ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக கிராம அளவிலே இன்றைக்கு இருக்கக்கூடிய அனைத்து ஆவணங்களையும் கணினிப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா*

அவர்கள்தான் முதன்முதலாக அந்த ஆணையினைச் செயல்படுத்தினார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக நாங்கள்தான் அதைத் துவக்கி வைத்தோம். நீங்கள் மடிக்கணினி கொடுத்தீர்கள். ஆனால், அதற்கு Modem கொடுக்கவில்லை. இன்றுவரை கிராம நிருவாக அலுவலர்களைத் தேடிச்சென்றால், அவர்கள் இருப்பதில்லை. காரணம், வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று connection எடுத்துத்தான் ஒவ்வொரு கிராம நிருவாக அலுவலர்களும் அந்தப் பணியைச் செய்கிறார்கள். எனவே, அந்தப் பணி முழுமையாக நடைபெறவில்லை. கடந்த 2½, 3 வருடங்களாக, அந்தக் கணினிக்குத் தேவைப்படும் பொருட்களைக் கொடுக்கவே இல்லை. இந்த நிலையில், அவர்கள் எப்படி நிலங்களை அளந்து, கணினியில் பதிவு செய்வது போன்ற பணிகளைச் செய்ய முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மடிக்கணினிக்கு Modem கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அது சரியான தகவல் அல்ல. ஏனென்றால், மடிக்கணினியுடன் Modem சேர்ந்துதான் வரும். எந்த கிராம அலுவலருக்கு அது கிடைக்கப்பெறவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு சுட்டிக்காட்டினால், அதை அவர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, பொத்தாம் பொதுவாகச் சொல்ல வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவையில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பகத்தன்மை ஏற்பட்டுவரும் இன்றைய நிலையில், மிகத் துல்லியமான* Digital cadastral *நில அளவை முறையின் தேவை உணரப்பட்டு, விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் ஒரு முன்னோடித் திட்டம் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வருவாய் வட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான ஆணை 3-11-2012 அன்று வழங்கப்பட்டது. இதனால் நில அளவையில் அதிநவீன தொழில்நுட்பம் செயல்முறைக்கு வந்துள்ளது. இணையதளத்தில் உள்ள நில அளவை விவரங்களைப் பார்த்து தெரிந்துகொள்வதற்கும், பதிவிறக்கம் செய்துகொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நில அளவைத் துறை, வருவாய்த் துறை, பத்திரப் பதிவுத் துறை ஒருங்கிணைந்து நிலம் சார்ந்த பத்திரப் பதிவுகள் செய்யப்பட்டவுடன், பட்டா மாறுதலுக்காக பதிவு செய்த முழு விவரங்களை வட்ட அலுவலகத்திற்குச் சென்று மனு செய்யாமல்,* online-*ல் பட்டா மாற்றம் செய்யும் திட்டம் தற்போது தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும்போது, பதிவு செய்யப்படும் இடம், விற்பனை செய்யும் உரிமையாளருக்கு உரிமையுடையதா அல்லது நடைமுறையிலுள்ள நில அளவை ஆவணங்களிலுள்ள பெயர்களுக்குத் தொடர்பு உள்ளதா போன்ற விவரங்களைச் சரிபார்த்து, முறையான விவரங்களைப் பதிவு செய்ய, நில அளவை விவரங்கள் தெரிந்த சிலரைக் கொண்டு நில அளவை அலுவலர் பணியிடங்களை சார்-பதிவாளர் அலுவலகத்தில் உருவாக்கிப் பத்திரப் பதிவு செய்தால், அரசால் மேற்கொள்ளப்படவுள்ள* online *பட்டா மாற்றும் பணி சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், போலி விற்பனைப் பதிவுகள் செய்யப்படுவது தவிர்க்கப்படும்.*

அதைப்போல, தமிழகத்தில் புதிதாகத் துவங்கப்பட்ட புதிய வட்டங்களுக்கு வரையறை செய்யப்பட்ட எல்லைகளின் அடிப்படையிலான புதிய வட்ட வரைபடங்கள் இதுவரையில் வழங்கப்படாமல் உள்ளன. புதிய வட்டங்களுக்கு வட்ட வரைபடங்கள் வழங்குவதோடு, மாவட்ட வரைபடங்களிலுள்ள புதிய வட்டங்களையும் சேர்த்து, புதிய மாவட்ட வரைபடங்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பொது மக்களின் நலன் கருதி, நிருவாக வசதிக்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இணைய வழியிலே பட்டா மாறுதல்களுக்கு சில ஆலோசனைகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதாவது, நில அளவைகளில் போதிய அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இந்தியாவிலே முன்னோடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக் காலத்திலேதான், தமிழ்நாட்டில் 285 வட்டங்களும், 85 கோட்டங்களும் மற்றும் 32 வருவாய் மாவட்டங்களும் இருக்கின்றன. 32 வருவாய் மாவட்டங்களிலும் இணைய வழியிலே பட்டா மாறுதல் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதால்தான், இந்திய தேசத்தினுடைய 70-வது சுதந்திர தின விழாவில் இணைய வழி பட்டா மாற்ற முறையில் வருவாய்த் துறை மிகச் சிறப்பான சாதனை படைத்ததற்காக முதலமைச்சருடைய நல் ஆளுமை விருதினை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதைபோல, திருவள்ளூர் மாவட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, இந்த நில ஆவணங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஊராட்சிப் பகுதிகளில் கடைபிடிக்கப்படும் வழிமுறைகள் வேறு; நகர நில அளவையில் கடைபிடிக்கப்படும் வழிமுறைகள் வேறு. ஆகவே, இன்றைக்கு 285 வட்டங்களிலே, 265 வட்டங்களில் நில அளவை முடிக்கப்பட்டிருக்கிறது. நகரப் பகுதியிலே இருக்கக்கூடிய பகுதியில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், மதுரை போன்ற பகுதிகளில்-ஏனென்றால், கிராம ஆவணங்கள் முடிக்கப்பட்ட பின்னால்தான், நகர ஆவணங்களுக்கு வரமுடியும். அந்த அடிப்படையில்தான் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அலுவலர்கள் பற்றாக்குறை என்பது அல்ல. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்தை இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை அறிவித்த நாள் முதலாக, இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்தின்மூலம் *8* இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டா மாறுதல்களை தாயுள்ளத்தோடு வழங்கிய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில், புதிதாகச் சேர்க்கப்படும் கிராமங்களை ஏற்கெனவே உள்ள பிர்க்காவுடன் சேர்க்காமல், அவற்றிற்கென்று புதிய உள் வட்டங்களை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக வட்டங்கள், கோட்டங்கள் உருவாக்கப்படுகின்றபோது, அதிலே அரசு மாத்திரம் தனியாகச் செயல்படுவதில்லை. மாவட்ட நிருவாகம் பரிந்துரை செய்ய வேண்டும். அதற்கு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. வருவாய் நிருவாக ஆணையாளர், நில நிருவாக ஆணையாளர், நில சீர்திருத்த ஆணையாளர் ஆகியோர் மாவட்ட நிருவாகத்தினுடைய அந்தப் பரிந்துரையை ஆய்வு செய்து, உரிய அளவிலே அதற்கு வரைபடங்களெல்லாம் தயாரித்ததற்கு பின்னால்தான், அது அறிவிப்பாக வருகிறது. இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், வருவாய்த் துறையின் வரலாற்றிலேயே இல்லாத வகையில், *65* புதிய வட்டங்களையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* *9* புதிய கோட்டங்களையும் உருவாக்கித் தந்து, மக்கள் வருவாய்த் துறையை மிக எளிதாக அணுக வேண்டுமென்ற அடிப்படையில், சரித்திர சாதனையைப் படைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் சொல்வதெல்லாம் தவறான தகவல். உரிய முறையிலே அதற்கு வரைபடங்களெல்லாம் தயாரித்துத்தான் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இணைய வழி பட்டா மாறுதல் மனு மீதான நடவடிக்கை மேற்கொள்ளும் நில அளவர் முதல், அனைத்து உயர் அலுவலர்களும், பட்டா மாறுதலுக்கு வட்டாட்சியரின் ஒப்புதல் பெறும் வரை, அந்த மனுவின் மீதான தொடர் நடவடிக்கை நிலை பற்றித் தெரிந்துகொள்ளும் வகையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். மனு நடவடிக்கைகளில் 'அ' பதிவேடு, சிட்டா ஆகிய வருவாய் ஆவணங்களில் மாறுதல் செய்யும்பொழுது ஏற்படும் பிழைகளைத் தற்போது சரி செய்ய இயலாத நிலை உள்ளது. இதனை சரிசெய்யும் நிலையை ஏற்படுத்த வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள புல உட்பிரிவுகளை இணைத்து, நில உட்பிரிவு செய்யும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. உட்பிரிவுகளை இணைத்து நடவடிக்கை மேற்கொள்ள* Manual, *ஏற்கெனவே நடைமுறையிலுள்ள வழிகாட்டுதலின்படி . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். இணைய வழி பட்டா மாறுதல் என்பது, ஒரு புரட்சிகரமான ஒரு புதிய அணுகுமுறை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். புரட்சிகரமான ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறபொழுது, அதை முழுமையாக கள ஆய்விலே செலுத்துகிறபொழுது, ஆங்காங்கே ஏற்படுகிற சிறு குறைகளை அவர் குற்றச்சாட்டாக இங்கே எடுத்துச் சொல்லக்கூடாது. ஏனென்றால், 29 மாநிலங்களுக்கும் வழிகாட்டுகிற, எடுத்துக்காட்டாக விளங்குகிற ஒரு புரட்சிகரமான திட்டம் இது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு புலத்தில் புதிய உட்பிரிவுகளை ஏற்படுத்தும்பொழுது, அதன் முந்தைய நிலைகளை (parent) தெரிந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் நில உடைமையாளர்கள் நிலப் பரிவர்த்தனையின்போது, பழைய உட்பிரிவு எது என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. களப்பணியாளரும், நில உடைமையாளரும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில், software மாற்றம் செய்யப்பட வேண்டும். முழுப் புலம் மனு, உட்பிரிவு மனுக்கள் வெவ்வேறு நடவடிக்கை அலுவலருக்கு மாறி வரும் நிலையில், மனுக்களைக் கீழ்நிலை அலுவலர்களே நிராகரிக்க வேண்டியுள்ளது. மனுதாரர்கள் மனுவை மீள மனு செய்துகொள்ள வேண்டிய நிலையை மாற்றி, அதனையே சம்பந்தப்பட்ட நடவடிக்கை அலுவலருக்கு மாற்றம் செய்யும் வகையில் software தயார் செய்யப்பட வேண்டும். இணைய வழி பட்டா மாறுதல் செய்யும் களப்பணியாளர்களின் கடவுசொல் மாற்றம் செய்யும் வகையில் இருக்க வேண்டும். தேர்தல் ஆணையத்தால் வாக்களிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும், இணைய வழி பட்டா மாறுதல் செய்ய மனு அளிக்கும்போது, ஆளறிச் சான்றாக (Identity proof) ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தி, பட்டா மாற்றம், உட்பிரிவு மாற்றம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள தற்போது நடைமுறையில் software இல்லை. அதனை ஏற்படுத்தித் தரவேண்டும். இணைய வழி மனுக்கள் பதிவேற்றம் செய்யப்பட போதிய விரைவு இல்லாத காரணத்தினால், காலதாமதம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிறபொழுது நீதிமன்றத்தினுடைய (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லாம் தெரியும், தெரிந்துதான் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: அவர் கோரிக்கையைச் சொன்னால் பரவாயில்லை. (குறுக்கீடுகள்) நீதிமன்ற உத்தரவு என்று

சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீதிமன்ற உத்தரவு என்றால், அது மாதிரி ஒரு உத்தரவை அவர் கொடுத்திருக்கிறாரா? இதற்கு முன்பாக அவர் கொடுத்திருக்கிறாரா? அவர் கோரிக்கை வைத்தால், அதை நாங்கள் சரி என்று சொல்கிறோம். நீதிமன்ற உத்தரவின்கீழ் அதைச் செய்யவில்லை என்று சொல்கிறார். அப்பொழுது contempt of Court *வருமா, வராதா? நீங்கள் ஓர் அமைச்சராக இருந்தவர்தானே? (குறுக்கீடுகள்) நீங்கள் சும்மாவெல்லாம் கத்தக்கூடாது. (குறுக்கீடுகள்) அவர் சொன்னார். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றவில்லையென்று சொன்னால், அது* contempt of Court *என்று வரும்; நீதிமன்ற அவமதிப்பு வரும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தி.மு.க. உறுப்பினர்கள், உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *இது மிகப் பெரிய குற்றச்சாட்டு. நீங்கள் அமைதியாக இருங்கள் என்று சொன்னால், எப்படி அமைதியாக இருக்க முடியும்? அவர் நீதிமன்ற உத்தரவின் நகலினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்திருக்கிறாரா? அந்த மாதிரி எந்த உத்தரவும் இல்லை. இல்லாத உத்தரவை அவர் சொல்கிறார். நீங்கள் அமைச்சராக இருந்தவர்தானே? சும்மாவெல்லாம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. நீதிமன்ற உத்தரவின்கீழ், உட்பிரிவு மாற்றம் செய்திட* software *இல்லை என்று சொல்லியிருக்கிறார். அந்த நீதிமன்ற உத்தரவின் நகலைக் கொடுத்திருக்கிறாரா, கேளுங்கள். அப்படிக் கொடுத்திருந்தால் நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த மாதிரி ஒரு உத்தரவு இல்லை.*

முற்பகல் 11-20

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தியாவிலே, விரைவுப் பட்டா மாறுதல் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், 2011-லே ஸ்ரீரங்கத்திலே ஆரம்பித்தார்கள். உட்பிரிவு இருக்கிறபட்சத்திலே 30 நாட்களுக்குள்ளாகவும், உட்பிரிவு இல்லாதபட்சத்திலே 15 நாட்களுக்குள்ளாகவும் பட்டா மாறுதல் செய்து தர வேண்டும் என்று ஒரு புதிய வழிகாட்டி நெறிமுறைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வழிவகுத்துக் கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீதிமன்ற

உத்தரவு இருக்கின்றது என்று வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்கிறார். அதன்படி செய்யவில்லையென்றால், அது contempt of Court என்று வரும். அவர் ஏற்கெனவே முன்னாள் அமைச்சராக இருந்தவர். எப்படிப் பேச வேண்டும் என்பதை அவருக்குக் கற்றுக் கொடுங்கள். எப்படி பதில் சொல்ல வேண்டுமென்பதை எங்களுக்குச் சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) எங்களுக்குச் சொல்லாதீர்கள், அவருக்குக் கற்றுக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) அவருக்குக் கற்றுக் கொடுங்கள்; எங்களுக்குச் சொல்லாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் பேசுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் இருக்கின்ற அந்த ஆணையை நான் பெற்றுத் தருகின்றேன். நாங்கள் குறைபாடுகளைச் சொன்னால், ஏதோ குற்றம் சொல்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைக்கிறார். இந்த நிருவாகத்தில் உள்ள குறைபாடுகளால் மக்கள் சிரமப்படுகிறார்கள். தாய்த் துறையாக இருக்கின்ற வருவாய்த் துறையின் மூலம்தான் எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. இதனால் நீதிமன்றத்தில் வழக்குகள் போட வேண்டிய நிலை இருக்கின்றது. ஆக, நீங்கள் புதிதாக software தயாரிக்க வேண்டும் என்று சொன்னால், அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மனநிலை அமைச்சருக்கு வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மனநிலை இல்லாததினால்தான், அவர் தப்பாகப் பேசுகிறார். அது தவறு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்ன சொல்கிறார் என்றால், நீதிமன்ற உத்தரவு இருக்கிறது. அதன்படி கணினிமயம் செய்யவில்லை என்று சொல்கிறார். அவர் நீதிமன்ற உத்தரவினைக் கொடுக்கட்டும், நாங்கள் எவ்வளவு document-ஐ கணினிபடுத்தியிருக்கிறோம் என்பதற்கான ஆதாரத்தை நானும் சமர்ப்பிக்கிறேன். ஆகவே, அவர் ஆதாரங்களைக் கொடுக்காமல் பேச வேண்டாம் என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். மற்றதை அவர் பேசட்டும், நீதிமன்ற உத்தரவின்படி, அரசு செயல்படவில்லை

என்பதைத்தான் அவர் குற்றச்சாட்டாகச் சொல்கிறார். அவர் குற்றச்சாட்டாகச் சொன்னதால்தான் நான் சொல்கிறேனேயொழிய, அவர் கோரிக்கையாக வைத்தால், அதை நாங்கள் செவிமடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு கனிவோடு அதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, வருவாய்த் துறையை தாய்த் துறை என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்தியத் திருநாட்டில், முடங்கிக் கிடந்த வருவாய்த் துறைக்குப் புத்துயிர் அளித்து, புதிய வடிவம் அளித்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய புதிய திட்டங்களை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறைக்கு தந்திருக்கின்றார்கள். வருவாய்த் துறை தாய்த் துறையாகத்தான் செயல்பட்டு வருகிறது. அதில் எந்தக் குறைபாடும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் அதிகாரிகள், அலுவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாகவுள்ளன. பிறப்பிற்கும், இறப்பிற்கும் சான்றிதழ் வழங்குவது மட்டுமின்றி, இடையில் நடக்கும் அனைத்து திட்டங்களின் பயன்களையும், அன்றாட வாழ்வில் இன்றிமையாத அனைத்து சேவைகளையும் வருவாய்த் துறையின்மூலமாகத்தான் பெற வேண்டியுள்ளது. இந்தச் சூழ்நிலையில், அந்தத் துறையில் அலுவலர் பதவிக்கான பட்டியல், பொதுத் துறை, அரசாணை எண் 226-ல், 29-2-2016 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் 41 பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவர்களில், இதுவரையில் 11 பேர்களுக்கு மட்டும்தான் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 30 பேர்கள், அந்த D.R.O. பதவி உயர்வுகளுக்காக காத்திருக்கின்றனர். ஆனால், இன்றைய நாளில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவியில் 47 பணியிடங்கள் காலியாகவுள்ளன. பட்டியலும் தயாராகவுள்ளது. பின்பு ஏன் இந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட்டுள்ளன? Regular D.R.O. பணியிடங்களை முதுநிலை அடிப்படையில் நிரப்பப்படுவதுதான் மரபு. ஏன் என்றால், D.R.O. நிலைப் பதவிகள்

178 இருந்தாலும், மாவட்ட நிருவாகத்தோடு நேரடித் தொடர்புடைய மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பதவிகள் 32-தான் உள்ளன. பிற பதவிகள் Special D.R.O. *பதவிகள் என அழைக்கப்படுகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் பணியாளர் அமைப்பில், கிராம உதவியாளரிலிருந்து, துணை ஆட்சியர் வரையில்தான் நம்முடைய வருவாய்த் துறைக்குக் கட்டுப்பட்டதாகும். அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலிப் பணியிடங்கள் உள்ளதாகச் சொல்கின்றார். பொதுவாக, அங்கு இருக்கக்கூடிய பணியாளர்கள் பதவி உயர்வு பெறுவதன் மூலமாகவும், ஓய்வுபெறுவதன் மூலமாகவும், அந்தக் காலிப் பணியிடங்கள் ஏற்படுகின்றன. அந்தவகையில், வருவாய்த் துறையில் 2011 முதல் 2016 வரை, கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உதவியாளர்கள் 1,127, இளநிலை உதவியாளர்கள் 938, தட்டச்சர்கள் 598, சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 44, கிராம நிருவாக அலுவலர்கள் 9,438, கிராம உதவியாளர்கள் 5,535, என மொத்தம் 18,123 பணியிடங்களை வருவாய்த் துறையில் நிரப்பி தந்து இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் கடந்த கால ஆட்சியில் 14,512 காலிப் பணியிடங்களைத்தான் அவர்கள் நிரப்பினார்கள். (குறுக்கீடு) ஆகவே, அவர்களுடைய ஆட்சியைக் காட்டிலும், காலிப் பணியிடங்களை நிரப்புவதிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மேலான அரசாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ரவிச்சந்திரன், உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுவார். நீங்கள் ஏன் உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள்?*

முற்பகல் 11-25

திரு. கு. பிச்சாண்டி: *மாவட்ட வருவாய் அலுவலகத்தில் பதவி வகிப்பதை ஒவ்வொரு* D.R.O.*-வும் பெருமையாகக் கருதுவார்கள். அதனால்தான் இப்பதவி முதுநிலை வரிசைப்படி நிரப்புவதைக்*

கடந்த கால அரசுகள் மரபாகப் பின்பற்றி வந்தன. ஆனால், இன்றைக்குக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. பல்வேறு D.R.O. பணியிடங்கள் காலியாக இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, நீங்கள் ஆதாரம் இல்லாமல், இதுபோன்று ** குறித்து சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், நீங்களாகச் சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) திரு. பிச்சாண்டி அவர்கள் பேசியபோது, ** என்று சொன்னார். இதற்கு ஆதாரம் இல்லை. (குறுக்கீடுகள்) ஆதாரம் இல்லாமல் இதுபோன்று சொல்லக்கூடாது. அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை நான் பேச அழைத்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.*

திரு. துரைமுருகன்: *எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தங்களுக்கு வருகிற செய்திகளை, பத்திரிகைகளில் வரும் செய்திகளை, ஊடகங்கள் வெளியிடும் செய்திகளை வைத்து நாட்டு நடப்புகளை இந்த அவையிலே தெரிவிப்பார்கள். ஓர் உறுப்பினருக்கு, 'இன்னாரால் இன்னாருக்கு அநீதி இழைக்கப்பட்டது' என்று சொல்ல உரிமை உண்டு; 'அது அப்படியல்ல' என்று மறுக்கிற உரிமை மாண்புமிகு அமைச்சருக்கு உண்டு. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் பேசியது தவறு என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், யோசித்து, தனது பதிலுரைக்கு முன்னால், 'உறுப்பினர் இவ்வாறெல்லம் பேசினார்; அது தவறு' என்று சொல்லலாம். (குறுக்கீடு)*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதைத்தானே சொல்லிக்கொண்டிருக்கிறார்.*

திரு. துரைமுருகன்: *ஆனால், பேசிக்கொண்டிருக்கும்போதே ஆதாரத்தைக் கேட்டீர்கள் என்றால் என்ன செய்வது? (குறுக்கீடு) நான் அதைக்கூட சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதில் எனக்கு மறுப்பு இல்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நன்றாக* prepare *செய்துகொண்டு வந்திருப்பார் என்பது எனக்குத் தெரியும்; அவர் கெட்டிக்காரர்தான். என்னுடைய அனுபவத்தில் நான் உட்கார்ந்து பார்க்கும்போது, எந்த மந்திரியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், யார் நன்றாகப் பேசினாலும், மனதிற்குள் உள்ளூரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. அந்தவகையில், நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருந்து, என்ன சொல்கிறார் என்று கேட்டுவிட்டு, சிறிது நேரத்திற்குப்பிறகு பதில் சொன்னால் பரவாயில்லை. ஆனால், உடனுக்குடன் இதுபோன்று குறுக்கிட்டு பதில் சொல்வது நன்றாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்கிற உரிமை உண்டு. ஆனால், அதேநேரத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் பேசுகிறபோது, குறுக்கிட்டுப் பேசுவதற்கும் இந்த எதிர்க்கட்சிக்காரர்களுக்கு உரிமை உண்டு. அப்படி ஆரம்பித்தால் நன்றாக இருக்காது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கும் பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் பேசமுடியும். (குறுக்கீடு) திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு)*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்* community*-ஐப் பற்றிச் சொன்னதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். மற்றவை அவைக் குறிப்பில் இருக்கட்டும். ஏனெனில், அது* promotion *பற்றிய விவகாரம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: 'Assured maximum service to marginal people in all villages' *என்ற ஒரு திட்டம் 24-2-2013 முதல் தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டது. மேற்படி திட்டத்தின் பெயரால் முகாம்கள் நடத்தப்பட்டு, இதுவரை 53,97,925 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக 2016-2017 ஆம் ஆண்டிற்கான வருவாய்த்*

துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த விவரம் எந்த அளவிற்கு உண்மையானது என்பது தெரியவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மா திட்டத்தைப் பற்றி இங்கே தெளிவாகச் சொன்னார்கள். வருவாய்த் துறையைப் பொறுத்தளவிலே, மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், மக்கள் தொடர்பு முகாம் என்கிற முகாமைத் தொடங்கினார்கள். ஒவ்வொரு மாதமும் 2-வது புதன்கிழமையன்று, மக்கள் குறைதீர்க்கும் முகாமின் மூலமாக மாதத்திற்கு ஒருமுறை மக்களைச் சந்தித்தார்கள். அதைபோல, புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது,* Grievance day petitions *என்று சொல்லக்கூடிய திட்டத்தை அறிவித்து, மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் தலைமையிலே மக்கள் குறை தீர்க்கின்ற முகாமை ஏற்பாடு செய்தார்கள். அந்த வரிசையிலே வந்த திராவிடப் பேரியக்கத்தினுடைய அரசியல் வாரிசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்னும் ஒரு படி மேலே சென்றார்கள். அதாவது, ஒவ்வொரு வாரமும் ஒரு வருவாய்க் கிராமத்திற்கே வட்டாட்சியர் அலுவலகத்தைக் கொண்டு சென்று, முதன்முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் மக்கள் குறைகளைத் தீர்க்கின்ற வகையிலே நிருவாகப் புரட்சியை செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்க் கிராமத்திற்கே வட்டாட்சியர் அலுவலகத்தை கொண்டுசெல்வதன்மூலம் அங்கே மடிக்கணினி கொண்டு செல்லப்படுகிறது; வட்டாட்சியர்கள், உதவியாளர்கள் அனைவரும் செல்கின்றார்கள். அதன் காரணமாக அம்மா திட்ட முகாமிலே இதுவரை 53 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத வகையில், 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்ற முகாம், அம்மா திட்ட முகாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ** ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து சொல்லவேண்டும்; அதற்குப்பிறகு பேச வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அமைச்சராக இருந்தவர்தான். நாம் இங்கே பொதுக் கூட்ட மேடையில் பேசுவது போன்று பேச முடியாது. ஆதாரங்களை முன்வைத்துதான் நாம் பேசவேண்டும். (குறுக்கீடுகள்) ஆகவே, ** என்று பேசுவதற்கு எங்களுக்கும் தெரியும். நாங்களும் பேசுவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிரி, இது என்ன முறை? நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்? அவர்தானே பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திரு. அர. சக்கரபாணி அவர்கள், ஒரு தாளினை அவையில் காட்டினார்.)

திரு. சக்கரபாணி, இதுபோன்று அவையிலே காட்டக்கூடாது. என் அனுமதி இல்லாமல் அப்படிக் காட்டக்கூடாது. அது அவைக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதி இல்லாமல் உறுப்பினர்கள் எதையும் அவையில் காண்பிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அவர் உங்களிடம் கொண்டுவந்து ஆதாரத்தைக் கொடுத்து அனுமதி வாங்கியிருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஆதாரம் எதையும் என்னிடம் காட்டவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் காலையிலே என்னிடம் மனுக்களைக் கொண்டுவந்தபோது, 'மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடம் கொடுங்கள், தக்க நடவடிக்கை எடுப்பார்'

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று நான் அப்போதே சொல்லிவிட்டேன்; அமைச்சர் அங்கு இருந்தபோதே அதைச் சொல்லிவிட்டேன். ஆனால், நீங்கள் இதை என்னிடம் காட்டவில்லை. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் நீங்கள் காலையில் காட்டவில்லை. நான் இங்கே இதை வாங்கவும் மாட்டேன். இதை என்னிடம் நீங்கள் காட்டவும் இல்லை. (குறுக்கீடுகள்) இது பத்திரிகை ஆதாரம். இதை என்னிடம் கொண்டுவந்து கொடுக்கவில்லை. ஆகவே, இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் இதுகுறித்துப் பேசினால் நான் அவைக்குறிப்பில் ஏற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். பத்திரிகை செய்தியையெல்லாம் இங்கே வந்து என்னிடம் தரக்கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அவர் அமைச்சராக இருந்த காலத்தில் பேசி, இந்த அவைக்குறிப்பிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய செய்தியை வைத்துக்கொண்டு இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். இது முறைதானா?' இங்கேயிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்போது பேசியது. (குறுக்கீடுகள்) 'பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்தியை வைத்துக்கொண்டு இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். இது முறைதானா? எனவே அது அவைக்குறிப்பில் இடம் பெறுவது முறைதானா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்' என்று அவரே முன்பு கேள்வி கேட்டிருக்கிறார். எனவே, அதை நான் தற்போது உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பிச்சாண்டி, வேறு பொருள் குறித்துப் பேசுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே உங்களிடம் ஆதாரம் கொடுத்தேன். அம்மா திட்டம் அனைத்துக் கிராமங்களிலும் அடித்தட்டு மக்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டம், பெரியகிளாம்பாடி கிராமத்தில் வசித்து வரும் திருமதி ஜெயா என்பவர் ஓய்வூதியம் பெற எல்லாத் தகுதியும் உடையவர் எனத் தெரியவருகிறது. அம்மா திட்டத்தின் மூலமாக மனு செய்த

மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்க 18-6-2013-ல் ஆணை வழங்கப்பட்டது. ஆனால், இன்றுவரை ஓய்வூதியம் அவருக்குக் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிச்சாண்டி, நீங்கள் காலையிலே ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தீர்கள். அதை நான் உடனடியாக உங்கள் முன்னிலையிலே, அமைச்சரிடம் கொடுத்து, உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டுக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) "அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்" என்று அமைச்சரும் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான்; அதில் மேற்கொண்டு எதுவும் பேசவேண்டாம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா திட்டத்திலே கொடுத்த சான்றிதழ் என்று ஒன்றை இங்கே காட்டுகின்றார்கள். அம்மா திட்ட முகாமிலே பிறப்பிக்கின்ற உத்தரவைப் பார்த்தீர்களென்றால், அங்கே ஒப்படைக்கப்படுகின்ற, சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் சரியாக இருக்கின்றபட்சத்திலே, அந்த உத்தரவு தொடர்ந்து பயனிலே இருக்கும். அங்கே ஒப்படைக்கப்படுகின்ற ஆவணங்களை ஆய்வு செய்கின்றபோது, அவை சரியாக இல்லாதபட்சத்தில், அந்த உத்தரவு மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதுதான், அந்த உத்தரவில் இருக்கிறது. அந்த உத்தரவு இரத்து செய்யப்படுவதில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் 'அம்மா' திட்டம் குறித்து படித்துப் பார்த்தீர்களென்றால், அதற்கான நிபந்தனைகளிலே கொடுத்திருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதை முழுவதுமாகப் படித்துப் பார்த்தீர்களென்றால் தெரியும். அதன் கீழே நிபந்தனைகள் இருக்கும். அதில் சொல்லியிருப்பார்கள். இப்போது அம்மா திட்டத்தில் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றிரண்டு மனுக்களுக்கு, மனுதாரர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அவை மீண்டும் பரிசீலிக்கப்படும்; ஆய்வு செய்யப்படும். அந்த அடிப்படையில்தான், அந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். 'அம்மா' திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற உத்தரவு இன்றைக்கு

நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் 'அம்மா' திட்டத்தில் குறை காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டாம். அது இந்தியாவிலே ஒரு புரட்சிகரமான திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-ல் அதைக் கொடுத்து, அந்த ஆட்சிக் காலம் முடிந்து, இப்போது புதிய ஆட்சியும் வந்துவிட்டது. இந்த நிலையில், இதுவரைக்கும் அந்த ஓய்வூதியத்தைக் கொடுக்கவில்லை என்பதால்தான், இந்த மனுவை நான் இங்கே உங்களுக்கு ஆதாரமாகக் கொடுத்திருக்கிறேன். ஓர் ஆட்சி முடிந்திருக்கிறது. ஆகவே, இது 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தை ** பொது மக்கள் பேசிக்கொள்கின்றனர் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். வேடிக்கையாக ஒரு கதை சொல்வார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திட்டத்தை விமர்சிக்காதீர்கள். திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 35 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 20 நிமிடங்களில் உரையை முடிக்கிறேன் என்று சொன்னீர்கள். ஆனால், 35 நிமிடங்கள் ஆகிவிட்டன, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *இரயில்வே துறையில்* Signal Man *என்ற பணிக்கு நேர்முகத் தேர்வுக்குச் செல்கின்றபோது, நேர்முகத் தேர்வுக் குழுவினர், ஒரு கேள்வி கேட்டார்களாம். "நீங்கள் இந்த இரயில் நிலையத்தில் இருக்கிறீர்கள்; ஒரு புறம்* Goods *இரயில் வருகிறது; இன்னொருபுறம்* Passenger *இரயில் வருகிறது; ஒரே தண்டவாளம் இருப்பதால், இரண்டு இரயில்களும் மோதிக்கொள்ளும் அபாயம் இருக்கிறது; எப்படி நீங்கள் நிறுத்துவீர்கள்" என்று கேட்டார்களாம். அதற்கு, 'நான் சிவப்புக் கொடியை அசைத்து, முதலில் வருகிற இரயிலை நிறுத்திவிட்டு, இரண்டாவது இரயிலை நிறுத்திவிடுவேன்'*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

என்றாராம். தேர்வுக் குழுவினர், "இரயில் வருகின்ற நேரம் இரவு" என்றனராம். அப்படியென்றால், "சிவப்பு விளக்கைக் காண்பித்து இதைச் செய்வேன்" என்றாராம். அதற்கு அந்தக் குழு சொன்னது, "சிவப்பு விளக்கைப் பற்ற வைக்க நெருப்புப் பெட்டி இல்லை, என்ன செய்வாய்?" என்றனராம். அதற்கு அவர், 'இரண்டு கற்களை எடுத்து ஒன்றோடு ஒன்று உரசி அதிலிருந்து வரும் நெருப்புப் பொறியிலிருந்து விளக்கைப் பற்ற வைப்பேன்' என்றாராம். அதற்கும் தேர்வுக் குழுவினர், 'விளக்கில் எண்ணெய் இல்லை, என்ன செய்வாய்?' என்றனராம். "விறகு கட்டைகளைப் போட்டு நெருப்பைப் பற்ற வைப்பேன்" என்று பதில் சொன்னார். அதற்கு அவர்கள், 'நெருப்புப் பற்ற வைப்பதற்குக் கற்களைப் பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது, என்ன செய்வாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'நான் நேரடியாக சென்று, என்னுடைய தங்கையை அழைத்து வருவேன்" என்றார். "எதற்கு?" என்று அவர்கள் கேட்டார்கள். "இதுவரையில் என்னுடைய தங்கை விபத்தைப் பார்த்ததில்லை; தற்போது நிகழும் விபத்தை நேரடியாகப் பார்க்க அவளை அழைத்து வருவேன்" என்று சொன்னாராம். (மேசையைத் தட்டும் ஒலி) இது எதிர்மறையான கதையாக இருந்தாலும், அதில் ஒரு உண்மை இருக்கிறது. என்னவென்றால், மனிதன் சிந்தித்துச் செயல்பட வேண்டும். ஆனால், 24 மணி நேரமும் சிந்திப்பதிலே வாழ்க்கை முழுவதையும் வீணடித்துவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி, நல்ல பாயின்டோடு உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: எப்படி திட்டத்தைப் போடலாம் என நாளும் சிந்தித்துக் கொண்டிருப்பதைவிட, போட்ட திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, இன்றைக்கு ஆற்றோரமாக இருக்கின்ற பல கிராமங்களில், அரசினுடைய நிலங்களில், ஆற்றோரத்தில்தான் பிணத்தைப் புதைக்கின்றனர். வேறு இடமே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி, நேரமாகி விட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 40 நிமிடங்கள் ஆகிவிட்டன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு

உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, நீங்கள் இதே முறையைத்தான் தினமும் பின்பற்றுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. அவர் 40 நிமிடங்கள் பேசி விட்டார். (குறுக்கீடுகள்) முதலில் 20 நிமிடங்கள் என்று சொன்னீர்கள். இப்போது 40 நிமிடங்கள் பேசிய பிறகும், அவர் உரையை முடிக்காமல், நீங்கள் அவருக்காக வாய்ப்புக் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புக் கொடுத்தாலும், அதற்குள் பேசி முடிக்க மாட்டேன் என்கிறார். (குறுக்கீடுகள்) நான் அவையின் அலுவல்களை எப்படி நடத்தி முடிக்க முடியும்? (குறுக்கீடுகள்) திரு. கு. பிச்சாண்டி, ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி நகராட்சியில் சவுரிபாளையம் என்ற இடத்தில் குடியிருந்து வருபவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி பின்தங்கிய பகுதியாகும். குஜிலியம்பாறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க வேண்டும். கிராம நிருவாக அலுவலர் மற்றும் உதவியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்திட வேண்டும். அரசு இதை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். கீழ்பெண்ணாத்தூர் தாலுகாவிற்கு ஒரு புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும். அதைப்போல, எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும்; 72-வது வார்டு, போகிப்பாளையம் கார்ப்பரேஷனுக்கு பட்டா வழங்க வேண்டும்.

அதைப்போல, தேசிய பேரிடர் மேலாண்மைக்கு, இன்னும் சட்டம் கொண்டுவரப்படவில்லை. வெறும் பேரிடர் மேலாண்மைக் குழுமட்டும்தான் போடப்பட்டிருக்கிறது. அதைச் சட்டமாகக் கொண்டுவரவேண்டும். நீதிமன்றத்தில்கூட கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். பேரிடர் மேலாண்மைக்குச் சட்டத்தைக் கொண்டுவந்து அதைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

முற்பகல் 11-40

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்

உடையானாம் வேந்தர்க் கொளி."

கொடுக்கும் மனம், இரக்கம். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி; நானே சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி சார்பாக நானே நன்றி சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், நீங்கள் பேசுங்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *கொடுக்கும் மனம், இரக்கம், நேர்மையான ஆட்சி, மக்களைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய நாட்டு மன்னன், மன்னர்களுக்கெல்லாம் மன்னவன் போன்றவர். (மேசையைத் தட்டும் ஒலி)*

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப்படும்."

நீதி தவறாமல் மக்களைக் காப்பாற்றும் மன்னனை, மக்கள் தெய்வத்திற்கு இணையாக வைத்துப் போற்றுவர்.

"தமிழகமே எனது குடும்பம்; தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்; தமிழக மக்களின் நலனே என் நலன்" என தவ வாழ்க்கை வாழ்ந்துவரும் தலைமகள், கலைமகள் புண்ணியத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) தாய்க்குலம் வழங்கிய சீதனமாய் மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்குக் கிடைத்து இருக்கிறார்கள். அம்மா! நீங்கள் எங்களுக்கு உதவும் கரங்கள்; அம்மா! நீங்கள் அளிக்கும் திட்டங்கள் உலகத் தரங்கள்; அம்மா! நீங்கள் தடைகளை உடைக்கும் படைகளின் தலைவர்; எதிரிகளை நிலைகுலையச் செய்யும் அரசியல் புலவர்; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! பூக்களுக்கு இருப்பது மணம்; என்றுமே உங்களுக்குப் பொன்மனம்; அம்மா! எங்களுக்கு நீங்கள் சந்தனம்; அதனால்தான் உங்களைப் பாடுகிறோம் வந்தனம்; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! நீங்கள் போயஸ் தோட்டத்துப் பூங்காற்று; பூக்களே காத்திருக்கின்றன

உங்களிடம் வரம் கேட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கிலாந்தைச் செம்மைப்படுத்திய திருமதி மார்கிரேட் தாட்சரைப்போல, சிங்கப்பூரைச் செப்பனிட்ட லீ குவான் யூ-வைப்போல, மலேசியாவை வளமைப்படுத்திய மகாதிர் முஹம்மதுவைப்போல, தமிழகத்தை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வளமைப்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது; எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது; எது நடக்குமோ, அது நன்றாகவே நடக்கும்" என்று கீதையிலே சொல்வார்கள். எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. 2011 சட்டப் பேரவைத் தேர்தலில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்ற மாபெரும் வெற்றி, அதற்குப் பின்னாலே நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்; அதற்குப் பின்னால் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தல்; 2014-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய அனைத்திலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள். ஆகவே, எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. அண்மையில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில், எந்தவிதமான கூட்டணியும் இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) தன்னந்தனியாகக் களமிறக்கி, போட்டியிட்ட தொகுதிகளில் இன்றைக்கு மாபெரும் வெற்றியைப் பெற்று, மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக ஆறாவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 32 ஆண்டுகளுக்குப் பின்னால், "ஆளுகிற கட்சியே மீண்டும் ஆட்சி அமைத்திருக்கிறது; ஆளுகிற முதல்வரே மீண்டும் ஆட்சியைத் தொடருகிறார்" என்கிற சரித்திர சாதனையைப் பெற்றிருக்கிற வெற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கிடைத்திருக்கிற வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எது நடக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கிறது.

அடுத்ததாக, எது நடக்குமோ, அது நன்றாகவே நடக்கும். இந்தக் கூட்டத் தொடர் முடிந்த பின்னாலே வரவிருக்கிற உள்ளாட்சித் தேர்தல். அந்த உள்ளாட்சித் தேர்தலிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 சதவிகித வெற்றியைப் பெற இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, எது நடக்குமோ அதுவும் நன்றாகவே நடக்கும். புத்தன், இயேசு, காந்தி... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏன் உட்கார்ந்துகொண்டு பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) எதற்கு தேவையில்லாமல் இப்படிப் பேசுகிறீர்கள்?*

முற்பகல் 11-45

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *"புத்தன், இயேசு, காந்தி பிறந்தது பூமியில் எதற்காக, தோழா ஏழை நமக்காக." (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அப்படிப்பட்ட புத்தருடைய ஞானமும், இயேசுவினுடைய கருணையும், காந்தியடிகளுடைய தூய தொண்டுள்ளமும் ஒருங்கே பெற்றிருப்பவர்தான் நம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம் ஒரு பொன்னான நாள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை ஆட்சிப் பொறுப்பிலே அமர வைத்து, நூறு நாளை நிறைவு செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)*

இன்னொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியாவிலே இருக்கிற மாநில முதலமைச்சர்களில், இன்றைக்கு 15 ஆண்டுகளை நிறைவு செய்து, 16 ஆவது ஆண்டாக முதலமைச்சராகப் பொறுப்பைத் தொடர்கிற முதல் பெண் முதலமைச்சர் என்கிற பெருமையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"நூறாண்டு காலம் வாழ்க, நோய் நொடி இல்லாமல் வளர்க!
நூறாண்டு காலம் வாழ்க, நோய் நொடி இல்லாமல் வளர்க!
ஊராளும் மன்னன் புகழ்போலே, உலகாண்ட புலவன் தமிழ்போலே!
நூறாண்டு காலம் வாழ்க, அம்மா நீங்கள் நோய் நொடி இல்லாமல் வளர்க!" (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், நீங்கள் பேசுங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்கிறபொழுது, அன்றைக்குக் கஜானாவிலே நிதி கிடையாது; கஜானா காலி. தமிழகத்திலே மின்சாரம் கிடையாது. கஜானாவிலே நிதியில்லை; தமிழகத்திலே மின்சாரம் இல்லை. இந்தச் சவாலோடுதான் 2011 ஆம் ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்தார்கள். தன்னுடைய அயராத உழைப்பு, தெள்ளிய மதிநுட்பம், 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் தமிழக மக்களுக்காகக் கண் துஞ்சாது பணியாற்றிய காரணத்தினாலே, இழந்த நிதிநிலையை மீட்டெடுத்தார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். யாராலும் சீர்படுத்தமுடியாது என்று சொல்லிய மின்சாரப் பற்றாக்குறையை, மூன்று ஆண்டுக் காலத்திலேயே தீர்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) 24 மணி நேரமும் தடையில்லாத மின்சாரத்தைக் கொண்டு வந்து, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக ஆக்கிக் காட்டிய பெருமை நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை யாராலும் மறுக்க முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள் மின்சாரப் பிரச்சினையைத் தீர்த்து மின் மிகை மாநிலமாக ஆக்கிய காரணத்தினாலேதான், இன்றைக்குத் தமிழ்நாட்டில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியை நம்பி, வெளிநாடுகளைச் சார்ந்த முதலீட்டாளர்கள் இலட்சக்கணக்கான கோடி முதலீடுகளைச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாக, தமிழ்நாட்டில் இன்றைக்குத் தொழில் வளம் பெருகியிருக்கிறது. அதன் மூலமாக, இன்றைக்கு இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து."*

என்றும்,

*"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்ற யவை."*

என்றும்,

*"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."*

என்றும் சொன்னார் வள்ளுவர் அவர்கள்.

*"கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சைப்
புகினும் கற்கை நன்றே"*

என்று சொன்னார் அவ்வை பிராட்டி அவர்கள்.

*"கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து
கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து
காண்பதில்தான் இன்பம் என் தோழா
காண்பதில்தான் இன்பம் என் தோழா!"*

என்று ஒரு திரைப்படத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் பாடினார்.

அதைப்போல, இன்னொரு திரைப்படத்திலும் புரட்சித் தலைவர் அவர்கள் பாடியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நீங்கள் பேசும்போது பாடலாம்; இப்போது உட்காருங்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"பற்பல திங்கள் சுமந்தாளே அவள் பெருமைப்பட வேண்டும்;
உன்னைப் பெற்றதனால், அவள் மற்றவராலே
போற்றப்பட வேண்டும்; (மேசையைத்தட்டும் ஒலி)
கற்றவர் சபையில் உனக்காகத் தனி இடமும் தர வேண்டும்!"*

என்று புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடிய பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில், இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் கல்வித் துறையிலே சாதனை படைத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

முற்பகல் 11-50

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்) தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, (குறுக்கீடுகள்) தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களின் இன்னல்களைப் போக்க வேண்டும்; தமிழகத்திலே எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இந்தத் தமிழகத்திலே இல்லாமை இல்லாத நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) "Vision 2023" என்று சொல்லக்கூடிய தொலைநோக்குத் திட்டத்தைக் கொண்டுவருவதாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் தொலைநோக்குத் திட்டத்தைத் தமிழகத்திலே செயல்படுத்துகின்றபோது, பல்வேறு துறைகளை மையமாக வைத்து அதிலே பல திட்டங்கள் இடம்பெற்றாலும்கூட, அந்தத் திட்டத்தில் கல்வித் துறை என்பது மிக அதிகமான அளவு நிதியினைப் பெறுகின்ற ஒரு துறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள். இந்தியாவில் இருக்கின்ற 29 மாநிலங்களிலும், 7 யூனியன் பிரதேசங்களிலும் இல்லாத வகையில், கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சிக் காலத்தில், 1 இலட்சம் கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடாக ஒரு துறை பெற்றிருக்கிறது என்று சொன்னால், அது மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வித் துறைக்காகக் கொடுத்த நிதியே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)*

2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, தமிழ்நாட்டில் கல்வித் துறையில் 54,000 ஆசிரியர் பணியிடங்கள் பற்றாக்குறையாக இருந்தன. இதுதான் தமிழ்நாட்டின் அன்றைய நிலை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஒரே உத்தரவின்

மூலமாக 21,000 ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப உத்தரவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமாக 21,000 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பி, கல்வித் துறையில் சாதனை படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்றிருந்த நிலையை மாற்றி, இன்றைக்குத் தமிழகத்தில் 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு எடுத்துக்கொண்டுள்ள துறையைப் பற்றிப் பேச வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சாதனைகள் ஒவ்வொன்றையும் நான் மேலோட்டமாகக் கூறிவிட்டு, அதற்குப்பிறகு விரைவாக எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் துறையைப்பற்றிப் பேசுகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இங்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையில் சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக 14 வகையான விலையில்லாத் திட்டங்களை தமிழ்நாட்டு மாணவர்களுக்காகக் கொண்டுவந்தார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோர் எந்தச் சூழ்நிலையிலும் கல்வி கற்காமல் விடுபட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்ததுதான் அந்தத் திட்டங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், "ஏழைக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புங்கள், நான் அவர்களை தத்தெடுத்துக்கொள்கிறேன்" என்று சொன்னார்கள். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்குக் காலுக்குப் போடுகின்ற (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, தமிழகத்தில் 54,000 ஆசிரியர் பணியிடங்கள் பற்றாக்குறையாக இருந்தன. கல்வித் துறையை மேம்படுத்துவதற்காக, ஒரே உத்தரவின் மூலமாக 21,000 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமாக 5 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் 75,000 ஆசிரியர்களைப் பணியமர்த்தி, இந்திய அளவில் சாதனை படைத்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கு பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்க வேண்டும். ஆனால், நமது தாய் ஆட்சி செய்கின்ற தமிழகத்தில் தற்போது 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்களுக்கு 14 வகையான விலையில்லாப் பொருட்களை வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். "பெற்றோர்களே, நீங்கள் பெற்ற குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புங்கள். அவர்களை நான் தத்தெடுத்துக் கொள்கிறேன்" என்று சொன்ன முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் பள்ளிக்கு வருகின்றபோது காலுக்குப் போடுகின்ற காலணி முதல், மேலுக்குப் போடுகின்ற சீருடை வரை அந்த மாணவர்களுக்குக் கொடுத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கின்ற முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எழுதுகின்ற பென்சிலைத் தந்து, அந்தப் பென்சிலை வைக்கின்ற Geometry Box-*ஐத் தந்து, படிப்பதற்குப் புத்தகங்களைத் தந்து, அந்தப் புத்தகங்களைச் சுமந்து செல்கின்ற புத்தகப் பைகளையும் தந்து அழகு பார்த்துக்கொண்டிருக்கின்ற முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-55

ஒரு காலத்திலே கோடீஸ்வரன் வீட்டு மாணவர்களுடைய கையிலே மடிக்கணினி இருந்தது. இன்றைக்கு ஏழைக் குடிசையிலேயிருந்து வரக்கூடிய மாணவன் கையிலும் மடிக்கணினியைக் கொடுத்து, கல்வியை உலகத் தரத்திற்கு எடுத்துச் சென்றவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியிலே கேரள மாநிலம் தலைசிறந்த மாநிலம் என்றுகூடச் சொல்வார்கள். அது அந்தக் காலம். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகிற

தமிழ்நாட்டைப்போல கட்டமைப்பு வசதிகள் கேரள மாநிலத்திலேகூட இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்குப் பள்ளிப் படிப்பிலேயிருந்து உயர் கல்வியில் சேருகிற மாணவச் செல்வங்களுடைய எண்ணிக்கை, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011-லே முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறபோது, 23 சதவிகிதம். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகள் காரணமாக கல்வித் துறையிலே, உயர் கல்வியிலே சேருகிற மாணவர்களுடைய எண்ணிக்கை 44.8 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது, இந்த அளவுக்கு உயர் கல்வித் துறையிலே சாதனை படைத்திருக்கிற ஒரே முதலமைச்சர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

“வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்”

என்று சொல்வார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற விவசாயப் பெருமக்களைக் காப்பதற்காக, தமிழகத்திலே நாம் கடந்த காலத்திலே இழந்துவிட்ட ஜீவாதார உரிமைகளையெல்லாம் மீட்டெடுப்பதற்காக, சட்டப் போராட்டம் நடத்தி, விவசாயிகளுடைய உரிமைகளைக் காத்திருக்கிற ஒரே முதலமைச்சர் நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தென் மாவட்ட மக்களுடைய நீண்டகால கனவாக முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை இருந்தது. அந்த முல்லைப் பெரியாறு அணையினுடைய உயரம் 6 அடி உயராதா என்று கனவு கண்டு கொண்டிருந்த அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய கனவுகளை, சட்டப் போராட்டம் நடத்தி, அதன் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் காட்டிய

பெருமை நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், காவேரிப் பிரச்சினையிலும் அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தினார்கள். காவேரியினுடைய உரிமையை மீட்டெடுத்தார்கள். காவேரியில் தமிழகத்திற்குரிய உரிமைகளை மத்திய அரசிதழிலே வெளியிடச் செய்தார்கள். மீண்டும் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். விரைவிலே நீதிமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வெற்றி கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றியின்மூலம் தமிழக மக்களுடைய, தமிழக விவசாயிகளுடைய வாழ்வாதாரம் மேம்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண் பெருமக்களுக்காக வறட்சி நிவாரணத்தைக் கொடுத்தவர் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலே எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சரும் வறட்சிக்காக விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கொடுத்ததில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வருவாய்த் துறையைப் பொறுத்தவரையிலே, இந்த 5 ஆண்டுக் காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டங்கள் அளப்பரியவை ஆகும். 5 ஆண்டுக் காலத்திலே, தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டுவந்திருக்கக்கூடிய திட்டங்கள் கடைக்கோடியிலே இருக்கிற மக்களுக்கும் பரவலாகச் சென்று சேரவேண்டுமென்று சொல்லி, அதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்க உத்தரவிட்டார்கள். ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதிதாக உருவாக்க வேண்டுமென்று சொன்னால், ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்த வட்டம் எவ்வளவு சதுர கிலோ மீட்டர் பரப்பளவு இருக்கிறது; எவ்வளவு வருவாய் கிராமங்கள் இருக்கின்றன; எவ்வளவு மக்கள் தொகை இருக்கிறதென்பது ஆய்வு செய்யப்படும். அந்த உயர்மட்டக் குழு, அறிக்கையின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அதனை எடுத்துரைக்கும். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய வட்டம் உருவாக உத்தரவைப் போடுகிறார்கள். இந்த 5 ஆண்டுக் காலத்திலே வருவாய்த் துறையிலே, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஒரு சாதனையாக, புதியதாக 65 வட்டாட்சியர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 65

வட்டாட்சியர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டது மட்டுமல்ல; புதிதாக உருவாக்கப்பட்ட அந்த 65 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்குண்டான நிதியையும் ஒதுக்கித் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 5 ஆண்டுக் கால ஆட்சியிலே, வெறும் 14 வட்டாட்சியர் அலுவலகங்களை மட்டும்தான் அவர்கள் புதிதாக அறிவித்தார்கள். ஆனால், அதற்குண்டான நிதி முழுமையாக ஒதுக்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இன்றைக்கு 65 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 9 கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு தேவையான நிதியை ஒதுக்கித் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

இங்கு இருக்கிற எதிர்க்கட்சி நண்பர்கள் வெளியிலே சென்று பொதுக்கூட்டங்களிலே பேசுகிறபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே 110 விதியிலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை என்ற ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த வருவாய்த் துறையிலே 65 புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்களே! இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே சட்டமன்றப் பேரவையிலே 110 விதியின்கீழ் அறிவித்து செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

அதைப்போல, வருவாய்த் துறையிலே இன்னோர் அற்புதமான திட்டம்; 'அம்மா திட்டம்' என்கிற ஓர் அற்புதமான திட்டம். அந்தத் திட்டம் இன்றைக்கு இந்திய அளவிலே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. 'அரசைத் தேடி மக்கள்' என்கிற ஒரு நிலையை மாற்றி, 'மக்களைத் தேடி அரசு' என்கிற ஒரு நிலையை தமிழ்நாட்டிலே உருவாக்கிக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சிக் காலத்திலெல்லாம் மக்கள் தாசில்தார் அலுவலகத்தைத் தேடிச் சென்றார்கள்; மக்கள் தாசில்தாரைத்

தேடிச் சென்றார்கள். மக்கள் கிராம நிருவாக அலுவலரைத் தேடிச் சென்றார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அம்மா திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலமாக, இன்றைக்கு மக்களைத் தேடி வருவாய்த் துறை செல்கிறது; *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு மக்களைத் தேடி தாசில்தார் செல்கிறார்; *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு மக்களைத் தேடி கிராம நிருவாக அலுவலர் செல்கிறார். வெள்ளிக்கிழமைதோறும் காலையில் ஒவ்வொரு கிராமம் கிராமமாக வருவாய்த் துறை செல்கிறது. காலையிலே மனுக்களைப் பெறுகிறார்கள். அது பட்டா வழங்குவதற்கான மனுவாக இருந்தாலும், குடும்ப அட்டை வழங்குவதற்கான மனுவாக இருந்தாலும், சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான மனுவாக இருந்தாலும், முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான மனுவாக இருந்தாலும், காலையிலே மனுக்கள் பெறப்படுகின்றன. தகுதியுள்ள மனுக்களுக்கு மாலையிலேயே உத்தரவுகள் வழங்கப்படுகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா திட்டத்தின்மூலமாக மட்டும் கடந்த 4 ஆண்டுக் காலத்தில் சுமார் 53 இலட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் கிட்டத்தட்ட 53,50,000 மனுக்களுக்குத் தீர்வு கண்டிருக்கிற ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே வருவாய்த் துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் இன்னொரு சிறப்பான திட்டம், முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமாகும். கடந்த ஆட்சிக் காலத்திலும் இந்தத் திட்டம் இருந்தது. கடந்த காலத்தில் ஓய்வூதியமாக ரூ.500/- தந்தார்கள். 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதியோர் உதவித் தொகை 100 சதவிகிதம் உயர்த்தி ரூ.1,000/- ஆக வழங்கப்படும்' என்று சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்பொழுது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த ஓய்வூதியம் பெற்ற பயனாளிகளுடைய எண்ணிக்கை வெறும் 21 இலட்சம். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, இந்த 5 ஆண்டுக் காலத்தில் முதியோர் உதவித்

தொகை ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. அந்த வகையில், இன்றைக்கு 40 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கும் முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள், கணவனை இழந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், முதிர் கன்னிகள் என பலதரப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மாதந்தோறும் ரூ.1,000/- உதவித் தொகை வழங்குகிற ஓர் அற்புதமான திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பல நூல் படித்து நீ அறியும் கல்வி

பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்

பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்-இவை

அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்-இவை

அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே, நான்

ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே'

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன் மலர்பாதங்களுக்கு நன்றி கூறி, சிறப்புமிக்க இந்த மாபெரும் சபையில், வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் எனக்கும் பேசுவதற்கு பொன்னான வாய்ப்பை வழங்கிய, எங்களுடைய பொன்னான முதல்வர், நான் அனுதினமும் தெய்வமாக வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன் மலர்ப்பாதங்களை வணங்கி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைக்க திட்டங்கள், இரத்த வங்கிகளுக்குக் கூடுதல் உபகரணங்கள் அளித்தல், ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் தொடங்குதல், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல், மாவட்ட மன நலத் திட்ட விரிவாக்கம், மது போதை மாற்று சிகிச்சை மையங்கள் விரிவாக்கம், பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் புற்றுநோய் கண்டறியும் வசதி, அரசு யோகா மற்றும் இயற்கை வைத்தியக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான மருத்துவ சேவையை அனைத்து மக்களும், குறிப்பாக ஏழை எளிய மக்கள் பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் எனது தலைமையிலான அரசு பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. புதிய சுகாதார நிலையங்களை ஏற்படுத்துதல், ஒவ்வொரு வட்டாரத்திலும், 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஏற்படுத்துதல், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் நவீன மருத்துவக் கருவிகளை வழங்குதல், திருத்தியமைக்கப்பட்ட 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்', 'நகரும் மருத்துவமனை திட்டம்', கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்', பெண்கள் சுகாதாரத் திட்டம், அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவிப் பெட்டகம், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா முழு உடல் பரிசோதனை*

மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழக மக்களுக்கு மருத்துவ சேவைகள் மேலும் சிறப்பாகக் கிடைத்திடும் வகையில், நடப்பாண்டில் பின்வரும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

1. மதுரை, சென்னை-கீழ்ப்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, பொது மருத்துவம் 'வாஸ்குலர் (Vascular)', 'கார்டியோதொரசிக்' (Cardiothoracic), பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, சிறுநீரகம், காது, மூக்கு, தொண்டை மற்றும் குழந்தைகளுக்கென கூடுதல் அறுவை சிகிச்சை அரங்கங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 'ஹைபிரிட்' அறுவை அரங்கம் (Hybrid OT), தலையீடு கதிரியக்க அறைகள் (IVR Rooms), அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய தீவிர சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய கண்காணிப்புப் பிரிவு, அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய மயக்கத் தீவிர சிகிச்சை பிரிவு, இருதயக் கண்காணிப்பு, இமேஜிங் மையம் (Imaging Centre) மற்றும் கலையரங்கம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளும் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவை 356 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மதுரை, சென்னை-கீழ்ப்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் நவீன அறுவை சிகிச்சை மையத்தில் அறுவை அரங்கத்திற்குத் தேவையான அறுவை சிகிச்சை விளக்கு, 'சி-ஆர்ம்', 'எக்ஸ்ரே', 'எண்டோஸ்கோபி கருவிகள்', 'எம்.ஆர்.ஐ. ஸ்கேன்', 'சி.டி. ஸ்கேன்', தீவிர சிகிச்சைப் பிரிவு, Simulator-உடன்கூடிய பயிற்சி நிலையம், மயக்கவியல் பணி நிலையம் ஆகியவை ஏற்படுத்தப்படும். இவை 497 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவக்

கல்லூரி மருத்துவமனைகளில், 'இமேஜிங்' துறை ஊடுகதிர் பிரிவுக்கு 'சி.டி. ஸ்கேன்', 'மேமோகிராபி' (Mammography) போன்ற கருவிகள்; அறுவை அரங்கத்திற்கு, 'ஆபரேடிங் மைக்ராஸ்கோப்' (Operating Microscope), 'அல்ட்ராசவுண்ட்' (Ultrasound), 'சி-ஆர்ம்', 'எக்ஸ்ரே' மருத்துவக் கருவிகள் போன்றவை 75 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஈரோடு, திருப்பூர், கடலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி மற்றும் பெரியகுளம் ஆகிய ஏழு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில், 'இமேஜிங்' துறைக்கு 'சி.டி. ஸ்கேன்', Digital Fluoroscopy, 'எண்டோஸ்கோபி' போன்ற கருவிகள் வழங்கப்படும். இரத்தக் கூழ்ம பகுப்புப் பிரிவுகள் (Haemodialysis Units) ஏற்படுத்தப்படும். மேலும், அறுவை அரங்கத்திற்கு 'சி-ஆர்ம்' கருவி, 'எக்ஸ்ரே', மயக்கவியல் பிரிவுகள் 78 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, மேற்கண்ட 14 மருத்துவமனைகளுக்கு 153 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு உபகரணங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

4. சென்னை-ஆவடி, சேலம்-மணியனூர், திருப்பூர்-வேலம்பாளையம் மற்றும் திருநெல்வேலி-கண்டிகைபேரி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உள்ள உள்நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு, குழந்தைகள் நலம், காது மூக்கு தொண்டை மற்றும் கண் மருத்துவம், அவசரகால பிரிவு, சிசேரியன் பிரிவு ஆகிய துறைகளின் கட்டட வசதிகள் 80 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மருத்துவமனைகளுக்குப் படுக்கைகள், அறுவை சிகிச்சை மேஜைகள், அறுவை அரங்கத்தில் மயக்கவியல் கருவிகள், புறநோயாளிகள் பிரிவில் பல் மருத்துவப் பிரிவுகள், Cardiotocography, 'ரேடியண்டர் வார்மர்' (Radiant Warmer), ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையம், நோயுள்ள பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளுக்கு 'வெண்டிலேட்டர்' (Ventilator), கட்டில்கள், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி, இமேஜிங் துறைக்கு ஊடுகதிர் கருவி போன்ற மருத்துவக் கருவிகள் 51 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 131 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் இந்த மருத்துவமனைகள் வலுப்படுத்தப்படும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 செப்டம்பர் 1

5. மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தாய்-சேய் நலம், விபத்துக் காய சிகிச்சை, தொற்றா நோய்களுக்கான சிகிச்சை, பரிசோதனை வசதிகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் போன்ற பிரிவுகளுக்கு உயர் மருத்துவச் சிகிச்சைக்கான நவீன மருத்துவக் கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும். இதற்காக 122 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அரசு மருத்துவமனைகளையே பெரிதும் நம்பியிருக்கும் ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான மருத்துவ சிகிச்சை பெறவேண்டும் என்ற அடிப்படையில், கடந்த 5 ஆண்டுகளில் 968 கோடி ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நோயாளிகளுக்கு இதய நோய் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகச் செய்யப்படும் 'ஆஞ்சியோகிராம்' (Angiogram) *பரிசோதனைக்கான* Cath Lab *வசதி தற்போது சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை, சென்னை அரசு பொது மருத்துவமனை, சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை ராஜாஜி மருத்துவமனை மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 5 இடங்களில் மட்டுமே உள்ளது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், நடப்பு ஆண்டில் கோயம்புத்தூர், வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை ராஜாஜி மருத்துவமனை ஆகிய 6 மருத்துவமனைகளின் இதயத் துறைக்கு* 'Cath Lab' *கருவிகள் 42 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கி, இதய ஒப்புயர்வு மையங்களாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

7. குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. இறப்பு விகிதம் குறைவாக உள்ள பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010-ல் 1,000 உயிருள்ள குழந்தை பிறப்புகளுக்கு, 24 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம், தற்போது 20 ஆகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை மேலும் குறைக்க எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அந்தவகையில், சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்பட்டுவரும் பச்சிளம் குழந்தைகளுக்கான

2016 செப்டம்பர் 1][செல்வி ஜெ ஜெயலலிதா]

தீவிர சிகிச்சை மையங்களுக்கு 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலும், 22 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 6 அரசு மருத்துவமனைகளில் உள்ள குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு, 7 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலும் புதிய உபகரணங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்களுக்கு மொத்தம் 14 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

பிற்பகல் 12-15

8. குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் ஒருங்கிணைந்த அவசர கால மகப்பேறு பச்சிளம் குழந்தை பராமரிப்பு CEmONC மையங்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் பெரும் பங்காற்றி வருகின்றன. ஏற்கெனவே இயங்கிவரும் 55 CEmONC மையங்களின் மகப்பேறு தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் 64 பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவற்றிற்கு 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தமிழ்நாட்டில் இரத்தம் தேவைப்படும் நபர்களுக்குப் போதுமான, பாதுகாப்பான, தரம் வாய்ந்த இரத்தம் வழங்க அரசு மருத்துவ நிலையங்களில் 87 அரசு இரத்த வங்கிகளும், 363 இரத்த சேமிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 20 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலுள்ள இரத்த வங்கிகள் என, 40 இரத்த வங்கிகளுக்குக் கூடுதல் உபகரணங்கள் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. கிராமப்புற மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவை வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை உலக வங்கி உள்ளிட்ட பல அமைப்புகள் பாராட்டியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில், முன்னோடித் திட்டமாக, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 5 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு

'டயாலிசிஸ்' செய்யும் வசதிகள் உள்ளன. இந்த வசதிகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 31 இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்குத் தலா 2 'டயாலிசிஸ்' கருவிகள் 5 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

12. மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய மூன்று மாநகராட்சிகளிலுள்ள 15 நகர்ப்புற சுகாதார மையங்களுக்கும்; பெரம்பலூர், பண்ருட்டி, கும்பகோணம், பட்டுக்கோட்டை, அருப்புக்கோட்டை, திருவாரூர், ஆவடி ஆகிய நகராட்சிகளிலுள்ள 8 நகர்ப்புற சுகாதார மையங்களுக்கும் புதிய கட்டடங்கள் 5 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, ஈரோடு, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாநகராட்சிகளில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 2 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

13. தமிழக அரசு செயல்படுத்திவரும் 108 அவசர கால ஊர்தி சேவை விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றி வருகிறது. எனவே, இந்தத் திட்டத்தை வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் இந்தத் திட்டத்தில் செயல்பட்டுவரும் 50 ஆம்புலன்சுகளுக்குப் பதிலாக, 50 புதிய ஆம்புலன்சுகள் 4 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-20

14. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை உயர்ந்த அளவாக உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* கருவுற்ற தாய்மார்களைப் பிரசவத்திற்கு மருத்துவமனைகளுக்கு அழைத்து வருதல் மற்றும் பிரசவத்திற்குப் பின் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லுதல் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. பிரசவங்கள் அதிக எண்ணிக்கையில் நிகழும் 20 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு 20 புதிய வாகனங்களும்; தருமபுரி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, பழநி, திருநெல்வேலி மற்றும் ஊட்டி ஆகிய இடங்களிலுள்ள தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் 8 நகரும் மருத்துவக் குழுக்களும் 2 கோடியே 41

TRUTH ALONE TRIUMPHS

இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

15. முதியோர் நலனில் எனது தலைமையிலான அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சென்னை, கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி வளாகத்தில் 126 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் தேசிய முதியோர் நிலையம் அமைக்க கட்டடப் பணி நடந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு ஆண்டில் விழுப்புரம், வேலூர் மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைகளில் முதியோர் பிரிவு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

16. மாவட்ட மன நலத் திட்டம் தற்போது தமிழ்நாட்டில் 25 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் எஞ்சியுள்ள 7 மாவட்டங்களான அரியலூர், நீலகிரி, தஞ்சாவூர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கென 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

17. தற்போது மது போதை மாற்று சிகிச்சை மையங்கள் 17 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம், திருப்பூர் மற்றும் கடலூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 30 படுக்கைகள் கொண்ட மது போதை மாற்று சிகிச்சை மையங்கள் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

18. புற்றுநோய் கண்டறியும் PET SCAN வசதி 15 கோடி ரூபாய் செலவில் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நிறுவப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

19. தமிழ்நாட்டில் வட்டார அளவில் செயல்படும் அனைத்து மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டணமில்லா ‘அம்மா ஆரோக்கியத் திட்டம்’ என்ற திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல், சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ‘அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்’ மற்றும் மகளிருக்கு என்று தனியாக ‘அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்’ தொடங்கப்பட்டு, மக்களிடையே

பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டம் நடப்பாண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

20. இந்திய முறை மருத்துவத்திற்கு எனது தலைமையிலான அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நடப்பாண்டில் அரசு யோகா மற்றும் இயற்கை வைத்தியக் கல்லூரி மாணவியர்களுக்காக 11 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் விடுதிக் கட்டடம் கட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

21. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் 22 'நல மையங்கள்' Wellness Centres, 10 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் 'ஆயுஷ்' பிரிவு ஏற்படுத்துதல், ஏற்கெனவே செயல்பட்டுவரும் 475 'ஆயுஷ்' மருத்துவ நிலையங்களுக்கு நிதி உதவி வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் 19 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-25

தற்போது நான் அறிவித்துள்ள இந்தத் திட்டங்களால், அரசு மருத்துவமனைகள் மேலும் சிறந்து விளங்குவதோடு, ஏழை எளிய மக்கள் அரசு மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவ சேவை பெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) சுற்றுலாப் பெருந்திட்டம் தயாரித்தல், கோயம்புத்தூரில் புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்துதல், அரசு கவின் கலைக் கல்லூரியில் வகுப்பறைகள் புதுப்பித்தல், அரசு அருங்காட்சியகங்களில் தானியங்கி தீத்தடுப்பு ஒலிப்பான்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்துதல், சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் காட்சியமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், இராமநாதபுரம், அழகன்குளத்தில் விரிவான தொல்லியல் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோயில்கள், வரலாற்று

முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், புனித தலங்கள், கடற்கரைகள், மலைப் பிரதேசங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், நினைவுச் சின்னங்கள், தொல்லியல் இடங்கள் என பிரபலமான சுற்றுலா இடங்கள் பல உள்ளன. சுற்றுலாத் துறைக்கு எனது தலைமையிலான அரசு அளித்துவரும் திட்டங்களின் காரணமாகவே, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலா, கலை, பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. புதிய மற்றும் திருத்திய சுற்றுலாப் பெருந்திட்டம் தமிழ்நாடு முழுவதற்கும் அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தும்வகையில் ஒரு சுற்றுலாப் பெருந்திட்டம் தயாரிக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள மரபுச் சின்னங்கள் மற்றும் பழமைவாய்ந்த சுற்றுலாத் தலங்களைப் பாதுகாத்தல், பழமை மாறாமல் புதுப்பித்தல்; ஆவணப்படுத்துதல்; சுற்றுலாத் தொழில் சார்ந்தோர் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பயிற்சி; திறன் வளர்ப்பு மற்றும் உள்ளூர் சமூக வாழ்வாதார நலன்களை மேம்படுத்துதல்; உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் உருவாக்கித் தருதல் ஆகியன இத்திட்டத்தில் இடம்பெறும்.

இந்தப் பெருந்திட்டத்தின்படி,

I. *கடற்கரை சுற்றுலாச் சுற்று வசதிகள் 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

II. *காஞ்சிபுரம் நகரம் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் 22 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

III. *ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் முக்கிய சுற்றுலாத் தலங்களில் மேம்பாட்டுப் பணிகள் 403 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

2. கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் 6 மண்டல கலை பண்பாட்டு மைய அலுவலகங்கள் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய

இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சேலம் மண்டல உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் 8 மாவட்டங்கள் உள்ளன. எனவே, கலைப் பணிகளை சிறப்புற மேற்கொள்ளும்வகையில், கோயம்புத்தூரில் ஒரு புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களும், கோயம்புத்தூர் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களும் இருக்கும்.

3. மிகப் பழமையான சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பழுதடைந்த வகுப்பறைகள் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் தானியங்கி தீத்தடுப்பு ஒலிப்பான்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சென்னை அரசு அருங்காட்சியகம் 3 பழமையான கட்டடங்கள் மற்றும் 3 புதிய கட்டடங்களில் சுமார் ஒரு இலட்சம் சதுர அடியில் 54 காட்சிக் கூடங்களைக் கொண்டுள்ளது. இக்காட்சிக் கூடங்கள் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்படும். சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் காட்சியமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். பார்வையாளர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்படும். நடைபாதைகள் மற்றும் உட்புறச் சாலைகள் ஆகியவை மேம்படுத்தப்படும். இப்பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

6. தமிழகத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு மேற்கொள்வது தொல்லியல் துறையின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். இதுவரை, 39 இடங்களில் அகழாய்வினை மேற்கொண்டு, அவற்றில் 36 இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகள் நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஒரு விரிவான தொல்லியல் அகழாய்வு இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளத்தில் மேற்கொள்ளப்படும்.

2016 செப்டம்பர் 1][செல்வி ஜெ ஜெயலலிதா]

அழகன்குளம் இராமநாதபுரத்திலிருந்து கிழக்கே 17 கிலோ மீட்டர் தொலைவில் வைகை ஆற்றின் வடகரையில் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. இக்கிராமம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல், கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் ரோமானியர்களுக்கு முக்கியத் துறைமுகமாக தமிழகத்தில் திகழ்ந்துள்ளது. இப்பகுதியில் வாணிபம் நடைபெற்றதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

1984 ஆம் ஆண்டு முதல் இதுவரை 24 அகழாய்வுக் குழிகளில் கிடைக்கப்பட்ட தொல்பொருட்களின்மூலம் பண்டைய மக்களின் சமூக, பண்பாட்டு செயல்பாடுகள் தெரியவந்துள்ளது. எனவே, அழகன்குளத்தில் விரிவான தொல்லியல் அகழாய்வுப் பணிகள் 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் இயக்குதல் மற்றும் போக்குவரத்துக் கழகங்களில் கருணை அடிப்படையில் பணியிடங்கள் நிரப்புதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களை இணைப்பதிலும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. போக்குவரத்து சேவையை, பொது மக்களுக்குக் குறிப்பாக, ஏழை, எளிய மக்களுக்கு அளித்துவரும் அரசு போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் நாள்தோறும் 1.79 கோடி பயணிகள் 20,839 அரசுப் பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். டீசல் விலை உயர்வால் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தும் நிலையைத் தவிர்க்கும் வகையில், போக்குவரத்துக் கழகங்களுக்கு எனது தலைமையிலான அரசு, 2012 ஆம் ஆண்டு முதல் டீசல் மானியம் வழங்கி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 1,556 கோடியே 72 இலட்சம் ரூபாய் டீசல் மானியமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறையின் சார்பில் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. சென்னை மாநகரில் தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் 200 சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களை அருகிலுள்ள போக்குவரத்து முனையங்களுடன் இந்தச் சிற்றுந்துகள் இணைக்கின்றன. சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இந்த ஆண்டு இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியில் இருக்கும்போது இறந்துபோன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில் ஒரு போக்குவரத்துக் கழகத்தில் 200 பணியிடங்கள் என்ற வீதத்தில், 8 போக்குவரத்துக் கழகங்களில் 1,600 பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) பூந்தமல்லி மற்றும் திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் இலுப்பூர், ஆம்பூர் மற்றும் முசிறி போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனத்திற்கான புதிய அனுமதிச் சீட்டு, அனுமதிச் சீட்டு புதுப்பித்தல், வரி நிலுவை இல்லாச் சான்று, மறுபதிவுக்கான அனுமதி, தடையில்லாச் சான்று மற்றும் பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு பணிகளுக்காக பொது மக்கள் போக்குவரத்து அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, போக்குவரத்து அலுவலகங்களை நவீனமயமாக்குவதுடன், பல்வேறு சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

போக்குவரத்துத் துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் போக்குவரத்து அலுவலகங்களில் தேவையான வசதிகள் இருப்பதில்லை. எனவே தான், கடந்த 5 ஆண்டுகளில் 4 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், 5 பகுதி அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடங்களில்

2016 செப்டம்பர் 1][செல்வி ஜெ ஜெயலலிதா]

இயங்கிவரும் பூந்தமல்லி மற்றும் திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு 5 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-35

2. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர், வேலூர் மாவட்டம் ஆம்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு 4 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(உ) அரசு பணிபுரியும் மகளிருக்கு மகப்பேறு விடுப்பினை 9 மாத காலமாக உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் மக்களுக்கும் இடையே பாலமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். அரசின் அனைத்து நலத் திட்டங்களையும் மக்களிடம் எடுத்துச் செல்பவர்களும் அரசு ஊழியர்கள்தான். அரசு ஊழியர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பெண் ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அரசுப் பணியில் உள்ள தாய்மார்கள் தங்களது பச்சிளம் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்க, 1980 ஆம் ஆண்டு முதல் 90 நாட்கள் என இருந்த மகப்பேறு விடுப்புக் காலத்தினை 16-5-2011 முதல் 6 மாதங்களாக உயர்த்தி உத்தரவிட்டேன்.

எங்களது தேர்தல் அறிக்கையில் ‘மகளிருக்கு வழங்கப்படும் மகப்பேறு விடுப்புக் காலம் 9 மாதங்களாக உயர்த்தப்படும்’ என்ற வாக்குறுதியை நாங்கள் அளித்திருந்தோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனைச் செயலாக்கும்விதத்தில், அரசு பணிபுரியும் தாய்மார்கள் தங்களது பச்சிளம் குழந்தையைப் பேணிப் பாதுகாக்கும் வகையில், பேறுகால சலுகையாக வழங்கப்படும் 6 மாத கால மகப்பேறு விடுப்பு, 9 மாத காலமாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

6. மக்கள் நல்வாழ்வு, சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகள் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் அரசு பணிபுரியும் மகளிருக்கு மகப்பேறு விடுப்பு கால உயர்வு—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, இன்று 101-வது நாளில் விதி 110-ன்கீழ், 5 துறைகளுக்கான சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ரோஜா, மல்லிகை, செம்பருத்தி, துலிப், குறிஞ்சி என்று ஐந்து மலர்களைக் கொண்ட பூச்செண்டுகளை இன்று தமிழ்நாட்டு மக்களுக்குப் பரிசாக அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்களே, உங்களுடைய அறிவிப்புகளெல்லாம் 'பாலைவனத்தில் பெய்யும் பெரு மழையைப்போல் இல்லாமல், சோலைவனத்தில் பெய்யும் பருவ மழையைப்போல்' இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 'மரங்கள் ஓய்வை விரும்பினாலும், காற்று விடுவதில்லை' என்று சீனத்தின் சிவப்புப் போராளி தோழர் மா.வோ. அவர்கள் ஓய்வற்றப் பணிகள் குறித்து தன்னுடைய தோழர்களுக்குக் கூறினார். அதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள் அன்றாடம் ஓய்வின்றி சிந்தித்து விதி 110-ன்கீழ் அறிவிக்கும் திட்டங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் அரங்கிலும், மக்கள் மன்றத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

தோகை மயிலின் நீண்ட கழுத்து, பல வண்ணங்களுடன் மினுமினுப்பாக இருக்கும். அதை எந்தக் கவிஞனாலும் அவ்வளவு எளிதில் வருணித்துவிட முடியாது. அதுபோலதான், விதி 110-ன்கீழான உங்களது அறிவிப்புகள் அழகானதாக, ஆழமானதாக, நல்ல எண்ணங்களோடு, சிறந்த வண்ணங்களோடு இருக்கின்றன. அவற்றையெல்லாம் அடுத்தடுத்து சிறப்பாகச் செயல்படுத்தி, தமிழ்நாட்டை வளப்படுத்தி, தாங்கள் வரலாற்றை வசப்படுத்திட இறைவன் உங்களுக்கு அருள் புரியட்டும் என பிரார்த்தித்து, வாழ்த்தி அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

பிற்பகல் 12-40

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும், துறைதோறும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, நாட்டு மக்களின் வாழ்வில் மகிழ்ச்சிகரமான முன்னேற்றத்தை நாளும் தந்து வருகிற ஒப்பற்ற முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று விதி 110-ன்கீழ் முத்தான திட்டங்களை அறிவித்திருக்கிறார். தமிழ்நாட்டின் வரலாற்றில் மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், முன்பெல்லாம் அரசு மருத்துவமனைகளுக்குப் போவதற்கு யோசித்த காலம் உண்டு. ஆனால், சென்ற 5 ஆண்டுக் கால ஆட்சியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகள் தூய்மையாகவும், சிகிச்சை அளிப்பதிலே முதல் தரத்திலே இருப்பதாகவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள்கூட, இதே சட்டமன்றத்திலே முந்தைய ஆட்சிக் காலத்திலேயே பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கம்யூனிஸ்டு கட்சிகளின் பாராட்டுகளைப் பெற்ற ஒரு நிருவாகத்தினைத் தலைமையேற்று நடத்திடும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று 1,000 கோடி ரூபாய்க்கு மேலாக மருத்துவத் துறையிலே எண்ணற்ற திட்டங்களை அறிவித்து, புதிய, புதிய கட்டடங்கள், அறுவைச் சிகிச்சை அரங்கங்கள், நவீன கருவிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்திட வழிவகுத்திருக்கிறார்கள். தரமான மின்சாரம் என்ற ஒரு வார்த்தையை உலகத்தில் சொன்ன ஒரே தலைவி, தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தரமான இரத்தம் வழங்கிட இரத்த வங்கிகள்; பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு புதிய உபகரணங்கள்; குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைப்பதற்கு நவீன உபகரணங்கள்; முதியோர் நலன் காப்பதற்கு முதியோர் பிரிவுகள்; அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் விரிவுபடுத்துதல்; கர்ப்பிணித் தாய்மார்களுடைய நலன் காக்க நடவடிக்கைகள்; புற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கைகள், புதிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்குதல் என மருத்துவத் துறைக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்து,*

[திரு. உ. தனியரசு] [2016 செப்டம்பர் 1

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகள் சிறந்து விளங்கவும், பிணியிலிருந்து தமிழக மக்களை மீட்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று, சுற்றுலாத் துறையிலே ஏராளமான திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, புதிய மற்றும் திருத்திய சுற்றுலா பெருந்திட்டம்; கோவையில் புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்துதல் உள்ளிட்ட அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதேபோன்று, போக்குவரத்துத் துறைக்கு 1,000 கோடி ரூபாய்க்குமேல் டீசல் மானியத்தைத் தந்து, போக்குவரத்துத் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை, நம்பிக்கையை ஏற்படுத்தி, நாள்தோறும் கோடிக்கணக்கான மக்களின் பாதுகாப்பான, மகிழ்ச்சியான பயணத்தை அரசுப் பேருந்துகளிலே உறுதி செய்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்லாமல், தலைநகர் சென்னையிலே கூடுதலாக 100 புதிய சிற்றுந்துகளைத் தந்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுபோல, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 1,600 பேர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்கும் திட்டம்; வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் தொடர்பான அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, அரசுப் பணியாளர்களின் நலன்களில், குறிப்பாக மகளிர் நலன்களைக் காப்பதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஈடு இணை இந்த உலகத்திலே யாரும் இருக்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவேதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "அரசுப் பணியிலிருக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கான மகப்பேறு விடுப்புக் காலத்தினை, 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக உயர்த்தித் தருவேன்" என்று தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதியை, இன்றைக்கு, இந்த முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே ஒரு நல்ல அறிவிப்பாகத் தந்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாடு அரசுப் பணியில் உள்ள மகளிருடைய நெஞ்சங்களிலெல்லாம் பால் வார்த்து இருக்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அறிவித்திருக்கின்ற இந்த மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தையும் மனதாரப் பாராட்டி, வரவேற்று, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணிலே கனிவைக் காட்டி; கருத்திலே கருணைக் காட்டி; பண்பிலே மேன்மை காட்டி; சிந்தையில் விந்தை காட்டி; செயலிலே விரைவு காட்டி; நெஞ்சிலே அன்பைக் காட்டி; திட்டங்களில் கனிவைக் காட்டி; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் மகளிர்பால் தடையில்லா பாசம் காட்டி; தடங்கலற்ற நேசம் காட்டி; தன் வாழ்வையே தமிழக மக்களுக்காக அர்ப்பணித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தியாக வாழ்க்கை வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மகளிர் நலனில் என்றுமே சிறப்பு அக்கறைகொண்டு அவர்களது நலனுக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருபவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம், பெண் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை 270 நாட்களாக, 9 மாதங்களாக உயர்த்தி அறிவிப்பு செய்து, அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நலனைப் பாதுகாக்கின்ற ஒரே தலைவர், ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நிரூபித்து இருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு அமருகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாரல் மழை; தூரல் மழை; சொட்டும் மழை; கொட்டும் மழை; வெளுத்துக் கட்டும் மழை; இவை அனைத்தையும் முறியடித்துப் பொழிகின்றது தாயே, தங்களின் அறிவிப்பு மழை. (மேசையைத் தட்டும் ஒலி) அம் 'மாமழை', அம் 'மாமழை'; அல்ல; அல்ல; எங்கள் 'அம்மா' மழை, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாவின் திட்ட மழை, நம் மண்ணைக் காக்கிறது; நாளும் மக்களைக் காக்கிறது; நம் மக்களின் உயிரைக் காக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வணுகா உழைப்பாலே, தமிழகத்தை நோய் அணுகா மாநிலமாக மாற்றியிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மானுடத்தின் மாமணியே! தாயே! எதிரிகளை மட்டுமல்ல; வியாதிகளையும் ஓட, ஓட விரட்டுகிறது தங்களின் உயிர் காக்கும் உன்னதத் திட்டங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, பல புரட்சிகரமான மாபெரும் மகத்தானத் திட்டங்களை இன்றும் வாரி, வாரி வழங்கி, சுகாதாரத் துறையில் உலக நாடுகளை விஞ்சும் வகையில், inclusive growth எய்துவதற்கான தலம் தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், அது மிகையாகாது என்று சொல்லி, தாயின் பொற்பாதம் பணிந்து வணங்கி, மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் கோடானு கோடி நன்றி மலர்களைப் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சாதனை படைக்கும் எங்கள் தங்க நிகர் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கம். 32 ஆண்டுகளுக்குப் பிறகு, வரலாற்று சாதனையாக, இரண்டாவது முறையாக, தொடர் வெற்றியினை, மாண்புமிகு அம்மா அவர்களின் தன்னலமற்ற தியாகத்தால், 6-வது முறையாக மாநிலத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சராக மக்களால் அரியணையில் அமர வைக்கப்பட்டது மாபெரும் சரித்திர சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழித்திருக்கும் நேரமெல்லாம், மக்கள் வாழ்வதற்காகவே தன்னை அர்ப்பணித்து, தவ வாழ்க்கை வாழ்ந்துவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மனித தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தப் பேரவையில் விதி 110-ஐ சரித்திர சாதனைகளாக மாற்றிய சங்கத் தமிழ் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சித் திறத்தினால் தமிழகம் சுற்றுலாத் துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத்

2016 செப்டம்பர் 1] [திரு. வெல்லமண்டி ந. நடராஜன்]

திகழ்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் சுற்றுலாத் துறைக்கு முத்தான மூன்று அறிவிப்புகளை வெளியிட்டு, சுற்றுலாத் துறையினை மென்மேலும் ஏற்றம் பெறச் செய்யும் மாசற்ற தலைவி எங்கள் மகாசக்தி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் பொற்பாதங்களில் துறையின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Those who do not study history are condemned to repeat the same" என்றார் ஓர் அறிஞர். அதைப்போல, அகழ்வாராய்ச்சி, தொல்லியல் என்பது "Archaeology is the science of discovering rhythms and patterns that come at periodic intervals in human history" என்றார் இன்னோர் அறிஞர். தமிழர்களின் பண்டைய பெருமையை, உலகிற்கு உணர்த்தும்விதத்தில், சென்ற வருடம் பட்டறைப்பெரும்புதூரில் பல்லவ கால தொண்டை மண்டலத்தின் பெருமையை வெளிக்கொணர அகழ்வாராய்ச்சி நிகழ்த்தப்பெற்றது. இந்த வருடம், சங்க கால தமிழர்களின் பெருமையை உலகத்திற்கு எடுத்து இயம்பும்வண்ணம், இராமநாதபுரம், அழகன்குளத்தில் விரிவான தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னைக்கு பெருமை சேர்க்கும் National Art Gallery-க்கு சென்ற வருடம் ரூ.11 கோடி ஒதுக்கி, அதை உன்னதமான நினைவு இடமாக, tourists வந்து பார்க்கக்கூடிய இடமாக உருவாக்கித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. அதேபோல் இந்த வருடம் சென்னை அரசு அருங்காட்சியகத்தினை உலகத் தரத்திற்கு உயர்த்திட, 54 காட்சிக்கூடங்களையும் புதுப்பித்து, சீரமைத்திடவும், இந்தியாவிலேயே, இரண்டாவதாக 1851-ல் உருவாக்கப்பட்ட சென்னை அரசு அருங்காட்சியகத்தில் Exhibition Centre அமைத்து, அதனை உயிர்ப்பித்துத் தந்திடவும் ரூ.10 கோடி ஒதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். தமிழகத்தில் இதுபோன்று சிறு துறையாக இருக்கும் தொல்லியல் மற்றும் அருங்காட்சியகங்கள் துறைக்கும்கூட இவ்வளவு நிதி ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நமது பண்டைய

பெருமையைப் போற்றிடும் வகையில், தமிழ் கலாச்சாரத்திற்கு தகைசால் மகுடம் சூட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தலைவிதியை மாற்றிய ஒரு விதி உண்டு என்றால், அதுதான் மதி கொண்டு விதி செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் 110 விதியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல் அரசி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆறாம் முறை ஆட்சியில் அமோக வளர்ச்சி. 100 ஆண்டு சாதனையை, 100 நாட்களில் செய்தவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிலையான ஆட்சி, நிரந்தர வளர்ச்சி, சாதனைகளின் தொகுப்பாய், சரித்திரத்தின் மறுபதிப்பாய் புதிய உலகம் படைத்திட புறப்பட்ட தலைவி, எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையை ஒரு சேவைத் துறையாக மாற்றி, மக்களுக்குப் பணியாற்றச் செய்த பெருமை மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று போக்குவரத்துத் துறைக்கு விதி 110-ன்கீழ் செய்த அறிவிப்புகள் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இறைவா, இனி எனக்கு ஒரு பிறப்பு உண்டு என்றால், எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் தொண்டனாக என்றென்றும் பிறக்கும் வரத்தைத் தா!" என வேண்டி, (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறையின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்த மேன்மைமிகு அறிவிப்புகளுக்குப் போக்குவரத்துத் துறையின் சார்பாகவும், என் சார்பாகவும், என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயே! அறத்தின் வடிவமாக தாங்கள் வாழ்ந்து வந்து, ஆன்மிக இறைப்பணியில் அகிலத்தில் உயர்ந்து நின்று, அல்லும், பகலும் அயராது (மேசையைத் தட்டும் ஒலி) இமைப்பொழுதும் சோராமல் தமிழும், தமிழ்நாடும், தமிழக மக்களும் வாழ, வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, உங்களின் கமலத் திருவடிகளில் பணிந்து, வணங்கி, மகிழ்கிறேன்.

இன்று, ஏற்றமிகு கலைத் துறையின் சாதனைகளின் வரிசையில், 7-வது மண்டலக் கலைப் பண்பாட்டு மையம் கோயம்புத்தூர் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து உள்ளார்கள். இதனால் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள கலைஞர்கள் விரைந்து நல உதவிகளைப் பெறுவதற்கும்; சமூக சேவைகள் அவர்களுக்கு உடனுக்குடன் எவ்வித அலைச்சலும், சிரமமுமின்றி அவர்கள் குடியிருப்பின் பக்கத்திலேயே கிடைத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சென்னை அரசு கவின் கல்லூரியில் பழுதடைந்துள்ள முதலாம் ஆண்டு வகுப்புக் கட்டடத்தில் மேற்கூரை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பு, அக்கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைவதோடு, அந்தக் கலைக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் உதவும். மேற்கண்ட இரண்டு முத்தான அறிவிப்புகளை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், துறையின் சார்பாகவும், கோடானுகோடி நன்றி மலர்களைத் தங்கள் பாதம் பணிந்து, வணங்கி சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, தமிழக மக்கள் அனைவரும் நோயின்றி நலமாக வாழ, என்றைக்கும் மக்கள் பிணி தீர்க்கும் மருத்துவராகத் திகழ்பவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தியாவின் தலைநகரம் டெல்லியாக இருக்கலாம்; உலக நாடுகளுடைய அமைப்பின் தலைநகரம் அமெரிக்காவாக இருக்கலாம்; ஆனால், 'ஜனநாயகம்' என்ற சொல்லுக்கு எது பொருள் என்றால், நலத் திட்டங்களைத் தருகிற, *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏழையெளிய மக்களைக் கைத்தூக்கி விடுகிற, பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் நலமான எதிர்காலத்தை உருவாக்கித் தருகிற, முதியோர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற, நலத் திட்டங்களை அள்ளித் தருகிற அரசுதான் உலகத்திலேயே சிறந்தது என்பார்கள். இன்றைக்கு உலகத்திலேயே இந்த நலத் திட்டங்களுக்கு ஒரு தலைநகரம் எது என்றால், அது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற இந்தத் தமிழகம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* பிற மாநிலங்களும், பிற நாடுகளும் பார்த்துப் பின்பற்றுகிற வகையில், சுகாதாரத் துறையில் பல்வேறு நலத் திட்ட அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள்.

பிற்பகல் 12-55

மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர் பெண் குல சாமி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்குப் பெண் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை 9 மாதங்களாக உயர்த்தி அறிவிப்பு செய்திருக்கிறார்கள்.

பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை கடந்த 5 ஆண்டுகளாக எடுத்ததன்விளைவாக, 'எப்படி இருந்த நான், இப்படி ஆகிவிட்டேனே' என்று *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு படத்திலே சொல்வார்களே, அதைப்போல, நிறம் மாறி, பழுதாகி, ஆங்காங்கே நின்று கொண்டிருந்த நிலைமை மாறி, பேருந்துகளெல்லாம் இன்றைக்கு கண்கவர் வண்ணங்களில் 'ஜில்' என்று புதிய பேருந்துகளாக, *(மேசையைத் தட்டும் ஒலி)* சிறிய பேருந்துகளாக மாறியுள்ளன. இன்றைக்குப் போக்குவரத்துத் துறை சார்ந்த சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில், இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

முத்தான பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி அவர்கள்.*

திரு. மு. கோதண்டபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, எனது கன்னி உரையைத் தொடங்குகின்றேன். தமிழகத்தின் தலைசிறந்த முதல்வராக, ஆற்றல் அனைத்தும் உடைய முதல்வராக, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருந்து வழிகாட்டுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க அன்னை, தமிழகத்தில், 'மக்கள் சக்தியே மகேசன் சக்தி' என்று தன்னந்தனியாக களம் இறங்கி, எத்தனைக் கூட்டணிகள் வந்து எதிர்நின்ற போதிலும், அத்தனையும் சிதறுண்டு போக, தொடர்ச்சியாக, இரண்டாவது முறையாக 32 ஆண்டுகளுக்குப்பிறகு, மீண்டும் நல்லாட்சி அமைத்து, வரலாற்றில் சுவடு பதித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் வரலாற்றுச் சதுரங்கத்தில், சாதனை வெற்றி பெற்று, வரலாற்றுச்*

சிறப்புமிக்க முதல்வராக 6-வது முறையாகப் பதவியேற்று, முதல்வர் அரியணையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற எங்கள் இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சு, எட்டு கோடி தமிழர்கள் ஒலிக்கின்ற ஓசை, எங்கள் அம்மா, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ மூதறிஞர்களும், அறிஞர்களும், கோமான்களும், ஜமீன்தார்களும், சாமானியர்களும் அலங்கரித்த இந்த மாபெரும் அவையிலே, சாதாரண தொண்டனான என்னையும் சட்டமன்ற உறுப்பினராக அமர வைத்து, அனைத்து மக்களுக்கும் தொண்டு செய்ய வாய்ப்பளித்த ஓர் அற்புதத் தலைவி அம்மா அவர்களைக் காணும்போது, என்னைப் பெற்றெடுத்த தாய், தந்தைக்கும் மேலாக, இந்த நாட்டிற்கு என்னை அடையாளம் காட்டிய மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவி மாண்புமிகு தமிழக நிரந்தர முதல்வர் அம்மா அவர்கள் எனது வாழ்வில் ஒளியேற்றி வைத்து, வழி நடத்தும் கலங்கரை விளக்கம்; தமிழகத்தின் வரலாற்றில் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பறைசாற்றுகின்ற விதத்திலே, சேர, சோழ, பாண்டியர்களையும் விஞ்சி, பல்லவ சாம்ராஜ்யத்தினரால் உருவாக்கப்பட்ட கடற்கரைத் துறைமுக நகரமான, உலக யுனெஸ்கோவால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட, உலக கலாச்சாரப் பண்பாட்டுத் துறை மற்றும் தொல்லியல் துறையால் போற்றிப் பாதுகாத்து வரப்படுகின்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க மகாபலிபுரம் என்கின்ற மாமல்லபுரத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில், தந்தை முனுசாமி மற்றும் தாய் செல்லம்மாள் ஆகியோருடைய மகனாய்ப் பிறந்த என்னை, போற்றுதலுக்கும், வணங்குதலுக்கும் உரிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், 1988 ஆம் ஆண்டு, ஜனவரியில் நகரச் செயலாளர் பதவி தந்து, கழகத்தின் பொதுக் குழு உறுப்பினராகவும், பேரூராட்சிக் கழகச் செயலாளராகவும் 20 ஆண்டுகள் பணி செய்திட வைத்து, பிறகு மாமல்லபுரம் சிறப்புநிலைப் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட

எம்.ஜி.ஆர். மன்றத் துணைச் செயலாளராகவும், இன்று திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்ற வைத்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா! தங்களுடைய அரசியல் களத்தில் நான் தளபதியாக அல்ல; காலாட்படை வீரனாக, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தாங்கள் கட்டிக்காத்து வருகின்ற இந்த இயக்கத்திற்கும், விசுவாசமிக்க தொண்டனாக காலம் முழுவதும் உடனிருப்பேன் தாயே! என்னைச் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், எனது அருமை திருப்போரூர் தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமை, கண்ணியம், கட்டுப்பாடும், கூர்மதியும், பரந்தமனமும், பகுத்தறிவு நெறியே பண்பாட்டு நெறியாக வளர்ந்து, உழைப்பே உயர்வுக்கு வழி என்று உரைத்து, தியாக வாழ்வே தேசிய வாழ்வாகக் கருதி, தளராது வழங்குவதையே குறிக்கோளாகக் கொண்டு, அன்பே உருவாய், அமிழ்தமே மொழியாக, விளங்கும் அட்சயப் பாத்திரமே எங்கள் அம்மா! கருணைப் பார்வையால் கழகத்தில் உழைக்கும் தொண்டனுக்குப் பொறுப்புகளை வாரித் தருகின்ற கற்பக விருட்சமே எங்கள் அம்மா! எட்டுத் திக்கும் புகழ்பரவ, ஏற்றமிகு செயலால் தரணி போற்றும் தனிப்பெரும் தவப்புதல்வியே எங்கள் அம்மா! வீரத்திலும், தியாகத்திலும், விவேகத்திலும், சொல்லிலும், செயலிலும், மனதிலும், மனித நேயத்திலும், அம்மா அவர்களுக்கு ஒப்பாக, இணையாக எவரையும் எண்ண முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா! அரசியல் வானில் தாங்கள் ஒரு தங்கத்தாரகை. எதிரிகளின் மனதில் தாங்கள் என்றும் சிம்ம சொப்பனம். இருண்ட தமிழகத்தை ஒளிரவைத்த ஒளிவிளக்கு. வாடிய வயிறை குளிரவைத்த அன்னபூரணி. (மேசையைத் தட்டும் ஒலி) நாடிய நற்றமிழரை நாடு அறியவைத்த அன்னையே, கல்வியை உயரவைத்து கலங்கிய ஏழைகளின் கண்திறந்து வைத்த கலைமகளே! நாளெல்லாம் உழைத்தவர் உண்ண விலையற்ற 20 கிலோ அரிசியும், உணவும் தந்து, வாடிய வறியோர் துயர்துடைப்பதில் ஏழைகளின் ஏந்தலே எங்கள் அம்மா! எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி; (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளை முறியடித்த மலைமகளே! ஆறு குணங்களையும், அரசுக்கே உரிய அம்சங்களையும் கொண்டு, களம் கண்டு அஞ்சாத புறநானூற்று

சிங்கத் தலைவியே! தவமாய் தவமிருந்து தமிழன்னை பெற்றெடுத்த மாதவமே! மங்காப் புகழுக்கும், தமிழுக்கும், தரணிக்கும் வழிகாட்டும் தன்னிகரில்லா தவப்பயனாய், வள்ளுவர் தந்த மறைப்படி, வான்புகழ் கொண்டு இவ்வையம் ஆள வந்துதித்த மாதரசியே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு மொழிகள் கொண்டு அளவற்ற சிந்தனையால், அறிவால், செயல் திட்டத்தால், அகிலத்தில் உள்ள 60 நாடுகளும் புகழ்பாடும், இப்பூவுலகின் புண்ணிய மாதாவே, தங்களின் பொற்பாதங்கள் தொட்டுப் பணிகின்றேன் அம்மா! எனக்கு குருவாகவும், தெய்வமாகவும், தங்களை ஒற்றைப் பார்வையில் காண்கின்றேன் அம்மா!

தெய்வத்தினை ஐந்தெழுத்தால், ஆறெழுத்தால், ஏன், எட்டெழுத்து மந்திரத்தால் போற்றுகிறோம். ஆனால், உயரிய மூன்றெழுத்து அம்மா என்கின்ற மந்திரச் சொல்லே தமிழக மக்களுக்குக் காட்சிதரும் நிரந்தர தாரக மந்திரமாக உள்ளது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மக்களின் 'நலன்' என்னும் மூன்றெழுத்து ஒன்றை எண்ணி எய்துபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தின் துணைகொண்டு காவேரி நீரைக் கொணர்ந்து, விவசாயிகளின் நெஞ்சங்களைக் குளிரவைத்த காவேரித்தாய் எங்கள் அம்மா! மாணவர்களுக்கு உண்ண தரமான உணவு, உடுக்க சிறப்பான உடை, படிக்க நோட்டுப் புத்தகம், பேனா-பென்சில், கணித உபகரணப் பெட்டி, லேப்டாப், மிதிவண்டி தந்து, கற்போருக்கு கல்வி உதவித் தொகையும் தந்து, கல்வியின் தரம் உயர்த்தி, தமிழ்நாட்டின் கல்வியை முதன்மைப்படுத்த பள்ளிக் கல்விக்கு 24,130 கோடி ரூபாயை அள்ளித்தந்தவர் எங்கள் அம்மா!

எங்கள் அம்மாவின் கருணைப் பார்வையால் வறண்ட காடுகளும் பசுமையாகின்றன. கிராமங்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி, மக்கள் தூய்மையான காற்று பெற்றிடவும், விவசாயப் பெருமக்கள் கருவிகள் வாங்கவும், விதைகள் வாங்கவும், மருந்துகள் வாங்கவும் மானியம் தந்து, பசுமைப் புரட்சி செய்து, இரட்டிப்பு மகசூல் பெற்றிடச் செய்தவரும் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் பளிங்குபோல் சாலைகள் அமைத்து, பேருந்து இயக்கி, பெருமை தந்தவர் எங்கள் அம்மா. சுற்றுலாவிற்கு உயர்வளித்து, இந்தியாவிலேயே அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தமிழகத்தில்தான் என்று முதன்மைப்படுத்தியவர்

எங்கள் அம்மா. நிந்தித்தவர் எண்ணங்களைத் தகர்த்து, வீராணம் திட்டத்தினை நிறைவேற்றி, சென்னை மக்களுக்குக் குடிநீர் வழங்கியவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உழவர்களுக்குப் பாதுகாப்புத் திட்டமும், வறட்சிக்கு நிவாரணம் தந்து வாழவைத்தவர் எங்கள் அம்மா.

புயலினும் மேலான வேகத்தில் புனரமைப்பு செய்து, தமிழகத்தில் 'தானே' புயல் அடித்த சுவடே தெரியாமல் மாற்றியது எங்கள் அம்மா. எதிர்பாராத கனமழையால் பாதித்த சுவடுகளே தெரியாமல், சுற்றிவந்து மக்களைச் சுகப்படுத்தியவர் எங்கள் அம்மா. 12,57,645 வீட்டு மனை இலவசப் பட்டாக்களை தந்து, மக்களை வாழவைப்பவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்று சூளுரைத்து, அரசைத் தேடி மக்கள் செல்வதைத் தவிர்த்து, மக்களைத் தேடி அரசு செல்கின்ற அம்மா திட்டம் தந்து, அனைத்து சான்றிதழ்களையும் அன்றே கிடைக்க வழிசெய்தவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மீனவர் குடும்பங்களுக்கு ஆண்டொன்றிற்கு 11,500 ரூபாய் தந்து மீனவர் வறுமை போக்கிய மீனவத் தாய் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். தொட்டில் குழந்தைத் திட்டம் தந்து, அன்னை தெரசாவின் நல்லாசி பெற்றவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அயல்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து, அமைதியான நற்பூங்காவாக விளங்குகின்ற தமிழகத்தில் 2,42,160 கோடி ரூபாய் அளவிற்கு தொழில் முதலீடுகளைப் பெற்றுத் தந்து, தொழில் புரட்சி கண்டவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வூதியத் திட்டங்களுக்கான நிதி 2015-2016 ஆம் ஆண்டிற்கு ரூ.3,962.81 கோடியாக உயர்ந்துள்ளது. 31-3-2016 வரை 30.7 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர் என்பது பெருமைக்குரியதாகும்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத் தலைவர் இயற்கை மரணம் அடைந்தால், அவரது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த ரூ.10,000/- நிதியுதவியை, ரூ.20,000/-ஆக உயர்த்தி, 2015 ஆம் ஆண்டில் ஆணையிட்டவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் தள்ளுபடி

ரூ.16,94,145 கோடி; ஆண்டொன்றுக்கு மின் நுகர்வோர் 1.9 கோடி பேருக்கு 16.07 கோடி ரூபாய் மானியம்; 78,378 நெசவாளர்களுக்கு தலா 200 யூனிட் மின்சாரமும், 98,712 விசைத்தறி நெசவாளர்களுக்கு தலா 750 யூனிட் மின்சாரமும் விலையில்லாமல் தருபவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மின் ஆளுமைத் திட்டத்தின்மூலம் வருமானச் சான்று, சாதிச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று, ஆதரவற்ற மகளிருக்கான சான்று என நடப்பாண்டில் 74,50,176 சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமணத்திற்கு 8 கிராம் தங்கமும், ரூ.50,000/-மும் தருபவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். கூடங்குளம் அணு உலையை ரஷ்ய அதிபர் மற்றும் பாரதப் பிரதமருடன் திறந்து வைத்து, அங்கு உற்பத்தி செய்யப்படும் 1,000 மெகா வாட் மின்சார உற்பத்தியில், 563 மெகா வாட் மின்சாரத்தைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்தது எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத்திற்கு ரூ.4,405 கோடி நிதியுதவி; டெல்டா விவசாயிகளின் சம்பா சாகுபடிக்கு ரூ.64.30 கோடி ரூபாய்; குறுவை தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.54.65 கோடி ரூபாய்; 27,415 ஏக்கர் நிலம் பாசனத்திற்கு ரூ.63.36 கோடி மானியம்; வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரை செல்ல மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ரூ.37.70 கோடி; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் விரிவான காப்பீடு திட்டத்தில் 1,61,886 பேருக்கு ரூ.239 கோடி மதிப்பில் சிகிச்சை; 2,01,533 பெண்களுக்கு மகப்பேறு நிதியுதவி ரூ.180.98 கோடி; 1,99,207 பேருக்கு 'அம்மா' திட்டம்மூலம் உடனடித் தீர்வு; 31.12 இலட்சம் மாணவர்களுக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதி; சமூக நலப் பாதுகாப்புத் திட்டத்தில் 47,830 பேர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம்; 1,53,149 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.30.63 கோடி நிவாரணம்; மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிக்கு ரூ.890 கோடி நிதி ஒதுக்கீடு; விலையில்லா ஆடு மற்றும் கறவை பசுக்கள் வழங்க ரூ.182.33 கோடி ஒதுக்கீடு என கடந்த 100 நாட்களில் நூறாண்டுகள் பேசுகின்ற திட்டங்களை அள்ளித்தந்த தர்மத் தாய் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 2011 முதல் 2016 வரை அதிகப்படியாக, 65 வட்டங்களைப் புதிதாகப் பிரித்து, மக்கள் எளிதில் பயனடையச் செய்தவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில்

சாலைகளும், பாலங்களும், கட்டடங்களும் மக்கள் பயனடைய ஏராளமாக கட்டப்பட்டு, தமிழகத்தை வளமைப்படுத்தியவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். எனவே, எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்தில், சுண்டுவிரல் நுனியில் சுட்டிக்காட்டுகின்ற திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டவை, அறிவிக்கப்படாதவை என ஆயிரமாயிரம் நலப் பணிகள், நாட்டுப் பணிகள், மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த எண்ணத்தில் உருவாகிய 'தொலைநோக்குத் திட்டம் 2023'-ன்மூலம், இத்திருநாட்டில் தமிழகம் தலைநிமிரும், வல்லரசுகளும் வந்து சரணடையும். நல்லவற்றிற்குத் தடைக்கற்களாக இருக்கும் அல்லல் குணம் கொண்டோர், அசுர மனம் படைத்தோர், வீணான வசை பாடியோர், கொடுங்கோலர்கள், கொள்ளையர்கள் இந்த நாட்டில் இருக்கமாட்டார்கள் என்று சொல்லி, எனது தொகுதியின் கோரிக்கைகளைத் தங்கள்முன் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள்; பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. மு. கோதண்டபாணி: ஒரு நிமிடத்தில் சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி பலதரப்பட்ட சிறப்புகளைக் கொண்டதாகும். (குறுக்கீடுகள்) தமிழகத்தில் உள்ள I.T. Park-களும், SIPCOT-களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் சத்தம் போடாமல், அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 1-10

திரு. மு. கோதண்டபாணி: தமிழகத்திலுள்ள IT Park-களும், SIPCOT-களும், தமிழகத்தின் அதிஉயரமான கட்டடங்களும், முக்கிய சாலைகளான ராஜீவ் காந்தி சாலை மற்றும் ECR சாலைகளில் உள்ளன. அடுக்குமாடிக் குடியிருப்புகளும், resort-களும் எனது தொகுதியில் அதிகளவில் உள்ளன. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையமும், வரப்போகின்ற மேற்படி நிலையமும் இங்குதான் உள்ளன. பல்லவர் சாம்ராஜ்யத்தினைப் பறைசாற்றுகின்ற மாமல்லபுரம் சிற்பங்களும், புண்ணியத் தீர்த்தமான திருக்கழுக்குன்றமும், முருகன் சமர்புரிந்த திருப்போரூர் சன்னிதானமும், சிவன் அடிமுடி தேடிய வராக அவதாரத்தின் திருவிடந்தையும், அணு உலைமூலம் நாட்டிற்கு மின்சாரம் தருகின்ற

கல்பாக்கமும், 37 கி.மீ. நீளமுள்ள கடற்கரைப் பகுதியும், 37 கி.மீ. நீளமுள்ள பக்கிங்ஹாம் கால்வாயும், 15 மீனவ கிராமங்களும், 2 ஒன்றியங்களும், 3 பேரூராட்சிகளும், 84 ஊராட்சிகளும் எனது தொகுதியில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுவரை எனது தொகுதியில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். மாமல்லபுரத்தில் சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர்மூழ்கிக் கப்பல் கண்காட்சியகம், சுமார் 240 கோடி மதிப்புள்ள கடல்வாழ் உயிரினங்கள் கண்காட்சியகம், ஏழை மீனவக் குடும்பங்கள் வாழ வழி செய்யும் நடமாடும் கடல் மீன் உணவகங்கள், மாமல்லபுரத்திலிருந்து எண்ணூர் சென்றடைய எட்டு வழிச் சாலையாக பெருவழிச் சாலை, சட்ராசிலிருந்து வேலூர் செல்ல நான்கு வழிச் சாலை, தேசிய மர வளர்ப்புப் பண்ணை என மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து உயர்ந்த திட்டங்களுக்கும் எனது சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாமல்லபுரம் பேருந்து நிலையம் அமைப்பதற்கு 1992 ஜனவரி 14-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். உலகச் சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்திற்கு பேருந்து நிலையம் அவசியம் என்ற காரணத்தினால், உலகத் தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துத் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால்தான் திருப்போரூர் வட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது. அங்கு தீயணைப்பு நிலையம் ஒன்றும், சார்பு நீதிமன்றம் ஒன்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் ஒன்றியம் தத்தலூரிலும், திருப்போரூர் ஒன்றியம் முள்ளிப்பாக்கத்திலும் கால்நடை மருத்துவமனைகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாமல்லபுரத்தில் சிற்பிகளின் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும்வகையில், சிறப்பு சிற்பப் பூங்கா ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா

அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாமல்லபுரத்தைச் சுற்றி வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய மாணவர்கள் தொழிற்கல்வி பயில, பூஞ்சேரியில் பாலிடெக்னிக் ஒன்று அமைத்துத் தர வேண்டுகின்றேன். மாமல்லபுரம் பூஞ்சேரியில் சர்வே எண் 52/B-ல் உள்ள காலியிடத்தில் உலகத் தரம் வாய்ந்த பன்னாட்டு விளையாட்டு மைதானம் ஒன்றைக் கட்டித் தர வேண்டுகிறேன். சிற்பிகளின் நலன்கருதி, வாலாஜாபாத் ஒன்றியத்தில் பட்டிமலை குப்பம் போன்ற இடங்களில் இருக்கும், சிற்பம் செய்ய உகந்த குவாரிகளை உடைத்து ஜல்லிகளாக மாற்றாமல், பாதுகாத்து, சிற்பத் தொழிலுக்கு மட்டும் அதனைப் பயன்படுத்திட உதவுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பிறவி கண்டாலும், இப்பூவுலகில் மட்டுமல்ல; வானுலகிலும் என் தாய், தர்மத் தாய், தவத் தாய், வீரத் தாய், வெற்றித் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) அன்பும் அறனும் உடைய தாய், சொல்லில் வல்லமை படைத்த தாய், கருணைத் தாய், இதய தெய்வம் எங்கள் குடும்பத்தில் குல தெய்வம், மனிதர் குல மாணிக்கத் தாய்க்கு விசுவாசமிக்க தொண்டனாக இருந்து சேவை செய்வதே எனது நிறைவான ஆசை என்று சொல்லி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைச் சரணடைந்து, வணங்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆன்றோர்களும், சான்றோர்களும் நிறைந்த வரலாறு கண்ட இந்தச் சபையில், வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில் என்னைப் பேச வைக்க இசைவு தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைதியின் தலைவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கி இடம் அமர்கின்றேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு விதி 110-ன்கீழான அறிவிப்பில் பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பை 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக உயர்த்தியிருக்கிறார்கள்.

சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்போது நான் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தேன். மகப்பேறு விடுப்பை 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக உயர்த்தியதற்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக அதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், அவ்விடுப்பினைத் தனியார்த் துறைக்கும் நீட்டித்து அமல்படுத்தும்வகையில், நம்முடைய வழிகாட்டு நெறிமுறைகள் அமைய வேண்டும். அதை அவர்களும் அமல்படுத்தும் விதத்தில், தனியார் நிறுவனங்களுக்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். தனியார்த் துறையில் பணிபுரியும் மகளிருக்காகவும் தேவையான விதிமுறைகளை (guidelines) அல்லது சட்டத்தில் வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன். அதேபோல, 9 மாத கால மகப்பேறு விடுப்பினை, கருவுற்ற நாளிலிருந்து குழந்தைக்கு ஒரு வயது முடிவதற்குள்ளாக, எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளும்விதத்தில், விதிமுறைகளை வகுக்க வேண்டும். அவ்விடுப்பை ஒரே நேரத்தில் எடுக்க வேண்டுமென்ற கட்டாயத்தை உருவாக்காமல், குழந்தை தரித்த நாளில் இருந்து, அந்தக் குழந்தைக்கு ஒரு வயது நிரம்பும்வரை எப்போது வேண்டுமானாலும், இரண்டு மாதம், மூன்று மாதம் விடுப்பு எடுத்து, மீண்டும் அவர்கள் இரண்டு மாதம் பணிக்கு வந்து, பின்னர் மீண்டும் அவர்கள் அந்த விடுப்பினைத் தொடரும் வகையில், அந்த விடுப்பை 9 மாத காலம் தொடர்ந்து எடுகக வேண்டுமென்று இல்லாமல், அதைப் பிரித்து வழங்கக்கூடிய வகையில், விதிமுறைகளை வகுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதியோர், விதவைகள். . .

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 110 விதியின்கீழ் மகளிருடைய வாழ்விலே ஒளியேற்றுகின்ற வகையிலே வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை இன்றைக்குத் தந்திருக்கின்றார்கள். அதற்கு இந்த மாமன்றத்தில் நன்றி தெரிவித்தும் சிலர் பேசியிருக்கின்றார்கள். 110 விதியின் கீழ் அளிக்கப்படும் அறிக்கையின்மீது விவாதம் கூடாது

என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். ஆகவே, அதிலே விவாதம் வேண்டாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 விதியின்கீழ் அறிக்கை அளித்ததற்குப்பிறகு பாராட்டினாலும் ஒப்புக்கொள்ளவில்லை; கோரிக்கை வைத்தாலும் நீங்கள் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள். அதனால்தான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடம் அப்போது* chance *கேட்கவில்லை. எனவே, மானியக் கோரிக்கையில் பேசும்போது இதைச் சொன்னால் தவறு கிடையாது. மேற்கொண்டு அதிலுள்ள விஷயங்களைப் பெண்களுக்காகப் பேசுகிறேன். நீங்கள் அனுமதியளியுங்கள். நான் ஒரு பெண்ணாக இருப்பதால் எனக்கு அந்த கஷ்டங்கள் தெரியும். இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்ற முறையிலும் எனக்கு இந்த விஷயங்கள் நன்றாகப் புரிகிறது. அந்த 9 மாத கால விடுப்பு குறித்த அறிவிப்பு என்பது மிகச் சிறந்த ஒரு விஷயம். நானும் ஏற்கெனவே கோரிக்கை வைத்தேன்; அ.இ.அ.தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையிலும் இது சொல்லப்பட்டிருக்கிறது. 110 விதியின்கீழ் அறிவிப்பு வெளியிட்டவுடன் இதைப் பேசினால் நீங்கள் விடமாட்டீர்கள். அதனால்தான் நான் இப்போது சொல்கிறேன். ஏனென்றால், இது மிகவும் முக்கியமான விஷயம். அது* guidelines; *இப்போது மேலோட்டமாக, முதல் திட்டமாக அந்த மகப்பேறு விடுப்பினை விரிவாக்கம் செய்து, 9 மாதங்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த விடுப்பினை எப்படி அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்பதில் எனக்கு ஒரு* suggestion *இருக்கிறது; அவ்வளவுதான். அதைத்தான் நான் முன் வைக்கிறேன். குழந்தைக்கு ஒரு வயது ஆகின்ற வரைக்கும், அந்த 9 மாத கால விடுப்பை எப்போது வேண்டுமானாலும்,* break *கொடுத்து எடுத்துக்கொள்கிறமாதிரி, தாயின் உடல் நிலையைப் பொறுத்து இதை முடிவு செய்யலாம். ஆகையால் அந்தவகையில் அந்த விடுப்பினை எடுத்துக்கொள்ளும் முறையை* design *பண்ணலாம் என்று கேட்பதற்காகத்தான், நான் இந்தக் கோரிக்கையை முன்வைத்தேன்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, தனியார்த் துறைக்கும் இதை நீட்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார்த் துறையில் கட்டாயமாக இதைப் பின்பற்றுவதற்கு ஏற்றவாறு நீங்கள் சட்ட விதிகளைக் கொண்டுவர வேண்டும். (குறுக்கீடு) முதியோர், விதவை,. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பணிபுரியும் மகளிருக்காக 110 விதியின்கீழ் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். கருவுற்ற தாய்மார்கள் அனைவருக்கும் தாயாகவும், அவர்களது வாழ்வில் வளத்தை வழங்கக்கூடிய ஒரு தெய்வமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தாய்-சேய் நலம் காக்கும் ஓர் அறிவிப்பு; அரசுப் பணியிலிருக்கும் பெண் ஊழியர்களுக்காக, கருவுற்ற தாய்மார்களுக்காகக் கொண்டு வந்த திட்டம் இது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு மாதிரி இந்த 9 மாத கால விடுமுறையை எடுத்துக் கொள்ளும் வகையில் விதிமுறைகள் அமைய வேண்டுமென்று கேட்கிறார். கருவுற்ற அரசுப் பெண் ஊழியர்களுக்காக, இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசு பணிபுரியும் கருவுற்ற தாய்மார்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப, இந்த 9 மாத கால விடுமுறையை எடுத்துக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும் என்பது நடைமுறை சாத்தியமல்ல; குறிப்பாக, அவர்களுடைய தாய் சேய் நலனைக் காப்பதற்காகத்தான் இந்தத் திட்டம். கருவுற்ற தாய்மார்கள் தொடர்ந்து அந்த விடுமுறையை எடுத்தால் மட்டுமே, அவர்களுடைய உடல் நலம் பாதுகாக்கப்படும். தாயினுடைய உடல் நலத்தோடு, சேயினுடைய உடல் நலத்தையும் பாதுகாப்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்று அனுமதித்தால், நடைமுறைச் சிக்கல் ஏற்படும். ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது நடைமுறை சாத்தியம் இல்லை என்று சொல்கின்றார்கள். ஆனால், அது நடைமுறை சாத்தியம்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நான் தெரிவித்த கருத்தினை நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, ஆய்வு நடத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தாய் கருவுற்றதிலிருந்து குழந்தைக்கு ஒரு வயது முடியும் வரை உள்ள காலகட்டத்தில் 9 மாதங்களை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இடைப்பட்ட காலங்களில், எப்பொழுது வேண்டுமோ, அப்பொழுது விடுப்பு எடுத்துக்கொண்டு, 9 மாத விடுப்பினை அந்த period-க்குள் அவர்கள் முடிக்கலாம். அப்படிப் பார்க்கும்போது கருவுற்ற நாளிலிருந்து 9 ஆவது மாதத்தில் குழந்தை பிறக்கிறது. அந்த 9 மாதங்களில், 8 மாதங்கள் வரையிலும், நல்ல நிலையில் பணிக்கு வரக்கூடிய தாய்மார்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்போது இந்த விடுப்பு தேவைப்படாது. ஆனால், குழந்தை பிறப்பதற்கு ஒரு மாதம் முன்பிருந்து, குழந்தை பிறந்து 8 மாதங்கள் முடியும்வரை அந்த விடுப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அந்தவிதத்தில், இந்தச் சலுகையை relax செய்து தருமாறும், இந்தச் சலுகையை அரசு பெண் பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல், தனியார்த் துறையில் பணியாற்றும் பெண்களுக்கும் விரிவுபடுத்திட நீங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், முதிர்க்கன்னிகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு இந்திரா காந்தி ஓய்வூதியத் திட்டம் மற்றும் பல்வேறு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கக்கூடிய நிதியுதவி, குறிப்பாக, தமிழகத்தில் தற்போது 1,000 ரூபாயாக வழங்கப்படும் இந்த ஓய்வூதியத் தொகையை 1,500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 60 வயதான. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, 2 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் அடுத்த point-க்குச் செல்லுங்கள். (குறுக்கீடு)*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் என்னை 2 நிமிடங்களுக்குள் பேசி முடிக்கச் சொல்கிறார். நான் பேசி முடித்த பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது கருத்தைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை ஏற்கெனவே 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி குறிப்பிட்ட ** என்ற அந்தப் பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)*

திருமதி எஸ். விஜயதரணி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இன்னும் 2 நிமிடங்களில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அதற்குத் தகுந்தாற்போல் பேசுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர்கள், விதவைகள், கணவனால்*

***மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

கைவிடப்பட்ட பெண்கள் ஆகிய அனைவருக்குமே உதவித் தொகையை 1,500 ரூபாயாக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி உயர்வு போன்றவற்றையெல்லாம் மனதில்கொண்டும், பெட்ரோல் மற்றும் டீசல் விலை கடுமையாக உயர்ந்திருக்கின்ற காரணத்தினால் தொடர்ந்து விலைவாசி உயர்வு அதிகரித்துக்கொண்டே வருவதாலும், தற்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த உதவித் தொகை போதாது என்பதால், இதை 1,500 ரூபாயாக அனைவருக்கும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கண் பார்வையற்றோருக்கு இத்தொகையை 2,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதியோர் ஓய்வூதியத் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஏற்கெனவே 500 ரூபாயாக இருந்த உதவித் தொகையை 100 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தி, 1,000 ரூபாயாக வழங்கி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுகூட இன்றைக்கு 200 ரூபாய், 300 ரூபாய் மற்றும் 80 வயதிற்குமேல் உயிரோடு இருந்தால், அவர்களுக்கு 500 ரூபாய் என்ற வகையில் உதவித் தொகை வழங்குகிறது. நமது அண்டை மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, கேரள மாநிலத்தில் ரூ.600/-, ரூ.800/- என்று மட்டுமே வழங்கிவருகின்றார்கள். கர்நாடகா மாநிலத்தில் ரூ.200/-, ரூ.500/-, ரூ.750/- என்று மட்டுமே வழங்கிவருகின்றார்கள். அருணாச்சலப்பிரதேசத்தில் ரூ.200/-, ரூ.300/- என்று மட்டுமே வழங்கிவருகின்றார்கள். ஏன்; மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் சொந்த மாநிலமான குஜராத் மாநிலத்தில்கூட ரூ.400/-, ரூ.500/-, ரூ.700/- என்றுதான் வழங்கிவருகின்றார்கள். மகாராஷ்டிரா மாநிலத்தில் ரூ.600/- என்றும், மேகாலயாவில் ரூ.200/-, ரூ.300/-, ரூ.500/- என்றும், பஞ்சாப் மாநிலத்தில் ரூ.250/-, ரூ.500/- என்றும், இராஜஸ்தான் மாநிலத்தில் ரூ.500/-, ரூ.750/- என்றும், திரிபுராவில் ரூ.500/- என்றும், உத்தரப்பிரதேச மாநிலத்தில் ரூ.300/-, ரூ.500/- என்றும்தான் உதவித் தொகையை வழங்கிவருகின்றார்கள்.

ஆகவே, இந்தியாவிலேயே முதியோர்களுக்கும், ஆதரவற்றோருக்குமான உதவித் தொகையை மிக உயர்ந்த அளவில், 1,000/- ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வழங்கிவருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது விலைவாசி உயர்ந்துகொண்டேயிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்கள், பல்வேறு மானியங்கள்மூலம் விலைவாசியை தமிழகத்தில் கட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 60 வயதான அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை நிபந்தனையின்றி வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இது நல்ல யோசனைதான். சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் பாயின்ட்டே முதியோர்

*உதவித் தொகையைப் பற்றியதுதான். அதுகுறித்து மட்டும்தான் பேசியிருக்கிறேன். ** அந்த வகையில் 60 வயது நிறைந்த அனைவருக்கும் நிபந்தனையின்றி இதை வழங்க வேண்டும். ஏன் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன் என்றால், பல நேரங்களில் அந்த 60 வயது நிரம்பிய முதியோர். . .*

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். நீங்கள் அதையே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) உங்கள் உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *இல்லையென்றால் அடுத்த சப்ஜெக்டுக்குப் போய்விடட்டுமா?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *** அந்தவகையில், அந்த 60 வயது நிறைந்த பலருக்கும், இன்றைக்கு ஒவ்வொரு தாலுகாவிலும் குறைந்த அளவுதான் அந்த உதவித் தொகை கிடைக்கிறது; எல்லோருக்கும் கிடைக்கவில்லை. தகுதியுடைய எல்லோருக்கும் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். இத்தனை பேருக்குத்தான் தரவேண்டுமென்று ஓர் அறிவுறுத்தல் இருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியம் 60 வயதிற்கு மேற்பட்ட, சமூகப் பாதுகாப்பற்ற முதியோர்களுக்குத்தான் வழங்கப்பட்டு வருகிறது. 60 வயதிற்கு மேற்பட்டு, பொருளாதாரத்திலே வலுவாக, பொருளாதாரத்திலே மேன்மையாக அவர்கள் இருந்தால், இந்தத் திட்டத்திலே அவர்களுக்கு, விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்க இயலாது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த*

*** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

விதிமுறைகளையெல்லாம் தளர்த்தி, இன்றைக்கு ஆதரவற்றவர்களுக்கு, அதிலே மகன், மகள் இருந்தாலும்கூட, அவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிறபோது, அந்த 60 வயதிற்கு மேற்பட்டவர்களை அவர்களது பிள்ளைகள் கவனிக்காமல் இருக்கிறபோது, அவர்களும் இந்தத் திட்டத்தின்கீழ் வருகின்றார்கள். ஆகவே, 60 வயதிற்கு மேற்பட்ட, சமூகப் பாதுகாப்பற்ற முதியோர்கள்தான் இந்தத் திட்டத்தின்கீழே வருகிறார்கள். அதேபோல் எண்ணிக்கையிலே உச்சவரம்பு கிடையாது. மத்திய அரசு இதற்கு உச்சவரம்பு விதித்திருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையுள்ளத்தோடு இதை வழங்கி வருகிறார்கள். இதற்கு எந்த உச்சவரம்பும் கிடையாது. தகுதியுள்ள அனைவருக்குமே வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது இந்த 60 வயது நிரம்பிய, தகுதியுடையவர்களுக்குத்தான் நாங்கள் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: தகுதி இல்லாதவர்களுக்கு நான் கேட்கவில்லை. தகுதியுடைய அனைவருக்கும் நிபந்தனையின்றி தரவேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இன்றைக்குத் தயாராகி வரவில்லை.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு, கல்குளம் தாலுகாக்கள் பரப்பளவில் மிகவும் பெரியதாக உள்ளன. இதை இரண்டாகப் பிரித்துத் தரவேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு தாலுகாவிலும் குடும்ப அட்டைகள் கிட்டத்தட்ட 1 இலட்சத்திற்கும் மேல் இருக்கின்றன. மொத்த மக்கள் தொகை 7½ இலட்சத்தைத் தாண்டியுள்ளது. எனவே, அந்த 2 தாலுகாக்களைப் பிரித்து, 2 தாலுகா அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோல், விளவங்கோடு தாலுகா அலுவலகம் ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அது கொஞ்சம் இருக்கிறது; மழை நேரங்களில் கொஞ்சம் சிரமங்கள் இருக்கின்றன. ஆவணங்களைப் பாதுகாப்பாக வைப்பதில் கஷ்டங்கள் உள்ளன. ஆகையால், அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு சாலைப் பணிக்காக நிலம் கையகப்படுத்துவதற்காக உரிய இழப்பீடு வழங்காததால், எங்களுடைய . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நான் இன்னும் பேசவே இல்லையே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முடிக்காவிட்டால், நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டியிருக்கும். (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு) அதாவது, எங்களுடைய விளவங்கோடு தாலுகாவில் அலுவலகம் சாலைப் பணிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, இழப்பீடு வழங்க முடியாததால் . . .

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உங்கள் உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *இது 1972-லே உள்ள பிரச்சினை.* **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய பகுதியிலே புதிய வட்டம் உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அங்குள்ள குடும்ப அட்டைகளுடைய எண்ணிக்கையை எல்லாம் சொன்னார்கள். பொதுவாக புதிய வட்டம், கோட்டம் போன்றவற்றை மக்கள் தொகையையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையையும், அதேபோல் பரப்பளவையும் அடிப்படையாக வைத்துத்தான் உயர் மட்டக் குழு அதைப் பிரித்து வருகிறது. ஆகவே, அந்த வகையிலே, அந்த விதிமுறைகள் பூர்த்தியாகிறபட்சத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு அதைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையிலேதான், கடந்த 5 ஆண்டுகளிலே 65 புதிய வட்டங்களையும் 9 புதிய கோட்டங்களையும், உருவாக்கித் தந்து, நிருவாகப் புரட்சியை நிகழ்த்திக் காட்டியவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதேபோல, அவர்கள் அந்த நில எடுப்புப் பணிகளுக்காக ** என்று தெரிவித்தார்கள். அதற்கான ஆதாரத்தை உறுப்பினர் அவர்கள், தங்களிடத்திலே சமர்ப்பித்ததற்குப் பின்னால், அதைச் சொன்னால் நன்றாக இருக்கும். எனவே, அவர் ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, இதுபோன்ற தகவல்களைப் பேசவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *ஆதாரமின்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தைகள்*

*** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையைப் பேசி முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

பிற்பகல் 1-30

திருமதி எஸ். விஜயதரணி: ** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசி பாயிண்ட்-ஐப் பேசிவிடுகிறேன். அந்த வகையில், தனியார் வனப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் 1979 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 108 ஹெக்டேர் நிலங்கள்தான் ஒரிஜினலாக இருந்தன. தற்போது 75,000 ஹெக்டேர் நிலங்கள் அந்தச் சட்டத்தின்கீழ் வந்திருக்கின்றன. அந்தச் சட்டத்தின்கீழ் தற்போது தனியார் பட்டா நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தத் தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், 5 சென்ட், 10 சென்ட், 1/2 ஏக்கர், 1 ஏக்கர், 10 ஏக்கர் என்று குறைந்த அளவில் இருக்கின்ற பட்டா நிலங்களெல்லாம், இன்றைக்குப் பெரிய அளவில் இடம்பெற்றிருப்பதனால், திருமணம் மற்றும் கல்விக் கடன்கள் பெறுவதற்கு மக்கள் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். இந்தத் தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து பட்டா நிலங்களை முழுமையாக விடுவிப்பு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை கேரளாவில் நடைபெற்றிருக்கிறது. அதேபோல, தமிழகத்தில் தனியார் பட்டா நிலங்களை மட்டும் விடுவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதில் பிரச்சினையில்லை. ஆகவே, அச்சட்டப் பிரிவு 4* (A)*-ன்கீழ் வனக் குழு கூடி, 1979-க்குப் பிறகு உள்ள நிலங்கள் குறித்து தீர்மானிக்கும் என்று சொன்னார்கள். அதாவது, அந்தச் சட்டத்திற்குப் பின்னால் உள்ள நிலங்களைக் குறித்து முடிவு செய்யும் என்று சொன்னார்கள். 1979-க்கு முன்பு உள்ள சில நிலங்களையும் அந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம்* local committee-*யே தீர்வு காணலாம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் உரையை முடியுங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திருமதி எஸ். விஜயதரணி: முடித்து விடுகிறேன். Local committee-யும் இப்போது கூடவில்லை. மாவட்ட அளவில் தற்போது வனக் குழுவும் கூடவில்லை. இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு, 6 மாதங்கள் ஆகின்றன. ஆனால், இதுவரைக்கும் அதற்குண்டான எந்த நடவடிக்கையும் எடுக்காமல்,—சட்டப் பிரிவு 4 (A)-ன்கீழ் கொடுக்கவேண்டிய exemption-ஐப் பொறுத்தவரையில், 75,000 applications are pending.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, நீங்கள் உங்கள் உரையை முடிக்கமாட்டீர்கள். உட்காருங்கள். நீங்கள் 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வனக் குழு, வனப் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 4 (A)-ன்படி பட்டா வழங்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து பேசுகிறபோது, அதற்கு நான் பதில் கொடுத்திருக்கிறேன். அதற்கென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் அங்கே மனுக்களைக் கொடுத்தால், அந்தக் குழு கூடி, இருக்கின்ற சட்ட விதிகளின்படி பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து, அவர்களுடைய கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் நிறைவேற்றுவார் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். வாய்ப்பு இல்லை. நீங்கள் பேசியது போதும். (குறுக்கீடு) திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது போதும். நீங்கள் கடிகாரத்தைப் பாருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு எல்லாத் துறைகளிலுமே சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி சாதனைகளைப் புரிந்து வருவதைப்போல, இந்த வருவாய்த் துறையிலும் சிறப்பான முறையிலே திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டுக்கு இந்த வருவாய்த் துறையை வருவாய் அளிக்கக்கூடிய ஒரு துறையாக மாற்றியமைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

திரு. எம். தமிமுன் அன்சாரி: *என்னுடைய தொகுதி மக்கள், பட்டாக்கள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைத்து, விரைவாக வழங்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பொதுவான பிரச்சினையாக இருந்தாலும், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பட்டா வழங்குவதிலே எல்லாவற்றையும் விரைவுபடுத்தித்தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, அதனை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு) அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட திருமுருகலை. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பெண்களுக்கு 50 சதவிகிதம் உள்ளாட்சித் துறைகளிலே இட ஒதுக்கீடு கொடுப்பதையெல்லாம் மகிழ்ந்து,*

ஆதரிப்பவன். ஆனால், இங்கே மாண்புமிகு பெண் உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் என்னைப் பேச விடாமல் செய்கிறார். அது ஏன் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு திரு. கரி, இராமசாமி, நீங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர், நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர், திருமதி விஜயதரணி அவர்கள் இன்று விவாதத்தில் பேசுவதற்குத் தயாராகி வரவில்லை. அவர் பேசியதையே பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. கரி. இராமசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்சாரி அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அவர் பேசி முடித்தபிறகு, உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பின்னர், உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பேசி முடித்தவுடன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்?*

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமதி விஜயதரணி அவர்கள் நன்றி மட்டும் சொல்லிவிட்டு உட்காருவார்கள். தயவு செய்து, அதற்கு மட்டும் நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உங்கள் உறுப்பினரை நன்றி மட்டும் சொல்லச் சொல்லுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *நான் நன்றி சொல்வதற்கு முன்பாக, ஒரு வரி பேசிவிட்டுத்தான் நன்றி சொல்வேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் நன்றி மட்டும் சொல்லி, உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு பிரச்சினையை மட்டும் கூறிவிட்டு, நன்றி சொல்ல விழைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

திருமதி எஸ். விஜயதரணி: *எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த ஒரு முக்கியமான பிரச்சினையாகும். நாளையோடு இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற காரணத்தால், எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த இந்தப் பிரச்சினையை மட்டும் நான் இன்று சொல்லிவிடுகிறேன். 'சூழியல் பாதுகாப்பு வளையம்' என்ற பிரச்சினை எங்களுடைய மாவட்டத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் இந்தச் சூழியல் பாதுகாப்பு சம்பந்தமாக, இந்த அரசாங்கம் தரக்கூடிய அறிக்கையில், 'O' கிலோ மீட்டராக நிர்ணயித்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.* **

தொகுதிக் கோரிக்கைகள்:

கன்னியாகுமரியிலுள்ள திருவள்ளுவர் சிலையை உப்புக் காற்றிலிருந்து பாதுகாக்க இரசாயனக் கலவை பூசுமாறும், பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் உப்புக் காற்றால் அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்கப்படவும், மாவட்ட அளவில் தகவல் வங்கி ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும், விளாத்துறை ஊராட்சியில் காப்புக்காடு ஊரில் தொல்காப்பியர் மணிமண்டபம் அமைத்துத் தருமாறும், எல்லைப் போராட்டத் தியாகி சிதம்பரநாதன் நாடார் மற்றும் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை ஆகிய இரு தலைவர்களுக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணிமண்டபங்கள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

** *மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மார்த்தாண்டம் பதிவு மாவட்டத்தில், மாவட்டப் பதிவாளர்கள் (நிருவாகம், தணிக்கை) பணியிடங்கள் காலியாக உள்ளன. அப்பணியிடங்களை நிரப்ப வேண்டும். அருமனை, பள்ளியாடி சார்-பதிவாளர் அலுவலகங்களில் ஜெனரேட்டர் ஒழுங்காக இயங்குவதில்லை. அதனை சரி செய்ய வேண்டும். சார்-பதிவாளர் அலுவலகங்களில் காலை 10-00 மணி முதல் மாலை 5-45 மணிவரை பத்திரப் பதிவை தொய்வின்றி செய்யவும், விளவங்கோடு தாலுகாவுக்கு உட்பட்ட தாலுகா அலுவலக ஆவணங்கள், கிராம நிருவாக அலுவலக ஆவணங்கள், பேரேடுகள், 'அ' பதிவேடுகளில் பட்டாதாரர்களின் பெயர்கள் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தகுதியான ஏழைகளுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட இடைக்கோடு பேரூராட்சியில் அம்பேற்றின்காலை ஊரில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அருமனை, கடையாலுமூடு பேரூராட்சிப் பகுதிகள் அடங்கியுள்ள திற்பரப்பு அருவியின் மேல்புறம் அழகியபாண்டியபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்படும் உறை கிணற்றை, அருவியின் கீழ்ப்பக்கம், அருவி வழிந்தோடும் பகுதிகளில் தோண்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதியில் உள்ள காணிப் பகுதி மலைவாழ் மக்களுக்கும், ஆதி திராவிடர், பழங்குடியின மக்களுக்கும் தாலுகா அலுவலகம்மூலம் எஸ்.சி., எஸ்.டி. சான்று வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

தேவிகோடு அரசு பி.எப்.எம். உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்புறம் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை, குறுமாத்தூர், ஒய்-73 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் (டிபிஓ 103) நியாய விலைக் கடையிலிருந்து, பகுதிநேர நியாய விலைக் கடை கொக்கடி ஊரில் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டத்தில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு சட்டப் பேரவை தொகுதியினுள் மலைவாழ் மக்கள் அதிகம் வசிப்பதால், தமிழக அரசு உடனடியாக மத்திய அரசின் ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிக்கு அனுமதி வழங்கி பள்ளியைத் தொடங்க ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட விளாத்துறை ஊராட்சி, மாராயபுரம் ஊரில் ஒரு புதிய துணை சுகாதார நிலையம் அமைக்கவும், குழித்துறை அரசு மருத்துவமனையில் C.T. Scan வசதி செய்யவும், Trauma பிரிவு அவசரகால சிகிச்சைப் பிரிவு, தலைக்காய சிகிச்சைப் பிரிவு தொடங்கவும், பச்சிளம் குழந்தைகள் சிறப்பு நல வார்டு அமைக்கவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவில் நகருக்கு அடுத்த பெரிய நகராக விளங்கும் குழித்துறையை மையமாக வைத்து செயல்படும் அரசு மருத்துவமனையில், குலசேகரம், கடையால்மூடு, அருமனை, பனச்சமூடு பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் எல்லா சிறப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். இங்கு இரத்த வங்கி உருவாக்கப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பத்துகாணி, இடைக்கோடு மருத்துவமனைகளில் இணையதள வசதி கிடைப்பது சிரமமாக உள்ளது. எனவே, அரசு BSNL Wi-Fi வசதியை எல்லா குக்கிராமங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளிலும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

விளவங்கோடு புகழ் மார்த்தாண்டம் தேனை அரசு கொள்முதல் செய்து, சித்தா மருந்தகப் பிரிவு வழியாக நோயாளிகளுக்கு இலவசமாக 100 மில்லி தேன் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பத்துகாணி, மேல்புறம், இடைக்கோடு, குட்டைக்குழி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தி 55 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும். இடைக்கோடு, மேல்புறம் மருத்துவமனைகளில் Scan வசதி, ECG வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். அருமனை, குலசேகரம் அரசு

மருத்துவமனைகளை தாலுகா அளவிலான மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தி, Digital X-ray, Clinical lab, Pathology lab வசதி ஏற்படுத்தி, முழு நேர மருத்துவர்கள், செவிலியர்கள் சுகாதாரப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடைக்கோடு பேரூராட்சி, அம்பேற்றின்காலை என்ற ஊரில் பாதுகாப்பற்ற நிலையில் அங்கன்வாடி மையம் உள்ளது. சமையல் அறை மிகவும் மோசமாக இடிந்துவிழும் நிலையிலுள்ளது. அங்கன்வாடி மையக் கட்டடமும் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. குழந்தைகள் மற்றும் பணியாளர் நலன் கருதி, மோசமான நிலையிலுள்ள அம்பேற்றின்காலை அங்கன்வாடி மையக் கட்டடத்தை இடித்து மாற்றி, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதியினுள் உள்ள 175 மையங்களில் 60 மையங்களிலும், தக்கலை வட்டாரத்தில் உள்ள 48 மையங்களிலும், நாகர்கோவிலில் 42 மையங்களிலும் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசுகின்றபோது, கடைசியாக சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) மாணபுமிகு உறுப்பினர் திரு. அன்சாரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை தொடர்பாக, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பல சாதனைகளைப் பற்றிப் பேசுவதற்காக நான் வந்தேன். (குறுக்கீடுகள்) இந்தக் கூச்சல்-குழப்பத்தில், சத்தத்தில் பல விஷயங்கள் மறந்துபோய்விட்டன. எனக்கு ஒதுக்கப்பட்ட நேரமும் குறைந்துவிட்டது. எனவே, என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒரு கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட திருமுருகலைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு தனி தாலுகா அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பலரும் சுட்டிக்காட்டிய விஷயம்தான். பட்டாக்கள் வழங்குவதிலே முடிந்தவரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு காலதாமதத்தைக் குறைத்து, விரைவாக வழங்க வேண்டுமென்று தொகுதி மக்கள் பலரும் கூறியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்துதரக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த விஷயத்திலும் சிறப்பாக கவனம் செலுத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களே, உங்களுடைய துறை சம்பந்தமாக நான் நிறைய பேசவேண்டுமென்று வந்திருந்தாலும், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களின் குறுக்கீடு காரணமாக நேரமில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் பெண்களை பெரிதாக மதிப்பவன். ஆனால், நான் உரையாற்றும்போது அவர் ஏன் இவ்வளவு தொந்தரவு கொடுத்தார் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, இத்துடன் வருவாய்த் துறை சம்பந்தமாக என்னுடைய கருத்துகளை நிறைவு செய்துவிடுகிறேன்.

அடுத்து, சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை சம்பந்தமாக பேசுவதற்கு நான் பலமுறை வாய்ப்புக் கேட்டேன். ஆனால், நேரம் இல்லாத காரணத்தால், பிறகு தருகிறேன் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, மெஜாரிட்டியாக இருந்து, மைனாரிட்டிகளுக்கு அக்கறை காட்டக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான அரசுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பல கோரிக்கைகளை வைத்தேன். சிறுபான்மையின மக்களின் எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரக்கூடிய ஓர் அற்புதமான முதலமைச்சரை தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியோடு, மேலும் சில கோரிக்கைகளை வைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அதை கவனத்திலே கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) கல்வித் துறை சம்பந்தமாக சில கோரிக்கைகளை இங்கே நான் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். நீங்கள் பேசும்போதும் இதேபோன்று அடுத்தவர்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவார்கள். எனவே, அனைவரும் அமைதியாக இருங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களே, உங்கள் அனைவரின்மீதும் எனக்கு மரியாதை உண்டு. நீங்கள் கொஞ்சம் அமைதி காக்க வேண்டும். சிறுபான்மை சமுதாய மக்களுடைய சில நலன்கள் குறித்துப் பேசுவதற்காக நான் வந்திருக்கிறேன். நீங்கள் சற்று அமைதி காக்க வேண்டும். உங்கள்மீது எனக்கு எப்போதும் மரியாதை உண்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து அமைதி காத்து, இந்த அவைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையின சமூக மாணவ, மாணவிகள் இப்போது அதிகளவிலே கல்வி பயில்கின்றார்கள். அதிலே தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், சிறுபான்மையின மாணவ, மாணவிகள் கல்வி பயிலுவதற்காக ஏராளமான நலத் திட்டங்களை அறிவித்திருப்பதற்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வங்கிகளிலே கடன்கள் சரிவரக் கிடைக்கவில்லை என்கின்ற ஒரு குறை இருக்கிறது. அனைத்து வங்கிகளிலும் இல்லை. சில வங்கிகளில் அந்தக் குறை உள்ளது. அதை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, இந்த விஷயத்திலே, சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுடைய நலனில் சிறப்பாகச் செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த நேரத்திலே ஒரு முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிறேன்.

மேற்கு வங்காளம் இன்று ‘பங்களா’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு சிறுபான்மையின மாணவ, மாணவிகள் மருத்துவம், பொறியியல், மேனேஜ்மென்ட், சட்டம் மற்றும் நர்சிங் உள்ளிட்ட படிப்புகளைப் படிக்க அதிகபட்சமாக, தலா ஒருவருக்கு ரூ.20 இலட்சம்வரை கடன் வழங்குகிறார்கள். உள்நாட்டில் ஐந்து வருடப் படிப்புக்கு ரூ.10 இலட்சமும், வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதாக இருந்தால், அவர்களுக்கு

ரூ.20 இலட்சமும் தருகிறார்கள். இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கனிவோடு எடுத்துக்காட்டுகிறேன். இதேபோன்று, தமிழ்நாட்டிலே சிறுபான்மை சமூக மாணவ, மாணவிகளுக்கு நீங்கள் உயர் கல்வி பெறுவதற்குக் கடன் உதவி வழங்கினால், அவர்களுடைய வாழ்விலே வசந்தம் ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

பிற்பகல் 1-40

அதேபோன்று, தமிழ்நாட்டிலே நிலமற்ற, வீடற்ற ஏழை சிறுபான்மையினர் நிலை கவலைக்குரியதாக இருக்கிறது. "இதற்கு ஒரு தீர்வு வராதா?" என்று அவர்கள் நீண்டநெடுங்காலமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இறைவனுடைய அருளாலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதைத் தீர்த்துவைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, கர்நாடக மாநிலத்திலே, சிறுபான்மையினர் வீடு கட்டவும், வீடு மற்றும் மனைகள் வாங்கவும் வங்கியில் கடன்பெற்றால், அதற்கான வட்டியை, மானியமாக அரசே வழங்குகிறது. மேற்கு வங்கத்திலே சிறுபான்மையினர் மேம்பாட்டு மற்றும் நிதியமைப்பின் சார்பிலே, சிறுபான்மையினரில் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு வீடுகளைக் கட்டி, குறைந்த வாடகைக்கு விடுகிறார்கள். மேற்கு வங்கத்திலும், கர்நாடகத்திலும் இதுபோன்ற சலுகைகளை அறிவித்திருக்கும்போது, அதைவிட சிறப்பான சலுகைகளை இந்தத் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சிறுபான்மை மக்களுக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். அதேபோன்று, தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு வாரியம் இருக்கிறது. காலஞ்சென்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் அரும்பெரும் தலைவர், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அன்பைப் பெற்ற சிராஜில் மில்லத் அப்துல் சமது அவர்கள் அந்த வாரியத்திற்குத் தலைவராக இருந்தார். அந்தத் துறையின்மூலம் இதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமாக இது பண்டிகைக் காலம். சிறுபான்மையினருடைய பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து நேரம் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சரி, பேசுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *பக்ரீத் பண்டிகை பிறை பார்த்தலின் அடிப்படையிலே எதிர்வரும் செப்டம்பர் 13 ஆம் நாளன்று கொண்டாடலாம் என்று நம்பப்படுகிறது. காஜி அவர்கள் முறையாக அறிவிப்பார்கள். இந்தத் தருணத்திலே சில தனியார் பள்ளிக்கூடங்கள், வேண்டுமென்றே அந்த விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகள் நடத்துவதாக, கடந்த 15, 20 ஆண்டுகளாக ஒரு குற்றச்சாட்டு வருகிறது. இந்த முறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அவ்வாறு நடக்காமல் சிறுபான்மை சமூக மாணவர்களும் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டும். மிக முக்கியமாக, பள்ளிக் கல்வித் துறையின் சார்பிலே, 8 ஆம் தேதியிலிருந்து காலாண்டுத் தேர்வு தொடங்க இருக்கிறது. 13 ஆம் தேதி பண்டிகையாக இருக்கக்கூடிய நேரத்தில், சிறுபான்மை சமுதாய மாணவ, மாணவிகள் தூரமான இடங்களுக்குச் சென்று, Hostel-ல் தங்கிப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பண்டிகையைக் கொண்டாட, தங்கள் ஊர்களுக்கு வந்து செல்லவேண்டுமென்றால், 13 ஆம் தேதி பொது விடுமுறையாக இருந்தாலும், அதற்கு முந்தைய 12 ஆம் தேதியும், அதற்கு அடுத்த 14 ஆம் தேதியும் தேர்வுகள் இல்லாமல் மாற்றிவைத்தால், அவர்கள் ஊர்களுக்கு வந்து பண்டிகையைக் கொண்டாடிவிட்டுத் திரும்பிச்செல்லவும், தேர்வுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும் ஒரு வாய்ப்பு ஏற்படும். இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கவனத்திலே கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, காலஞ்சென்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தலைவரும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பேரன்பைப் பெற்றவருமான மரியாதைக்குரிய சிராஜிமில்லத் தானாக்கடை அப்துல்சமது அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1991-ல், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு வாரியத்தை அமைத்தார்கள். இது ஓர் அருமையான முயற்சியாகும். இந்த வாரியம் கூட்டுறவு வங்கிகள் மூலமாக சிறுபான்மையினருக்குத் தொழில் தொடங்க கடன் உதவி வழங்கி வருகிறது. ஆனால், இதில் பல கூட்டுறவு வங்கிகள் போதிய அக்கறை காட்டுவதில்லை என்ற குறை ஜமாத்காரர்களிடம் இருக்கிறது. அந்தக் குறையை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் போக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அண்டை

மாநிலமான கர்நாடகத்தில் உள்ளதுபோல, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கிளைகளை மாவட்டந்தோறும் ஏற்படுத்தி, கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த பெண்கள் பொருளாதாரத்தில் மேம்படவேண்டும் என்பதற்காக பல்வேறு அரிய திட்டங்களை கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தி வருகிறார்கள். அதற்காக நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே ஜமாத்காரர்கள் சார்பிலும், உலாமாக்களின் சார்பிலும், சமுதாய அமைப்புகளின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு, 2011 ஆம் ஆண்டு, 1 : 1 என்று இருந்த இணை மானியத்தை, 1 : 2 என்று உயர்த்தித் தந்தார்கள். அதை நன்றியோடு நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம். அதை மேலும் வலிமைப்படுத்தும் வகையிலே, 1 : 3 என்று சீரமைத்துத் தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இச்சங்கம், அதாவது, முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கம் எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படும் வகையில், அதில் முஸ்லீம் சமூக ஆர்வலர்களையும், ஜமாத்துகளையும் உறுப்பினர்களாக்கி, அதைச் சிறப்பாக முன்னெடுத்து, ஏழை முஸ்லீம் பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சிறுபான்மையின மக்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும் மத்திய, மாநில அரசுகள் ஏராளமான சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகின்றன. ஆனால் அதுகுறித்த விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. இதனால் நிதி செலவிடப்படாமல், சில நேரங்களில் திருப்பி அனுப்பப்படும் நிலை இருப்பதாகவும் ஒரு கருத்து இருக்கிறது. எனவே, இதுகுறித்து மாவட்ட வாரியாக ஒரு சிறப்பு பிரச்சாரக் குழுவை ஏற்படுத்தி, ஜமாத் தலைவர்களையும் உறுப்பினர்களாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த விஷயத்தில் சிறப்புக் கவனம் செலுத்திட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து அனுமதிக்க வேண்டும். நான்

ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இனி நான் இக்கூட்டத் தொடரில் பேசக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *அடுத்ததாக, பட்டா இடங்களில் பள்ளி வாசல்கள் மற்றும் தேவாலயங்களைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதில் சில இடங்களில் சிக்கல்கள் இருக்கின்றன. அதனை எளிமைப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தினுடைய கிளைகள் பீகார், மேற்கு வங்கம் (குறுக்கீடு) இல்லை, தண்ணீர் குடிப்பதற்குள் நேரம் முடிந்துவிடப் போகிறது. பீகார், மேற்கு வங்கம், கேரளாவிலே அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தினுடைய கிளைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் தண்ணீர் குடித்துவிட்டுப் பேசுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மிக்க நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பீகார், மேற்கு வங்கம், கேரளாவிலே அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம் கிளைகளை அமைத்ததுபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவி செய்தால், அதனுடைய கிளை தமிழகத்திலும் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான 100 ஏக்கர் இடத்தை அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தால், அது பேருதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, உலமாக்கள் நல வாரியம் மிகச் சிறப்பான ஒன்று. அந்த உலமாக்கள் நல வாரியத்தை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில், உலமாக்கள் நல வாரியத்திற்கு ஓர் உலமாவையே வாரியத் தலைவராக நியமித்து, அந்த நல வாரியத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சுதந்திரப் போராட்டத் தியாகிகள். (குறுக்கீடு) தயவு செய்து கொஞ்சம் நேரம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்போன்று நான் எப்போதும் தங்களை வற்புறுத்தியதில்லை. இன்னும் சிறிது நேரம் நான் பேசுவதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பரிந்துரைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அமைச்சர்களின் பரிந்துரையெல்லாம் வேண்டாம்; நீங்கள் சீக்கிரம் பேசுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *சுதந்திரப் போராட்டத் தியாகிகளை மதிக்கக்கூடிய அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசு இருக்கிறது. அவர்களுடைய தியாகத்தினால்தான் இன்றைக்கு நாம் இந்த அவையிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே, சுதந்திரப் போராட்ட தியாகிகளுடைய குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்புகளிலே முன்னுரிமை தர வேண்டும். அரசாங்கத்தினுடைய திட்டங்களிலே, நலன்களிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மிக முக்கியமாக, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களோடு. தோளோடு தோள் நின்று போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் அமீர் ஹம்ஸா அவர்களுடைய குடும்பம் மிகுந்த வறுமையில் இருப்பதாக என்னிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். அதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி சொல்லி, முடியுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி, முடித்துவிடுகிறேன். இறுதியாக, இந்த அவையில் இருக்கக்கூடிய பல சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் சொன்ன ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக, நான் பேசிவிட்டு அமர்கிறேன். என்னவென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி மாண்புமிகு அம்மா அவர்களால் இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தித் தரப்பட்டிருந்தது. அருகிலுள்ள கேரளாவிலே அந்த நிதி 6 கோடி ரூபாயாகக் கொடுக்கப்படுகிறது. இன்றைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உயர்த்தித் தந்தால் சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளம் என்பது (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். என்னைப்போன்ற பல

சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தை மட்டுமே சார்ந்திருக்கிறார்கள். பல பேர் அதுபோன்று இருக்கிறார்கள். டெல்லியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய சம்பளம் இரண்டரை இலட்சம் ரூபாயாக இருக்கிறது; மகாராஷ்டிராவிலே 85,000 ரூபாயாக இருக்கிறது; தெலுங்கானாவிலே மூன்றே கால் இலட்சம் ரூபாயாக இருக்கிறது; பஞ்சாபிலே ஒன்றேகால் இலட்சம் ரூபாயாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே நாங்கள் அவ்வளவு கேட்கவில்லை. இந்த நிலையிலிருந்து அதைச் சற்று உயர்த்தித் தந்தால், வசதியாக இருக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. சக்திவேல் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, குறிப்பாக ஒரு கருத்தைப் பதிய வைத்தார்கள். வங்கிக் கடனைப் பொறுத்தவரையில், மேற்கு வங்கத்தில் மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற Professional Course படிப்பவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் வரைக்கும் loan தரப்படுவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கத்தில், London, Liverpool, Manchester போன்ற பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் +2 முடித்துப் போகிற பிள்ளைகளில், 25 பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கான முழுச் செலவையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், அதில் 20 சதவீதத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மையின மக்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

Bankers Loan-ஐப் பொறுத்தவரைக்கும், எந்தவிதமான தடையும் இல்லாமலிருப்பதற்காக, ஒவ்வொரு மாதமும் Apex Banking Meeting நடைபெறுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் Lead Bankers' Meetings-ல், சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கு பெறலாம். பல சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதியில், மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் Banking mela மாதிரி, Loan mela நடத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே மாணவர்களுக்கு உயர் கல்விக்கான கடன் அதிகம் தரப்படுவது தமிழகத்தில்தான் என record-ல் சொல்லியிருக்கிறார்கள். அது கண்டிப்பாக மீண்டும் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

* **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள் தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் சிறுபான்மையினருக்குக் கடன் வழங்கவில்லையென்று சொன்னார்கள். எந்தத் தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் அதுபோன்று கடன் வழங்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வாரேயானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 1-50

குறிப்பாக, தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் சொந்த நிதியில் கடன் கொடுப்பதில்லை. ஆனால், மாவட்ட வங்கியிடம் அவர்கள் முறையாக மனு செய்ய வேண்டும். மனுதாரர்கள் என்ன தொழில் புரிகிறார்களோ, அதன் அடிப்படையில், தகுதியானவர்களுக்கு, அவர்களுடைய தகுதியின் அடிப்படையில், அவர் எந்தப் பகுதியில் இருக்கிறாரோ, அந்தப் பகுதியிலுள்ள தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு அந்தக் கடன் தொகையை மாவட்ட வங்கி ஒதுக்கீடு செய்யும். அந்தப் பணத்தை தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்தான் தரும். இதுதான் வழக்கமான முறை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகச் சொன்னார்கள். எனவே, எந்த வங்கி என்று அவர் சொல்லும்பட்சத்தில், அதை அவைக்குறிப்பில் வைத்துக்கொள்ளலாம். அதுபோன்று இல்லாதபட்சத்தில், அவர் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் அதிகமாக சிறுபான்மையினர்களுக்குக் கடன் வழங்கியுள்ளது. இதுவரை எந்த அரசும் கொடுக்காத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது என்பதை இங்கே நான் புள்ளிவிவரங்களுடன் கூறுவதற்குத் தயாராக இருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாக, சில கூட்டுறவுக் கடன் சங்கங்களில் சிறுபான்மையினருக்குக் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னார்.

எனவே, அவர் பேசியதை தயவுசெய்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கருத்துக்கு நன்றி. கூட்டுறவுச் சங்கங்களில் கடன் கொடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே, சிறுபான்மையின மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்பாகக் கடன் கொடுக்கப்படுகிறது என்றும், ஓரிரு சங்கங்களில் அவ்வாறு கடன் கொடுக்கப்படவில்லை என்று நமக்குப் புகார்கள் வந்திருக்கின்றன என்றும் குறிப்பிட்டு, அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தேன்.

அதேபோன்று, தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டு வாரியம்மூலம் மாவட்ட வாரியாக சிறுபான்மையினருக்குக் கடன் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொல்லி ஏற்பாடு செய்தால், இன்னும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பயனடைவர் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சிறுபான்மை மக்களுக்கு வேறு மாநிலங்களில் அதிகமான சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று கூறினார்கள். அவர் அவ்வாறு வேறு மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பேசியது, எனக்கு சரியாகத் தோன்றவில்லை. ஏனென்றால், நம்முடைய தமிழ்நாட்டில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், சிறுபான்மை நல வாரியத்தில் அனைத்து மகளிருக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் விலையில்லாமல் சில பொருட்கள் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல், கல்வி பயிலும் நம்முடைய இஸ்லாமிய மாணவ, மாணவிகளுக்கு ஒவ்வொரு வருடமும் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், இந்த சிறுபான்மையின மக்கள், சிறுபான்மையினர் நல வாரியத்தில் மட்டுமல்ல; அவர்கள் வேறு வாரியத்தில் பதிவு செய்திருந்தாலும்கூட, அவர்களுக்கு அந்த வாரியத்திலும் எல்லா சலுகைகளும் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தில் தனி முன்னுரிமை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து மாநிலங்களைவிட, நம்முடைய தமிழ்நாட்டில், அதாவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் இந்தத் தமிழ்நாட்டில், இஸ்லாமிய மக்கள் அமைதியாகவும், பாதுகாப்புடனும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

***திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'எல்லோரும் இன்புற்று நினைப்பது வேயெல்லாமல்
வேறொன்ற றியேன் பராபராமே' - இது தாயுமானவர் வாக்கு.

'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' இது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் செல்வாக்கு.

'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என தவ வாழ்வு மேற்கொண்டு, நாள்தோறும் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை வாரி வழங்குகின்ற அன்புத்தாய், ஆராதனைக்குரிய எங்கள் இதய தெய்வம். தரணி போற்றும் தங்கத் தாரகை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமல மலர்ப் பாதங்கள் பணிந்து வணங்குகிறேன்.

அச்சம் தவிர்த்தவர் எங்கள் அம்மா! ஆற்றல் மிக்கவர் எங்கள் அம்மா! இனிமை பண்பினர் எங்கள் அம்மா! ஈகைத் திறனுடையவர் எங்கள் அம்மா! உழைப்பதில் மகிழ்பவர் எங்கள் அம்மா! ஊக்கமுடையோருக்கு உயர்வு தருபவர் எங்கள் அம்மா! எண்ணுவதெல்லாம் மக்கள் நலன், ஏற்றம் தரும் திட்டங்கள் பல தந்து, ஐம்பொறியையும் ஆட்சி செய்து, ஒப்புமை இல்லாத் திறன் கொண்டு, ஓய்வின்றி உழைக்கும் உன்னதத் தலைவி எங்கள் அம்மா! சூது, மதியாளர்களின் சூழ்ச்சிகளை வென்றெடுத்து, புரட்டு மொழி பேசுவோரைப் புரட்டியெடுத்து புறமுதுகு காட்டி ஓடிடச் செய்த புறநானூற்று வீரத்தாய், எழுச்சிமிக்க தமிழகத்திற்கு ஏற்றம் தந்து கொற்றம் நடத்தும் கொற்றவை; இந்தியத் திருநாட்டின் வழிகாட்டி எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புகழை அவனியெங்கும் பரணி பாடிட, பாரத தேசத்தின் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக விஸ்வரூபமெடுக்க வைத்து, நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் 'இரட்டை இலை' சின்னத்தில் கழக வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்து, 6-வது முறையாக அரியணை ஏறி, 32 ஆண்டுகளுக்குப்பிறகு ஆளுகின்ற கட்சி, தொடர்ச்சியாக 2-வது முறை ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த சகாப்தத்தை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தனி மனித இராணுவமாய் சரித்திர சாதனை படைத்துக் காட்டிய சாதனைத் தலைவி எங்கள் அம்மா.

பிற்பகல் 1-55

கடைக்கோடித் தொண்டனாய், சேவல் அணிச் சேவகனாய், கொடித்தோரணம் கட்டிய என்னை, சேலம் நகர பழைய 27-வது வட்ட இதய தெய்வம் அம்மா பேரவையின் செயலாளராக்கி, சேலம் மாநகர் மாவட்ட 38-வது வட்டக் கழகச் செயலாளராகத் தொடர்ந்து கழகப் பணியாற்றிட அனுமதித்து, இதய தெய்வம் அம்மா பேரவையின் மாவட்டத் துணைச் செயலாளராக்கி, இன்று சேலம் மாநகர் மாவட்ட மாணவரணியின் செயலாளராக 9 ஆண்டுகள் தங்களின் சீரிய தலைமையின்கீழ் கழகப் பணியாற்றிடும் பாக்கியத்தை அருளிய எங்கள் கருணைத் தாயே!

சாதாரண எளிய நெசவாளர் குடும்பத்தில் பாலசுப்பிரமணியன்-தனலட்சுமி தம்பதியர்க்கு மூத்த மகனாகப் பிறந்த என்னை, சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக்கி,

2016 செப்டம்பர் 1] [திரு. எ.பி. சக்திவேல்]

தங்களது அரும்பெரும் உழைப்பினாலும், ஆற்றல்மிக்க மக்கள் நலத் திட்டங்களாலும் என்னை மாபெரும் வெற்றி பெறச் செய்த எங்கள் குடும்ப தெய்வமே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பாதார விந்தங்கள் பணிந்து வணங்கும் இந்த நல்ல வேளையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்த சேலம் தெற்கு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் வெற்றிக்காக இடையறாது கழகப் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்கள், வீராங்கனைகளுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் மேலான அனுமதியுடன் எனது நன்றியினை சமர்ப்பிக்கின்றேன்.

பாரம்பரியமும், பெருமையும்மிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் வருவாய்த் துறையின் மீதான மானியக் கோரிக்கையில் என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்குபெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேல்லோர் எம்பாவாய்."

என ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையில் கூறியதுபோல், பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அனைத்துத் துறைகளுக்கும் வாரி வழங்கி, இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் தமிழகமே முதன்மை மாநிலம் எனவும், அகிலத்திற்கே தமிழகம்தான் முன்னோடி எனவும், அனைவராலும் போற்றப்படும் வகையில், அருளாட்சி நடத்திவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசு, அரசுத் துறைகளில் வருவாய்த் துறை என்பது

முதுகெலும்பாக தாய்த் துறையாக விளங்குவதால்தான், அத்துறையை இயக்கும் இதயமாக ‘அம்மா திட்டத்தை’ அறிவித்துள்ளார்கள். அத்தகைய நல்ல திட்டமானது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு “அரசைத் தேடி மக்கள்” என்ற நிலையை மாற்றி, “மக்களை நாடி அரசு” என்ற கொள்கையுடன் “அம்மா திட்டம்” மூலமாக, வருவாய்த் துறையில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்திவரும் வருவாய்த் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் மிகச் சிறந்த ஆளுமைக்கான விருது ஆகஸ்ட் 15, 2016 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் முகாம் நடத்துவதற்கு கால அட்டவணை தயாரிக்கப்பட்டு, அக்கிராமங்களில் பிரதிவாரம் வெள்ளிக்கிழமைதோறும், வட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் முகாமிட்டு, அரசின் பல்வேறு நலத் திட்டங்களைப் பெறுவது குறித்த வழிகாட்டுதல்களை அளிப்பதோடு மட்டுமல்லாது, அவை மக்களுக்கு அவரவர் இடத்திலேயே வழங்கப்படுகின்றன. “அம்மா திட்டத்தின்” மூலம் கடந்த நான்கு கட்டங்களில் மாநிலத்தில் உள்ள அனைத்து வருவாய்க் கிராமங்களில் நடைபெற்ற முகாம்களில் 53,97,925 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 53,55,334 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும் மாவட்ட ஆட்சியர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று, அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். மனுக்களின் நிலையை அறிந்துகொள்ள, பொதுவான ஒரு மென்பொருள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் மக்கள் தொடர்பு முகாம் திட்டமானது, மாவட்டத்தின் தொலைதூரக் கிராமங்களில் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமையன்று நடத்தப்படுகிறது. இதன்படி தனி துணை ஆட்சியர், வருவாய்க் கோட்டாட்சியர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு, முகாம் நடைபெறவுள்ள முந்தைய மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திற்குச் சென்று, மனுக்களைப் பெற்று, அவற்றை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து, மனுதாரர்களுக்கு அம்முகாம் நடைபெறும் நாளன்று நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“போற்றி தாய் என்று தாளங்கள் கொட்டடா
போற்றி தாய் என்று பொற்குழலூதடா”

என்று கூறிய முண்டாசுக் கவிஞன் பாரதியின் சொல்லைச் செயலாக்கி, பெரியாரின் கொள்கை தடம் நின்று, பெருந்தகை அண்ணா மொழிகொண்டு, புரட்சித் தலைவரின் புகழ்போற்றி, கண்ட கழகம் தனை வளர்த்து, கழகத் தொண்டர் குலம் காத்து, வாடிய மக்களுக்கு வளம் சேர்த்து, உழைக்கும் மக்களின் வினை தீர்த்து, வாணிபம் செய்வோர்க்கு வாழ்வளித்து, அரசு ஊழியர்க்கும் ஆதரவளித்து, மகளிர், மாணவர் மனக்குறையைப் போக்கி, இளைய சமுதாயத்திற்கு ஏற்றம் கொடுக்கும் பாசறை கண்டு, பல நன்மைகள் தந்த குற்றமில்லா கொற்றம் நடத்திடும் நீதி தேவதையின் நித்ய சொரூபம் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையிலான இவ்வரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைக் காப்பாற்றும்விதமாக, ஆதரவற்றவர் மற்றும் ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டுவந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ரூ.500/-லிருந்து உயர்த்தியதால், தற்போது ரூ.1,000 பெற்று பயனடைந்து வருகின்றனர். அதுபோலவே, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை பெற, அவர்கள் ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி குறைக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத் தொழில், விவசாயத் தொழில் போன்ற 44 வகையான உடலுழைப்புத் தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம்

ஈட்டும் நபர் விபத்தின்மூலம் மரணமடையும்போது, வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ரூ.15,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும், பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையை ரூ.10,000/- என்பதிலிருந்து, ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, ஒவ்வோராண்டும் பொங்கல் திருநாளன்று 1,67,28,854 சேலைகளும், 1,67,19,123 வேட்டிகளும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளி மாணவ மாணவியருக்குக் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், கல்வி உதவித் தொகைகளைப் பெறுவதற்கும், அத்தியாவசியமான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ் ஆகிய இம்மூன்றும் 6 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மண்ணிலார்க்குந் துயரின்றிச் செய்வேன்
வறுமையென்பதை மன்மிசை மாய்ப்பேன்,
தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதி னிலைபெறச் செய்வேன்
வானம் மூன்று மழை தரச் செய்வேன்
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்
மானம் வீரிய மாண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்”

என்ற மீசை பாரதியின் ஆசைகளை நிறைவேற்றிடும் வகையில், சாலைகள் அமைப்போம்; கல்விச் சாலைகள் அமைப்போம்; நெடுஞ்சாலைகளும் அமைப்போம்; பாலங்கள் அமைப்போம்; மேதினி வியக்கும் மேம்பாலங்களும் அமைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நதிநீர் கொணர்ந்திடுவோம்; கச்சத் தீவை

மீட்டெடுப்போம்; மின்மிகை மாநிலம் ஆக்கியதுபோல், மீனவர் அச்சம் போக்கிடுவோம்; இலங்கைத் தமிழர் நலன் காத்து, இங்கே ஜல்லிக்கட்டும் நடத்திடுவோம்; உலகத் தமிழர் நலன் காக்க உதவும் கரங்களாய்த் தானிருப்போம்; தேயமெல்லாம் தேய்ந்திடவே, தமிழர்த் தேவையை நிறைவு செய்ய திட்டங்கள் தரும் தீர்க்கதரிசி! தென்னாட்டின் தேனாண்டாள், எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தாள் பணிந்து, தமிழ் வளர பாடுபடுவோம்; தமிழர் நலன் காக்கப் போராடுவோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, பேரிடரினால் பாதிக்கப்பட்டோருக்கான உயர்த்தப்பட்ட நிவாரணத் தொகை, மனித உயிரிழப்பிற்கு ரூ.1,50,000/-லிருந்து, ரூ.4,00,000/- ஆகவும், உடல் உறுப்பு இழப்பிற்கு ரூ.35,000/- மற்றும் ரூ.50,000/-லிருந்து, முறையே ரூ.59,100/- மற்றும் ரூ.2,00,000/- ஆகவும், படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நபர்களுக்கு ரூ.2,500/- மற்றும் ரூ.7,500/-லிருந்து, முறையே ரூ.4,300/- மற்றும் ரூ.12,700/- ஆகவும், கால்நடைகளுக்கு ரூ.2,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மற்றும் ரூ.20,000/- என்பதிலிருந்து முறையே ரூ.3,000/-, ரூ.16,000/-, ரூ.25,000/- மற்றும் ரூ.30,000/- ஆகவும், விளைநிலங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.6,000/-, ரூ.15,000/- என்பதிலிருந்து முறையே ரூ.12,200/- மற்றும் 37,500/- ஆகவும், பயிர் வகைகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410/-, ரூ.9,880/- என்பதிலிருந்து முறையே ரூ.13,500/-, ரூ.18,000/- ஆகவும், கட்டுமரங்களின் பழுது நீக்குவதற்கு ரூ.2,500/, ரூ.7,500/- என்பதிலிருந்து முறையே ரூ.10,000/- மற்றும் ரூ.32,000/- ஆகவும், வல்லங்களுக்கு ரூ.20,000/- முதல் ரூ.75,000/- வரையிலும் மற்றும் இயந்திரப் படகுகளுக்கு ரூ.3,00,000/- முதல் ரூ.5,00,000/- வரையிலும், வலை ஒன்றுக்கு ரூ.10,000/-, இயந்திரங்கள் பழுதுபார்ப்பதற்கு ரூ.5,000/-, மீன் வளர்ப்புப் பண்ணைகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,200/- ஆகவும், கைவினைஞர்களுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.4,100/- ஆகவும் மற்றும் சேதம் அடைந்த நிரந்தர வீடுகளுக்கு ரூ.25,000/- லிருந்து ரூ.95,100/- மற்றும் ரூ.1,01,900/- ஆகவும், குடிசைகளுக்கு ரூ.2,000/-லிருந்து ரூ.4,100/- மற்றும் ரூ.5,000/- ஆகவும், கால்நடைப் பட்டிகளுக்கு ரூ.2,100/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, உயர்த்தப்பட்ட நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் “முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” விவசாயிகளுக்குப் பாதுகாப்பையும், பேராதரவையும் அளித்து

வருகிறது. 2011-2016 ஆண்டு வரையிலான காலத்தில், 3,039 கோடி ரூபாய் 37.67 இலட்சம் பயனாளிகளுக்கு நிதியுதவியாக அளிக்கப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 206 கோடி ரூபாயும், வருவாய்த் துறைக்காக மொத்தம் 5,686 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையிலான மக்கள் நல அரசு, வருவாய்த் துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவிற்கு, மக்கள் நலத் திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையும்வகையில், 65 புதிய வட்டங்களையும், 9 புதிய வருவாய்க் கோட்டங்களையும் உருவாக்கியுள்ளது. சேலம் மாவட்டத்தில், சேலம் வட்டம் முறையே சேலம், சேலம் மேற்கு, சேலம் தெற்கு என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆத்தூர் கோட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டம், ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம் என இரு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஓமலூர் வட்டம், ஓமலூர் மற்றும் காடையாம்பட்டி என இரு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-05

சேலம் மாவட்டத்தில் சேலம் மேற்கு, சேலம் தெற்கு, ஓமலூர் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்கள் புதியதாகக் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், மேட்டூர் மற்றும் ஆத்தூரில் புதியதாகக் கட்டடம் கட்டப்பட்டு, விரைவில் திறக்கப்பட உள்ளது. சேலம் மாவட்டத்திலுள்ள சேலம் மற்றும் சேலம் மேற்கு, சேலம் தெற்கு, வாழப்பாடி, ஏற்காடு, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி, சங்கரி, எடப்பாடி, மேட்டூர், ஓமலூர், காடையாம்பட்டி ஆகிய 13 வட்டங்களில் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ், இதுவரை 55,00,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். வருவாய்த் துறையில் தற்போது E-சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. விரைவுப் பட்டா மாறுதல் திட்டத்தின்கீழ், பட்டா மாறுதல்கள் மின் ஆளுமைமயமாக ஆக்கப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 15 வட்டாட்சியர் அலுவலகங்கள், 5 கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் காஞ்சிபுரத்தில் நில அளவைத் துறை உதவி இயக்குநர்

அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் 51.57 கோடி ரூபாய் செலவில் கட்டப்படுமெனவும்; 2016-2017 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுமெனவும்; நிலம் குறைவாகவும், நில மதிப்பு அதிகமாகவும் உள்ள இடங்களில், வீடில்லா குடும்பங்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டி, கூட்டுப் பட்டா வழங்கப்படும் எனும் புதிய அணுகுமுறை போன்ற பொன்னான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவிலே இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கற்பகமே உனையன்றி துணை யாரம்மா-உம்மை
கதியெனப் போற்று மென்னைக் கண்பாரம்மா-
அற்புதமெல்லாம் நிகழ்த்தும் அருட்திறம் உடையவரே
ஆனந்த வாழ்வுதனை அனைவர்க்கும் அளிப்பவரே

எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான ஆணையின்படி, (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாநகர மக்களின் பயன்பாட்டிற்காக 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட சேலம்-மேட்டூர் தனிக் குடிநீர்த் திட்டம் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நிருவாக சீர்கேடுகளால், காவேரியாற்றின் நீர்வரத்து குறைகின்ற காலத்தில் ஆற்றுப்படுகையிலே அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்குப் போதிய நீர்வரத்து வராத நிலை இருந்தது. சேலம் மாநகர மக்களுக்குத் தேவையான குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில், போர்க்கால நடவடிக்கை எடுத்து உடனடியாக சேலம் நகர மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கியதற்காகவும்; (குறுக்கீடு) சேலம் மாநகர மக்கள் பெரிதும் பயன்பெறும் வகையில் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு என்ன பிரச்சினை? (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் 2006 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டம் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நிருவாகக் குளறுபடியால் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *திட்ட மதிப்பீடு முழுமையாகத் தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் கடன் பெற்று (குறுக்கீடு) உரிய நிதி ஆதாரங்களை வழங்காத நிலையில் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்குட்டுவன், உட்காருங்கள். எதற்கு சம்பந்தமில்லாமல் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு)* Point of Order *எதுவும் இல்லை, உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: Phase *3 எனப்படும் புதிய தார்ச் சாலைப் பணிகளுக்காக சுமார் 74 கோடி ரூபாய் வழங்கியதற்காகவும்; (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாவட்ட அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதில் என்ன* Point of Order *இருக்கிறது? உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *அதிநவீன மருத்துவ வசதிகளுடன்கூடிய 500 படுக்கைகள் கொண்ட சிறப்பு மகப்பேறு மருத்துவப் பிரிவு வழங்கியதற்காகவும், சேலம் மாவட்டம் மட்டுமல்லாது, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவருடைய தொகுதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.*

திரு. எ.பி. சக்திவேல்: *அண்டை மாவட்ட மக்களும் பயன்பெறும் வகையில் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சேலம் மாவட்ட மாநகர மக்கள் சார்பாக நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மக்களின் தேவைகளில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளை இந்தப் பேரவையிலே நான் படித்ததாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில்

2016 செப்டம்பர் 1] [திரு. எ.பி. சக்திவேல்]

உபயதாரர்களால் கட்டப்பட்டுவரும் கோயில் கட்டுமானப் பணிகள் அல்லாது, சுற்றுலாத் துறையின்கீழ் இதர உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்துத் தர வேண்டுமென்று (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பாத மலர்கள் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா?*

திரு. எ.பி. சக்திவேல்: *உடையாப்பட்டி அருள்மிகு கோவிந்தராஜ பெருமாள் திருக்கோயிலில், (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order *இல்லை, உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *அன்னதானத் திட்டம் துவக்க வேண்டுமென்ற கோரிக்கையை (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order *எதுவும் இல்லை, உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order *இல்லை. (குறுக்கீடு)* Point of Order *இல்லை. (குறுக்கீடு)*

திரு. எ.பி. சக்திவேல்: *சேலம் தெற்கு தொகுதியில் குடமுழுக்கு நடத்தப்பட்டு (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order *இல்லை என்று நான் சொல்லிவிட்டேன். உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *12 ஆண்டுகள் நிறைவுற்ற அனைத்துத் திருக்கோயில்களிலும் விரைவில் குடமுழுக்கு நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கோரி (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு சமர்ப்பிக்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்புத் தரமுடியாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் வாய்ப்புத் தரமுடியாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் வாய்ப்புத் தரமுடியாது. (குறுக்கீடு)*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாலம் உள்ளவரை, ஞானம் உள்ளோர் வாழ்த்திடும் எங்கள் அன்னையின் ஆணைக்கு அடி பணிவோம்; அணி திரள்வோம்; ஆற்றல் பெறுவோம். வஞ்சனை புரிந்து, நிந்தனை செய்வோர் நஞ்சுக்கிணையோர் அஞ்சிடச் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சுரம் கொண்டு அணி வகுப்போம்; வெஞ்சினம் கொண்டு வேரறுப்போம். பொய்யும், புரட்டும் கலந்துரைக்கும் வீணர் கூட்டத்தை வீழ்த்திடுவோம். தடைக் கற்களை படிக்கற்களாக்க, தடந்தோள் கொண்டு உழைத்திடுவோம். நல்லாட்சியின் தொடர் வெற்றியை (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்குட்டுவன், நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா?*

திரு. எ.பி. சக்திவேல்: *உள்ளாட்சியில் 100 சதவீதமாக்க இணைந்து நின்று பணி செய்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா?*

திரு. எ.பி. சக்திவேல்: *எதிரிகளை வீழ்த்திடுவோம். எங்கும் வெற்றி, எங்கள் அம்மா அவர்களுக்கே! (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக உட்காருங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *எதிலும் வெற்றி, எங்கள் அம்மா அவர்களுக்கே! என்றும் வெற்றி, எங்கள் அம்மா அவர்களுக்கே! (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும்,
பிள்ளையைப் பெறுந் தாய் மறந்தாலும்,
உற்ற தேகத்தை வுயிர் மறந்தாலும்,
உயிரை மேவிய வுடன் மறந்தாலும்,
கற்ற நெஞ்சகங் கலை மறந்தாலும்,
கற்ற வத்தது ருள்ளிருந் தோங்கும்,

நம் மாண்புமிகு அம்மா அவர்களை என்றும் நான் மறவேனே! என சொல்லிக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

அம்மாப்பேட்டை அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் உபயதாரர்களால் கட்டப்பட்டுவரும் கோயில் கட்டுமானப் பணிகள் அல்லாது, சுற்றுலாத் துறையின்கீழ் இதர உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்துத் தரக்கோருகிறேன். உடையார்ப்பட்டி அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் துவங்கக் கோருகிறேன். சேலம் தெற்கு தொகுதியில் குடமுழுக்கு நடத்தப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவுற்ற அனைத்துத் திருக்கோயில்களிலும் விரைவில் குடமுழுக்கு நடத்திட ஆவன செய்யக் கோருகிறேன்.

உடையார்பட்டி பெருமாள் கோவில் காடு, UP கரடு வடபுறம் மற்றும் தென்புறம், செல்லக்குட்டிகாடு, மூணாங்கரடு தலமலை நகர் மற்றும் பஞ்சந்தாங்கி ஏரி உள்ளிட்ட சேலம் மாநகரில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும். சேலம் மாநகர் 50-வது கோட்டம், அகரம் காலனியில் குடியிருப்புப் பகுதியில் சாக்கடைக் கழிவு நீர் மற்றும் மழை நீர் புகாதவாறு சாக்கடைக் கால்வாய் அமைத்துத் தரக் கோருகிறேன்.

சேலம் மாநகர் 42-வது கோட்டத்தில் உள்ள காந்தி மகான் தெரு அருந்ததியர் காலனியில் உள்ள வெள்ளைக் குட்டை ஏரிக்குச் செல்லும் வாய்க்காலைத் தூர் எடுத்து, சாக்கடை கழிவு நீர் மற்றும் மழை நீர் குடிசைப் பகுதிகளுக்கு செல்லாதவாறு ஆவன செய்ய வேண்டும். சேலம் மாநகரில் உள்ள அருந்ததியர் இன மக்களுக்கென தனி காலணிகள் உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொடுத்து, அச்சங்கத்தின்மூலம் பள்ளி மாணவ, மாணவியருக்குத் தேவையான காலணிகளை அரசு கொள்முதல் செய்ய ஆவன செய்ய வேண்டும.

சிட்டா நூலுக்கு வழங்கப்படுவதுபோல் அனைத்து வகையான கோன் நூலுக்கும் வாட் (VAT) விற்பனை வரி விலக்கு அளித்திட ஆவன செய்ய வேண்டும். ஜவுளி உற்பத்தியை மேம்படுத்தும்பொருட்டும், நெசவாளப் பெருமக்களுக்குப் பொருளாதார வளர்ச்சி அளிக்கும்விதமாகவும், அம்மாப்பேட்டை அல்லது கொண்டலாம்பட்டி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும்.

சேலம் மாநகராட்சி, கொட்லாம்பட்டி பகுதி 50-வது டிவிசன் மணியனூரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் மழை நீர் மற்றும் சாக்கடைக் கழிவு நீர் குடியிருப்புப் பகுதியில் புகாதவாறு, சாக்கடைக் கால்வாய் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும். சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி பகுதி 58-வது டிவிசன் செல்லக்குட்டிக்காடு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும். உடையார்ப்பட்டியிலிருந்து சீலநாயக்கன்பட்டி பைபாஸ் வழியாக குரங்குச்சாவடி வரையிலான வழித்தடத்தில் புதிய சிற்றுந்துகள் இயக்க ஆவன செய்ய வேண்டும். சேலம் சீலநாயக்கன்பட்டி பைபாஸ் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க பேருந்து நிறுத்தத்தை 500 அடி தள்ளி வைக்க ஆவன செய்ய வேண்டும்.

சேலம் கிச்சிப்பாளையம் 44-வது டிவிசன் குப்பைமேடு பகுதியை முழுவதுமாக அகற்றிவிட்டு, அவ்விடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட ஆவன செய்ய வேண்டும். சேலம் தெற்கு தொகுதிக்குட்பட்ட அன்னதானப்பட்டி ஜெயராணி மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள ஓடையினைத் தூர் வாரி, பக்கச்சுவர் அமைத்து, சீரமைத்துக் கொடுக்க வேண்டும். சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜ வாய்க்காலுக்குப் பக்கச்சுவர் அமைத்து சீரமைத்துக் கொடுக்க வேண்டும். குமரகிரி ஏரியைத் தூர் வாரி நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டும். பனமரத்துப்பட்டி, சீலநாயக்கன்பட்டி பகுதிகளில் பயிரிடப்படும் பூக்களை விற்பனை செய்ய ஒருங்கிணைந்த பூ மார்க்கெட் அமைத்துக் கொடுக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு தகுதியுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளில் பெடல் தறிக்கான கடனுதவி வழங்க வேண்டும். சாலையோர சிறு மற்றும் குறு வியாபாரிகளுக்கு முக்கியப் பகுதிகளில் இடம் வழங்க வேண்டும். முதியோர் இல்லம் மற்றும் குழந்தைகள் இல்லம் அமைக்க வேண்டும்.

சேலம் குகை திருச்சி மெயின் ரோடு பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புலிகுத்தி சந்திப்பு முதல், பிரபாத் பெரியார் வளைவு வரை மேம்பாலம் அமைக்க வேண்டும். சேலம் தெற்குத் தொகுதியில் நெசவுத் தொழிலாளர்கள் மற்றும் வெள்ளித் தொழிலாளர்கள் சார்ந்த கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள

வேண்டும். நெத்திமேடு மணியனூர் பகுதிகளில் விவசாயிகளுக்கு பண்ணைப் பசுமை காய்கறிக் கடை அமைக்க வேண்டும். சேலம் தெற்கு தொகுதியில் இளைஞர்களுக்கு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைத்து ஊக்கப்படுத்த வேண்டும்.

சேலம் தெற்கு தொகுதி முழுவதும் காவல் துறையினர் பாதுகாப்பை அதிகப்படுத்தி, புறக்காவல் நிலையங்கள் அமைக்க வேண்டும். கருங்கல்பட்டி காய்கறி மார்க்கெட் பகுதியில் உள்ள வியாபாரிகளுக்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும். சேலம் தெற்குச் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முக்கியப் பகுதிகளில் பொது மக்கள் சாலையோரங்களில் நடப்பதற்கு ஏதுவாக, நடைபாதை அமைத்துத் தர வேண்டும்.

டிவிசன்தோறும் பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் நடைப் பயணம் மேற்கொள்ள பூங்காக்கள் அமைத்துத் தர வேண்டும். சேலம் மேற்குத் தொகுதியில் உள்ள அனைத்து ஓடைகளையும் தூர்வாரி கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். கிச்சிப்பாளையம் சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க வேண்டும். அம்மாப்பேட்டை, பொன்னம்மாப்பேட்டை ஆகிய இடங்களில் இரயில்வே கேட் அருகே மக்களின் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்க மேம்பாலம் அமைக்க வேண்டும். திருமணிமுத்தாறு சாக்கடைக் கால்வாய்களைச் சீர்செய்து, கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

எளிய தொண்டனான எனக்கு முகவரி தந்து அன்பு செலுத்தும் என் அன்னையே, என் உயிர் உள்ளவரை என் எண்ணமும், சொல்லும், செயலும் கழகத்திற்கே அர்ப்பணம்; (மேசையைத் தட்டும் ஒலி) என் தலைமுறையே தங்களுக்குச் சமர்ப்பணம் என கணந்தோறும் கரம் குவித்து, நாங்கள் வணங்கும் எங்கள் குலதெய்வம், வாழும் மனித தெய்வம், தமிழர் குலசாமி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, தங்களுக்கும் எனது பணிவான நன்றியினைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் பேசும்போது, முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்திற்கு அளிக்கப்படும் இணை மானியத்தை 1:3 என்ற அளவுக்கு உயர்த்தி வழங்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே வைத்தார். இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள, ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பதவிவழித் தலைவராகக் கொண்டு, மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தச் சங்கங்கள் நன்கொடைமூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப, 2011-2012 ஆம் ஆண்டு வரை 1:1 என்ற விகிதாச்சாரத்தில், ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10 இலட்சம் வரை இணை மானியத் தொகை அரசால் வழங்கப்பட்டு வந்தது. இந்த இணை மானியத் தொகையை 2012-2013 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் இரண்டு மடங்காக உயர்த்தி, 1:2 என்ற விகிதாச்சாரத்தில், ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 20 இலட்சம் வரை வழங்கினார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், சிறுபான்மையின மக்களின் பட்டா நிலங்களில் வழிபாட்டுத் தலங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் இங்கே வைத்தார். சிறுபான்மையின மக்களின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்டும் விதத்தில், அவர்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் வழிபாட்டுத் தலம் கட்டுவதற்குமுன், அவ்விடத்தில் பொது அமைதி குறித்த தள ஆய்வு அறிக்கை பெறப்பட்டு, மதக் கலவரங்கள் நிகழாவண்ணம் சட்டம்-ஒழுங்கிற்குட்பட்டு, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவைப் பொறுத்தே அனுமதி அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையிலே வருவாய்த்*

துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினைத் தந்த உலகெங்கும் வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களின் தலைவர், ஆசிய துணைக் கண்டத்திலே தோல்வியே கண்டிராத தலைவர் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய குடும்பத் தலைவர் கலைஞர் ஐயா அவர்களை வணங்கியும், 234 தொகுதிகளிலும் அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினை தொடர்பான கோரிக்கை மனுக்களைப் பெற்று, நமக்கு நாமே பயணத்தை வெற்றிகரமாக முடித்து, இன்றைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற எங்களுடைய பாசத் தளபதி, அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டு முறை ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவராகவும், ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், இப்படி பல்வேறு பொறுப்புகளை எனக்கு வழங்கி, மக்கள் பணி செய்திட வாய்ப்பளித்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியினைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்காக அல்லும், பகலும் அயராது பாடுபட்ட கழகத்தினுடைய பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற கட்சி நிருவாகிகளுக்கும், கழக முன்னோடிகளுக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிருவாகிகளுக்கும், தருமபுரி தொகுதி மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பசி நேரத்திலே என்னுடைய உரையை ஆரம்பித்திருக்கிறேன். பசி நேரமாதலால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் உதவியோடு என்னுடைய கன்னிப் பேச்சினை குறுக்கீடு இல்லாமல், விரைவிலே முடித்துவிடுகிறேன். மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கருத்தினை எடுத்து வைப்பதற்கு முன்னால், என்னுடைய தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 2-15

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள மக்கள் விவசாயத்தை நம்பியிருக்கின்ற சூழ்நிலையில்தான் வசித்து

வருகிறார்கள். பருவ மழை பெய்யவில்லை. ஆதலால், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்பினைத் தரக்கூடிய வகையில் தருமபுரி மாவட்டத்திலே சிப்காட் தொழிற்சாலையை வழங்க வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், கழக ஆட்சியிலே சிப்காட் வருவதற்காக, 1,900 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, வருவாய்த் துறையின் மூலமாக நிலங்களும் சர்வே செய்யப்பட்ட நிலையில், தற்போது அந்த சிப்காட் அமைக்கும் பணியானது கிடப்பிலே போடப்பட்டுள்ளது. விரைவிலே அந்த சிப்காட் பணியினை தொடங்கினால், அது எங்களுடைய மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். மாண்புமிகு உயர் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும். அங்கிருந்து வேலைவாய்ப்பு இல்லாமல் படித்த மாணவர்கள் அண்டை மாநிலமான கர்நாடகாவில் உள்ள பெங்களூரு போன்ற பல்வேறு வெளி மாநிலங்களுக்கும், சென்னை, கோயம்புத்தூர் போன்ற வெளி மாவட்டங்களுக்கும் வேலை தேடிச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அங்கே சிப்காட் வந்தால், படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு அது சாதகமாக இருக்கும் என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்தக் கோரிக்கையினை முன்வைக்கின்றேன்.

தருமபுரி மாவட்டம், நான் முதலிலேயே குறிப்பிட்டதுபோல், விவசாயத்தை நம்பியிருக்கின்ற ஒரு மாவட்டம். அந்தப் பகுதியிலே பூக்களை அதிகமாக விளைச்சல் செய்யக்கூடிய விவசாயிகள் இருக்கின்றார்கள். அந்தப் பூக்களை தினமும் காலையில் பஸ்ஸில் அவர்கள் எடுத்து வந்து, டவுன் பஸ் நிலையத்திலே அந்தப் பூக்களை வியாபாரம் செய்து வருகிறார்கள். அதனால் அந்தப் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து அதிகமாக பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. எனவே, தருமபுரி பஸ் நிலையம் அருகிலே ஒரு பூ மார்க்கெட்டை அமைத்துத் தருமாறு நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விவசாயத்தை நம்பியிருக்கின்ற பெரும்பாலான விவசாயிகள், விவசாயத்திற்காக ஏரியிலே இருக்கின்ற வண்டல் மண்ணை அவர்கள் சொந்த செலவிலே டிராக்டரிலே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். விவசாயிகள் தற்போது இதுபோன்று எடுத்துச் சென்றால், அரசு அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகள், வட்டாட்சியர்கள் அந்த வண்டிகளை நிறுத்தி,

அபராதம் விதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, விவசாயிகள் வண்டல் மண்ணை எடுத்து விவசாய நிலங்களில் பயன்படுத்துவதற்காக, அவர்களது வயிற்றில் பால் வார்க்கும்விதமாக அந்த மண்ணை எடுப்பதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கோரிக்கையாக வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சுதான் பேசிக்கொண்டிருக்கிறார். இருந்தாலும், அரசினுடைய நிருவாகத்திலே இருக்கக்கூடிய விஷயங்களை அவர் சொல்கிறபொழுது, சரியான தகவலைச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் குறுக்கீடு இல்லாமல் பேச முடியும். விவசாயிகள் உரிய அனுமதி பெற்று எடுத்துச் சென்றால், வருவாய்த் துறை அவர்களுக்குப் பாதுகாப்புகூட வழங்கும். ஆகவே, அனுமதியில்லாமல் எடுப்பவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி, என்ன? சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே, விவசாயிகள் குளத்திலும், ஏரியிலும் மண் எடுத்துச் சென்றதை நாங்கள் தடுக்கவேயில்லை. ஆனால் 2011-க்குப் பிறகு, ஒரு யூனிட்டிற்கு ரூ.300/- வசூல் செய்கிறார்கள். இதன் காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கட்டை வண்டியில் மண் எடுத்துச் செல்வதையெல்லாம் தடுக்கிறார்கள். அனுமதி தேவையெனில் வாங்கிக்கொள்ளலாம்: அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால், விவசாயிகளின் நலன் கருதி, இந்த அரசு பணம் இல்லாமல், விவசாயிகள் இலவசமாக மண்ணை எடுத்துச் செல்வதற்கு வாய்ப்புத் தர வேண்டும். ஆந்திர அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அங்கே இலவசமாக மணலைத் தருகிறது. எனவே, நீங்களும் வீடு கட்டுவதற்கு அப்படி இலவசமாகத் தரலாம். I.A.Y. திட்டத்தில், பசுமை வீடு திட்டத்தில் நீங்கள் தொகுப்பு வீடுகள் கொடுக்கிறீர்கள், அந்தப் பயனாளியால் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு முழுமையாக

வீடு கட்ட முடியவில்லை. இந்தத் திட்டங்களில் வீடுகள் கட்டுவதற்கு ரூ.1,70,000/- மற்றும் ரூ.2,10,000/- கொடுக்கிறீர்கள். ஆனால் ஆந்திர அரசு, மணலை இலவசமாகக் கொடுக்கின்றது. எனவே, இந்த அரசும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். விவசாயிகளின் நலன் கருதி, வண்டல் மண் எடுக்கும் விவசாயிகளுக்கு Permission கொடுக்க வேண்டும். ஏனென்றால், ரூ.25,000/-, ரூ.50,000/- என்று தாசில்தார், ஆர்.டி.ஓ. fine போட்டு விடுகிறார்கள். விவசாயிகள் நலனைக் கருத்திற்கொண்டு, தோட்டத்திற்கு உபயோகப்படுத்திட விவசாயிகளுக்கு இலவசமாக மண் எடுப்பதற்கு அனுமதி வழங்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் தவறான தகவலை சொல்லியிருக்கின்றார்கள். வண்டல் மண்ணிற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.300/- வாங்குவதாகச் சொல்லியிருக்கிறார்; அதுவே முதலில் தவறு, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் கொடுத்திருக்கலாம். அதற்குப் பின்னால் உச்ச நீதிமன்றம் ஒரு ஆணையிட்டிருக்கின்றது. செங்கல் சூளைக்கு மண் எடுக்க வேண்டுமென்றாலும்கூட, சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைப் பெற்றுத்தான்—அதாவது, இங்கிருக்கின்ற State Environment Impact Assessment Authority என்று சொல்லக்கூடிய SEIAA அனுமதியைப் பெற்றுத்தான் மண் எடுக்க வேண்டும்.

பிற்பகல் 2-20

அது உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவு. அது மாநில அரசினுடைய, மத்திய அரசினுடைய உத்தரவு அல்ல. உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதற்குப் பின்னால், SEIAA-ன் அனுமதியைப் பெற்றுத்தான் மணல் அள்ள வேண்டுமென்று மத்திய அரசு 18-5-2012 அன்று அனைவருக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு மணல் அள்ள அனுமதி கொடுக்கக்கூடாது என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய எண்ணமில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தருமபுரியில் சிப்காட்டைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஆண்டே அதற்கான உத்தரவினை வழங்கி, தற்போது நிலம் கையகப்படுத்தப்படும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பணி கிடப்பில் கிடக்கிறது எனக் கூறுவது தவறான தகவல். ஏனென்று சொன்னால், அரசின் புறம்போக்கு நிலங்களே கிட்டத்தட்ட 75 சதவிகிதம் இருக்கின்றது. மீதி 25 சதவிகிதம்தான் தனியார் நிலங்களை எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதற்கும் அனுமதி அளிக்கப்பட்டு, அதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன இடத்தில், சிப்காட் அமைக்கப்படுவது உறுதி என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்* I.A.Y.-*திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு, பயனாளிகளுக்கு மணலை நீங்கள் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.* I.A.Y. *வீடுகள் என்று ஏற்கெனவே இருந்ததை, மத்தியில் புதிய அரசாங்கம் வந்தபின்பு, "பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்" என்று இப்போது மாற்றி விட்டார்கள். இந்த வீடுகளைக் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தால் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் மட்டுமல்ல; தி.மு.க. ஆட்சியின்போதும்கூட, மத்திய அரசு என்ன தொகை அதற்காக நிர்ணயித்ததோ, அதனைத்தான் அவர்கள் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திலே வீடுகள் கட்டுவதற்குக் கூடுதலாக நிதியைக் கொடுத்து வருகிறார்கள். மத்திய அரசு இதற்கு 1,20,000 ரூபாய் என நிர்ணயம் செய்திருக்கிறது. இந்தத் தொகையுடன் 50,000 ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாகச் சேர்த்து, 1,70,000 ரூபாயாகக் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல; மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 30,000 ரூபாய்; அதுபோக தனி*

நபர் கழிப்பிடம் கட்டுவதற்காக ரூ.12,000/- என ஒவ்வொரு வீட்டிற்கும் கிட்டத்தட்ட 2,12,000 ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள். தி.மு.க. ஆட்சியில் கொடுத்த தொகையைவிட, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் தொகையை அதிகரித்து வழங்கியிருக்கிறார்கள். கடந்த கால தி.மு.க. ஆட்சியில் வீடு வழங்கும் திட்டத்தை அறிவித்து, ஒரு வீட்டிற்கு 75,000 ரூபாய் மட்டும்தான் கொடுத்தார்கள். அந்தத் தொகையைக் கொண்டு எப்படி வீட்டினைக் கட்ட முடியும்? அதன் காரணமாக நிறைய பயனாளிகள் அப்போது கடனாளிகளாக ஆனார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபின், தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட வீடுகளுக்கும் சேர்த்து, 490 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியதால்தான், அந்த வீடுகள் எல்லாம் கட்டப்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும் தற்போது கூடுதல் நிதி வழங்கி 2,12,000 ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள். ஆனால், மற்ற மாநிலங்களில் மத்திய அரசு ஒதுக்கும் அந்த நிதியில்தான் வீடுகள் கட்டப்படுகின்றன. காங்கிரஸ் ஆட்சியின்போது I.A.Y.-இந்திரா குடியிருப்புத் திட்டம் என்றிருந்தது, இப்போது "பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் பெயர் இருந்தாலும், அவர்கள் கொடுக்கக்கூடிய தொகை 72,000 ரூபாய்தான். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுப்பது 98,000 ரூபாய் 98,000 ரூபாயிலிருந்து, மேலும் கூடுதலாக மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள், வீடுகள் கட்டுவதற்கு இலவசமாக மணல் வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த வீடுகளுக்கான கட்டுமானச் செலவு கூடுதலாக வருகிறது என்பதால்தான், தி.மு.க ஆட்சியில் இருந்ததைவிட*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டுமானப் பொருட்களுக்காக கூடுதலான தொகையைக் கொடுக்கிறார்கள் என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, விவாதம் போதும். (குறுக்கீடு) விவாதம் போதும். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, நீங்கள் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) போதும்; அதோடு விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, நீங்கள் பேசுங்கள்.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், கே.ஆர்.பி. அணையிலிருந்து தண்ணீர், காரிமங்கலம் வரை இருக்கின்ற ஏரிகளில் கால்வாய் மூலமாக வந்து எப்படி விவசாயிகளுக்குப் பயன்படுகின்றதோ, அதைப்போன்று பஞ்சப்பள்ளி அணையிலிருந்து வருகின்ற தண்ணீரை கால்வாய் மூலமாக தருமபுரி அருகில் இருக்கின்ற ராமக்கால் ஏரிக்குக் கொண்டுவந்தால், அதன்மூலம் அருகில் இருக்கின்ற கிணறுகளாகட்டும், ஆழ்துளைக் கிணறுகளாகட்டும், அவை அனைத்திலும் தண்ணீர் சேமிக்கப்பட்டால், விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்து, அரசுக்குக் கோரிக்கையாக முன்வைக்கின்றேன்.

பிற்பகல் 2-25

அதேபோன்று, எங்களுடைய அன்பிற்குரிய அண்ணன் தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, தருமபுரி நகராட்சியில் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தகன எரிவாயு மேடை அமைக்கப்பட்டது; அது செயல்பாட்டில்தான் இருந்தது. ஆனால், அந்தத் தகன எரிவாயு மேடை கடந்த 7, 8 மாதங்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது. ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் 20, 25 உடல்களை அங்கே எரியூட்டக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. தற்போது அங்குள்ள ஏழையெளிய மக்களுக்கு, உடல் ஒன்றை எரியூட்டுவதற்கு ரூ.7,000/-லிருந்து ரூ.8,000/- வரை செலவாகின்றது. அந்த தகன எரிவாயு மேடையை சரி செய்தால், அவர்களுக்கு ரூ.1,500/-தான் செலவாகும். எனவே, ஏழையெளிய மக்களின் செலவினத்தைக் குறைக்கும் வகையில், அந்தத் தகன எரிவாயு மேடையை சரி செய்ய வேண்டும்

என்ற கோரிக்கையை நான் இங்கு வைக்கின்றேன். அதேபோன்று, கன்னியாகுமரியிலிருந்து காசி வரை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையானது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அவர் சொன்ன கோரிக்கை குறித்துதான் பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தருமபுரி நகராட்சிக்குச் சொந்தமான தகன எரிவாயு மேடையில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்ய 18 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தப் பணிக்காக, 10-3-2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது; தேர்தல் நடத்தை விதி நடைமுறைக்கு வந்த காரணத்தினால், அந்தப் பணியைத் தொடர்ந்து செயல்படுத்த முடியவில்லை. பிறகு 25-5-2016 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, 13-7-2016 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது; பணிகள் வேகமாக நடைபெற்று முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி, பேசுங்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் அரசின்மீது குற்றச்சாட்டாக இதைச் சொல்லவில்லை. எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அதுபற்றித் தெரியும். அதனால்தான், மக்களுடைய நலன் கருதி, தகன எரிவாயு மேடையை சரிசெய்து தாருங்கள் என்று சொன்னேனேதவிர, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்,*

ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொன்றாகச் சொல்லும்போது, "உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்; தெரியும்" என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார். நான் ஒருசிலவற்றை அவருக்குக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். "இன்றைக்கு சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்படவில்லை; பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன" என்று உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினரது சொந்த ஊராட்சியிலிருந்தும்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், சிப்காட்டிற்காக நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதக்கப்பாடி, தடங்கம், அதியமான்கோட்டை, பாலஜங்கமனஹள்ளி ஆகிய ஊராட்சிகளில் 1,183 ஏக்கர் அரசு நிலங்களும், 550 ஏக்கர் பட்டா நிலங்களும் இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 1,733 ஏக்கரில் சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்காக, மாவட்ட வருவாய் அலுவலரைத் தனியாக நியமனம் செய்து, அவருக்குக் கீழே பணி செய்ய 25 அலுவலர்களையும் நியமனம் செய்து, நிலம் கையகப்படுத்தக்கூடிய வேலை மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார். அப்படி அறிந்திருந்தும், அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டாகச் சொல்கிறார்.

அதோடுமட்டுமல்லாமல், "இன்றைக்குத் தென்பெண்ணையாற்றின் தண்ணீர் எப்படி காரிமங்கலம் ஏரி வரை வருகின்றதோ, அதேபோன்று, பஞ்சப்பள்ளி அணையிலிருந்து ராமக்கால் ஏரி வரை தண்ணீர் வர வேண்டும்" என்று உறுப்பினர் இங்கே கோரிக்கை வைத்தார். பஞ்சப்பள்ளி அணையிலிருந்து உபரி நீர் வருகின்றபோது, அது ராமக்கால் ஏரிக்கும் செல்லும் வகையில் ஏற்கெனவே கால்வாயானது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்குப் பஞ்சப்பள்ளி அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தினால், ராமக்கால் ஏரி வரை தண்ணீர் வரவில்லை. மேலும், தருமபுரி மாவட்டத்தினுடைய வறட்சியை நிவர்த்தி செய்வதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு பஞ்சப்பள்ளி அணையிலிருந்து வரக்கூடிய உபரி நீரை ஜர்த்தனாவ் கால்வாய் வழியாக, 5,000 மீட்டர் அளவிற்கு புலிக்கரை ஏரி வரை உள்ள 18 ஏரிகளில் தண்ணீர் வரக்கூடிய நிலையை உருவாக்குவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து,

அதை ஆய்வு செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதேபோன்று, தென்பெண்ணையாற்றின் குறுக்கே எண்ணேக்கல்புதூரிலிருந்து தடுப்பணை கட்டப்பட்டு, தும்பனஹள்ளி அணை வரை உள்ள 34 ஏரிகளுக்கும், 16 தடுப்பணைகளுக்கும் தண்ணீர் வரக்கூடிய சூழலை உருவாக்குவதற்காக, ஆய்வுப் பணியை மேற்கொள்ள ரூ.40 இலட்சம் வழங்கியிருக்கிறார்கள். இதற்கும் மேலாக, இன்றைக்குப் பஞ்சப்பள்ளி அணையிலே நீர் இல்லை என்பதைக் கருத்தில்கொண்டும், என்றைக்குமே தென்பெண்ணையாற்றில் தண்ணீர் வருகின்றது என்பதை மனதில் கொண்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தருமபுரி மாவட்டத்தின்மீது தனி அக்கறை இருக்கின்ற காரணத்தினால்தான், அணையாளம் அணைக்கட்டிலிருந்து, தூள்செட்டி ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வருகின்ற நிலையை உருவாக்கியுள்ளார்கள். அதன்மூலம், தூள்செட்டி ஏரியிலிருந்து பஞ்சப்பள்ளி அணைக்கே தண்ணீர் வரக்கூடிய நிலையையும், பஞ்சப்பள்ளி அணையிலிருந்து வரக்கூடிய உபரி நீரை, அந்தக் கால்வாய்க்குக் கொண்டுவரக்கூடிய வகையிலேயும், மாரண்டஅள்ளி அணைக்கட்டிற்குத் தண்ணீர் வரக்கூடிய நிலையையும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்த நிலைகளையெல்லாம் இன்றைக்கு ஆய்வு செய்து, கூடிய விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மேலும், மேலும் முயற்சிகளை செய்து கொண்டிருக்கின்றது.

பிற்பகல் 2-30

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒவ்வொரு திட்டமும் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றார். இது தவறு. அதேபோல, அந்தத் தகன மேடை குறித்து மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு, இன்றைக்கு நல்ல முறையிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுச் சொல்லிக்கொண்டிருக்கிறார். மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்த, தருமபுரி மாவட்டத்தை இன்றைக்கு முன்னேறிய மாவட்டமாகத் திகழ்கின்ற வகையிலே பள்ளிக் கல்வி, உயர் கல்வி போன்ற துறைகளில் பல்வேறு முன்னேற்றங்களை ஏற்படுத்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மாணவர்களின் வாழ்வாதாரமும் உயருகின்ற நிலையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியும்

தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார். இருந்தாலும், அவருடைய தலைமைக்குக் கட்டுப்பட்டு, இங்கே அப்படிப் பேசிக்கொண்டிருக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தயவு செய்து, அந்த சிப்காட் பணியினை வேகப்படுத்த வேண்டுமென்ற ஒரு எண்ணத்தில்தான் நான் சொன்னேனேயொழிய, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) தவறாக ஒன்றும் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி, நீங்கள் பேசுங்கள்.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகள் உள்ளன. அந்த 33 வார்டுகளில், 19 வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்ற நிலையில், மீதமுள்ள 14 வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளைத் தொடங்கவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கன்னியாகுமரியிலிருந்து காசிக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், தொப்பூர் மலைப்பகுதியிலே விபத்துகள் அதிக அளவில் நிகழ்கின்றன. மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சராக திரு. வெங்கட்ராமன் அவர்கள் இருந்தபோது, நான் ஒன்றியக் குழுத் தலைவராக இருந்தேன். மத்திய அமைச்சரான அவரிடம் நான் கோரிக்கை மனுவை அளித்தவுடன், அடுத்த 15 நாட்களில் அவர் அந்த மலைப் பகுதியினை வந்து பார்வையிட்டார். அந்தப் பகுதியில் நான்கு வழிச்சாலைப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, அந்த மலைப் பகுதிக்கென 25 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, நான்கு வழிச்சாலையாக மாற்றி முதன்முதலாக போக்குவரத்தினை ஆரம்பித்தார்கள். நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இன்றைக்கு விபத்துகள் அதிகமாக நேரக்கூடிய ஒரு சூழ்நிலையிலே அந்த

மலைப்பகுதியானது இருக்கின்றது. எனவே, வனத் துறையின் அனுமதியுடன் விரைவிலே அதை ஆறு வழிப்பாதையாக அமைத்திட வேண்டும். ஏனென்றால், அதிக பாரங்களை ஏற்றிச்செல்லக்கூடிய போக்குவரத்து நிறைந்த பகுதியாக அது இருக்கின்றது. எனவே, விரைவிலே அதற்கு நிதியொதுக்கீடு செய்து, அதனை ஆறு வழிச்சாலையாக அமைக்கவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை. தற்போது அங்கே சுங்கச்சாவடி அமைத்து, வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். உறுப்பினருடைய கட்சியைச் சார்ந்தவர் மத்தியிலே அமைச்சராக இருந்தபோதுதான் அந்தச் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டது. ஆகவே, சுங்கச்சாவடி அமைத்து, கட்டணம் வசூல் செய்கின்ற காரணத்தினாலேயும், இப்போது பல்வேறு இடங்களிலே போக்குவரத்து செறிவின் அடிப்படையிலேயும், சாலையை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தப் பகுதியிலும் இப்போது சர்வே செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சாலையை விரிவுபடுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *அதேபோன்று நல்லம்பள்ளி தாலுகா, நல்லம்பள்ளி ஒன்றியம், மானேஹள்ளி கிராமம், ஏறத்தாழ 22 கிராமங்களை உள்ளடக்கிய பெரிய ஊராட்சியாக இருக்கிறது. பரிகம் கிராமத்திலிருந்து தொப்பூர், வெள்ளார், மலையூர்காடு போன்ற பகுதிகளுக்கு 35 கிலோ மீட்டர் தூரம் பயணித்து, மக்கள் தினமும் கூலி வேலைக்குச் செல்கிறார்கள். ஆனால்,*

அந்தப் பரிகம் கிராமத்திலிருந்து மலையூர்காடு பகுதிக்கு வனப் பகுதி வழியாகச் சென்றால் 3 கிலோ மீட்டர் பயணித்தாலே போதும். எனவே, வனத் துறை அனுமதி அளித்தால், வனப் பகுதியிலே பாதை அமைப்பதற்கு வசதியாக இருக்கும் என்று இந்த அரசைக் கேட்டு, ஏழைகளுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அது சாதகமாக இருக்கும் என்பதை நான் கோரிக்கையாக எடுத்து வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கோரிக்கையை எழுதி தனியாக அனுப்பிவைத்தால், வனத் துறை மூலமாக, விதிகளுக்குட்பட்டு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

பிற்பகல் 2-35

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில், கருவறை முதல் கல்லறை வரை மக்களுடைய தேவைகளை அரசின் சார்பில் தீர்த்து வைத்து வருகின்ற ஒரு பொது நிருவாகத் துறையாக அது விளங்குகிறது. வருவாய்த் துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள், காலிப் பணியிடங்கள் போன்றவற்றால் வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, அரசால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்கான பயன்களை மக்கள் பெறுகின்ற வகையிலேயும், திட்டங்களைச் செயல்படுத்திடவும், போதிய அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, அரசின் நலத் திட்டங்கள் எளிதில் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற அடிப்படையிலும், ஒரே இடத்தில் குவிந்திருக்கின்ற அதிகாரத்தை, அனைத்து நிலைகளிலும் உள்ள அதிகாரிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற நோக்கத்திலும், இன்றைக்குப் பல வட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் நல்லம்பள்ளி ஒன்றியம், ஒரு புதிய தாலுகாவாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தாலுகா அலுவலகத்தில் பணியிடங்கள் இன்றைக்குக் காலியாக உள்ளன. அதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகின்றேன். முன்பு கேள்வி நேரத்திலும் நான் ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறேன். 15 நாட்களுக்கு முன்பாக, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள அந்தத் தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற ஓர் அரசு நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டபோது, கடுமையாக மழை பெய்தது. அந்த மழையினால் தண்ணீர் அலுவலகத்திற்குள் கொட்டியது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், பழைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், தற்போது அந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, விரைவில் அந்தத் தாலுகா அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து வட்டங்களுக்கும், தேவையானவற்றை விரைவில் இந்த அரசு செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைசியில், பதிலுரையில் இதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நல்லம்பள்ளி வட்டத்தில் போதிய பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். 2015-2016 ஆம் நிதியாண்டில்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் தருமபுரி மாவட்டத்தில், நல்லம்பள்ளியை புதிய வட்டமாக தாயுள்ளத்தோடு அறிவித்தார்கள். ஒரு வட்டத்தை அறிவிக்கும்போது, அதற்குத் தேவையான கட்டடம், அதைப்போல நிருவாகத்திற்குத் தேவையான அலுவலர் பணியிடங்கள் போன்றவற்றிற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்துதான், அந்த வட்டம் அமைக்கப்படுகிறது. அந்த அடிப்படையில், அலுவலர் பணியிடங்களுக்கான நிதியாக இரண்டே கால் கோடி ரூபாயும், கட்டடத்திற்காக இரண்டே கால் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆகவே, இந்த வட்டம் 2015-2016 ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. அதனால் அது தற்காலிகமாகத்தான் அந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது*

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருவாய்த் துறை அலுவலர்களின் வசதிக்காகவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதாக அணுகுவதற்காகவும், இந்தியாவிலேயே, வேறு எங்கும் இல்லாத வகையில், ரூ.356 கோடியிலே 377 கட்டடங்களை உருவாக்கித் தந்த தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் நில அளவை உதவி ஆய்வாளர், துணை வட்டாட்சியர் பணியிடங்களில் ஆண்டுதோறும் வெளியிடப்பட வேண்டிய பதவி உயர்வு பட்டியல்கள் நிலுவையாக உள்ளன. மாநிலம் முழுவதும் 200 முதல் 300 வரை வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் பணியிடங்கள் இருக்கின்றன. உரிய காலத்தில் அந்தப் பட்டியல்கள் வெளியிடப்படாததன் காரணமாக, தகுதி பெற்றிருக்கின்ற மூத்த அலுவலர்கள் உரிய காலங்களில் பதவி உயர்வு பெற இயலாத சூழ்நிலையில் இன்றைக்கு இருந்து வருகிறார்கள். அரசுப் பணி என்பது எட்டாத கனியாகி விட்டது. எனவே, இந்நிலையை மாற்றுகின்ற வகையில், வருவாய்த் துறையில் பதவி உயர்வுப் பட்டியல்களை உரிய காலங்களில் வெளியிட வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்கின்ற அரசு ஊழியர்களின்மீது மேற்கொள்ளப்படுகின்ற ஒழுங்கு நடவடிக்கைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவு செய்யப்பெறாத நிலை தொடர்வதால், நூற்றுக்கணக்கான அலுவலர்கள் இன்றைக்கு அரசுப் பணியில் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்த முடிவதில்லை. ஒழுங்கு நடவடிக்கை நிறைவுபெறாததன் காரணமாக ஏற்படும் மன அழுத்தத்தினால், நூற்றுக்கணக்கான வருவாய்த் துறை அலுவலர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் குடும்பத்தினரும் நிர்கதிக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, பல்வேறு காரணங்களினால் தவறு செய்த அலுவலர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, விரைந்து அவற்றை முடிவுக்குக் கொண்டுவர அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு குடிமைப் பணிகள் விதி 17 மற்றும் 17(ஆ)-ன்கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்படும் இனங்களில், அதனை முடிவுக்குக் கொண்டுவர, நிறைவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

இதில் கால நிர்ணயம் ஏதுமில்லாத காரணத்தால், குற்றச்சாட்டுகள் நிலுவையாக இருக்கும் நிலையில், பணியாளர்கள் ஓய்வுபெற அனுமதிக்கப்படுவதில்லை. இதன்விளைவாக, பணியாளர்கள் ஓய்வூதியம் மற்றும் D.C.R.G. போன்றவற்றைப் பெற முடியாத நிலை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காக United India Insurance Company-மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பணிகளை, கடந்த காலங்களில் செயல்பட்டதுபோல சிறப்பாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வருவாய்த் துறையில், வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பில் இருக்கக்கூடிய அலுவலர்கள் குற்றங்கள் செய்கிறபோது அவர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள்மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதில் காலதாமதம் ஏற்படக் கூடாது என்று சொன்னார்கள். வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பில் துணை ஆட்சியர் முதல் வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், கண்காணிப்பாளர், வருவாய் உதவியாளர், வருவாய் இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஓட்டுநர், பதிவுரு உதவியாளர், அலுவலக உதவியாளர், காவலர், கிராம நிருவாக அலுவலர், கிராம உதவியாளர் என்று பல்வேறு பணியிடங்களில், ஏறத்தாழ 51 ஆயிரம் பணியாளர்கள் இருக்கிறார்கள். அதிலே குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வருவாய் நிருவாக ஆணையர், அவருக்குக் கீழே மாவட்ட ஆட்சித் தலைவர் என்று பல்வேறு நிலைகளில் அதிகார அமைப்பு இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட அலுவலர்மீது நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் இருக்குமேயானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், பொத்தாம்பொதுவாக இதுபோன்ற ஒரு நிலை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பற்றி எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலையில் பேசினார்கள். தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை, தமிழகத்தில் வாழ்ந்துவரும் 60 வயதுக்கும் மேற்பட்ட, உழைக்க இயலாத அனைவரும் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் பெறுகின்றவகையிலே—கொள்கை விளக்கக் குறிப்பில்கூட அரசு வெளியிட்டிருக்கின்றது.—மகன்கள், மகள்கள் இருந்தாலும், ஆதரவற்றவர்களாக இருக்கிற ஒரு சில குடும்பத்தினர் மெத்தை வீட்டில் இருந்தால், அவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்க இயலாது என்று கிராமப்புறத்திலே இருக்கின்ற கிராம நிருவாக அலுவலர்களும், வருவாய் அலுவலர்களும் சொல்கிறார்கள். அந்த விதிமுறையைத் தளர்த்தி, 60 வயதைக் கடந்தவர்களுக்கு, வீடுகள் இருந்தாலும், அவர்களுடைய மகன்கள், மகள்கள் கவனிக்காத சூழ்நிலையில், அவர்கள் அனைவருக்கும், ஓய்வூதியத்தை வழங்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைப்பற்றி பலமுறை இந்த அவையிலே நாம் பேசியிருக்கிறோம். கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்கள் செய்திருந்த சீர்கேடுகளை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீர்திருத்துகிற வகையிலே செயல்பட்டு வருகிறார்கள். ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கின்றேன். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவரின் திண்டுக்கல் மாவட்டத்தில், தேசிய கட்டளைக்கு இணங்க, மத்திய அரசின் உத்தரவிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, சமூகப் பாதுகாப்பு உதவிகளை இறந்துபோன 1,330 நபர்கள் பெற்றதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, இறந்துபோன 1,330 நபர்களுக்கு நிவாரண உதவிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதைவிட கொடுமை என்னவென்று சொன்னால், அந்த ஒரு மாவட்டத்தில் மட்டும், கணவர் உயிரோடு இருக்கும் நிலையில், 526 பெண்களுக்கு விதவை ஓய்வூதியம்*

கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் இரட்டைப் பதிவு காரணமாக 101 பேர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் காலையிலேயே நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் இதற்கான ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) இவை, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற ஆத்தூர் தொகுதியில், ஒரு வட்டத்தில் மட்டும் கொடுக்கப்பட்டவை. இதுபோன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற நிகழ்வுகளைச் சொல்ல வேண்டுமென்றால், நேரம் போதாது. அவர்கள் செய்திருக்கிற நிருவாகச் சீர்கேடுகள் அந்தளவிற்கு இருக்கின்றன. (குறுக்கீடுகள்) ஆகவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தளவிலே, இரட்டைப் பதிவிலே 101 நபர்களும், (குறுக்கீடுகள்) நிரந்தர முகவரி மாற்றம் காரணமாக 632 நபர்களும், முகவரியிலே குடியிருப்பு இல்லாததன் காரணமாக 1,064 நபர்களும் கண்டறியப்பட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மூன்று முறைகளுக்கு மேல் பணவிடை திரும்பி வந்ததன் காரணமாக 2 நபர்கள்; அரசு ஊழியர்களைச் சார்ந்திருப்பவர்கள் 194 நபர்கள்; (குறுக்கீடுகள்) விதவை மறுமணம் செய்தவர்கள் 11 நபர்கள்; உழைக்கும் திறனற்ற ஆதரவுள்ளவர்கள் 108 நபர்கள் என, 26 ஆயிரம் நபர்கள், மாண்புமிகு உறுப்பினரது மாவட்டத்தில் மட்டும் கண்டறியப்பட்டு இருக்கிறார்கள். இதுபோன்று தவறுகள் ஏற்படாமல், உண்மையான ஏழைகளுக்கு, உண்மையான ஆதரவற்றோருக்கு, உண்மையான சமூகப் பாதுகாப்பு இல்லாதவர்களுக்கு திட்டம் போய்ச் சேர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஆட்சிக் காலத்தில் இத்திட்டத்திற்கு 1,200 கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் தேவைக்கேற்ப 4,200 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் கேட்கிறேன்; 1,200 கோடி ரூபாய் கொடுத்த இவர்களுடைய அரசு மனிதநேய அரசா? (குறுக்கீடுகள்) 4,200 கோடி ரூபாய் வரை வாரி வழங்கியிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மனிதநேய அரசா? (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ முதியோர் ஓய்வூதியம் கொடுக்கவேயில்லை என்கிற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்கு இவர்கள் முயற்சி செய்கிறார்கள். (குறுக்கீடுகள்) கடந்த கால தி.மு.க. அரசைக்காட்டிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு, நிதியிலும் சரி, பயனாளிகளின் எண்ணிக்கையிலும் சரி, உயர்த்தித்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-45

அதுவும் அவர்கள் விதிமுறைகளைத் தளர்த்தாமல், விதிமுறைகளைக் காற்றிலே பறக்க விட்டு, வரையறை இல்லாமல் வழங்கினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், தகுதியின் அடிப்படையிலே, இருக்கக்கூடிய பயனாளிகளுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்காக விதிமுறைகளைத் தளர்த்தினார்கள். 1962 ஆம் ஆண்டிலிருந்து எந்த முதலமைச்சரும் அந்த விதிமுறையைத் தளர்த்தவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலில் அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, பயனாளிகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக, இந்தியாவிலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான ஆட்சியிலேதான் மிகச் சரியாக, தகுதியான பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, ஒரு வட்டத்தில் மட்டும் இவ்வளவு தகுதியில்லாதவர்களுக்கு தி.மு.க. ஆட்சியில் அவர்கள் உதவித் தொகையைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் வெளிநாட்டிலே இருப்பவர்களுக்கெல்லாம்கூட அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்குத் தேவையான ஆதாரங்களும் என்னிடத்திலே இருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தகுதியுள்ள அனைவருக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள்

இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஐ.பி. செந்தில்குமார், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இந்தமாதிரி பேசுவது சரியல்ல. உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசினார். உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) தேவையானால் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். நின்றுகொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று காலையில் தி.மு.க. உறுப்பினர்கள் என்னுடைய அறையில் வந்து சில ஆதாரங்களைக் கொண்டுவந்து காட்டினீர்கள். (குறுக்கீடுகள்) "அந்த ஆதாரங்களையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கொடுங்கள்; நான் நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்" என்று உங்களிடம் நான் சொன்னேன். இருந்தாலும் நீங்கள் அந்த ஆதாரங்களைக் காட்டினீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், பேசும்போதும் ஆதாரங்களைக் காட்டினார். நான் மீண்டும் "மாண்புமிகு அமைச்சரிடம் கொடுங்கள்; தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லி காலையிலே அவருக்கு நான் உத்தரவு வழங்கியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள், நீங்கள் கொடுங்கள்" என்று நான் சொல்லிவிட்டேன். அந்தப் பிரச்சினை அதோடு தீர்ந்து போய்விட்டது. அப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில ஆதாரங்களைக் உங்களிடத்திலே காட்டினார். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் இருக்கிறபோதே, "இரண்டு ஒன்றியங்களிலே அந்த ஆட்சிக் காலத்திலே இப்படியெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன" என்று என்னிடம் காட்டினார். நான் அதையும் பார்த்துவிட்டேன். சரி, அவர்கள் பேசும்போது சொன்னால், நான் தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். இரண்டையும் ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடம் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதற்கு இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிடத்தில் இருக்கிற ஆதாரத்தை வைத்துக்கொண்டு பதில் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான்; இதில் என்ன பிரச்சினை இருக்கிறது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சில ஆதாரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதேநேரத்தில், அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராக இருந்து, இப்பொழுது இங்கே எங்களுடைய கட்சி உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி அவர்கள்மீது சில குற்றச்சாட்டுக்களை நேரடியாகச் சொல்வதைப் போல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய வாதத்திலே எடுத்து வைத்திருக்கிறார். அதோடுமட்டுமல்ல; ஆத்தூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும் திரு. ஐ. பெரியசாமி அவர்கள் இருக்கிறார். கடந்த காலத்திலே வருவாய்த் துறையினுடைய அமைச்சராகவும் இருந்திருக்கிறார். எனவே, அதற்கு அவர் விளக்கம் சொல்வதுதான் முறையாக இருக்கும். அதற்கு அவருக்கு நீங்கள் அனுமதி தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 2-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி குறித்து அமைச்சர் பேசியதால், அவர் வாய்ப்புக் கேட்டிருந்தால், நிச்சயமாக நான் கொடுத்திருப்பேன். ஆனால் இந்தச் சபையில் என்ன நடந்தது? (குறுக்கீடுகள்) 10 நிமிடங்கள் தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கூச்சலிட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லவிடாமல் தடுக்கும்விதமாக நடந்து கொண்டார்கள். (குறுக்கீடுகள்) இது முறையா? (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், நீங்கள் இப்பொழுது எழுந்து நிற்பது தேவையில்லாதது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். அது முறை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி குறித்து*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதால், அதற்கு பதில் சொல்ல வாய்ப்புக் கொடுங்கள் என்று ஓர் உறுப்பினர் கேட்டால், நிச்சயம் அவருக்கு நான் வாய்ப்புத் தருவேன். ஆனால், சம்பந்தா சம்பந்தமில்லாமல் அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று கூச்சலிடுவது, அவரவர்களுடைய இருக்கையைவிட்டு இங்கு வந்து பேசுவது என்ன முறை? (குறுக்கீடுகள்) அதில் என்ன முறை இருக்கிறது? (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதாவது ஒரு விதியைப் பின்பற்றி நடக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருவதற்கு முன்பாக (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருவதற்கு முன்னால் என்னுடைய நிலையை நான் சொல்லவேண்டியிருக்கிறது. காலையில் நடந்த நிகழ்வை நான் சொல்லிவிட்டேன். இப்படி எல்லோரும் எழுந்து நின்று வற்புறுத்தினால், நான் யாருக்கு வாய்ப்புத் தருவது? (குறுக்கீடுகள்) இந்த நடைமுறை தவறானது. இதைப் பின்பற்றக்கூடாது என்று நான் கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதால், கண்டிப்பாக அவருக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, என்ன விளக்கம் என்று சொல்லுங்கள்.

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் 2006-ல் ஆட்சிக்கு வந்தபோது, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகை வெறும் 200 ரூபாயாகத்தான் இருந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் முதியோர் ஓய்வூதியத் தொகையை ரூ.200/-லிருந்து கலைஞர் அவர்கள் 400/- ரூபாயாக உயர்த்தினார்கள். அந்த 400 ரூபாயையும் மக்கள் கேட்காமலேயே 500 ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தப்பட்ட 500 ரூபாய் உதவித் தொகையை 24 இலட்சம் பேர்களுக்கு வழங்குவதற்காக ரூ.1,200 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, "நாங்கள் 3,000 கோடி ரூபாய் கூடுதலாகக் கொடுக்கிறோம்" என்று சொன்னார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 24 இலட்சம் பேருக்கு ரூ.1,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்தோம். (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒன்றும் உயர்த்திக் கொடுக்கவில்லை; பணத்தின் மதிப்பு உயர்ந்திருக்கிறது.*

*தேர்தல் நேரத்தில் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று உங்கள் கட்சியின் சார்பிலும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது; எங்கள் கட்சியின் சார்பிலும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால், எங்கள் ஆட்சியில் 24 இலட்சம் பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதாவது, தி.மு.க. ஆட்சிக்கு வந்தபொழுது, மொத்தம் 12 இலட்சம் பேர்களுக்குதான் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், 100 சதவீதம் அளவிற்குப் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தி, உதவித் தொகையை வழங்கிய ஆட்சி கலைஞர் அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் இறந்த 1,000 பேர்களுக்கு உதவித் தொகை கொடுத்திருப்பதாக இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து நான் சொல்கிறேன். சென்ற முறை நான் இந்த அவையில் இருந்தபோதும், "இதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்றுதான் சொன்னேன். நீங்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து பாருங்கள். எனது தொகுதியில், தகுதியுள்ள நபர்கள் 10,000 பேர்களுக்கு மேலாக முதியோர் உதவித் தொகை, ** இன்றைக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் முதியோர் உதவித் திட்டத்தையே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி, நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். விளக்கம் சொல்லும்போது **என்ற வார்த்தையையெல்லாம் பயன்படுத்த வேண்டாம். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் சொல்லி முடிக்கட்டும். வாய்ப்புத் தருகிறேன்.*

திரு. இ. பெரியசாமி: *நான் ஏற்கெனவே பேசுகின்றபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். மத்திய அரசின் திட்டத்தில், முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ், ஒருவருக்கு பிள்ளைகள் இருந்தால், அவருக்கு முதியோர் உதவித் தொகை வழங்க இயலாது. ஆனால், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் "முதியவர்களுக்கு மகன் இருந்தாலும், மகள் இருந்தாலும் நான் சோறு போடத் தயாராக இருக்கின்றேன்" என்று இந்த*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவையில் அறிவித்து, அதன்படி எல்லோருக்கும் கொடுக்க உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறே வழங்கினோம். தகுதியின் அடிப்படையில்தான் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உதவித் தொகை வழங்கப்பட்டது. இறந்தவர்கள் 1,000 பேர்களின் பெயரில் நாங்கள் கொடுக்கவில்லை.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தபால் துறையைச் சார்ந்த அலுவலர் வீடு, வீடாகச் சென்று, அங்கு இருக்கக்கூடிய முதியவர்களிடத்தில் கையெழுத்தோ அல்லது பெருவிரல் ரேகையோ வாங்கிக் கொண்டுதான் பணத்தைக் கொடுத்துவிட்டு வருவார்கள். இப்பொழுது இருப்பதுபோல் ஏஜென்ட்டுகளை நியமித்து, மொத்தமாக கைரேகை வைத்து பணத்தை எடுத்துக்கொண்டு போகின்ற ஆட்சியைப்போல், எங்கள் ஆட்சி இல்லை. இந்த ஆட்சிக் காலத்தில்தான் அதிகமாக தவறுகள் நடக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும் உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். பிறகு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்

பிற்பகல் 2-55

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள், இரண்டாவது நாளில் opening batsman மாதிரி முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர்தான் இதை ஆரம்பித்தார்கள். அன்றைக்கு நாங்களும் புதியவர்கள். இப்போது 2 மாதங்கள் ஆகிவிட்டன. அன்றைக்குச் சொன்ன அதே கருத்தைத்தான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இங்கே ஆணித்தரமாக, புள்ளிவிவரங்களுடன் உங்களிடம் கொடுத்தார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்தில் தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதற்கான ஆதாரத்தை உங்களுக்குக் காலையிலேயே கொடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே பேசுகிறோம். அவர் "பொறுப்பேற்றுக் கொள்கிறேன்; பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று சொன்னால், அதற்கான ஆதாரத்தை உங்களிடம் கொடுக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் அன்றைக்குச் சொன்னது என்னவென்றால், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் : அன்றைக்குச் சட்டப் பேரவை ஆரம்பித்த முதல் நாள் அன்று, "தகுதியற்ற அத்தனை பேருக்கும் உதவித் தொகை கொடுத்தது தி.மு.க. அரசு" என்று நான் சொன்னதை, ஆதாரப்பூர்வமாக இன்றைக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் உங்கள்முன் நிரூபித்திருக்கிறார்கள். "அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்" என்று உறுப்பினர் சொல்கிறார். எனவே, அவர் பொறுப்பேற்று இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லட்டும். இது உண்மை; நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், தகுதியுள்ள அத்தனைபேருக்கும், கொடுத்திருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் தகுதியற்றவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். அவை நீக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு வேண்டுமானால், அவர் என்ன பொறுப்பேற்றுக்கொண்டாலும், நாங்களும் பொறுப்பேற்றுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி; மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது தொடர்பாக விவாதம் நடந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள். ஒன்றைமட்டும் நான் அவர்களிடத்திலே கேட்க விரும்புகின்றேன். அவர்கள் ஆட்சியில் 24 இலட்சம் பேர்களுக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். சேலம் தாலுகாவில் மட்டும் 1¼ இலட்சம் பேர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். விழுப்புரத்திலே 90,000 பேர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அவற்றோடு, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்த்து, 4 மாவட்டங்களில் மட்டும் அதிகமான நபர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். பெரம்பலூர், அரியலூர் போன்ற மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், வறட்சி மாவட்டங்கள் என்று இவர்கள் ஒவ்வொரு தடவையும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கு எவ்வளவு பேர்களுக்கு வழங்கினார்கள்? நீலகிரி மாவட்டத்தில் எவ்வளவு பேருக்கு வழங்கினார்கள்? இதைத்தான் நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், ஒரே தாலுகாவில் 1¼ இலட்சம் பேருக்கு வழங்கியதை நீங்கள் தகுதியில்லாதவர்களுக்கு

வழங்கியிருக்கின்றீர்கள். அதை ஆராய்ந்து, தகுதியான நபர்களுக்கு வழங்கப்படும் என்றுதான் ஆதாரத்தோடு சொன்னார். இதை அவர்கள் இல்லையென்று மறுக்கத் தயாரா என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் அல்லவா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 400 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாயாக உயர்த்தினார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 500 ரூபாய் என்று இருந்ததைத்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் 100 சதவிகித அளவிற்கு உயர்த்தி, அதாவது 1,000 ரூபாயாக அதை உயர்த்திக் கொடுத்தார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 24 இலட்சம் பேர்களுக்குக் கொடுத்தோம் என்று சொன்னார். 24 இலட்சம் என்ற எண்ணிக்கை எப்போது வந்தது? புள்ளிவிவரத்தை வைத்து விவாதம் செய்வோம். 16 இலட்சம் பயனாளிகள்தான் இருந்தார்கள். இவர்களுடைய ஆட்சியின் கடைசி ஆண்டிலே, வாக்கு வங்கியை மையமாக வைத்து, விதிமுறைகளைக் காற்றிலே பறக்கவிட்டு, வாரி வழங்கியதன் விளைவாகத்தான், தகுதியற்றவர்களுக்கு ஒரு மாவட்டத்திலே இந்த அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்று வழங்குவதற்கு அவர்கள் வேண்டுகோள் வைத்தால், இந்த அரசால் வழங்க முடியாது. தகுதியுள்ளவர்களுக்கு, விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் வழங்க இயலும். அதனால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து, பயனாளிகளுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று, சிந்தித்து அதைச் செய்திருக்கிறார். அவருடைய தலைவர் "மகன் இருந்தாலும், மகள் இருந்தாலும் கொடுக்கலாம்" என்று உத்தரவிட்டதாக உறுப்பினர் சொன்னார். விதிமுறைகளைத் தளர்த்தி, அரசாணையை அவர்கள் வெளியிட்டார்களா? ஆனால், அந்த விதிமுறைகளைத் தளர்த்தி அரசாணை வெளியிட்டது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மகன், மகள் இருந்தால்*

தரமுடியாது. "மகன், மகள் இருந்தாலும், வறுமைக்கோட்டிற்குக் கீழே அவர்கள் இருந்தால், ஆதரவற்றவர்களாக அவர்கள் இருந்தால், சமூகப் பாதுகாப்பாற்ற நிலையில் அவர்கள் இருந்தால், அவர்களுக்கும் வழங்கலாம்" என்று சொல்லி, "உற்றார், உறவினர், உலகத்தார் அனைவரும் கைவிட்டாலும், உங்கள் ஆயுள் முழுவதும் 1,000 ரூபாய் கொடுத்து உங்களை வாழவைப்பதற்கு நான் இருக்கிறேன்" என்று சொன்னவர் மாண்புமிகு புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இங்கு கேட்கிற, முன்வைக்கிற குற்றச்சாட்டு என்னவென்று சொன்னால், இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள், "தாருங்கள், தாருங்கள்" என்று சொல்கிறார்கள். அதைத் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது. ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஒரு மாவட்டத்திலே மட்டும் தகுதியற்றவர்களுக்கு ஏறத்தாழ 26,000 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல, ஒவ்வொரு தாலுகாவிலும், அதிலும் குறிப்பாக, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர் அமைச்சராக இருந்தபோது, அவருடைய தொகுதியிலே மட்டும், வாக்கு வங்கியை மையமாக வைத்து வாரி வழங்கினார்கள். தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டை இன்றைக்குச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, அன்னைத் தமிழகத்திலே இருக்கிற தகுதியுள்ள அனைவருக்கும் தந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குற்றச்சாட்டை அவர் மறுக்கமுடியுமா என்பதைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அவர் சுற்றி வளைத்து எல்லாம் பதில் சொல்ல வேண்டாம். மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டத்திலே தகுதியில்லாத இவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது கண்டறியப்பட்டு, அந்தப் பெயர்களெல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன. தகுதி உள்ளவர்கள் இருந்தால், அதை ஆய்வு செய்து, ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்கான நிதியும் உயர்ந்திருக்கிறது; பயனாளிகளுடைய எண்ணிக்கையும் உயர்ந்திருக்கிறது. ஆகவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்திலே தேவையானவர்களுக்கு, தேவையான நேரத்திலே வழங்கிக் கொண்டிருக்கிற அரசு, மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) காலையிலேயே சொல்லிவிட்டேன், (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, இன்று காலையிலேயே சொல்லிவிட்டேன். நீங்கள் வைத்திருப்பதை அமைச்சரிடம் கொடுங்கள். அமைச்சர் நடவடிக்கை எடுப்பார். அவர் வைத்திருக்கிற ஆதாரத்தை வைத்து, அவர் இப்போது பதில் சொல்லிவிட்டார். பதிலுக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்களுக்கும் நான் வாய்ப்பு கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) ஆகவே, இந்த விவாதம் அதோடு முடிந்தது. (குறுக்கீடு) இந்த விவாதத்தை மேற்கொண்டு நான் வளர்க்க விரும்பவில்லை. (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் காட்டிய ஆதாரம், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது நடந்த விவரங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவில் அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அப்போது நீங்கள் அரசுக் கொறடாவாக இருந்தீர்கள். (குறுக்கீடுகள்) அப்போது நீங்கள் வருவாய்த் துறை அமைச்சராக இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திரும்பவும் நான் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்றுதான் நான் வாய்ப்புக் கொடுத்தேன். அவருடைய விளக்கத்தைப் பதிவு செய்துவிட்டார். மேலும் இதை விவாதமாக ஆக்க நான் விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) இதற்கு மேலும் நான் வாய்ப்புத் தர முடியாது. நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. சுப்ரமணி, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி உரையை முடியுங்கள்.

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்). . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரும்பத் திரும்ப நான் வாய்ப்பு எப்படிக் கொடுப்பது? இது பெரிய விவாதமாகப் போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக, முழுமையாகப் பேசி முடித்தபிறகு, நான் வாய்ப்புத் தரவேண்டுமென்றுதான் அமைதியாக இருந்தேன். அப்பொழுதும் நீங்கள் பொறுமையாக இல்லை. இப்பொழுதும் நீங்கள் பொறுமையாக இல்லாமல் அனைவரும் எழுந்து நின்றுகொண்டு பேசினால், எப்படி? இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்கும்போதெல்லாம் நான் வாய்ப்புத் தர முடியாது. நீங்கள் கேட்கும் நேரத்திலெல்லாம் என்னால் வாய்ப்புத் தர முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்ட காரணத்தால், நான் திரு. இ. பெரியசாமி அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அவர் தன்னுடைய விளக்கத்தைப் பதிவு செய்துவிட்டார். பதிலுக்குப் பதில் சொல்வதற்கெல்லாம் என்னால் வாய்ப்புத் தர முடியாது. ஒருமுறைதான் வாய்ப்புத் தர முடியும். (குறுக்கீடுகள்) நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் தன்னுடைய விளக்கத்தை முழுவதுமாகப் பேசி முடித்த பின்னர்தான், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களையே மீண்டும் அழைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பிறகுதான் பதில் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு, நீங்கள் திரும்பத் திரும்ப பதில் சொல்ல வேண்டுமென்றால், நான் எப்படி அனுமதி தருவது? (குறுக்கீடு) நேரம் என்ன ஆகிறது? என்னால் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் தொடர்ந்து இதே பாணியைத்தான் ஒவ்வொரு நாளும் கடைபிடிக்கிறீர்கள். உங்களுடைய உறுப்பினர் கடைசியாகப் பேசுகிறவரை பேசிவிட்டு, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையை வழங்குகிற நேரத்தில் இதுபோன்று வேண்டுமென்றே அவையை நடத்தவிடாமல் செய்வது முறையில்லாத செயல். நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. நீங்கள் எவ்வளவு நேரம் இடையூறுகள் செய்தாலும், (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் அன்போடு சொல்கிறேன். நீங்கள் எவ்வளவு நேரம் இதுகுறித்து மீண்டும் பேசுவதற்கு*

வாய்ப்புக் கேட்டாலும், என்னால் வாய்ப்புத் தர இயலாது. பேச வாய்ப்பில்லை. நான் எடுத்த இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. (குறுக்கீடு) உங்களுடைய உறுப்பினர் திரு. சுப்ரமணி ஒரு நிமிடத்தில் பேசி முடிப்பதற்குத்தான் நான் வாய்ப்புத் தருவேன். மற்றவர்கள் பேச வாய்ப்பில்லை என்பதை நான் உங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

அனைவரும் அமைதியாக உட்கார்ந்து அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்களுடைய உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள், பார்க்கலாம். (குறுக்கீடுகள்) முதலில் உங்களுடைய உறுப்பினர்களை அவரவர் இடத்திற்குச் செல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், அவரவர் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆங்காங்கே நின்றுகொண்டு பேசுவதில் அர்த்தம் இல்லை. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அவரவர் இடத்திலிருந்து கையைத் தூக்கினாலே, நேரம் இருந்தால், பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவரவர் இடத்திலிருந்து எழுந்து நின்றுகூட பேச வாய்ப்புக் கேட்கலாம். அது முறை. ஆனால் இதுபோன்று சபாநாயகர் இருக்கையை நோக்கி ஓடி வருவது என்ன முறை? (குறுக்கீடு) இது மிகவும் தவறான முறை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உங்களுடைய உறுப்பினர்களைக் கண்டித்து வையுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 3-05

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நான் வைத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, எங்களுடைய உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனால், அவர் முழுமையாகப் பேசி முடிப்பதற்கு முன்பு, மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டார்கள். முழுமையான விளக்கத்தை எங்கள் உறுப்பினர் சொல்லி முடிப்பதற்கு முன்பாகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பேசி, அதற்குப்பிறகு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் பேசிய காரணத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு

உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் முழுமையாகப் பதில் சொன்ன பின்னர்தான், மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொன்னார்கள். இடையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்தபோதும்கூட, "நீங்கள் அமருங்கள்; அவர் பேசி முடித்த பின்னர், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன்" என்று சொல்லித்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்களையே உட்காரச் சொன்னேன். திரு. இ. பெரியசாமி, உட்கார்ந்ததற்குப் பின்னர்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்களை பதில் சொல்வதற்கு அழைத்தேன். இதுதான் நடந்தது.

திரு. மு.க. ஸ்டாலின்: மீண்டும் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய நிலையை நினைவுபடுத்தி, அவருடைய பெயரைச் சொல்லாமல் சொன்னாலும், அவர் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. "அதற்குத் தயாரா?" என்ற நிலையில், மாண்புமிகு அமைச்சர் பேசிய காரணத்தால்தான், மீண்டும் எங்கள் உறுப்பினர் பேசுவதற்கான வாய்ப்பை நான் உங்களிடத்திலே கேட்கிறேன். (குறுக்கீடு) அப்படித்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நீங்கள் அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். அதனால் தயவுகூர்ந்து, அவருக்கு நீங்கள் பேச வாய்ப்பளித்தால்தான், அது மரபாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பெரிய விவாதமாகப் போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: திரு. இ. பெரியசாமி அவர்கள் பேசுவதற்கு நீங்கள் ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இவ்வளவு வற்புறுத்திக் கேட்பதாலும், திரு. இ. பெரியசாமியைக் குறிப்பிட்டுப் பேசிய காரணத்தாலும், அவர் பேசுவதற்கு நான் ஒரு நிமிடம் அனுமதி அளிக்கிறேன். ஆனால், ஒரு நீண்ட விவாதமாக அவர் பேசினால் நான் அதற்குமேல் அனுமதி மறுக்க வேண்டியிருக்கும். திரு. இ. பெரியசாமி, ஒரே நிமிடத்தில் என்ன விளக்கமோ, அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய பின்னர், அது சரியான தகவல் இல்லையென்று சொன்னால்,

மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதற்கும் நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதற்கும் வாய்ப்புத் தருகிறேன். திரு. இ. பெரியசாமி, நீங்கள் பேசுங்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு மீண்டும் பதில் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றி. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாக ஒருசில விஷயங்களைக் குறிப்பிட்டு, சில விளக்கங்களைக் கேட்டார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு முழுவதும் நாங்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், முதியோர் உதவித் தொகையை முழுமையாக வழங்கினோம். மேலும், தகுதியின் அடிப்படையில்தான் அந்த உதவித் தொகை முழுமையாக வழங்கப்பட்டது. ஆனால், இறந்தவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுத்தான் நீங்கள் பேச வேண்டும்.

திரு. இ. பெரியசாமி: நான் உங்களிடம் உள்ள பட்டியலைப் படிக்கவில்லையே? நாங்கள் தகுதியானவர்களுக்குக் கொடுத்தபின்னர், ஒருவேளை அந்த உதவித் தொகையை வாங்கியதற்கு பின்னர், அவர்கள் இறந்திருக்கலாம். நாங்கள் அந்தப் பட்டியலைப் பார்த்தால்தான் தெரியும். நீங்கள் ஒரு பட்டியலைக் கையில் வைத்திருக்கிறீர்கள், அதுபற்றி எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, பிரச்சினை என்னவென்றால், காலையில் உங்கள் கட்சி உறுப்பினர்கள் திரு. சக்கரபாணி, திரு. பிச்சாண்டி ஆகியோர் ஒரு list-ஐக் கொடுத்தார்கள். அதைப் பார்த்து ஆய்வு செய்தால்தான் என்னவென்று தெரியும். அதேபோல், மாண்புமிகு அமைச்சரும் பட்டியலைக் கொடுத்தார். நீங்கள் கொடுத்துள்ளவைமீது, தக்க நடவடிக்கை எடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அந்தப் பிரச்சினை

அதோடு முடிந்துவிட்டது. இப்போது நீங்கள் விளக்கத்தைச் சொல்லுங்கள்.

திரு. இ. பெரியசாமி: எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரே மாவட்டத்தில், மந்திரி இருக்கும் இடத்தில் மட்டும் அதிகமானவர்களுக்கு முதியோர் உதவித் தொகை கொடுக்கவில்லை. ரேண்டமாக, தமிழ்நாட்டில், கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்து, சென்னை வரைக்கும் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கொடுத்தோம். அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், "முதியோர்களுக்கெல்லாம் கண்டிப்பாக உதவித் தொகை கொடுக்க வேண்டும்" என்று சொன்னார். அந்த ஒரே காரணத்திற்காக, சட்டமன்றத்தில் அதை அறிவித்து, என்னைச் சுற்றுப்பயணம் செய்யச் சொல்லி, அதைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னதால், அந்தளவுக்குக் கொடுத்தோம். ஆனால், கொடுத்ததை முழுமையாகத் தகுதியின் அடிப்படையில்தான் கொடுத்தோம். ஆங்காங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள்தான் அதை வழங்கியிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது பார்த்தீர்களென்றால், 2013-ல் விண்ணப்பித்த பயனாளிகளுக்கே நீங்கள் இன்னும் பணம் கொடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. 2013 ஆம் ஆண்டு நீங்கள் கொடுத்த ஆணைக்கு, இன்னும் 2016 வரைக்கும் பணம் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி, மேற்கொண்டு குற்றச்சாட்டையெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. நீங்கள் கொடுத்ததை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்கள். உங்களைக் குறிப்பிட்டுச் சொன்னதால், நீங்கள் விளக்கத்தை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. இ. பெரியசாமி: எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தகுதியற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், எங்களுடைய ஆட்சியில் தகுதியுள்ளவர்களுக்குத்தான் முதியோர் உதவித் தொகை முழுமையாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட பட்டா கொடுப்பதாக இருந்தாலும், எந்தவொரு திட்டத்தின் பயனைக் கொடுப்பதாக இருந்தாலும், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லது தாலுகா அலுவலகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள்தான் அதை

வழங்குகின்றார்கள். அவர்கள்தான் அதற்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள்.

பிற்பகல் 3-10

குறிப்பாக, அரசாங்கத்தில் அங்கொன்றும், இங்கொன்றும், இப்போது சொன்னமாதிரி—2013-ல் ஆணை பெற்ற நபர்களுக்கே இதுவரை பணம் வழங்கப்படவில்லை என்பது யாருடைய கவனத்திற்கும் வரவில்லையே?

இன்றைக்குதானே எங்கள் உறுப்பினர்கள் மொத்தமாக அந்தப் பட்டியலைக் கொண்டுவந்து உங்களிடம் கொடுத்தார்கள். நீங்கள் அதைச் சொல்கிறீர்கள். நாங்கள் என்ன சொல்கிறோம்? 60 வயதான, தகுதியுள்ள எல்லோருக்கும் நாங்கள் முதியோர் ஓய்வூதியம் கொடுத்தோம். இப்பொழுது அந்தப் பட்டியலை நீங்கள் ஆய்வு செய்யுங்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், “அதை ஆய்வு செய்து, வழங்கச் சொல்கிறேன்” என்று சொன்னாரே! “ஆய்வு செய்து, வழங்கச் சொல்கிறேன்” என்று இதே அவையிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆய்வு செய்யச் சொல்லுங்கள்; தகுதியிருந்தால் கொடுங்கள். நாங்கள் எங்களுக்காகக் கேட்கவில்லை. நாங்கள் மக்களுக்குத்தான் கொடுத்தோம்; நாங்கள் எங்கள் கட்சிக்காரர்களுக்காகக் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, போதும். உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியம் கொடுத்ததற்குப் பின்னாலே, அவர்கள் இறந்திருக்கலாம் என்று அவர்கள் முதலிலே சொன்னார்கள். அந்த எண்ணிக்கையை நான் சொல்லவில்லை. முதியோர் ஓய்வூதியம் பெற்று வந்த பயனாளிகள் இறந்துபோனால், அந்த உதவித் தொகை உடனடியாக நிறுத்தப்படுகிறது. அதை நான் சொல்லவில்லை. இறந்தவர்களின் பெயரிலே முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆங்காங்கு உள்ள வட்டாட்சியர்கள் அதை வழங்குவதாகச் சொன்னார்கள். முதியோர் ஓய்வூதியம் வழங்குவதற்காக, வட்டாட்சியர் மட்டுமல்ல; இதற்கென்று Deputy Collector (SSS) என்று ஒரு துணை ஆட்சியரே நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் ஆய்வு செய்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும்

அது நன்றாகத் தெரியும். ஆனால், அது சரியாகக் கொடுக்கப்படுகிறதா? தகுதியான பயனாளிகளுக்குக் கொடுக்கப்படுகிறதா என்பதைத்தான் ஓர் அரசு, ஓர் அமைச்சர் பார்க்க வேண்டும்; அதை முதலமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும். ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நீங்கள் சரியான நபர்களுக்கு, தகுதியான நபர்களுக்குத் தரவில்லை. அதை அமைச்சராக இருந்த நீங்களும் பார்த்தீர்களா, பார்க்கவில்லையா என்று தெரியவில்லை; முதலமைச்சர் கண்காணித்தாரா என்றும் தெரியவில்லை. ஆகவே, தகுதியில்லாத இத்தனை நபர்களுக்குச் சென்றிருக்கிறது என்றுதான் சொல்கிறேன். அந்தக் குற்றச்சாட்டைத்தான் நான் இங்கே வைக்கிறேன். அதற்கான ஆதாரத்தினையும் சமர்ப்பித்திருக்கிறேன்.

முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்கு ஆணை பெற்றவர்களுக்குப் பணம் வரவில்லை என்றும் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. (குறுக்கீடுகள்) அம்மா திட்டம் குறித்து அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அம்மா திட்ட முகாமிலே, காலை 10 மணிக்கு மனு கொடுக்கப்பட்டால், அந்த மனுவினை ஆய்வு செய்து, மாலை 5 மணிக்கு உத்தரவு வழங்கப்படுகிறது. உத்தரவு வழங்கப்படுவதற்கு முன்பாக ஆய்வு செய்யப்படுகிறது. அதற்கு சில நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன; சமர்ப்பிக்கப்படுகிற ஆவணங்கள் முழுமையாகப் பரிசீலனை செய்யப்படுகின்றன.

அம்மா திட்டத்தின்மூலம் பெற்ற 50 இலட்சம் மனுக்களிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரே ஒரு மனுவை மட்டும் இங்கே கொண்டு வந்து காட்டுகிறார். நான் அவர்கள் ஆட்சியில் நடந்திருக்கிற முறைகேடுகளை இங்கே சொன்னேன். ஒரு வட்டத்திலே ஆய்வு செய்ததில், இரண்டு bundle-களை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். ஒட்டுமொத்தமாக 234 தொகுதிகளிலும், 10,000-க்கும் மேற்பட்ட தகுதியில்லாதவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்கியிருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து, சீர்படுத்துவதற்கான பணிகள் இப்பொழுது தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அந்த வகையில், தகுதியுள்ள ஒரு பயனாளிகூட விடுபட்டுவிடக்கூடாது என்று எங்கள் இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம் வழங்க வேண்டும்

என்பதற்காகத்தான் விதியையும் தளர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்; நிதியும் வாரிக் கொடுத்திருக்கிறார்கள்; எண்ணிக்கையையும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு உச்சவரம்பு நிர்ணயித்தபோதுகூட, அன்னைத் தமிழகத்திலே ஏழை எளியவர்களைக் காப்பாற்றுவதற்கு எந்த உச்சவரம்பும் கிடையாது *(குறுக்கீடுகள்)* என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது என்ன முறை? உங்களுடைய உறுப்பினர் திரு. இ. பெரியசாமி பேசும்போது, எல்லோரும் அமைதியாகக் கேட்டார்கள் அல்லவா! மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, நீங்கள் அமைதியாகக் கேட்க வேண்டும் அல்லவா! பின்னாலேயிருந்து ஊளையிடுகிறார்களே, என்ன முறை இது? சட்டமன்றத்திற்கு வந்து இதுபோன்று ஊளையிடுவது முறையா? பின்னாலே இருந்துகொண்டு ஊளையிடுகிறார்கள். (குறுக்கீடுகள்) இது சரியா? இது என்ன முறை? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு வருடங்களாக, இவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், * தக்க பதிலைச் சொன்னார்கள். இவர்களுக்கு எத்தனை தடவைதான் விளக்கம் சொல்வது? *(குறுக்கீடுகள்)* 2006-2011-ல் அமைச்சராக இருந்தவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் நன்றாகவே தெரியும். 2011-ல் தேர்தல் வந்தபொழுது, முதியோர் ஓய்வூதியம் வழங்குவதில் என்ன முறையை, எப்படி இவர்கள் கையாண்டார்கள் என்பது இவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஒவ்வொரு தொகுதியிலும், எப்படி முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டது என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும், திரும்பத் திரும்ப அதுகுறித்து சட்டமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் பேசத் தொடங்கி ஒன்றேகால் மணி நேரம் ஆகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி அவர்களை வேறு பொருள் குறித்துப் பேச அழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்லும்போது, பின்னாலேயிருந்து சபைக்குத் தேவையில்லாத வகையில் சத்தம் போடுவது, ஊளையிடுவது நல்ல முறை அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் செய்கிற வேலையா அது? பின்னாலே இருந்து ஊளையிடுகிறார்கள். இது என்ன முறை? (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். திரு. ஆஸ்டின், நீங்கள் முதலில் உட்காருங்கள். நீங்கள் இதுபோன்று எதற்கெடுத்தாலும் எழுந்திருப்பது முறையேயில்லை. (குறுக்கீடுகள்) நான் எல்லோருக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்காகத்தான் இங்கே வருகிறீர்கள்; பின்னாலே இருந்துகொண்டு ஊளையிடுவதற்கு அல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, சத்தம் உங்கள் பக்கத்திலிருந்துதான் வந்தது. (குறுக்கீடுகள்) ஊளையிடுகிற சத்தம் தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கும் பக்கத்திலிருந்துதான் வந்தது. அதனால், தி.மு.க. உறுப்பினர்களைத்தான் நான் கண்டிக்கிறேன். (குறுக்கீடுகள்) அப்படி சத்தம் வந்தால், நான் அவர்களையும் கண்டிக்கிறேன். அப்படி சத்தம் போட்டால், நான் கண்டிப்பாக அவர்களையும் கண்டிப்பேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி, நேரம் அதிகமாகிவிட்டது. ஒரே நிமிடத்தில் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டேன்.

பிற்பகல் 3-15

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நத்தம் புறம்போக்கிலே குடியிருப்பவர்களுக்கும், நத்தம் புறம்போக்கிலே காலி மனை வைத்திருப்பவர்களுக்கும், நகர்ப்புறத்திலிருந்து 8 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளவர்களுக்குத்தான் பட்டா வழங்க வேண்டும் என்று இருக்கிற அந்த norms-ஐத் தளர்த்தி, நகர்ப்புறத்திலிருந்து 3 கிலோ மீட்டருக்கு அப்பால், நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கலாம் என்ற ஒரு நல்ல முறையை அரசு பின்பற்றவேண்டும் என்று நான் கோரிக்கையாக வைக்கின்றேன். கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் விவரங்கள் அடங்கல் கணக்கில் ஏற்றப்படாத நிலை

உள்ளது. அவற்றைக் கணக்கிலே ஏற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிகவும் சந்தோஷம், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஒரு மணி நேரம் 20 நிமிடம் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் போதுமான அளவிற்குப் பேசியிருக்கிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் எல்லோரும் அவருக்குப் பரிந்துரை செய்யவேண்டாம். நானே அவருக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் யாரும் அவருக்குப் பரிந்துரை செய்யவேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையை நீங்கள் அமைதியாகக் கேளுங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுளுக்கு இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய்கின்றபோது, ஒவ்வோர் இலைக்கும் ஒவ்வொருவிதமான பலன் கிட்டும் என்பார்கள். உதாரணத்திற்கு, ‘அகத்தி’ இலை கொண்டு அர்ச்சனை செய்தால், துயரங்கள் களையும் என்பார்கள். ‘அரச’ இலை கொண்டு அர்ச்சனை செய்தால், எதிரிகள் ஒழிந்துபோவார்கள் என்பார்கள். ‘வெள்ளெருக்கு’ இலை கொண்டு அர்ச்சனை செய்தால், சகல பாக்கியங்களும் கிட்டும் என்பார்கள். ‘வில்வ’ இலை கொண்டு அர்ச்சனை செய்தால், சௌபாக்கியம் கிட்டும் என்பார்கள். ‘அரளி’ இலை கொண்டு அர்ச்சனை செய்தால், அன்பு ஓங்கும் என்பார்கள். இதுபோல பல நம்பிக்கைகள் ‘இலை’ மேல் பக்தர்களுக்கு உண்டு. நடந்து முடிந்த தேர்தலிலே ‘இரட்டை இலை’ கொண்டு அர்ச்சித்ததால், எல்லா வளங்களும் ஒரு சேரக் கிட்டும் என்பதை தமிழக மக்கள் மிகத் தெளிவாக அறிந்ததால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுக் காலத்திற்குப்பிறகு, ஓர் அரசியல் புரட்சியை அன்னைத் தமிழகத்தில் நிகழ்த்தி, ஆறாம் முறையாக மட்டுமல்ல; இனி ஆண்டாண்டுக் காலத்திற்கும் அன்னைத் தமிழகத்தில் நம் மாண்புமிகு அம்மாவின் ஆட்சிதான் என்பதை உளமார உறுதி செய்திருக்கிறது ஒப்பில்லாத் தமிழ் இனம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுள் தந்த பாக்கியமாய், கருணை தந்த காப்பியமாய், உருகுகிற மெழுகாய், உழைக்கின்ற தியாகமாய், துடிக்கின்ற ஏழைகளின் விழிநீர் துடைக்கவே, கண்ணிமை சோராது உழைக்கின்ற கருணை ஓவியமாய்,

'கரிகாலன்' கல்லணைக்கு காவேரியையும், 'கர்னல் பென்னிக் குவிக்' கனவுக்கு முல்லைப் பெரியாறையும், போராடி ஜெயித்து வந்த கம்பீரக் காவியமாய், தங்க கவசமாய், எதுவரினும் எதிர்கொள்ளும் இமயத்து வீரமாய், எரிமலைச் சீற்றங்களையும் அகல் விளக்காய் மாற்றுகிற (மேசையைத் தட்டும் ஒலி) விவேகத்தின் விலாசமாய், ஊன் உறக்கம் மறந்து உழைக்கின்ற எங்கள் 'அம்மா' எனும் அன்புச் சொல் காப்பியமே! உலகத் தமிழர்கள் உளமாரக் கொண்டாடும் ஒப்பில்லா நேசமே! ஒன்றரைக் கோடி தொண்டர்களுக்கு உயிரான சுவாசமே! இருபத்தோராம் நூற்றாண்டு, இமை விரித்து வியந்து எழுகின்ற இணையில்லா இதிகாசமே! "என் வாழ்வு எல்லாமும் மக்களுக்கே" என்று எத்திசையும் புகழ் மணக்க எங்கும் ஒளி வீசும் எங்கள் தாய் எனும் தமிழ் தேசமே! ஆன்றோர்களும், சான்றோர்களும் அமர்ந்து மக்களுக்குச் சட்டங்களும், திட்டங்களும் வடித்திடும் சரித்திரப் புகழ்மிக்க இப்பேரவையில் பாதம் பதிக்கும் பாக்கியத்தை எனக்கும் வழங்கிய எங்கள் குலச் சாமியே.

மதுரையில் கிளைக் கழகச் செயலாளராக, சாதாரண கடைக்கோடி தொண்டனாகக் கழகப் பணியாற்றி வந்த என் தந்தையுடன் இணைந்து, சிறு வயதிலேயே கழகப் பணியைத் தொடங்கி, தொடர்ந்து கழகப் பணி ஆற்றிவந்த என்னை, முதன்முதலாக மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவரணி செயலாளராக்கி, தொடர்ந்து மதுரை மாநகர் மாவட்ட மாணவரணித் தலைவராக, மதுரை சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குப் பொறுப்பாளராக, தொடர்ந்து மதுரை மாநகர் மாவட்ட மாணவரணி செயலாளராக, கழக மாணவரணி செயலாளராக, மதுரை, இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குப் பொறுப்பாளராக, மதுரை மாநகர்/புறநகர் மாவட்ட இளைஞர்/இளம்பெண்கள் பாசறை அமைப்பின் பொறுப்பாளராக, அதனைத் தொடர்ந்து மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டப் பொறுப்பாளராக, தொடர்ந்து சாத்தூர் சட்டமன்ற உறுப்பினராக, தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சராக, கழக எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராக, தொடர்ந்து விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறையின் அமைச்சராக, நான் கனவிலும் எதிர்பாராதவகையிலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேரவையின் செயலாளராக, (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் பணிக்குப் பொறுப்பாளராக, வருவாய்த் துறை அமைச்சராக, தற்போது மதுரை திருமங்கலம்

சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்ற வரலாற்று வாய்ப்பினை வழங்கி, தங்களின் மாபெரும் மக்கள் செல்வாக்கால் என்னை வெற்றி பெறச் செய்து, மீண்டும் வருவாய்த் துறை அமைச்சராக, மக்கள் பணியாற்றுகின்ற வரலாற்று வாய்ப்பினைத் தாயுள்ளத்தோடு வழங்கிய தாயே; அம்மா! தங்களின் புனித தலைமையின்கீழ் கழகப் பணியும், மக்கள் பணியும் ஆற்றி வருகின்ற ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களில், கடைக்கோடி கழகத் தொண்டனான எனக்கு தொடர்ந்து கழகப் பணியும், மக்கள் பணியும் ஆற்றுவதற்கு கருணை உள்ளத்தோடு அருளாசி வழங்கிய தமிழர் குலம் காத்து நிற்கும் தமிழர் குலச் சாமியே, தாயே; அம்மா! தங்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை நானும், என் குடும்பத்தாரும் விசுவாசத்தோடு காணிக்கையாக்கி, வணங்கி, என் பதிலுரையை தங்களின் மேலான நல்லாசியோடு துவங்குகின்றேன், தாயே!

பிற்பகல் 3-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொகலாயர்கள் ஆட்சிக் காலம் தொட்டு, ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலம் தொடர்ந்து இன்றுவரையில், அரசின் முதன்மையான துறையாக விளங்குகின்ற துறை, வருவாய்த் துறையாகும். அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும், ஏழை எளிய மக்களின் துயர்களைக் களைந்து, அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற துறைதான் வருவாய்த் துறை என்று வருவாய்த் துறைக்கு வரலாற்று வடிவம் தந்தவர் நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் ஐந்து கிளைகளைக் கொண்டு இயங்குகிறது. அவை, வருவாய் நிருவாக ஆணையரகம், நில நிருவாக ஆணையரகம், நில சீர்திருத்த ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் திட்ட ஆணையரகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையரகம் ஆகும்.

வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும், திறமையிலும் வெறும் 25 சதவீதம் மட்டுமே தனது வேலைகளுக்காகச் செலவழிக்கின்றான். அதேபோல், தங்களது சக்தியையும், திறமையையும் 50 சதவீதத்திற்குமேல்

செலவழிப்பவர்களை இந்த உலகம் பாராட்டுகிறது. அதேபோல், 100 சதவீத சக்தியையும், திறமையையும் அர்ப்பணிப்பவர்களை இவ்வுலகம் தலைவணங்கிப் போற்றுகிறது என்று ஆண்ட்ரு கார்னெஜி கூறியிருப்பதற்கு இலக்கணமாய், இன்றைக்கு இவ்வுலகத்திலே மக்களின் நலன் காத்திட, மக்களை வாழ வைத்திட, தன்னுடைய சக்தியையும், திறமையையும் 100 சதவீதம் முழுமையாக அர்ப்பணித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தவ வாழ்வு வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களை இன்றைக்கு இவ்வுலகமே தலைவணங்கி போற்றி வணங்கி வருவதை நாம் மகிழ்ச்சியோடு காண்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் நிருவாகத் துறையில், கிராம உதவியாளர் முதல் துணை ஆட்சியர் பணி நிலை வரை 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளனர். வீரத்தின் விளைநிலம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலினால், வருவாய்த் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் 1,127 உதவியாளர்களும், 1,351 இளநிலை உதவியாளர்களும், 628 தட்டச்சர்களும், 44 சுருக்கெழுத்துத் தட்டச்சர்களும், 9,438 கிராம நிருவாக அலுவலர்களும், 5,535 கிராம உதவியாளர்களும், மொத்தம் 18,123 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதோடு, காலிப் பணியிடங்களை நிரப்பிட தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுகளில் 14,512 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன என்பதை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ஆற்றலின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான புனித அரசுதான் பணியாளர்களின் நலன் காக்கும் ஒரே அரசு என்பதனை மகிழ்ச்சியோடு இந்த அவையிலே நான் முன்வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலகக் கட்டடங்கள். ஆற்றலின் ஊற்று நம் அம்மாவின் ஆட்சிக் காலத்தில்தான், வருவாய்த் துறை வலிமை வாய்ந்த ஒரு துறையாக இன்றைக்கு வடிவெடுத்துள்ளது. வருவாயைப் பெருக்குவது மட்டும் இலக்கென்று கொள்ளாமல், வருவாய்த் துறைக்கான கட்டமைப்புகளை உருவாக்குவதும், மக்கள் தொகையின் எண்ணிக்கையிலும், சமூக பூகோள அமைப்புகளின் அடிப்படையிலும், புதிய, புதிய கட்டடங்களை உருவாக்கித் தந்து கொண்டே இருப்பது நம் சாதனைத் தாயின் ஆட்சியில் மட்டும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகத்தில் வருவாய்த் துறையின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனால், பணிச்சூழலை மேம்படுத்தும்பொருட்டும், பொது மக்கள் எளிதாக அணுகிட உதவவும், வருவாய்த் துறைக்குத் தேவைப்படும் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகள் முன்னெப்போதும் இல்லாத அளவிலே, முன்னுரிமை அடிப்படையில், வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் உருவாக்கித் தந்ததன் அடிப்படையில்தான், இதுவரை வருவாய்த் துறையில் வரலாறு காணாதவகையில் கடந்த 5 ஆண்டுகளில், 178.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 7 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 8.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 136.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 64 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 54 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புடன்கூடிய அலுவலகக் கட்டடங்களும், 14.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 231 கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்களும், 11.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 இதர கட்டடங்களும், மேலும் மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம நிருவாக அலுவலகங்களைப் புனரமைத்திட முடிவு செய்து, இரண்டு கட்டங்களாக 8,000 கிராம நிருவாக அலுவலகங்களைப் புனரமைத்திட, 40 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருவதோடு, வருவாய்த் துறை வரலாற்றில் முன்னெப்போதும் காணாதவகையில், கடந்த 5 ஆண்டுகளில், 356 கோடி ரூபாயில் 377 கட்டடங்களை உருவாக்கித்தந்து, வருவாய்த் துறைக்கு இமாலய வளர்ச்சியைப் பெற்றுத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியில், மொத்தம் 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூ.123 கோடியில், 129 கட்டடங்கள் மட்டுமே கட்டுவதற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, வருவாய்த் துறை வளர்ச்சி கண்டிருப்பது, எப்போது என்பது நமக்குத் தெளிவாகிறது. ஆகவே, 5 ஆண்டுகளில் 356 கோடியில் 377 கட்டடங்களை உருவாக்கித் தந்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான், வருவாய்த் துறை வரலாறு காணாத வளர்ச்சியைக் கண்டிருக்கிறது

என்பதை நான் இந்த அவையில் முன்வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதராய்ப் பிறப்பது பெரிதல்ல, பிறப்பிலே ஒரு சிறப்பு வேண்டும்; அப்படிப் பிறந்ததால் வளர்வது பெரிதல்ல; நல்ல ஞானத்தோடு வளர வேண்டும். அப்படி வளர்ந்ததால் வாழ்வது பெரிதல்ல; நல்லவற்றிற்கு வழிகாட்டியாக வாழ வேண்டும். அப்படி வாழ்ந்து சாதித்தல் பெரிதல்ல; சாதனைகள் சரித்திரத்தில் இடம்பெற வேண்டும். அந்தவகையில், பிறப்பிலேயே சரித்திர சாதனைக்குச் சொந்தக்காரர் இந்த வையகத்தில் ஒருவர் உண்டு என்று சொன்னால், அவர்தான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மக்கள் கொடுக்கின்ற மனுவிலே உள்ள மை காய்வதற்குள், மக்களின் குறைகளைத் தீர்த்திட இந்தியாவிலேயே இருக்கின்ற ஒரே திட்டம், "அம்மா திட்டம்" என்பதை இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பென்சிலால் எழுதியதை அழிக்க அழிப்பான் இருக்கிறது; பேனாவால் எழுதியதை அழிக்கவும், அழிப்பான் இருக்கிறது; தட்டச்சு எழுத்தை அழிக்கவும், அழிப்பான் இருக்கிறது. ஆனால், நம் தலைமேல் பிரம்மா எழுதிய விதியை அழிக்க என்ன இருக்கிறது என்று கவலைப்பட்டவர்களுக்கு, காலத்தின் கொடையாக நமக்குக் கிடைத்திட்ட கருணையின் வடிவமாய், நம் அம்மா தந்திட்ட பொன்னான கையெழுத்து இருக்கிறது என்று, இன்றைக்கு மக்களெல்லாம் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுகிற அரசன், ஆண்டவனுக்கு நிகராக அமைந்துவிட்டால், அந்த மண்ணில் வாழுகிற மக்களுக்கு ஆயுளெல்லாம் வசந்தம்தான். ஆகவே, இன்றைக்கு ஆண்டவனுக்கு நிகராக நமக்குக் கிடைத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் முன்னெப்போதும் இல்லாதவகையில், அனைவருக்கும்

இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் மனமெல்லாம் ஏழைகளின் நினைப்பு; அதனால், அம்மா அவர்கள் இன்று உலகத்தின் வியப்பு; இதுவே தமிழகத்தின் இன்றைய சிறப்பு. பெயர்சொல்லி, ஊர்சொல்லி, நாளெல்லாம் தொலைதூரம் மக்கள் அலைந்து திரியாமல், வீட்டிற்கு அருகிலேயே அனைத்துச் சேவைகளையும் விரைவாகத் தந்திடவே புதிய வட்டங்களையும், வருவாய்க் கோட்டங்களையும் வசதியாய் உருவாக்கித் தந்திட்டார் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவைகளை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன்மாதிரியான நடவடிக்கைகளை 'ஆற்றலின் ஊற்று' மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் எடுத்துவருவதன் அடிப்படையில்தான், வரலாறு காணாத எண்ணிக்கையில் வருவாய்த் துறையில் புதிய வட்டங்கள் மற்றும் புதிய கோட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

வருவாய்த் துறையின்மூலம், தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ல் அளவுகோல் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அரசு அலுவலகங்கள் மக்களுக்கு வெகு அருகில் இருக்கும்போதுதான், திட்டங்கள் அனைத்தும் மக்களை எளிதில் விரைவாகச் சென்றடைந்திடும் என்பதில் உறுதியாக இருக்கின்ற கருணையின் வடிவம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் வருவாய்த் துறையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், 65 புதிய வட்டங்களையும், 9 புதிய கோட்டங்களையும் உருவாக்கித் தந்து, வருவாய்த் துறையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கிவைத்து, நிருவாகப் புரட்சியை நிகழ்த்திக்காட்டி இருக்கின்ற ஒரே முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தகால தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் வெறும் 14 வருவாய் வட்டங்களும், மூன்று வருவாய்க் கோட்டங்களும் மட்டுமே உருவாக்கிட ஆணையிட்டார்கள் என்ற

பட்டியலை நாம் இங்கு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இதுவரை காணாத வகையில், முன்னெப்போதும் இல்லாதவகையில், சரித்திர சாதனையாக 65 புதிய வட்டங்களையும், 9 கோட்டங்களையும் உருவாக்கித் தந்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான புனித அரசுதான் என்றைக்கும் மக்கள் நலன் காக்கின்ற அரசு என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவையில் முன்வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முகத்திற்கும் ஒரு ராசி உண்டு. சிலர் தொட்டால் மட்டுமே கூடாத காரியங்களும் கைகூடும். அவ்வாறுதான் நம் இதய தெய்வம் 'அம்மா' என்னும் முகராசியை ஏறெடுத்துப்பார்த்தாலே, நல்லவைகளுக்கு வழி ஏற்படும். நயவஞ்சகத்திற்கு கிலி ஏற்படும். கருணைக்கே இலக்கணமாக 'அரசு தொட்டில்' அமைத்த அம்மா அவர்களை, அம்மாவின் இல்லத்திற்கே வருகை தந்து வாழ்த்திப்போன 'அன்னை தெரசா' இன்றைக்கு உலகத்தின் உயரிய பட்டமான 'புனிதர்' பட்டத்தை தனக்கே உரியவராக்கியிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 3-30

அதேபோல, புனித ஜார்ஜ் கோட்டைக்குத் தேடி வந்து, கரம் குலுக்கி, உலக அரசியலின் கருத்துகளைப் பகிர்ந்துபோன அன்றைய அமெரிக்காவின் வெளி விவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அவர்கள், இதோ நாளை உலகின் வல்லரசு தேசத்தின் அதிபராகப் போகிறார் என்கிற நம்பிக்கை. இதுதான் எங்கள் அம்மா அவர்களின் முகராசி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலேதான் காலத்திலே 'கை கூடாது கிடந்த கூடங்குளம் அணு உலைத் திட்டம்', நம் மகராசி தாயால், கூடங்குளம் அது 'கைகூடும் குளமாக' இன்றைக்கு வெற்றி கண்டிருக்கிறது. அச்சமுற்றுக் கிடந்த கூடங்குளம் பகுதி மக்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவுக் குரல், நம்பிக்கை கீற்றுகளை விதைத்திருக்கிறது. 500 கோடி ரூபாய்க்கும் மேலாக வளர்ச்சித் திட்டங்களை அப்பகுதி மக்களுக்காக அள்ளித் தந்த நம் வள்ளல் மன தாயின் அன்பால், அரவணைப்பால் இன்று கூடங்குளம் அணு உலையின் முதல் அலகு வெற்றிகரமாக இந்த நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும்

எப்படி? சோவியத் பூமியிலிருந்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அவர்களையும், தலைநகர் டெல்லியிலிருந்து நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி அவர்களையும் ஓர் அலையிலே கொண்டு வந்து, அன்னைத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அணு உலையை நாட்டிற்கு அர்ப்பணிக்கும் நல்வாய்ப்பை பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே இந்த அவைக்குப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் பொது மக்களுக்கு விரைவில் சேவை அளிக்கும் வகையில், அன்பின் வடிவமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு மேற்கொண்டு வருகிற சரித்திர சாதனைத் திட்டங்களில் ஒன்றாக, மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருவாய்த் துறையின் சான்றுகள் பெற, பொது இ-சேவை மையங்கள் மூலமாக எவ்விடத்திலும் எளிதில் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து வருமானச் சான்று, பிறப்பிடச் சான்று, சாதிச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று மற்றும் ஆதரவற்ற மகளிருக்கான சான்று கோரி பெறப்படும் மனுக்கள் மின் ஆளுமைத் திட்டத்தின்மூலம் பெறப்பட்டு, உரிய அலுவலர்களால் விரைந்து பரிசீலிக்கப்பட்டு, டிஜிட்டல் முறையில் சான்றுகள் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் மொத்தமாக, சுமார் 74,50,176 சான்றுகள் வழங்கிய வரலாறு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனை வரலாறு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவுவதிலே இருவகை உண்டு. ஒன்று; நம்மை நாடி வருபவர்களுக்கு உதவுவது. மற்றொன்று; தேடிச் சென்று தேவையானவர்களுக்கு உதவுவது. இதில் இரண்டாவது வகையாக, இரக்கத்தின் வடிவமாக, கருணையின் பிறப்பிடமாக இருப்பது நம் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைமிக்க அரசுதான். 'அரசைத் தேடி மக்கள்' என்கிற காலத்தை மாற்றி, 'மக்களைத் தேடி அரசு' என்ற பொற்காலத்தைப் படைத்திருப்பது நம் பொன்மனத் தாயினுடைய புனித அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்று தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டுவரும் மகத்தான 'அம்மா' திட்டங்கள் மூலமாக பட்டா, சிட்டா, சாதி, வருமானச் சான்றிதழ்கள் அனைத்தும் மக்களின் வசிப்பிடங்களுக்கே தேடிச் சென்று வழங்கப்படுகின்றன என்றால், இதுதான் பொற்கால அரசு என்பதற்கான இலக்கணம். இவை மக்களுக்கு மட்டுமல்ல; இந்த மகத்தான சேவைகளும், இந்த மகத்தான பரிவும், மாணவச் செல்வங்களுக்கும் கிடைப்பதற்கு ஏதுவாக, அவர்கள் பயில்கின்ற பள்ளிகளிலேயே சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் வட்டாட்சியர் அலுவலகங்களிலே சீருடை அணிந்து மாணவர்கள், பெற்றோர்களுடன் சான்றிதழ்களுக்காக தவம் கிடந்த பழைய காலம் துடைத்தெறியப்பட்டு, பள்ளிகளிலேயே அவர்கள் கைகளில் சான்றிதழ்கள் கிடைக்கின்ற அற்புதம் இன்றைக்கு வருவாய்த் துறையின்மூலம் நிகழ்த்திக் காட்டப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் இதற்கு ஒரு படி மேலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருவாய்த் துறையின்மூலம் 6 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகள் மூலமாகவே குறிப்பிட்ட கால வரையறைக்குள் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டுமென்று 5-6-2012 அன்று ஆணையிட்டதன் அடிப்படையிலே, இன்றைக்கு 2,37,882 வருமானச் சான்றிதழ்களும், 3,57,318 சாதிச் சான்றிதழ்களும் மற்றும் 2,78,634 பிறப்பிடச் சான்றிதழ்களும் ஆக மொத்தம் 8,73,834 சான்றிதழ்கள் பள்ளிகள் மூலமாக மாணவ, மாணவியர்களுக்கு அவர்களுடைய கைகளிலே வழங்கப்பட்டிருப்பது ஆற்றலின் பிறப்பிடம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சரித்திர சாதனை என்பதை இந்த அவையிலே நான் எடுத்து வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசத்தின் உயிர்நாடி கிராமத்தில் இருப்பதைத் தெரிந்து சொன்னார் மகாத்மா. உயிர்நாடியாக விளங்கும் அந்த உன்னத மக்களின் மானம் காத்திட, வாஞ்சையோடு நம் மாண்புமிகு அம்மா அவர்கள்

வகுத்துக் கொடுத்தத் திட்டம்தான் 'விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்'.

புத்தம் புது அரிசி, புதுப்பானை வெல்லப் பாகிட்டு,
பொங்கல் வைத்திட்டு, மாவிலை தோரணங்கள் மங்களமாய் தொங்கவிட்டு,
மஞ்சள், குங்குமம் மனைமீது கொஞ்சமிட்டு,
அம்மா வாழ்க! அம்மா வாழ்க!

என்று வாயார வாழ்த்துவது தைத் திருநாளிலே தரணிக்கே கேட்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நெசவாளர்களுக்கு நேசக்கரம் நீட்டிய "சேலைக் கட்டிய காந்திதான்" எங்கள் அம்மா என்று இன்றைக்கு நாடு சொல்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 3-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலுள்ள பொது மக்களின் வாழ்வாதாரத்தில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் பெரும் பங்கு வகிக்கிறது. எனவே, கைத்தறி மற்றும் விசைத்தறித் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்கும்பொருட்டு, ஒவ்வோராண்டும், ஏழையெளிய மக்களுக்கு விலையில்லா சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தில் அனைத்துத் தகுதியான பயனாளிகளும், பயன்பெறுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, தேசிய தகவலியல் மையத்தால் (NIC) பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மென்பொருளின் இணையதளத்தில், பயனாளிகள் விவரங்களைப் பதிவு செய்தபிறகு, பயனாளிகளுக்கு விலையில்லா சேலைகள், வேட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கருணையின் பிறப்பிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான புனித அரசிலேதான், கடந்த 5 ஆண்டுகளில் 2,184.11 கோடி ரூபாய் செலவில், 16.98 கோடி பயனாளிகளுக்கு, ஏழை எளியவர்களுக்கு, வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு முன்வைக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டதெல்லாம் துலங்கிட, இறை அருள் முழுமையாகப் பெற்றிருக்கும் நம் மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத உழைப்பில், அதிசிறக்கும் மதிநுட்பத்தில், அளவிடமுடியாத தியாகத்தில், இன்றைக்கு உலகிலேயே வேறு எங்கும் கண்டிராத, கேள்விப்பட்டிராத, புரட்சிகர மக்கள் நலப் பணிகளை தமிழகத்தில் தொடர்ந்து நடத்திக் காட்டி வருகின்ற தாயே, அம்மா! எதைச் செய்தாலும் அதிலே வெற்றி! நீங்கள் எதைச் செய்தாலும் அதிலே முழுமை! எதைச் செய்தாலும் அதில் ஒப்பாரும், மிக்காரும் இல்லை என்று இன்றைக்கு உலகமே புகழும்வண்ணம், (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணியது எண்ணியாங்கு செய்து முடிப்பவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். வஞ்சகர் சூழ்ச்சிகளையெல்லாம் உடைத்து, தவிடு பொடியாக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க தொடர் வெற்றியினைப் பெற்றதன் காரணமாக, தமிழ்நாட்டில் மக்களாட்சி தத்துவம் மாண்பு பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் புள்ளி பதிவு செய்யும் பணியில், 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளியியல்) ஆகியவை பல்வேறு கட்டங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. இப்பணி, வருவாய்த் துறையின் பங்களிப்புடன் பாரத மின்னணுக் கழகம், பெங்களூரு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணி முன்னேற்றம் குறித்து, மாநில ஒருங்கிணைப்பாளர்/முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ன்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில், 31-3-2016-ல் இதுவரை 6,76,98,914 நபர்களுக்குப் பதிவுப் பணி மேற்கொள்ளப்பட்டு, 6,15,02,930 நபர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலினால்தான், மொத்த மக்கள் தொகையில் இதுவரை பதிவுப் பணி 93.83 சதவிகிதம் மற்றும் ஆதார் அட்டைகள் வழங்கும் பணி 85.25 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் பூமிப் பந்தில் வாழுகிற மக்கள் அனைவருக்கும் பொதுவானவன் என்பதால், இன்பத்தையும், துன்பத்தையும், அனைத்தையும்

எல்லோருக்குமே கலந்துதான் அளிக்கிறான். அவ்வகையில்தான், இயற்கையைப் படைத்த இறைவன், இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுவதற்கும் காரணமாகிறான். ஆனால், அதிலும் கருணை மனம் கொண்ட கடவுளோ, அத்தகைய இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் காலங்களில், மக்களைக் காப்பதற்கு ஏதுவாக, வலிமை கொண்டோரின் பொற்கரங்களில் அதிகாரச் செங்கோல் இருக்குமாறும் பக்குவமாய் பார்த்துக் கொள்கிறான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுனாமி", "தானே", "நீலம் புயல்", "வறட்சி", நூறாண்டுக் காலத்தில் இல்லாத "கனமழை" "பெருமழை", "பேரிடர்" அனைத்திலுமிருந்து தமிழக மக்களை "கண்ணின் இமையாக" காத்தது நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பேரிடர் மீட்புப் பணிகளில் பெயர் பெற்ற அரசு நம் பேரறிவுத் தாயின் புனித அரசு. ஆம்! அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கிளிண்டன் வரை சான்றிதழ் பெற்றிருக்கின்ற சாதனை அரசுதான், நம் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-40

சுனாமி, புயல், மழை எதுவாயினும் அந்த இயற்கையின் வேகத்தை, நம் தாயின் ஈகையின் வேகம் வென்றது என்பதை இந்த அவை நன்றாக அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், யாருமே கண்டிராத, யாருமே கேட்டிராத, இதுவரை எதிர்கொண்டிராத, பேரிழப்பு நிகழ்ந்த நேரத்திலே, சுற்றிச் சுழன்று, சூறாவளியாய் சுற்றிச் சுழன்று, இரவு, பகல் பாராது, கண்விழித்து, துயரம் நிகழ்ந்த இடங்களுக்கெல்லாம் நேரிலே சென்று, பாதிக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் பறந்து சென்று, மக்களோடு மக்களாக, தோளோடு தோள் நின்று, தொய்வின்றி, கருணையோடு, ஆற்றல்சார், அறிவுசார் அணுகுமுறையால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய பணியை உலகமே வியந்து பாராட்டிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பற்ற திட்டமிடுதல் காரணமாக, மக்களின் கண்ணீரை, ஒரு நொடியிலே துடைத்தெறியும் வண்ணம், பணியாற்றிய மாண்புமிகு அம்மா அவர்கள், பேரிடர் மேலாண்மையில் உலகிற்கு வெளிச்சமானார். புதிய பாடங்களை இந்த உலகத்திற்கே கற்றுத் தந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பெரிய வல்லரசாக ஆனாலும், இயற்கையின் சீற்றத்திற்கு முன்னால் என்ன

செய்யமுடியும்? எதுவும் செய்ய முடியவில்லை என்பதை அமெரிக்காவில் வீசிய "கத்ரினா" புயல் நமக்கு எடுத்துக் காட்டியது. எத்தனை பெரிய பொருளாதார வலிமை பெற்றிருந்தாலும், வான் மழை, வரலாற்றின் பெருமழையாக மாறுகிறபோது, என்ன செய்வது? எதுவும் செய்ய முடியவில்லை என்பதை ஜப்பான், சீனா, ஆஸ்திரியா நாடுகளின் அண்மை மழை சீரழிவுகள் நமக்குக் காட்டின. ஆனால், வரலாறு காணாத மழை வெள்ளத்தால், தமிழ்நாடு பாதிக்கப்பட்டபோது, முறையான திட்டமிடல், விரைந்து செயல்படுத்துதல், பரிவுடன் பகிர்ந்தளித்தல், இரவு பகல் பாராது, உணவைத் துறந்து, உறக்கத்தைத் துறந்து, தன்னையே அர்ப்பணித்ததன் காரணமாகத்தான், (மேசையைத் தட்டும் ஒலி) 100 ஆண்டுகள் காணாத அந்த கன மழையால், இந்தத் தமிழகம் என்னவாகுமோ என்று எல்லோரும் கவலையுற்றிருந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மின்னல் வேக மீட்பு நடவடிக்கையால், நிரந்தரமான நிவாரண நடவடிக்கையால், இன்றைக்கு அன்னைத் தமிழகம் இந்திய வரைபடத்திலே மீண்டும் இடம் பிடித்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே நான் பெருமையோடு இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

விரைவு பட்டா மாறுதல் திட்டம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒளி படைத்த கண்ணோடு, உறுதி கொண்ட நெஞ்சோடு, களி படைத்த மொழியோடு, தெளிவு பெற்ற மதியோடு, எளிமை கண்டு இரங்குகின்ற குணத்தோடு, நாளும், தமிழகத்தை வழி நடத்தி வெற்றி ஒன்றை மட்டுமே தனதாக்கிக் கொண்டிருக்கும் அற்புதத்தின் மறு பிறப்புதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நம் அம்மா அவர்கள். ஆற்றலின் வடிவம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் முதன்முதலாக வருவாய்த் துறையில் முன் எப்போதும் இல்லாத வகையில் "விரைவுப் பட்டா மாறுதல் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை 18-7-2011 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ், பட்டா மாறுதல் விண்ணப்பங்கள், கிராம நிருவாக அலுவலர்களிடம் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அளிக்கலாம். அம்மனுக்கள் மீதான உத்தரவுகளை, உட்பிரிவு இல்லாத இனங்களில் மனு அளித்த நாளிலிருந்து 15 ஆவது நாளிலும், உட்பிரிவுடன் கூடிய இனங்களில் மனு அளித்த நாளிலிருந்து 30 ஆவது நாளிலும் பெறலாம். இந்த மாபெரும் மகத்தான திட்டத்தின்மூலமாக, 64,81,288 பட்டா மாறுதல் ஆணைகள்

வழங்கிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய சாதனை அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு காலக்கட்டத்தில் தமிழக மக்களுக்கு யாரும், எந்த உதவியும் இலவசமாகத் தரவேண்டிய அவசியம் இருக்கக்கூடாது; தமிழக மக்கள் யாரிடத்திலேயும் கையை நீட்டிப் பெறுகின்ற நிலை இருக்கக் கூடாது; அந்த நிலையை எனது வாழ்நாளில் காண வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. அதுதான் எனது இலட்சியம்" என சூளுரைத்து, நாட்டு மக்களுக்காக நாளும் அயராது உழைத்து வருகின்ற இந்தியத் திருநாட்டினுடைய ஒரே முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் தாமாகவே ஒரு நிலத்தினை உரிமையாக்கும் வகையில் அரசு வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ், வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் உள்ளது. இதன்படி வீடற்ற ஏழைக் குடும்பத்தினரின் ஆண்டு வருவாய், ஊரகப் பகுதிகளில் ரூ.30,000/- அல்லது அதற்குக்கீழ் எனவும், நகர்ப்புறப் பகுதிகளில் ரூ.50,000/- அல்லது அதற்குக்கீழும் உள்ளவர்கள் வீட்டுமனை ஒப்படை பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நகரப் பகுதியிலேயிருந்து 8½ கி.மீ.-க்கு மேலே இருக்கக்கூடிய இடங்களிலேயும் நீங்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழே விதிக்கப்பட்டிருக்கின்ற விதிமுறைகள். இந்த விதியின்கீழே, இந்த ஆணையின்கீழே, ஆட்சேபகரமான புறம்போக்குகள் இதுபோன்ற பல விதிமுறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகளுக்குட்பட்டே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலே, கடந்த 5 ஆண்டுகளிலே 10½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து, இலக்கினையும் விஞ்சி, 12½ இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிய அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய சாதனை அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை

போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும்தான் தர்மத்தின் தலைமகள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசின் குறிக்கோளாகும். அந்தக் குறிக்கோளை வெற்றிகரமாக நிறைவேற்றிட, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான வருவாய்த் துறையின் மூலமாக அரசு நிலங்கள் தேவைக்கேற்ப மத்திய, மாநில அரசுத் துறைகளுக்கு காலதாமதமின்றி நில மாற்றம், நில உரிமை மாற்றம் செய்து, நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுத்து, வருவாய்த் துறையில் சரித்திர சாதனை படைத்து வருகிறது.

பிற்பகல் 3-45

நில மாற்றம்: வருவாய்த் துறை நிலை ஆணை எண் 23-ன்கீழ், அரசு நிலங்கள் தேவைக்கேற்ப மத்திய அரசுத் துறைகளுக்கு நிலக் கிரயம் வசூலித்துக்கொண்டும், வருவாய் நிலை ஆணை எண் 23(A)-ன்கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலம் கிரயம் என்றும் நில மாற்றம் செய்யப்படுகின்றன. அரசுத் துறைகளுக்கு நில மாற்றம் செய்யப்படும் நிலங்கள், எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அரசு நிலங்களுக்கு வருவாய்த் துறையே பாதுகாவலராக உள்ளபடியால், பயன்படுத்தப்படாத நிலங்களை மீளப்பெற்று, இதர துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வருவாய்த் துறைக்கு உள்ளது. அந்தவகையில், முன்னெப்போதும் இல்லாத வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளிலே 3,409.70 ஏக்கர் அரசு நிலங்கள், காவல் துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் மீன் வளத் துறை ஆகிய அரசுத் துறைகளுக்கு 427 இனங்களிலே நிலம் மாற்றம் செய்து, சரித்திர சாதனையைப் படைத்துள்ளது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நில உரிமை மாற்றம்: அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை எண் 24-ன்கீழ், பொதுப் பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கும் பொது நலன் கருதி தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம் நிலம் இருக்கும்பட்சத்தில், நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. மேற்படி நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக

மாற்றம் செய்யப்பட்டால், இதன் சந்தை நிலமதிப்பு ஒரு மடங்கு மட்டுமே வசூல் செய்யப்படும். வணிக நோக்கத்திற்காக உரிமை மாற்றம் செய்யும்போது, இருமடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்யப்படும். முழு நில கிரயத்தை வசூலித்துக்கொண்டு, நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்கள் தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால், நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்கள், இழப்பீட்டுத் தொகை ஏதுமின்றி மீளப் பெறப்படுகின்றன.

சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி, குடிநீர்த் திட்டப் பணிகள் உள்ளாட்சி அமைப்புகளிலும் மற்றும் சென்னை மாநகரிலும் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் போன்றவற்றிற்கும் அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அதேபோல், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அரசு நிலங்கள் இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலினால், வருவாய்த் துறையின்மூலம் முன் எப்போதும் காணாத வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் 2,934.99 ஏக்கர் அரசு நிலங்கள் சிப்காட், சிட்கோ, டிட்கோ, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு காவலர்கள் வீட்டு வசதிக் கழகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் போன்ற பல்வேறு மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களுக்கு 297 இனங்களில் நில உரிமை மாற்றம் செய்து, அன்னைத் தமிழகத்தின் வளர்ச்சியில் சாதனை புரிந்திருக்கிற அரசு, நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நில குத்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 கோடி தமிழர்களின் உயிரில், உணர்வில், உதிரத்தில் ஒன்றாகக் கலந்த தாயே! தங்களின் ஏற்றமிகு செயல்களால் வருவாய்த் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற வியத்தகு திட்டங்களால், தமிழகம் புது வடிவமும், ஏற்றமும் பெற்று,

இந்தியத் திருநாட்டில் பல அற்புதங்களை இன்றைக்கு நிகழ்த்திக் காட்டி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் நிலை ஆணை எண் 24(A)-ன்கீழ், அரசுப் புறம்போக்கு நிலங்கள், கட்டடங்கள், நிலத்துடன்கூடிய கட்டடங்கள் போன்றவை வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்குத் தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் முக்கியமான நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படுகின்றன.

பொதுவாக, குத்தகை இனங்கள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் தற்காலிக அடிப்படையில் வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், பொது நோக்கங்களின் அடிப்படையில் அரசு தேவை என கருதும்பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை வழங்கப்படுகிறது. தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி, ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் மதிப்பு 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும், குத்தகைக் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகைத் தொகை வசூல் செய்யப்படுகின்றது.

குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் முதன்மைக் குத்தகைப் பதிவேட்டில்-Master Lease Register-ல் பதிவு செய்யப்பட்டு, வட்ட அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகின்றன. இப்பதிவேடு ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாய அலுவலரால் தணிக்கை செய்யப்படுகிறது. அதன் பின்னர், அடுத்த பசலி ஆண்டு தொடக்கத்தில் குத்தகை இனங்களில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகளின் அடிப்படையில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குத்தகை இனங்கள் தொடர்பான புலன்கள் வட்டாட்சியர், வருவாய்க் கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அவ்வப்போது புலத்தணிக்கை செய்யப்படுகின்றன. மேலும், குத்தகைத் தொகை வசூல் செய்வதைக் கண்காணிக்கவும், குத்தகை நிலுவைத் தொகைகளை வசூலிக்க முனைப்புடன் செயல்பட ஏதுவாகவும், முதன்மைக் குத்தகைப் பதிவேடு (Master Lease Register) பயன்படுகிறது.

பிற்பகல் 3—50

ஆக்கிரமணங்களை அகற்றுதல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்தமிழ் தேசத்தின் அதிசயமே அம்மா! ஓட்டு வளர்ச்சியை மட்டும் குறிப்பிலே கொள்ளாமல், நாட்டு வளர்ச்சியை நலத்திலே கொண்டு, நாளெல்லாம் உழைக்கின்ற நற்றமிழ் தாயே, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் தலைமையின்கீழ், இன்றைக்குத் துறைதோறும், துறைதோறும் ஒளி வெள்ளம்; அதனால், இன்று துள்ளுவதோ மக்கள் உள்ளம். அரசு நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதும், ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் கண்காணிப்பதும் வருவாய்த் துறையின் முதன்மையான பணியாகும். அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905; தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920; தமிழ்நாடு நீர் நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007; தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001; தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994; தமிழ்நாடு பொதுக் கட்டடம் சட்டம், 1975; தமிழ்நாடு ஊராட்சி சட்டம், 1958; அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20-1-1987-ல், நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில், மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி, அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29-4-2003-ல் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையால்தான், நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் முழுவதுமாக ஆக்கிரமிப்புகள் தடுக்கப்பட்டு, ஏற்கெனவே ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறை மற்றும் காவல் துறையுடன் இணைந்து உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

மேலும், கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்து, அதன்படி, ஆக்கிரமணங்களை அகற்றி, அந்நிலங்களை சமுதாயப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணை

(நிலை) எண் 540, வருவாய்த் துறை, நாள் 4-12-2014-ன்படி, ஒவ்வொரு வட்டம், கோட்டம், மாவட்ட அளவில் நிவர்த்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஆக்கிரமணங்களை அகற்றுதல் தொடர்பான கோரிக்கைகள் நடைமுறைகளைப் பின்பற்றிச் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்குமாறும், வரையறைக்குட்பட்ட காலவரம்புக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான இயக்கக் குழுவில் ஆய்வு செய்யுமாறும், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கைகளால், கடந்த 5 ஆண்டுகளில் 1,78,182 நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன; 34,831 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய, இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகளால்தான் தமிழகம் முழுவதும் நீர்நிலைகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசுப் புறம்போக்கு நிலங்களான, மயானம், மந்தைவெளி, மேய்க்கால், நத்தம், காடு, பாதை, கோயில் நிலங்கள், உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் இதர இனங்கள் ஆகியவற்றிலும், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்கள் உட்பட அனைத்து அரசுப் புறம்போக்கு நிலங்களிலும், 3,65,291 எண்ணிக்கையிலான ஆக்கிரமணங்களை அகற்றி, 69,242.37 ஏக்கர் நிலங்களை மீட்டுள்ள அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற உறுதியான நடவடிக்கைளால், இனி வருங்காலங்களில் ஆக்கிரமிப்புகள் அற்ற அன்னைத் தமிழகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி வருகிறார்கள் என்பதை இந்தப் பேரவையில் பெருமையோடு முன்வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நம்பிக்கைப் பேரொளியே அம்மா! ஆளுமைப் பண்பின் அனைத்துத் திறன்களும் ஒருங்கே பெற்ற அற்புதத் தலைமையே அம்மா! தீராத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், நாட்டு மக்களை நலமுடன் வாழ வைப்பதிலும், வழிகாட்டுவதிலும், அம்மாவைப் போல் இவ்வுலகத்தில் எவருமில்லை! (மேசையைத் தட்டும் ஒலி) பொது நோக்கத்திற்காக வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு முன்னேற்றத்தை

உள்ளடக்கி, அத்துடன் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும்பொருட்டு, நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நில நிருவாகத் துறையின் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 3-55

31-12-2013 வரை மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-ன்கீழ், நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. மாநில அரசு சமூகரீதியாகப் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு, வீட்டுமனை மற்றும் பிற தேவைகளுக்காக நிலம் வழங்கவும், அத்துடன் தொழில்ரீதியான உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காகவும், நெடுஞ்சாலை வளர்ச்சிக்காகவும், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் இந்த மூன்று சட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்த மத்திய நில எடுப்புச் சட்டம் 1894-ஐ இரத்து செய்துவிட்டு, மத்திய அரசு புதிய நில எடுப்புச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் 1-1-2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தப் புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி, புனர்வாழ்வு மற்றும் மீள் குடியமர்த்தல் நிலம் கையகப்படுத்துதலில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது. மேற்படி புதிய நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 105-ன்படி, 4 ஆம் அட்டவணையில் 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளன.

மேற்படி 13 மத்திய சட்டங்களைப் போன்று, மாநில சட்டங்களின்கீழும், நில எடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்திடும் வகையில், பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையிலே, மாநில அரசு புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1/2015-ஐக் கொண்டுவந்து, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஆணையைப் பெற்ற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, புதிய மத்திய நில எடுப்புச் சட்டப் பிரிவு 105-ன் தொடர்ச்சியாக, பிரிவு 105-A புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. புதிய மத்திய நில எடுப்புச் சட்டத்தால், நில எடுப்புப் பணிகளில் மற்ற மாநிலங்கள் எல்லாம் வழி தெரியாமல் விழிபிதுங்கி

நின்றுகொண்டிருந்த நேரத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலால்தான், இன்றைக்கு அன்னைத் தமிழகத்திலே நில எடுப்பு பணிகள் தங்குதடையின்றி முழு வீச்சாக மேற்கொள்ளப்பட்டு, வளர்ச்சிப் பணிகள் தமிழகத்தில் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சரித்திர சாதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான புனித அரசையே சாரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயல்களில் எப்போதும் நீரோட்டம் தந்த தமிழகத்தின் உயிரோட்டமே! தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், முதன்மைத் துறையான விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும், கருணையின் வடிவம் மாண்புமிகு அம்மா அவர்களின் புனித அரசு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது என்பதற்குச் சான்றாக விளங்குகின்ற திட்டம்தான், ஆற்றலின் அடையாளம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான "முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்".

விவசாயத் தொழிலாளர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயனடையும் வகையிலும், அவர்களது துயரத்தை நீக்கி, அவர்களது சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திட, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தைத் தந்த கருணையின் பிறப்பிடம், நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தொழிலாளர்கள், 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்து, அந்த நிலத்தில் நேரடியாகப் பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்துக் குறு சிறு விவசாயிகள், பயிர்க் குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகப் பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

விவசாயத் தொழில் என்பது விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப் புழு வளர்த்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பால் பண்ணை தொழில், தீவனப் பயிர் செய்தல், மேய்ச்சல், நாற்று வளர்த்தல், கோழிப் பண்ணை, மரங்கள்

வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன் பிடித்தல் ஆகும். உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகப் பதிவு செய்ய தகுதியானவர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ், விவசாய உறுப்பினர்கள் 1,59,58,265 பேர்களும், சார்ந்து வாழும் உறுப்பினர்கள் 1,17,49,934 பேர்களும், மொத்தம் 2,77,08,199 பேர்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை. ஒரு திட்டத்திலே இரண்டு கோடிக்கும் மேலே உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-00

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி: மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்தி, வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கவும், வறுமைக் கோட்டிற்குக்கீழே எவரும் இருக்கக் கூடாது என்ற மாபெரும் இலட்சியத்தை நிறைவேற்றிடவும், ஊன், உறக்கம் பாராது பாடுபடுவதையே, பணியாற்றுவதையே தமது கொள்கையாகக் கொண்டிருக்கிற, இந்தியத் திருநாட்டின் ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறை, வருவாய்த் துறையின்கீழ் இயங்கி வருகின்றது. அரசுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற துறைகளிலே இத்துறையும் ஒன்றாகும்.

நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டுகளிலே பலவகை உண்டு. நாட்டுக்கு செய்யும் சேவை 'தேசத் தொண்டு'; மக்களுக்குச் செய்யும் சேவை, 'மக்கள் தொண்டு'; இறைவனுக்குச் செய்யும் சேவை 'திருத்தொண்டு'. இந்த மூன்று தொண்டுகளையும் ஒருசேர கொண்டுள்ள, தொண்டுள்ளம் கொண்ட ஒரே முதலமைச்சர் நம்முடைய

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 150 ஆண்டுகளுக்கும் மேலான, சிறப்புமிகு பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இத்துறை, நில அளவைப் பணிகளில் சங்கிலி, நேர்கோணக்கட்டை மற்றும் கோணமானி போன்ற பழைய கருவிகளுக்குப் பதிலாக, நவீன நில இயல் நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவி ஆகியவற்றையும், கையில் தயாரித்து பயன்படுத்தப்பட்டு வந்த பழைய ஆவணங்களுக்குப் பதிலாக கணினிமயப்படுத்தப்பட்ட நில ஆவணங்களையும், வட்ட அலுவலகங்களில் நடைபெறும் பழமையான பட்டா மாறுதல் பரிவர்த்தனைகளுக்குப் பதிலாக இணையவழி பட்டா மாறுதல் சேவைகளையும் பயன்படுத்தும்வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலால் நில அளவைத் துறை, தன்னை நவீனமயமாக்கிக் கொண்டுள்ளது. பல்வேறு வகை நில அளவைத் திட்டங்கள் வெவ்வேறு காலங்களில் வருவாய்த் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1826 ஆம் ஆண்டுகளில் 'துவக்க நிலை நில அளவை'; 1858 ஆம் ஆண்டுகளில் 'இரயத்துவாரி முதல் நில அளவை'; 1891-1894 ஆம் ஆண்டுகளில் 'நகர நில அளவையில் உள்ள பிளாக் வரைபடங்கள்'; 1883 ஆம் ஆண்டுகளில் 'மலைக் கிராம நில அளவை'; 1905-1926 ஆம் ஆண்டுகளில் 'மறு நில அளவை'; 1979-1987 ஆம் ஆண்டுகளில் 'நில உடைமை மேம்பாட்டுத் திட்டம்'; 1989-1992 ஆம் ஆண்டுகளில் 'நத்தம் நில அளவை'; 1989-1997 ஆம் ஆண்டுகளில் 'துணை நில அளவை'. நில அளவைத் துறையின்மூலம் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற, நில அளவையின் பயன்கள் முழுமையாக நாட்டு மக்களுக்குக் கிடைத்திட, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்கீழ், நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை இன்றைக்குத் துரிதமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணையவழி பட்டா மாறுதல் திட்டம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவேந்தர் காலத்தில் முடியாத சாதனைகள்கூட, மாண்புமிகு அம்மா! தங்கள் ஆட்சியில் சாத்தியம் ஆச்சு! (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் தமிழகத்தின் இன்றைய பேச்சு! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாவுக்கும், சிட்டாவுக்கும் பரிதவித்த காலம் போய், பட்டனை தட்டினால் கையில் கிடைக்குது பட்டா, சிட்டா (மேசையைத் தட்டும் ஒலி)*

என்கின்ற சாதனை அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சரித்திர அரசு.

முதன்முதலாக, இணையவழி பட்டா மாறுதல் திட்டம் 9-1-2014 முதல் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான சீரிய வழிகாட்டுதலின்படி, பெரம்பலூர் வட்டம், இணையவழிப் பயன்பாட்டிற்கு சோதனை அடிப்படையில் கொண்டுவரப்பட்டது. பிறகு 1-7-2015 அன்று ஸ்ரீரங்கம் வட்டத்தில் இத்திட்டம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. தொடர்ச்சியாக, 2015 ஆம் ஆண்டிலே, கூடுதலாக 126 வட்டங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலினால், தற்போது வரையில் தமிழகம் முழுவதும், மொத்தமுள்ள 285 வட்டங்களில் 265 வட்டங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதர வட்டங்களுக்கும் இத்திட்டம் கூடிய விரைவில் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் பொது மக்கள் அருகில் அமைந்துள்ள பொது இ-சேவை மையத்தின்மூலமாக இணையவழியில் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். தமது விண்ணப்பத்தின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தையும், அதன் தற்போதைய நிலை குறித்தும் இணையம்மூலம் அறிந்துகொள்ள இயலும். விண்ணப்பம் பெறப்படும் போதும், குறுவட்ட அளவர் புல ஆய்வுக்கு நாள் நிர்ணயம் செய்யும்போதும், வட்டாட்சியர்/துணை வட்டாட்சியர் பட்டாவிற்கான விண்ணப்பத்தினை அங்கீகாரம்/நிராகரிப்பு செய்யப்படும்போதும் விண்ணப்பதாரர்களின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அளிக்கப்படும். மின் ஒப்பம் செய்யப்பட்ட பட்டாவை இணையம்மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பொது மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மின்சேவை வாயிலாக இச்சேவைகள் அனைத்தும் மக்களைச் சென்றடைவது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 4-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை 6 இலட்சத்து 33 ஆயிரத்து 269 இணையவழி பட்டா மாறுதல்

விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 4 இலட்சத்து 29 ஆயிரத்து 552 எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் கணினிப்படுத்தப்படுவதால், அலுவலர்களின் பணிப் பளு வெகுவாகக் குறைக்கப்படுவதுடன், தமது வழக்கமான பணிகளை எளிதாக மேற்கொள்ளலாம்; புதிய பொலிவுடன்கூடிய தொழில்நுட்பச் சூழலில் அலுவலர்கள் பணிபுரிய இயலும். உயர் அலுவலர்கள், பணியின் நிலையை இணையம் வாயிலாக நெருக்கமாகக் கண்காணிக்க இயலும்; நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை, அலுவலர்கள் எந்நேரத்திலும் ஆய்வு செய்து, தேவையான அறிவுரைகளை வழங்க இயலும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நல்வழிகாட்டுதலின்படி, மக்கள் பணியாற்றி வருகின்ற பழம்பெருமை வாய்ந்த வருவாய்த் துறையில், புதுமைகள் பல புகுத்தி, புத்துயிர் அளித்து, புதிய நிருவாகப் புரட்சியை நிகழ்த்திக்காட்டி, இன்றைக்கு வருவாய்த் துறையின்மூலம் செயல்படுத்தி வருகின்ற 'இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்திற்கு' முதலமைச்சரின் 'நல் ஆளுமை விருதினை' இந்தியத் திருநாட்டின் 70 ஆவது சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, சுதந்திர தின உரையாற்றி, "ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்கிடுவேன்" என்று சூளுரை ஏற்றதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தனது பொற்கரங்களால் வருவாய்த் துறைக்கு விருதினை வழங்கி, மாபெரும் வரலாற்றுப் பெருமையை வருவாய்த் துறைக்குச் சேர்த்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் வாழும் மனித தெய்வம் தமிழர் குல சாமி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி, இந்தப் பொன்னான நேரத்திலே வருவாய்த் துறையின் சார்பிலே கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வளர்ந்த நாடுகளின் வெற்றிக்குப் பின்னாலே உழைப்பு இருக்கிறது" என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். உழைப்பு என்னும் மரத்தின் வேர்கள் கசப்பாக இருக்கலாம். ஆனால், அதன் கனிகள் இனிப்பானவை. 'உழைப்பு மட்டுமே நம்மை உயர்த்தும்' என்ற உயர்ந்த இலட்சியத்தோடு, மக்கள் நலன் காக்க, மக்களின் வாழ்வை உயர்த்திட, ஓய்வறியாமல் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைக்கின்ற, இந்தியத் திருநாட்டின் ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நல்வழிகாட்டுதலினால், வரலாற்றுச் சாதனையாக நில அளவை ஆவணங்களை கணினிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகர்ப்புற நில ஆவணங்களின் கலங்கள், கிராமப்புற நில ஆவணங்களிலிருந்து வேறுபட்டுள்ளதால், முதலில் கிராமப்புற நில ஆவணங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது 38.13 இலட்சம் எண்ணிக்கையிலான அனைத்து நகர நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டு, வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, "எத்தனை இலட்சம் ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன?" என்று கேட்டார்கள். அவருக்குத் தெளிவாகச் சொல்கின்றேன்; இந்தியாவிலேயே, 38.13 இலட்சம் எண்ணிக்கையிலான அனைத்து நகர நில ஆவணங்களையும் கணினிப்படுத்தியிருக்கிற ஒரே மாநிலம் அன்னைத் தமிழகம்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அன்னைத் தமிழகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலுள்ள 10 வட்டங்களிலும் கணினிப்படுத்தும் மற்றும் ஒப்பிடல் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளன. அதேபோல், நத்தம் நில ஆவணங்களைக் கணினிப்படுத்தும் பணி அனைத்து மாவட்ட நில அளவை அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு, 1.37 கோடி எண்ணிக்கையிலான அனைத்து நத்தம் நில ஆவணங்களையும் கணினிப்படுத்திய ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனை அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாநிலத்தின் அனைத்துத் தனிப் புலங்களுக்கான வரைபடங்களும் வருவாய்த் துறையிடம்தான் உள்ளது. இதுவரை மொத்தமுள்ள 54.31 இலட்சம் புலப்படங்களில், 38.61 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஏறத்தாழ 16,722 எண்ணிக்கையிலான கிராம வரைபடங்கள் ஒளி பிம்ப நகல் எடுக்கப்பட்டு, இலக்க முறையில் சேமிக்கப்பட்டுள்ளன. புவி சார்ந்த தகவல் தொடர்பு அமைப்பு முறையில் வரைபடங்கள் மற்றும் கிராம வரைபடங்களை உட்புகுத்தி, கிராம வரைபடங்களைக் கணினிப்படுத்தும் பணி சென்னை

மத்திய நில அளவை அலுவலகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,000 வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள பணி ஓராண்டுக் காலத்திற்குள் நிறைவு செய்யப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி, இதுவரை முன் எப்போதுமில்லாத வகையில், கிராம/வட்ட/மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணியைத் துவக்கியிருக்கிற அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, 16,682 எண்ணிக்கையிலான கிராம வரைபடங்களை தமிழில் கணினிப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. முழு ஈடுபாட்டுடன் நடைபெற்று வருகின்ற இப்பணி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலால் ஓராண்டுக்குள் முடிவடையும்.

பிற்பகல் 4-10

நில வரித் திட்டம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

என்று வள்ளுவப் பெருந்தகை அரசின் இலக்கணத்தைச் சொல்லி வைத்தார். அந்தவகையில், ஆற்றலின் பிறப்பிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித ஆட்சியில் நாட்டு மக்களின் நலன் காக்க அளப்பரிய திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்களுக்கெல்லாம் நிதியாதாரத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக, புதிய வரியே விதிக்காமல், புதிய வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையினைத் தாயுள்ளத்தோடு தந்து கொண்டிருக்கிற முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு வரலாறு தெரியும். சோழர் ஆட்சிக் காலத்திலே குலோத்துங்க சோழன் என்ற மாபெரும் புகழ் படைத்த மன்னன் இருந்தான். கலிங்கத்தை வெற்றி கொண்ட மாவீரன் அவன். அவனுக்கு 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்ற ஒரு பட்டம் கொடுத்து வரலாறு இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. சுங்கம் தவிர்த்த சோழனைப் போல, இன்றைக்கு வரி தவிர்த்த வள்ளல் எங்கள் அம்மா என்று

உலகம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தாயே, இது வெறும் புகழுரை அல்ல; இது தமிழகத்தினுடைய சத்திய வாக்கு என்பதை இங்கே இந்த அவையிலே முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவுரையாக, 'அன்பும், சிவமும் ஒன்று' என்று சொன்னார் திருமூலர். 'படைக்கும் உணவில் ஒரு சிட்டிகை அன்பைப் பரிமாறு' என்றார் பிளாட்டஸ். 'அனைவருக்கும் நாம் தர வேண்டிய ஒரே சொத்து அன்பு' என்று சொன்னார் பெஞ்சமின் பிராங்கிளின். 'அன்பாக இருப்பவரே உலகின் செல்வந்தர்' என்றார் மகாத்மா காந்தி. 'நிதானமே மனிதனின் கேடயம்' என்றார் சாக்ரடீஸ். 'மனிதனின் எண்ணமே மனிதனை வளர்க்கிறது' என்றார் புத்தர். 'பொறுமைதான் வெற்றியின் ரகசியம்' என்றார் மிக்செல். 'மௌனம் கலந்து வாழ்வதே வாழ்வு' என்றார் மகாவீரர். 'வெற்றிக்கு ஆதாரம் நம்பிக்கை' என்றார் ஆல்பிரைட். இப்படி திருமூலர், பிளாட்டஸ், பெஞ்சமின், மகாத்மா காந்தி, சாக்ரடீஸ், புத்தர், மிக்செல், மகாவீரர், ஆல்பிரைட் என்று அகிலம் போற்றும் அறிஞர்களின் வார்த்தைக்கு வடிவமாய், உருவமாய், உயிராய், செயலாய், வாழ்வாய், வாழ்ந்துவருகிற இம்மண்ணுலகில் வாழ்கிற வாழும் மனித தெய்வம் தாயே அம்மா நீங்கள்தான்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்தவர்கள் இந்த வையகத்திலே சாதிக்கின்றார்கள்; முடியாதவர்கள் முச்சந்தியிலே உட்கார்ந்து கொண்டு தங்களுக்குத்தானே முடிவுரை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் சிலபேர் எதைச் செய்தாலும் குற்றம் கூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எதிரிகளுக்கு எரிச்சலும், பொறாமையும் வருகிறது என்றால், இலட்சியவாதிகள் நாம் சரியாக இருக்கிறோம் என்பதற்கான அடையாளம்தான்" என்று நான் சொல்லவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) ஜென்னி மார்க்ஸ் சொல்கிறார். "எதிரிகளுக்கு எரிச்சலும், பொறாமையும் வருகிறது என்றால், இலட்சியவாதிகள் பாதை சரியாக இருக்கிறது" என்று ஜென்னி மார்க்ஸ் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் நம் சத்தியத் தாய், தனது பாதை சரியானது; சாதனைகள் பல நிறைந்தது என்பதை இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்டி வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அரிய சாதனைகள் பல செய்து, புதிய சரித்திரம் பல படைத்து,

6-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, வெற்றிக் கொடி நாட்டியிருக்கின்ற தாயே, அம்மா! தங்களின் சாதனை சரித்திரத்திற்கு இணையாக சாதனை சரித்திரம் படைத்திட இன்றுவரை எவரும் இவ்வையகத்திலே பிறக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாளை எவரும் பிறக்கப் போவதில்லை என்பதை இந்த அவையிலே முன்வைத்து, தாயே, அம்மா! "கடைசி மனிதனுக்கும் கடைத்தேற்றம்" என்றார் உத்தமர் மகாத்மா காந்தியடிகள். "கடைசி மனிதனுக்கும் கடைத்தேற்றம்" என்ற அவரது வாக்கிற்கிணங்க, கடைசி மனிதனாக, எங்கோ ஒரு மூலையிலே சாதாரணமாக கழகப் பணியாற்றிவந்த என்னை தாயே, அம்மா! தங்களின் பெருமைமிக்க அமைச்சரவையிலே அமைச்சராக அமர வைத்து, மக்கள் பணியாற்றிட வரலாற்று வாய்ப்பு வழங்கி, இன்றைக்குக் கடைக்கோடியிலே உழைத்து வருகின்ற கழகத் தொண்டர்களுக்கெல்லாம் கடைத்தேற்றம் வழங்கி, ஜனநாயகத்திற்கு உயிர் கொடுத்திருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி எனக்கும் கடைத்தேற்றம்; கோடானுகோடி கழகத் தொண்டர்களுக்கு கடைத்தேற்றம் வழங்கியிருக்கிற அம்மா! எனக்கும் இன்றைக்குக் கடைத்தேற்றம் வழங்கி, இன்றைக்கு மக்கள் பணியாற்றுவதற்கும், கழகப் பணியாற்றுவதற்கும் அருளாசி புரிந்திட்ட தாயே, அம்மா! தங்களுக்கு நன்றிக் கடன் தீர்த்திட எனக்கு இப்பிறவி போதாது; இனி எனக்கு எப்பிறவி வந்தாலும் தாயே, அம்மா! தங்களின் கடைக்கோடி கழகத் தொண்டனாகவே பிறப்பெடுத்து, வாழும் காலமெல்லாம் நன்றியோடும், விசுவாசத்தோடும் கழகப் பணியாற்றிடுவேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறையருளை முழுமையாகப் பெற்றிருக்கின்ற எங்கள் தெய்வீகத் திருமகள் அம்மா அவர்களுக்கு, நல்ல தேக ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் தந்திட அனைத்துத் தெய்வங்களும் ஒன்றுகூடி வந்து அருளாசி புரிய வேண்டுமென்று நாளும், நாடெங்கும் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டு மக்களின் பிரார்த்தனையோடு, இந்த அவையிலே என் இதய பிரார்த்தனையையும் இறைவன் முன்வைத்து வணங்குகிறேன் தாயே, அம்மா! தங்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி, கோடானு கோடி நன்றியை காணிக்கையாக்கி என் உரையை உங்கள் அருளாசியோடு நிறைவு செய்கிறேன் தாயே, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-15

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மேலான ஆணைக்கிணங்கவும், வருவாய்த் துறை சார்பான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. முக்கிய பிரமுகர்கள் வரவேற்புப் பணிக்காகவும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு வாகனங்கள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் சிவகங்கை, மதுரை, வேலூர், அரியலூர், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் முக்கியப் பிரமுகர்கள் வரவேற்புப் பணிக்காக புதிய சீருந்துகளும், திருவள்ளூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கு 4 சீருந்துகளும் என, 10 வாகனங்கள் ரூ.1.82 கோடி செலவில் வழங்கப்படும்.

2. கிராம நிருவாக அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவித்தபடி, அனைத்து கிராம நிருவாக அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், நலப் பணிகள் மக்களுக்கு எளிதில் சென்றடையவும், 8,751 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் மேலும் 1,000 கிராம நிருவாக அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி ரூ.4.00 கோடி செலவில் வழங்கப்படும்.

3. துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய டேப்லெட் கணினிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வருவாய்த் துறையில் நடைபெறும் பணிகள் தொடர்ந்து கணினிமயமாக்கப்பட்டு வருவதால், மாவட்டங்களில் நடைபெறும் பணிகளின் விவரத்தினை

அரசுக்குத் தெரிவிக்கும் வகையிலும் மற்றும் அரசின் திட்டங்கள் உடனுக்குடன் மக்களைச் சென்றடையும் வகையிலும், நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் இணைய வசதியுடன்கூடிய டேப்லெட் கணினிகள் ரூ.2.63 கோடி செலவில் வழங்கப்படும்.

4. வருவாய் நிருவாக ஆணையரகத்தில் இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர் நிலை பணியிடங்களை உருவாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் வருவாய் நிருவாக இணை ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு துணை ஆணையர் (நிருவாகம்) மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்ட ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு துணை ஆணையர் (திட்டங்கள்) என்று இரண்டு பணியிடங்கள் மறு ஈடுபடுத்தல் (Re-deployment) மூலம் உருவாக்கப்படும்.

5. போட்டோ சின்கோ அச்சகத்தினை நவீனமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நில அளவை வரைபடங்களை நவீன உத்தியுடன் அச்சிடும்பொருட்டு சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் இயங்கிவரும் “போட்டோ சின்கோ” அச்சகம் ரூ.1.00 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

6. நில ஆவண மேலாண்மை மையங்களை உருவாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நில ஆவணங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, சேமிப்பு அறை, அலுவலக செயல்பாட்டிற்கான அறை மற்றும் பொது மக்களுக்கான காத்திருப்பு வசதியுடன் கூடிய வரவேற்பு அறை ஆகிய கட்டமைப்புகளை உள்ளடக்கிய நில ஆவண மேலாண்மை மையங்கள் வட்ட அலுவலகங்களில் பல்வேறு கட்டங்களாக உருவாக்கப்பட்டு வருகின்றன. முந்தைய ஆண்டுகளில் வெளியான அறிவிப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 64 எண்ணிக்கையிலான நில ஆவண மேலாண்மை மையங்கள் செயலாக்கத்திற்கு வந்துள்ளன.

90 மையங்கள் விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும். தற்போது, நடப்பு ஆண்டில் கூடுதலாக 100 நில ஆவண மேலாண்மை மையங்கள் ரூ.25 கோடி செலவில் உருவாக்கப்படும்.

7. நில அளவை அலுவலகங்களைக் கணினிமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இணையவழி பட்டா மாறுதல் திட்டம் மற்றும் தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்துதல் திட்டம் ஆகிய அனைத்துத் திட்டங்களும் மாவட்ட மற்றும் மண்டல நில அளவை அலுவலகங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், அலுவலர்களின் பணிப் பதிவேடுகளை இலக்கமுறையில் பராமரிப்பதற்கும், ஒளிபிம்ப நகல் எடுப்பதற்கு ஏதுவாகவும், நிருவாகப் பிரிவுகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல்பொருட்டு, ரூ.60.50 இலட்சம் செலவில் கணிப்பொறி மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்படும்.

8. நில ஆவணங்களுடன் ஆதார் எண்ணை ஒருங்கிணைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைத் துல்லியமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டும் மற்றும் நிலம் தொடர்பான மக்கள் நலத் திட்டங்கள் பயனீட்டாளர்களை முறையாகச் சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டும், நில ஆவண தரவு தளத்துடன் நில உரிமைதாரர்களின் ஆதார் எண்ணை ஒருங்கிணைப்பது மிகவும் பயனுள்ளதாகும். எனவே, ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களுடன் நில உரிமைதாரர்களின் ஆதார் எண்ணை ஒருங்கிணைக்கும் பொருட்டு, சிறப்புச் செயலாக்க நடவடிக்கை சோதனை முறையில் ஒரு வட்டத்தில் செயல்படுத்தப்பட்டு, இதர வட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

9. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 14 வட்டங்களில் வட்டத் தரவு மையங்களை ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நில ஆவணங்களை நிகழ் நிலைப்படுத்துதல் மற்றும் பராமரிக்கும் பொருட்டு, ரூ.84.00 இலட்சம் செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 14 வட்ட அலுவலகங்களில் வட்டத் தரவு மையங்கள் உருவாக்கப்படும்.

10. இணையவழி பட்டாவுடன் புலப்படம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இணையவழி பட்டாவுடன் புலப்படத்தினை இணைத்து வழங்கும்பொருட்டு, கணினிப்படுத்தப்பட்டு வரும் புலப்படங்கள் யாவும் நில ஆவண தரவுத் தளத்துடன் ஒருங்கிணைக்கப்படவுள்ளன. இதன்பொருட்டு அனைத்து மாவட்ட நில அளவை அலுவலகங்களிலும் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டு வருகின்றன. முந்தைய ஆண்டுகளின் அறிவிப்பினை அடிப்படையாகக்கொண்டு, பெரம்பலூர் வட்டத்தில் மேற்காணும் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மொத்தமுள்ள 54 இலட்சம் புலப்படங்களில் 39 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, கணினிப்படுத்தப்பட்டுள்ள புலப்படங்களை பட்டாவுடன் வழங்கும் பொருட்டு, அனைத்து வட்டங்களுக்கும் மேற்காணும் திட்டமானது படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

பிற்பகல் 4-20

11. நில அளவை துணை ஆய்வாளர்கள் மற்றும் வட்ட ஆவண வரைவாளர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இணையவழி பட்டா மாறுதல் திட்டம் அனைத்து வட்ட அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. மையக் கணினியில் பராமரிக்கப்பட்டு வரும் நில ஆவண தரவுத் தளத்தினை எளிதாக இயக்குதல் மற்றும் இணையம் வழியே பராமரிக்கும் பொருட்டு, இத்திட்டத்தில் தொடர்புடைய வட்ட அலவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 1,140 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 285 துணை ஆய்வாளர்களிலே, 124 துணை ஆய்வாளர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினை திறம்பட நிறைவேற்றும் பொருட்டு, எஞ்சியுள்ள 161 துணை ஆய்வாளர்கள் மற்றும் 285 வட்ட ஆவண வரைவாளர்களில் 126 வட்ட ஆவண வரைவாளர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் நடப்பு நிதியாண்டிலே ரூ.1.12 கோடி செலவில் வழங்கப்படும்.

12. அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் இணையவழி பட்டா மாறுதல் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 34 இலட்சம் எண்ணிக்கையிலான மொத்த நகர்ப்புற நில ஆவணங்கள் யாவும் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புற நில ஆவணங்களை கணினி வழியே பராமரிப்பதற்கான இணையம் சார்ந்த மென்பொருள் தயாரிக்கப்பட்டு, இணையவழி பட்டா மாறுதல் திட்டம் சென்னை மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புறங்களிலும் இணையம் வழி பட்டா மாறுதல் திட்டத்தினை நிறைவேற்றும்பொருட்டு, மேற்காணும் திட்டம் இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் நீட்டிக்கப்படும்.

13. நத்தம் நிலங்களுக்கு இணையவழி பட்டா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, முந்தைய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை அடிப்படையாகக் கொண்டு, அனைத்து நத்தம் நில ஆவணங்களும் (1.37 கோடி) கணினிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, நத்தம் நிலங்களுக்கான இணைய வழி பட்டா வழங்கும்பொருட்டு திட்ட நிரல் தயார் செய்யப்படும். நடப்பாண்டில் நத்தம் நில ஆவணங்கள் யாவும் இணையம் சார்ந்த மென்பொருள்மூலம் பராமரிப்பிற்குக் கொண்டு வரப்பட்டு, இணைய வழி பட்டாக்கள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 41-ல், 134 வெட்டுத் தீர்மானங்களும், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மானியக் கோரிக்கை எண் 51-ல், 46 வெட்டுத் தீர்மானங்களும், ஆக மொத்தம் 180 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய பதில் ஓரளவுக்கு திருப்திகரமாக இருக்குமென்று நான் நம்புகிறேன். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்

தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டு, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தாலுகாக்களைப் பிரிக்கும்பொழுது, ஏற்கெனவே இருக்கின்ற தாலுகாவிற்கு அருகில் அமைந்திருக்கின்ற கிராமங்களைக்கூட, அந்தக் கிராம மக்களைக் கேட்காமல், அரசு அதிகாரிகள் அவர்களுடைய வசதிக்கேற்ப, புதிய தாலுகாவோடு சேர்த்துவிடுகிறார்கள். கண்டாச்சிபுரம் தாலுகாவிலே, மணலூர்பேட்டைக்கு அருகில் இருக்கின்ற அந்தக் கிராமங்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதேபோல, என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதியிலே இருக்கும் வேடந்தவாடி போன்ற கிராமங்களெல்லாம், அருகில் இருக்கின்ற திருவண்ணாமலை ஒன்றியத்தில் வரமுடியாத அளவுக்கு, அவற்றையெல்லாம் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே, புதிய வட்டங்கள் பிரிக்கப்படும்பொழுது, மக்களுடைய கருத்துகளைக் கேட்டு, நீங்கள் அதனை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டங்கள் பிரிக்கப்படுகிறபோது, மக்களுடைய எண்ணங்கள் பிரதிபலிக்கப்படவில்லை; மக்களிடத்திலே கேட்கவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அவ்வாறு இல்லை; அலுவலர்கள் உரிய கூட்டங்களை நடத்துகிறார்கள். அவர்களுடைய வசதிக்கேற்ப தகவல்களை, செய்திகளை அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அதன் அடிப்படையிலே, மாவட்ட நிருவாகம் அனுப்புவதை மட்டும் வைத்து நாம் வட்டங்களைப் பிரிப்பதில்லை. இதற்கு உயர்மட்டக் குழுவும் இருக்கிறது. அந்த உயர்மட்டக் குழுவிலே வருவாய் நிருவாக ஆணையாளர் அவர்களும், நில நிருவாக ஆணையாளர் அவர்களும், நிலச் சீர்திருத்த ஆணையாளர் அவர்களும்*

இருக்கின்றார்கள். அவர்கள் மறுபடியும் அந்த மக்களிடத்திலே நேரடியாகச் சென்றுதான், இதை நடைமுறைப்படுத்துகின்றார்கள். திரும்பவும் மக்கள் வசதிக்கேற்ப, ஏதேனும் அதிலே கோரிக்கை இருக்குமேயானால், அதையும் திருத்தி அரசாணை வெளியிட வழிமுறைகள் இருக்கின்றன. கிராமங்களைச் சேர்ப்பதற்கும், நீக்குவதற்கும் அதிலே வழிமுறைகள் இருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியபோது, "தயார் செய்துவிட்டுப் படியுங்கள்; பேசுங்கள்" என்று தொடர்ந்து சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறிக்கொண்டே இருந்தார். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தயார் செய்துவிட்டு, அவர்கள் மனதில் வைத்துக்கொண்டு, மானியக் கோரிக்கைமீது விவாதம் செய்யலாம். அதில் நீங்கள் அறிவிப்பு கொடுக்கும்பொழுதே, விவாதம் என்றுதான் கூறியிருக்கிறீர்கள். நாங்கள் எழுதி வைத்துக்கொண்டு வந்து படிக்க வேண்டுமென்று கூறவில்லை. அந்த அடிப்படையில் நாங்கள் விவாதங்களில் பங்கேற்கிறோம். "தயாரித்து வந்து பேசவில்லை; தயாரித்து வந்து பேசவில்லை; படிக்கவில்லை" என்று குற்றச்சாட்டை முன்வைக்கிறார். இதுபோன்ற விமர்சனம், எனக்கு வருத்தமாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை.*

பிற்பகல் 4-25

திருமதி எஸ். விஜயதரணி: *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அதுபோன்று விமர்சனங்களை வைக்கும்போது, நாங்கள் ஏதோ தயாராக இல்லாமல் விவாதத்திற்கு வருகிறமாதிரி தெரிகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு)*

பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்து பதிவாகிவிட்டது. உட்காருங்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய மானியக் கோரிக்கை சம்பந்தமான பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். எனது தொகுதியான கடையநல்லூரிலே வட்டாட்சியர் அலுவலகம் நகர எல்லையிலே உருவாக்கப்படவேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடையநல்லூரின் எல்லையிலேயே வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்தித் தரப்படும் என்று உறுதியளித்தமைக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக, கடையநல்லூர் எல்லையிலே வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இரண்டு இடங்களைப் பரிந்துரை செய்திருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதனை எடுத்துச் சென்று, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அந்த இரண்டு இடங்களில் ஓர் இடத்தினைத் தேர்வு செய்து, வட்டாட்சியர் அலுவலகத்தை விரைவாக உருவாக்கித் தரவேண்டுமென மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. நன்றாகத் தயார் செய்து வந்துதான் இந்த அவையில் நீங்கள் பேசியிருக்கிறீர்கள் என்று நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றாகத்தான் பேசினீர்கள் என்று நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். பதிவு செய்துகொள்கிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நான்தான் "நீங்கள் நன்றாகப் பேசினீர்கள்" என்று சொல்லிவிட்டேனே! நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி. (குறுக்கீடு) அதற்காகத்தான் நான் உங்களைப் பேச அனுமதித்தேன். நீங்கள் தேவையில்லாத பொருள் குறித்துப் பேசினால், நான் என்ன செய்வது? வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கும்போது, கிராம

நத்தம், நத்தம் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவது குறித்துக் குறிப்பிட்டார். நகரத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பகுதிகளில் உள்ளவர்களுக்கு பட்டா வழங்க இயலவில்லை என்று நான் பேசும்போது குறிப்பிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், 'மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தவறாகப் பேசியுள்ளார். அவ்வாறெல்லாம் இல்லை; அனைவருக்கும் பட்டா கொடுக்கிறோம்' என்று பதிலளித்துள்ளார்கள். பதினைந்து நாட்களுக்கு முன்பாக மக்கள் தொடர்பு முகாமிலே நான் கலந்துகொண்டபோது மனுக்கள் வந்தன. அந்த மனுக்களுக்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறிய பதிலைத்தான் நான் இந்த அவையிலே குறிப்பிட்டுள்ளேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற்பேட்டைக்காக வல்லம், வடகம், பூதனூர், பல்லனூர் ஆகிய வருவாய்க் கிராமங்களில் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான தனியார் பட்டா நிலங்கள், அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக, 642.04 ஹெக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. வருவாய்க் கிராமங்களில் நில வழிகாட்டி மதிப்பினை 1-4-2012 முதல் தமிழக அரசு உயர்த்தவில்லை. நிலம் கையகப்படுத்தப்படும் இந்தச் சூழ்நிலையில், வழிகாட்டு நெறிமுறைகளை அந்தப் பகுதிகளிலும் அமல்படுத்தவேண்டும். 1-4-2012 ஆம் நாளின்படி வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்தினால்தான், அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைக்கும். ஆகவே, விடுபட்ட வருவாய்க் கிராமங்களை இணைத்துக்கொண்டு, அவர்களுக்கு முறையான இழப்பீட்டுத் தொகையை வழங்க அரசு முன்வரவேண்டும். நிலம் கையகப்படுத்தல் துறையான வருவாய்த் துறை, பதிவுத் துறை மூலமாக இந்த நடவடிக்கைகளை எடுக்க தங்கள் மூலமாகக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வல்லம், வடகம் சிப்காட் நிலத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த நிலங்கள் விவசாயிகளின் விருப்பத்திற்கு மாறாக எடுக்கப்படவில்லை. விவசாயிகளினுடைய ஒப்புதலோடுதான் எடுக்கப்பட்டுள்ளன. உரிய அரசாணை வழங்கப்பட்டு, நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள் கடையநல்லூரில் வட்டாட்சியர் அலுவலகம் அமைவதற்குரிய இடங்களைப்பற்றிச் சொன்னார்கள். அது, மாவட்ட நிருவாகத்தினுடைய ஆய்விலே இருக்கிறது என்பதை ஏற்கெனவே இந்த மன்றத்தில் நான் பதிவு செய்திருக்கிறேன். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்ரமணி அவர்கள் சொல்கிறபோது, "அவர் சொன்ன தகவல் தவறான தகவல்" என்று நான் சொன்னதாகச் சொன்னார். அது தவறான தகவல் இல்லை. வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழே, அதுகுறித்த விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த விதியைத் தளர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்த விவாதத்திற்குள்ளேயே நான் செல்ல விரும்பவில்லை. ஏன் அந்த விதியைத் தளர்த்தக்கூடாது என்று சொன்னால், எதிர்காலத்திலே நகரம் விரிவடைகிறபோது, அந்த நிலங்கள் தேவைப்படும் என்ற அடிப்படையிலேதான் வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழே அந்த விதி வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த விதியின்படிதான் தற்போது பட்டா வழங்கப்படுகிறது என்றுதான் நான் சொன்னேனேயொழிய, தவறான கருத்தை நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும், நான் சொன்ன கருத்தும் சரிதான். தற்போது, வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழே உள்ள அந்த விதிமுறைகளுக்குட்பட்டு பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.*

பிற்பகல் 4-30

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில எடுப்பைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் மத்திய நில எடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த மத்திய நில எடுப்புச் சட்டத்திலே இருக்கக்கூடிய அந்த நிவாரணங்களையெல்லாம் முழுமையாக ஆய்வு செய்வதற்கு நேரமும், காலமும், அவகாசமும் வேண்டுமென்ற அடிப்படையிலேயும், நில எடுப்புப் பணிகள் தடைபடக்கூடாது என்பதாலேயும், மாநிலத்திலுள்ள மூன்று சட்டங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று, மேதகு ஜனாதிபதி அவர்களிடத்தில் ஒப்புதல் பெற்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் ஏற்கெனவே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்களுக்கு, மத்திய நில எடுப்பிலே சொல்லியிருக்கக்கூடிய மீள் பணி அமர்வு என்கிற அந்த நிவாரணம் எல்லாம் இருக்கிறது. தற்காலிக நிவாரணத்தோடு, மத்திய நில எடுப்புச் சட்டத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிவாரணங்களும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,596,96,70,000/-, மூலதனக் கணக்கில் ரூ.75,56,38,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு

2016 செப்டம்பர் 1] [பேரவைத் தலைவர்]

வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,079,52,75,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்ன சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றப் பேரவை சார்பிலே ஐந்தாண்டிற்கு ஒருமுறை நியமிக்கப்படக்கூடிய குழுக்கள், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு உள்ளிட்ட 12 குழுக்கள் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. மன்னிக்கவும். ஆண்டிற்கு ஒருமுறை நியமிக்கக்கூடிய மேற்படி குழுக்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. எனவே, அந்தக் குழுக்கள் அமைக்கப்படக்கூடிய நிலை என்ன என்பதை தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை தக்க நேரத்தில் நான் அறிவிப்பேன். (குறுக்கீடு). அதுகுறித்து அறிவிப்பேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

பிற்பகல் 4-35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, O.A.P. விவாதத்தின்போது, நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ** என்று சொன்னேன். ** என்பதை எடுத்துவிட்டு, தக்க பதிலை சொன்னார்கள் என்று பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னபடி மாற்றிக்கொள்ளப்படுகிறது.*

7. அறிவிப்பு

சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள் மாட அனுமதிச் சீட்டு பெற்றுள்ள செய்தியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர்*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 செப்டம்பர் 1] [பேரவைத் தலைவர்]

அம்மா அவர்களின் ஆணையின்படி, சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகள் சட்டமுன்வடிவு பிரிவு-2-லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 2-9-2016 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 2-9-2016 (வெள்ளிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

நாளை, 2-9-2016 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-9-2016) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

56. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகளை இயற்றியது குறித்து நிதி (உள்ளாட்சி நிதி)த் துறையின் 24-8-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 240-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2014) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

57. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

58. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

59. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

60. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 37(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

61. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

62. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2016 செப்டம்பர் 1]

63. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

64. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கிகளின் இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

65. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

66. 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

67. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

68. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

69. 2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

70. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை.

[1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

71. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

138. மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

139. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

140. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

141. தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மற்றும் இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

இணைப்பு

(457ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 41—வருவாய்த் துறை

மானியக் கோரிக்கை எண் 51—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

"அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும் ஏழை, எளிய மக்களின் துயரங்களைக் களைந்து அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த் துறையின் செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது."

—மாண்புமிகு முதலமைச்சர்.

1. முன்னுரை

இம்மாநிலத்தில் வருவாய்த் துறை, நிருவாகத் துறையின் அமைப்பில் பாரம்பரிய பெருமைமிக்க துறையாகும். இத்துறை நிருவாக அமைப்பின் முதுகெலும்பாகத் திகழ்வதோடு, சமுதாய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குப் பெரும்பங்கு வகிக்கிறது. தவிர்க்க இயலாத சூழ்நிலைகள் ஏற்படும் சமயத்தில் இத்துறை முன்னின்று மக்களுக்குப் பணியாற்றி வருகிறது. மக்களின் உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பதிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்கிறது. நில ஒப்படை மற்றும் அத்தியாவசியமானவர்களுக்கு மிகை நிலங்களை நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் பகிர்ந்தளித்ததின்மூலம் மாநிலத்தில் சமுதாய சமத்துவக் கோட்பாட்டை உருவாக்கும் முயற்சியில் வருவாய்த் துறை பெரும்பங்கு வகிக்கிறது. இத்துறை, பேரிடர் மேலாண்மை, சமூகப் பாதுகாப்புத் திட்டம், நில வருவாய் ஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், நில ஒப்படை, நில எடுப்பு, நில சீர்திருத்தம் மற்றும் நகர்ப்புற நிலவரி நிர்ணயித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது.

[2016 செப்டம்பர் 1

பொது மக்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் வருவாய்த் துறையின் பங்கு மிக முக்கியமானதாகும். சமூகம் அல்லது மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு ஏதுவாக, மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலகங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன:

- வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத் துறை ஆணையரகம்.
- நில நிருவாக ஆணையரகம்.
- நிலச் சீர்திருத்த ஆணையரகம்.
- நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம்.
- நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையரகம்.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் பல்வேறு அலுவலர்களுடன் இணைந்து மேற்கண்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. மாவட்ட ஆட்சியருக்கு உறுதுணையாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் துணை நிலை ஊழியர்கள் செயல்படுகிறார்கள்.

2. வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

வரலாற்றுரீதியாக அரசின் முக்கியத் துறையாக விளங்கும் வருவாய்த் துறை, பொது மக்களுக்கு பயன்தரக்கூடிய பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் துறையாக விளங்குகிறது. வருவாய் நிருவாகப் பணிகளுடன் அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் இத்துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் நலத் திட்டங்கள் மற்றும் நிவாரண உதவிகள் மக்களுக்கு எளிதாகச் சென்றடைய ஏதுவாக, "அம்மா திட்டம்" என்ற மகத்தான திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், விலையில்லா வேட்டிகள்/ சேலைகள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடரை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை

2016 செப்டம்பர் 1]

நடவடிக்கை மேற்கொள்வதிலும், நிவாரணம் வழங்குவதிலும் இத்துறை முழுமையான பங்கு வகிக்கிறது.

2.1 மாநிலத்தின் வருவாய் எல்லைகள்

பொதுமக்கள் எளிதாக அணுகும் பொருட்டும், மேம்பட்ட சேவையை வழங்கும் பொருட்டும், வருவாய் நிருவாகத் துறை அவ்வப்போது விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. புதிய வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்களை அவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தேவைக்கேற்ப உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, 2012-2013 ஆம் ஆண்டில் 9 புதிய வட்டங்களும், 2013-2014 ஆம் ஆண்டில் 25 புதிய வட்டங்களும், 2014-2015 ஆம் ஆண்டில் 15 புதிய வட்டங்களும், 2015-2016 ஆம் ஆண்டில் 16 புதிய வட்டங்களும் என மொத்தம் 65 புதிய வட்டங்களும், 2011 முதல் 2016 வரை 9 புதிய வருவாய்க் கோட்டங்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி உருவாக்கி, வரலாற்று சாதனை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது, தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களும், 85 வருவாய்க் கோட்டங்களும், 285 வருவாய் வட்டங்களும், 1,188 குறுவட்டங்களும், 16,682 வருவாய்க் கிராமங்களும் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

அட்டவணை 2.1

தமிழ்நாட்டில் உள்ள வருவாய்க் கோட்டங்கள்/வட்டங்கள்/குறு வட்டங்கள் மற்றும் வருவாய்க் கிராமங்களின் விவரங்கள்

வ. எண்	மாவட்டம்	வருவாய்க் கோட்டங்கள்	வட்டங்கள்	குறுவட்டங்கள்	வருவாய்க் கிராமங்கள்
1.	அரியலூர்	2	3	15	175
2.	சென்னை	2	10	40	55
3.	கோயம்புத்தூர்	3	10	38	295
4.	கடலூர்	3	9	32	883
5.	தருமபுரி	2	7	23	470
6.	திண்டுக்கல்	3	9	40	359
7.	ஈரோடு	2	9	34	375

வ. எண்.	மாவட்டம்	வருவாய்க் கோட்டங்கள்	வட்டங்கள்	குறு வட்டங்கள்	வருவாய்க் கிராமங்கள்
8.	காஞ்சிபுரம்	4	13	68	1137
9.	கன்னியாகுமரி	2	4	18	188
10.	கரூர்	2	6	20	174
11.	கிருஷ்ணகிரி	2	7	29	636
12.	மதுரை	3	10	51	604
13.	நாகப்பட்டினம்	2	8	31	523
14.	நாமக்கல்	2	7	32	391
15.	பெரம்பலூர்	1	4	11	152
16.	புதுக்கோட்டை	3	12	45	757
17.	இராமநாதபுரம்	2	8	38	400
18.	சேலம்	4	13	44	631
19.	சிவகங்கை	2	8	39	521
20.	தஞ்சாவூர்	3	9	50	754
21.	நீலகிரி	3	6	15	54
22.	தேனி	2	5	17	99
23.	தூத்துக்குடி	3	8	41	468
24.	திருச்சிராப்பள்ளி	4	11	43	502
25.	திருநெல்வேலி	3	15	60	559
26.	திருப்பூர்	3	9	33	350
27.	திருவள்ளூர்	4	12	54	706
28.	திருவண்ணாமலை	2	11	52	1064
29.	திருவாரூர்	2	7	27	500
30	வேலூர்	3	13	53	841
31.	விழுப்புரம்	4	13	56	1459
32.	விருதுநகர்	3	9	39	600
	மொத்தம்	85	285	1188	16682

2.2. வருவாய் நிருவாக பணியாளரமைப்பு

வருவாய் நிருவாகத் துறையில், கிராம உதவியாளர் முதல் துணை ஆட்சியர் பணி நிலை வரை 51,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.2

வருவாய் நிருவாக பணியாளரமைப்பு

வ. எண்	பணியிடத்தின் பெயர்	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	துணை ஆட்சியர்	491
2.	வட்டாட்சியர்	1721
3.	துணை வட்டாட்சியர்	2107
4.	கண்காணிப்பாளர்/சுத்த நகல் கண்காணிப்பாளர்/ உதவி கணக்காளர்	85
5.	வருவாய் உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட)	6986
6.	வருவாய் இளநிலை உதவியாளர்	3019
7.	தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர்/ காசாளர்/ தொலைபேசி/ நிகரி இயக்குபவர்	1453
8.	ஓட்டுநர்	943
9.	பதிவுரு உதவியாளர்/ பதிவுரு எழுத்தர்/ படிபெருக்கி இயக்குபவர்/நகல் எடுப்பவர்	819
10.	அலுவலக உதவியாளர்	3458
11.	காவலர்/ மசால்சி/ தோட்டக்காரர்/ துப்புரவாளர்	648
12.	கிராம நிருவாக அலுவலர்	12614
13.	கிராம உதவியாளர்	16775
	மொத்தம்	**51119**

2.3. கிராம நிருவாகம்

வருவாய் நிருவாகத்தின் அடிப்படை அலகாக கருதப்படுவது கிராமம் ஆகும். மாநிலத்தில் 16,682 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. கிராமத்தின் பொறுப்பு அலுவலராக கிராம நிருவாக அலுவலர்களும்,

அவர்களுக்கு உதவி செய்திட கிராம உதவியாளர்களும் உள்ளனர். அனைத்து வருவாய்க் கிராமத்திற்கும், கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் அரசின் கிராம அளவிலான பிரதிநிதிகளாகக் கருதப்படுவதுடன், அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றனர். கிராம நிருவாகம், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதுடன் உடனடியாக நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகிறது. கிராம நிருவாக அலுவலர்கள், அரசிற்குச் சொந்தமான அனைத்து நிலங்களைப் பாதுகாத்தல், கிராம ஆவணங்கள் மற்றும் கிராமக் கணக்குகள் பராமரித்தல் ஆகிய பொறுப்புகளைக் கவனித்து வருகிறார்கள்.

2.3.1. கிராம நிருவாக அலுவலர்களுக்கு/குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல்

கிராம நிருவாகத்தை நவீனமயமாக்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். நவீன தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நில ஆவணங்கள் மேம்படுத்துவதன்மூலம் ஒளிவுமறைவற்ற நிருவாக அமைப்பினை உருவாக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். அதன்படி, 8,751 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அச்சுப்பொறியுடன் கூடிய மடிக்கணினி, ரூ.25.79 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மடிக்கணினியை இயக்க பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் உள்ள அனைத்து குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு கணினிப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

2.4. வருவாய்த் துறை அலுவலகக் கட்டடங்கள்

மாவட்ட நிருவாகத்தில் வருவாய்த் துறையின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், பணிச்சூழலை மேம்படுத்தும் பொருட்டும், பொது மக்கள் எளிதாக அணுகி பயன்பெறவும், வருவாய்த் துறைக்குத் தேவைப்படும் அலுவலகக் கட்டடங்கள்/ குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு

2016 செப்டம்பர் 1]

வசதிகளை முன்னெப்போதும் இல்லாத அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து உருவாக்கி வருகிறார்கள்.

2.4.1. மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2016 வரை தஞ்சாவூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் ஆகியவை ரூ.121.78 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.57.47 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடங்கள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

2.4.2. வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2016 வரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் ஆகிய 4 வருவாய்க் கோட்டங்களுக்கு ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை மற்றும் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் ஆகிய 2 வருவாய்க் கோட்டங்களுக்கு ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

2.4.3. வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2015 வரை ரூ.134.14 கோடி மதிப்பீட்டில் 63 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசால் நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 2015-2016 ஆம் ஆண்டில் 32 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.66.02 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் ஈரோடு

மாவட்டத்தில், பெருந்துறை வட்டத்திற்கு பழைய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2.4.4. வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

2011 முதல் 2015 வரை ரூ.4.03 கோடி செலவில் 29 புதிய குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில், 27 குடியிருப்புடன் கூடிய புதிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் ரூ.3.14 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 2015-2016 ஆம் ஆண்டு 25 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.3.62 கோடி செலவில் கட்ட அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2.4.5. கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2016 வரை ரூ.14.33 கோடி செலவில், 231 புதிய கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 182 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் ரூ.11.69 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. முதன்முறையாக மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம நிருவாக அலுவலகங்களையும் புனரமைத்திட முடிவு செய்து முதற்கட்டமாக 5,000 கிராம நிருவாக அலுவலகங்களைப் புனரமைத்திட தலா ரூ.50,000/- வீதம் ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டு இரண்டாம் கட்டமாக 3,000 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களைப் புனரமைக்க தலா ரூ.50,000/- வீதம் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5. நில வருவாய்

தமிழ்நாட்டில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

2016 செப்டம்பர் 1]

நில வகைப்பாடு	பரப்பளவு
நஞ்சை நிலங்கள்	**1 6,57,676 ஹெக்டேர்**
புஞ்சை நிலங்கள்	**67,80,080 ஹெக்டேர்**

தமிழ்நாட்டிலுள்ள பல வகையான நிலங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிலவரி வசூலிக்கப்பட்டு வருகிறது:

வ. எண்	விவரம்	தொகை / ஹெக்டேர்
1.	புஞ்சை நிலத்திற்குத் தீர்வை	ரூ.5/–
2.	நஞ்சை நிலத்திற்குத் தீர்வை	ரூ.12/–
3.	ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை	ரூ.12/–
4.	பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை	ரூ.1/–

வருவாய் தீர்வாய நிகழ்வின்மூலம் அனைத்து வருவாய் கணக்குகளும் ஜமாபந்தி திட்டத்தில் முடிக்கப்படுகின்றன. நில வருவாய் ஒவ்வொரு பசலி வருடமும், ஜூலை 1 ஆம் தேதி முதல் ஜூன் 30 வரை வசூலிக்கப்படுகிறது. 1,424 பசலி வருடத்தில் (2014-2015), நிலுவை நிலவரியினையும் சேர்த்து மொத்த நிலவரி ரூ.14.26 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 1,425 பசலி வருடத்திற்கான (2015-2016) உத்தேச நில வரி கேட்பு ரூ.5.69 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2.6. அம்மா திட்டம்

"அம்மா திட்டம்" (அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குதல்) (Assured Maximum service to Marginal people in All villages) *என்ற புதுமையான திட்டமானது 24-2-2013 முதல் வருவாய்த் துறையின்மூலம் துவக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா திட்டத்தினை சிறப்பாக*

செயல்படுத்திய வருவாய்த் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் மிக சிறந்த ஆளுமைக்கான விருது (Best Practices Award for Improvement of Quality Delivery System Ensuring Good Governance) ஆகஸ்ட் 15, 2013 அன்று வழங்கப்பட்டது. தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்களும் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களும் பயனடையும் வகையில் அம்மா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் முகாம் நடத்துவதற்கு கால அட்டவணை தயாரிக்கப்பட்டு அக்கிராமங்களில் பிரதி வாரம் வெள்ளிக்கிழமைதோறும், வட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் முகாமிட்டு, அரசின் பல்வேறு நலத் திட்டங்களைப் பெறுவது குறித்த வழிகாட்டுதல்களை அளிப்பதோடு மட்டுமல்லாது, அவை மக்களுக்கு அவரவர் இருப்பிடத்திலேயே வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது மக்களைத் தேடி வருவாய்த் துறை என்ற வகையில் கிராமங்களுக்கே அதிகாரிகள் நேரில் சென்று அவர்களது குறைகளை அங்கேயே நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தின் சிறப்பம்சம், முகாம் நடைபெறும் நாளில் பெறப்படும் மனுக்களில் தகுதியான மனுக்களின்மீது உரிய ஆணை உடன் பிறப்பிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்மா திட்டம் முகாமினை நடத்துவதற்கு ஒவ்வொரு முகாமிற்கும் ரூ.5,000/- வீதம் ரூ.14,63,57,500/- வழங்கப்பட்டுள்ளது.

அம்மா திட்டத்தின்மூலம் கடந்த நான்கு கட்டங்களில், மாநிலத்தில் உள்ள அனைத்து வருவாய்க் கிராமங்களில் நடைபெற்ற முகாம்களில் 53,97,925 மனுக்கள் பெறப்பட்டு, 53,55,334 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

2.6.1. மக்கள் குறை தீர்க்கும் திட்டம்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள்/ வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் பயன்களை முழுமையாக கண்காணிப்பதற்கு ஒரே சீராக பயன்படுத்தும் வகையிலான

பொதுவான ஒரு மென்பொருள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலமாக மனுக்களின் நிலையினை இணையதளத்தின் வழியாக அறியலாம்.

2.6.2. மக்கள் தொடர்பு முகாம்

மக்கள் தொடர்பு முகாம் திட்டமானது மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று நடத்தப்படுகிறது. இத்திட்டம் மிகவும் தொலைவில் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நாளில் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழு அக்கிராமத்திற்கு சென்று குறைகளை நேரில் கேட்டறிந்து, கிராம பொது மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்கின்றனர்.

மக்கள் தொடர்பு முகாம் மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண். 244, வருவாய் [வ.நி.3(2)] துறை, நாள் 8-8-2011-ன்படி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வருவாய்க் கோட்டாட்சியர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு முகாம் நடைபெறவுள்ள முந்தைய மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திற்கு சென்று மனுக்களைப் பெற்று அவற்றை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து, மனுதாரர்களுக்கு அம்முகாம் நடைபெறும் நாளன்று நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

2.7. மின் ஆளுமை திட்டம்

வருவாய்த் துறையில் பொது மக்களுக்கு விரைவில் சேவை அளிக்கும் வகையில் மின் ஆளுமை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, சான்று பெற பொது சேவை மையங்கள் மூலமாக எவ்விடத்திலும் எளிதில் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து வருமானச்

சான்று, பிறப்பிடச் சான்று, சாதிச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று மற்றும் ஆதரவற்ற மகளிருக்கான சான்று கோரி பெறப்படும் மனுக்கள் மின் ஆளுமை திட்டத்தின்மூலம் பெறப்பட்டு, உரிய அலுவலர்களால் விரைந்து பரிசீலிக்கப்பட்டு, டிஜிட்டல் முறையில் சான்றுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சான்றுகள் குறித்த நிலுவை இனங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, நடப்பு ஆண்டில் மொத்தமாக சுமார் 74,50,176 சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மின் ஆளுமை திட்டத்தின்கீழ் பொது சேவை மையங்களில் ஆண்டுதோறும் பல புதிய சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன..

இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வருவாய் நிருவாக ஆணையரகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர்கள் அலுவலகங்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் அலுவலக நிருவாகப் பணிகளில் கடிதங்கள் பெறப்படுதல், கோப்புகளில் நடவடிக்கை நிலையினைக் கண்டறிதல், ஆய்வு செய்தல் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு, மின் ஆளுமையின்கீழ் கொண்டு வரப்பட்டு நிருவகிக்கப்படுகின்றன.

2.8. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைக் காப்பாற்ற சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆதரவற்ற மற்றும் ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயனடைந்து வருகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1,000/- ஆக 2011 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2015-2016 ஆம் ஆண்டிற்கு ரூ.3,962.81 கோடியாக உயர்ந்துள்ளது. 31-3-2016 அன்று 30.74 இலட்சம் பயனாளிகள் கீழ்க்காணுமாறு பயன்பெற்று வருகின்றனர்:

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரம்

வ. எண்.	திட்டத்தின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை 31.3.2016 வரை
1.	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	1359010
2.	இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	58355
3.	இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	558073
4.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	207422
5.	ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்	425335
6.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	321493
7.	ஆதரவற்ற/ கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	118909
8.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	21165
9.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்	4461
	மொத்தம்	**30,74,223**

[2016 செப்டம்பர் 1

மத்திய அரசு கீழ்க்காணும் ஓய்வூதிய திட்டங்களுக்கு பகுதியாக நிதி வழங்குகிறது

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதிக்கான நிர்ணயம்	மத்திய அரசின் பங்களிப்பு
1	இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	60 முதல் 79 வயது வரை	ரூ.200/–
		80 வயது மற்றும் அதற்கு மேல்	ரூ.500/–
2	இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	18 முதல் 79 வயது வரை	ரூ.300/–
3	இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்	40 முதல் 79 வயது வரை	ரூ.300/–

பயனாளிகளின் நலனை கருத்திற்கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் படியான ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளைத் தளர்த்தி, வயது வந்த மகன்/மகள் இருந்தாலும், அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக்கோட்டிற்குகீழ் இருந்தால் ஓய்வூதியம் பெறும் வகையில், ஏப்ரல் 2015 இல் அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் அசையாத சொத்தின் மதிப்பு ரூ.5,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு, தற்பொழுது ரூ.50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 27, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22-2-2016-ன்படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற

ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும், ஊனத்தின் தன்மை 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகக் குறைத்தும் ஊனமுற்றோருக்கு ஓய்வூதியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிர் புள்ளி அட்டையைப் பயன்படுத்தி, பயனாளிகளை உறுதி செய்து, வங்கிகள்மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. 31-3-2016 அன்று மொத்தமுள்ள 30.74 இலட்சம் பயனாளிகளில் 23.46 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் மூலமாகவும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது:

- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.
- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

2.9. விபத்து நிவாரணத் திட்டம்

கட்டிடத் தொழில், விவசாயத் தொழில் போன்ற 44 வகையான உடலுழைப்பு தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின்மூலம் மரணமடையும் போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ரூ.15,000/-லிருந்து ரூ.20,000/-ஆக 31 டிசம்பர் 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

[2016 செப்டம்பர் 1

2.9.1. நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.10,000/- என்பதை ரூ.20,000/- ஆக 31 டிசம்பர் 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

2.10. விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் – பொங்கல் – 2016

2016 பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா சேலைகள்/வேட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் 1,67,28,854 சேலைகளும் மற்றும் 1,67,19,123 வேட்டிகளும் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இத்திட்டத்தில், அனைத்து தகுதியான பயனாளிகளும் பயன்பெறுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, தேசிய தகவலியல் மையத்தால் (NIC) பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மென்பொருளின்மூலம் இணையதளத்தில் பயனாளிகளின் விவரங்களைப் பதிவு செய்த பின்னரே பயனாளிகளுக்கு விலையில்லா சேலைகள்/வேட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

2.11. பள்ளிகள் மூலமாக மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்

மாணவ/மாணவியர்களுக்கு தேவைப்படுகின்ற பல்வேறு சான்றிதழ்கள் வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், கல்வி உதவித் தொகை பெறுவதற்கும் அத்தியாவசியமான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் பிறப்பிடச் சான்றிதழ் ஆகிய இம்மூன்று சான்றிதழ்களும் பள்ளிகளின்மூலம் மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

2016 செப்டம்பர் 1]

அரசாணை (நிலை) எண் 184, வருவாய்த் [வ.நி 3(2)] துறை, நாள் 5-6-2012-ன் படி, மேற்கண்ட சான்றிதழ்கள் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் இடர்பாடுகளை நீக்கும் வகையில், 6 ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகள் மூலமாகவே, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2015-2016 ஆம் கல்வி ஆண்டில், மேற்குறிப்பிட்ட சான்றுகள் வழங்கும் பணி இணையதளம்மூலம் செயல்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இக்கல்வியாண்டில், 2,37,882 வருமான சான்றிதழ்களும், 3,57,318 சாதி சான்றிதழ்களும் மற்றும் 2,78,634 பிறப்பிடச் சான்றிதழ்களும், ஆக மொத்தம் 8,73,834 சான்றிதழ்கள் பள்ளிகள்மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2.12. தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர் புள்ளி பதிவு செய்தல்

உயிர் புள்ளி பதிவு செய்யும் பணியில் (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட) ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளி) ஆகியவை பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்படுகின்றன. இப்பணி, வருவாய்த் துறையின் பங்களிப்புடன் பாரத மின்னணுக் கழகம், பெங்களூரு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணி முன்னேற்றம் குறித்து மாநில ஒருங்கிணைப்பாளர் (State Co-ordinator)/முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ன்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில், 31-3-2016-ல் இதுவரை 6,76,98,914 நபர்களுக்கு பதிவுப் பணி மேற்கொள்ளப்பட்டு, 6,15,02,930 நபர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்த மக்கள் தொகையில் இதுவரை பதிவுப் பணி 93.83% மற்றும் ஆதார் அட்டைகள் வழங்கும் பணி 85.25% முடிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3

தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR - BME) மற்றும் ஆதார் அட்டைகள் 31–3–2016 வரை வழங்கப்பட்ட விவரப்பட்டியல்

வ. எண்	மாவட்டம்	உயிர் புள்ளி கணக்கெடுப்பு எடுக்க வேண்டிய மொத்த நபர்கள்	31.03.16 வரை கணக் கெடுக்கப் பட்ட மொத்த நபர்கள்	கணக் கெடுப்பு சதவீதம்	31.03.16 வரை விநியோகிக்கப் பட்ட மொத்த ஆதார் அட்டைகள்	சதவீதம்
1	விருதுநகர்	1942288	1837534	94.61	1770795	91.17
2	அரியலூர்	754894	764273	101.24	686762	90.97
3	திருநெல்வேலி	3077233	3037962	98.72	2796148	90.87
4	தருமபுரி	1506843	1493238	99.10	1368107	90.79
5	திருச்சிராப்பள்ளி	2722290	2611424	95.93	2462489	90.46
6	மதுரை	3038252	2773665	91.29	2721860	89.59
7	பெரம்பலூர்	565223	619251	109.56	506198	89.56
8	கன்னியாகுமரி	1870374	1707954	91.32	1671224	89.35
9	கரூர்	1064493	1021653	95.98	946771	88.94
10	தேனி	1245899	1229268	98.67	1098589	88.18
11	ஈரோடு	2251744	2178894	96.76	1983572	88.09
12	சேலம்	3482056	3348586	96.17	3063369	87.98
13	திருவள்ளூர்	3728104	3320959	89.08	3257571	87.38
14	புதுக்கோட்டை	1618345	1620085	100.11	1409271	87.08
15	தூத்துக்குடி	1750176	1686039	96.34	1523179	87.03
16	நீலகிரி	735394	723325	98.36	635772	86.45
17	நாகப்பட்டினம்	1616450	1448638	89.62	1395780	86.35
18	காஞ்சிபுரம்	3998252	3530609	88.30	3427620	85.73
19	திண்டுக்கல்	2159775	1995186	92.38	1847443	85.54
20	வேலூர்	3936331	3657892	92.93	3352834	85.18
21	நாமக்கல்	1726601	1593884	92.31	1469039	85.08
22	திருவாரூர்	1264277	1125807	89.05	1070938	84.71
23	கோயம்புத்தூர்	3458045	3156897	91.29	2929067	84.70
24	தஞ்சாவூர்	2405890	2214304	92.04	2021742	84.03
25	கடலூர்	2605914	2382513	91.43	2185249	83.86
26	சிவகங்கை	1339101	1268237	94.71	1114729	83.24
27	விழுப்புரம்	3458873	3106695	89.82	2865944	82.86
28	திருவண்ணாமலை	2464875	2382755	96.67	2036186	82.61
29	கிருஷ்ணகிரி	1879809	1773555	94.35	1532678	81.53
30	இராமநாதபுரம்	1353445	1260332	93.12	1052334	77.75
31	சென்னை	4646732	4652813	100.13	3472712	74.73
32	திருப்பூர்	2479052	2174687	87.72	1826958	73.70
	மொத்தம்	**72147030**	**67698914**	**93.83**	**61502930**	**85.25**

2016 செப்டம்பர் 1]

2.13. பேரிடர் மேலாண்மை

இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்த்திடும் பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதிலும், இவ்விடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதிலும், வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை மிக முக்கிய பங்காற்றி வருகிறது. இத்துறையானது, பல்வேறு இயற்கை இடர்பாடுகளின்போது அரசினால் மேற்கொள்ளப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கிறது.

2.13.1. மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை சட்டத்தின்படி, மாநிலத்தில் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட 'மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்' (State Disaster Management Authority) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாணையரகத்திற்கு உதவுவதற்காக மாநில அளவிலான செயற்குழு (State Executive Committee) ஒன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2.13.2. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை

அரசாணை (நிலை) எண் 488, வருவாய்த் துறை, நாள் 28-11-2013-ன்படி தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையை உருவாக்கி அதனை 1975 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்ய அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை 9-1-2014 அன்று முதல் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், இம்முகமைக்கான கழகப் புரிந்துணர்வு மற்றும் துணை விதிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இம்முகமையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் மற்றும் அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரை துணைத் தலைவர்களாகவும், 14 அரசுச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரை அமைப்பாளராகவும்

கொண்ட நிருவாகக் குழு நிருவகிக்கிறது. இது தவிர, இம்முகமைக்கென முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரை தலைவராகவும் மற்றும் 9 பிற உறுப்பினர்களையும் கொண்ட செயற் குழு ஒன்று உருவாக்கப்பட்டதுடன், சங்கத்தின் உறுப்பினர் செயலாளர் மற்றும் இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) அவர்களை இச்செயற் குழுவிற்கு குழு கூட்டுநராகவும் அரசு நியமித்துள்ளது.

துடிப்பான பேரிடர் மேலாண்மை பணியாளரமைப்பின் மூலமாக, அனைத்து விதமான பேரிடர்களின் எதிர்மறை பாதிப்புகளை குறைப்பதுடன், உயிர், உடமைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதாரத்தை குறைப்பதும், பேரிடர்கள்/ இயற்கை இடர்பாடுகளால் மாநிலம் பெற்றுள்ள பொருளாதார வளர்ச்சி நிலை பாதிக்கப்படாமல் காப்பதும் இம்முகமையின் முதன்மை நோக்கமாகும். மாநில அளவில் பேரிடர் நிகழ்வு தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும்பொருட்டு, மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயல் முகமையாக செயல்படுவதே இம்முகமையின் முதன்மைப் பணியாகும். இம்முகமையில் பேரிடர் மேலாண்மை, பேரிடர் தணிப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ரூ.1,481.80 கோடி மதிப்பீட்டில் கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டம் (CDRRP) உலக வங்கியின் நிதி உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேரிடர் மேலாண்மை தொடர்பான பணிகளை மாவட்ட அளவில் செயல்படுத்திட ஏதுவாக மாவட்ட அளவில், 'மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்' (District Disaster Management Authority) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

2.14. மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம்

2004 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்திற்கான பேரிடர் மேலாண்மை கொள்கையினை வெளியிட்டார். இக்கொள்கை மாநிலத்தின் பேரிடர் மேலாண்மைக் குறித்து முழுமையான ஆவணமாக உள்ளது. மேலும், பேரிடர்

மேலாண்மைச் சட்டம் 2005-ன்படி, மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.14.1. மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டம்

பேரிடர் மேலாண்மை சட்டம் 2005-ன்படி மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டம், அனைத்து மாவட்டங்களுக்கும் தயாரிக்கப்பட்டு, ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

2.14.2. தேசிய பேரிடர் மேலாண்மை சேவை முன்மாதிரித் திட்டம்

பேரிடர் மேலாண்மைச் மற்றும் பேரிடர் தணிப்புத் துறை அலுவலகத்தில் இயங்கிவரும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திலும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களிலும் துணைக்கோள் உதவியுடன்கூடிய தொலைத் தொடர்பு வலைப்பணி, கட்டுமானங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வலுவூட்டுவதற்கு ஏதுவாக, தேசிய பேரிடர் மேலாண்மை சேவை வழிகாட்டித் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

2.15. பருவமழை குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

வடகிழக்கு பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலையை ஆய்வு செய்யும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, தலைமைச் செயலாளர் தலைமையில் தொடர்புடைய துறைகளின் உயர்மட்ட அலுவலர்கள் பங்கேற்கும் கூட்டம் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியோரை உள்ளடக்கிய மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்படுவதுடன், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. இக்கூட்டத்தில் பெறப்படும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில், பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, காவல் துறை, பொது சுகாதாரத் துறை மற்றும்

[2016 செப்டம்பர் 1

பல்வேறு அரசுக் துறைகளின் ஒத்துழைப்புடன் பொது மக்கள் பெருமளவில் பங்கேற்கும் மாதிரி ஒத்திகை பயிற்சிகளும் (Mock Drill) நடத்தப்படுகின்றன.

2.15.1. மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம்

"மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம்" (State Emergency Operation Centre) மாநில நிவாரண ஆணையர்/வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் ஆண்டு முழுவதும் செயல்படுகிறது. இம்மையத்தில் இயற்கை இடர்பாடுகளின்போது பேரிடர்கள் தொடர்பாக முன்னறிவிப்பு தகவல்கள் பெறப்படுவதுடன், உரிய தொடர் நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படுகின்றன. இம்மையத்தில், காணொலிக் காட்சி வசதி, தொலைக்காட்சி, புயல் எச்சரிக்கை கருவி, தொலைபேசி, கணினி மற்றும் நிகரி வசதிகள் மட்டுமின்றி, பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக 1070 என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசி பயன்பாட்டில் உள்ளது. மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில், 24 மணி நேரமும் அலுவலர்கள் பணியில் உள்ளனர்.

2.15.2. மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையம்

மாவட்ட அளவில், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் (District Emergency Operation Centre) செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களிலும் தொலைபேசி, நிகரி, கணினி வசதிகள் உள்ளதுடன், பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக, 1077 என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசி பயன்பாட்டில் உள்ளது. இம்மையங்கள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பேரிடர் காலங்களில், தொலைத் தொடர்புகளை துரிதப்படுத்தும் நோக்கமாக, அனைத்து மாவட்டங்களுக்கும் வான்வழித் தொலைத் தொடர்பு (VHF) சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆகியவற்றின் முன்னறிவிப்புகளையும், அறிக்கைகளையும் தொடர்புடைய துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உடனடியாக அனுப்பி, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அவ்வப்போது தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2016 செப்டம்பர் 1]

தமிழ்நாட்டில் பரவலாக 397 இடங்களில் மழைமானி நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் பதிவாகும் மழையளவு புள்ளி விவரங்கள் மாநில நிவாரண ஆணையர்/ வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் நாள்தோறும் அகவலைதளம் (intra-site) மூலமாகப் பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.. இந்த மழைமானி நிலையங்கள், காலமுறைப்படி இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகளாலும், வருவாய்த் துறை அதிகாரிகளாலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

2.15.3. பேரிடரினால் பாதிக்கப்பட்டோருக்கான உயர்த்தப்பட்ட, நிவாரணத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, அரசாணை (நிலை) எண் 380, வருவாய்த் துறை, நாள் 27-10-2015-ன்மூலம் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:

வ. எண்	நிவாரண உதவி	முந்தைய நிவாரணத் தொகை	அதிகரிக்கப்பட்ட நிவாரணத் தொகை
1.	மனித உயிரிழப்பிற்கு	ரூ. 1,50,000	ரூ. 4,00,000
2	உடல் உறுப்பு இழப்பிற்கான நிவாரணம் (கண் அல்லது கால்)	ரூ. 35,000 (40% முதல் 75% உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு)	ரூ. 59,100 (40 % முதல் 60 % உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு)
		ரூ. 50,000 (75 %-க்கு மேல் உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு)	ரூ. 2,00,000 (60 %-க்கு மேல் உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு)
3.	படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நபர்களுக்கான நிவாரணம்	ரூ. 7,500 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சை பெறுபவர்களுக்கு)	ரூ. 12,700 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சை பெறுபவர்களுக்கு)
		ரூ. 2,500 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்குள் சிகிச்சை பெறுபவர்களுக்கு)	ரூ. 4,300 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்குள் சிகிச்சை பெறுபவர்களுக்கு)
4.	கால்நடை சேதம்		
அ)	கறவைஇனங்கள் (பசு, எருமை)	ரூ. 20,000	ரூ. 30,000
ஆ)	எருது/ ஒட்டகம் முதலியன	ரூ. 10,000	ரூ. 25,000
இ)	கன்று/ கழுதை முதலியன	ரூ. 5,000	ரூ. 16,000
ஈ)	ஆடு/ செம்மறியாடுகள்	ரூ. 2,000	ரூ. 3,000

வ. எண்	நிவாரண உதவி	முந்தைய நிவாரணத் தொகை	அதிகரிக்கப்பட்ட நிவாரணத் தொகை
5.	வேளாண் துறை		
அ)	வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை தூர்வாருதல்	ரூ.6,000 ஹெக்டேர் ஒன்றுக்கு	ரூ.12,200 ஹெக்டேர் ஒன்றுக்கு
ஆ)	மலைப்பகுதியிலுள்ள விளை நிலங்களில் இடிபாடுகளை அப்புறப்படுத்துவதற்கு	ரூ.6,000 ஹெக்டேர் ஒன்றுக்கு	
இ)	மீன் பண்ணைகள் தூர்வாருதல்/ சீரமைப்பு/ புனரமைப்பு	ரூ.6,000 ஹெக்டேர் ஒன்றுக்கு	
ஈ)	நிலச்சரிவு/ பனிச்சரிவு/ ஆற்றுப்போக்கு மாற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு	ரூ.15,000ஹெக்டேர் ஒன்றுக்கு	ரூ.37,500 ஹெக்டேர் ஒன்றுக்கு
5. (அ)	பாதிப்புக்குள்ளான வேளாண், தோட்டக்கலை மற்றும் நீண்ட காலப் பயிர் இனங்களுக்கு இடு பொருள் மானியத் தொகை		
	பயிர்	50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் சேதமடைந்த பயிர்களுக்கு	33 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் சேதமடைந்த பயிர்களுக்கு
அ)	பாசன வசதி அற்ற நிலங்களில் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு	ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு	ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு
ஆ)	பாசன வசதி பெற்ற நிலங்களில் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு	ரூ.9,880 ஹெக்டேர் ஒன்றுக்கு	ரூ.13,500 ஹெக்டேர் ஒன்றுக்கு
இ)	நீண்ட கால பயிர்களுக்கு	ரூ.9,880 ஹெக்டேர் ஒன்றுக்கு	ரூ.18,000 ஹெக்டேர் ஒன்றுக்கு
ஈ)	பட்டுபூச்சி வளர்ப்பிற்கு	ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு	ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு
6.	மீன்வளம்		
அ)	பகுதி சேதம் அடைந்த கட்டுமரங்களை பழுது நீக்கம் செய்வதற்கான நிவாரணம்	ரூ.2,500	ரூ.10,000
ஆ)	முழுமையாக சேதம் அடைந்த கட்டுமரங்களை பழுது நீக்கம் செய்தவற்கான நிவாரணம் (வலை உட்பட)	ரூ.7,500	ரூ.32,000
இ)	பகுதி சேதம் அடைந்த எப்.ஆர்.பி வல்லங்களுக்கு	—	ரூ.20,000
ஈ)	முழுவதுமாக சேதம் அடைந்த/ காணாமல் போன எப்.ஆர்.பி வல்லங்களுக்கு	—	படகின் விலை ரூ. 1.50 இலட்சம் என்ற கணக்கீட்டின் படி 50 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.75,000
உ)	பகுதி சேதம் அடைந்த இயந்திர படகுகளுக்கு	–	60 விழுக்காடு மானியம் என்ற அடிப்படையில், படகு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3,00,000

2016 செப்டம்பர் 1]

வ. எண்	நிவாரண உதவி	முந்தைய நிவாரணத் தொகை	அதிகரிக்கப்பட்ட நிவாரணத் தொகை
ஊ)	முழுவதுமாக சேதம் அடைந்த/ காணாமல் போன இயந்திர படகுகளுக்கு	–	35 விழுக்காடு மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக படகு ஒன்றுக்கு ரூ.5,00,000
எ)	கில்நெட் வலைகளுக்கு	–	ரூ.10,000 வலை ஒன்றுக்கு
ஏ)	ஒ.பி.எம்./ ஐ.பி.இ. இயந்திரங்கள் பழுது பார்ப்பதற்கு	–	ரூ.5,000 (இயந்திரம் ஒன்றுக்கு)
ஐ)	மீன் வளர்ப்பு பண்ணைகளுக்கு இடுபொருள் மானியமாக	ரூ.4,000 (ஹெக்டேர் ஒன்றுக்கு)	ரூ.8,200 (ஹெக்டேர் ஒன்றுக்கு)
7.	கைவினைஞர்கள்/ நெசவாளர்களுக்கான நிவாரணம்		
அ)	கைவினைஞர்களுக்கான உபகரணங்கள் இழப்பிற்கு	ரூ.2,000 (தொழிலாளர் ஒருவருக்கு)	ரூ.4,100 (தொழிலாளர் ஒருவருக்கு)
ஆ)	கைவினைஞர்களின் மூலப் பொருட்கள்/ முழுமையடைந்த தயாரிப்பு பொருட்கள் இழப்பிற்கு	ரூ.2,000 (தொழிலாளர் ஒருவருக்கு)	ரூ.4,100 (தொழிலாளர் ஒருவருக்கு)
8.	குடிசைகளுக்கான நிவாரணம்		
அ)	முழுமையாக சேதமடைந்த நிரந்தர வீடுகளுக்கு	ரூ. 25,000	ரூ.95,100 (வீடு ஒன்றுக்கு) சமவெளி பகுதிக்கு ரூ.1,01,900 (வீடு ஒன்றுக்கு) மலைப் பகுதிக்கு
ஆ)	பகுதியாக சேதமடைந்த நிரந்தர வீடுகளுக்கு	ரூ.1,500 (வீடு ஒன்றுக்கு)	ரூ. 5,200 (வீடு ஒன்றுக்கு)
இ)	சேதம் அடைந்த குடிசைகளுக்கு	ரூ.2,000 (குடிசை ஒன்றுக்கு)	முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ. 5,000
			பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.4,100
ஈ)	வீட்டுடன் கூடிய கால்நடை பட்டிகளுக்கு	—	ரூ.2,100 பட்டி ஒன்றுக்கு

2.15.4. பருவமழை 2015

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு 920.9 மி.மீ. ஆகும். இருப்பினும் 2015 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு 1212.00 மி.மீ. மழை கிடைக்கப்பெற்றுள்ளது. இது ஆண்டு சராசரி மழை அளவைக் காட்டிலும் 32 விழுக்காடு அதிகமாகும். 2015 ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தின்போது 286.5 மி.மீ. மழை பெய்துள்ளது. இது அக்காலத்தில் இயல்பான மழையளவான 321.2 மி.மீ.-ஐவிட 11 விழுக்காடு குறைவாகும். தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழையானது அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்கிறது. 2015 ஆம் ஆண்டில்

வடகிழக்கு பருவமழை 28-10-2015 அன்று தொடங்கியது. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் 673.3 மி.மீ. மழை பெய்துள்ளது. இது, அப்பருவ காலத்தின் இயல்பான மழையளவான 440.4 மி.மீ. மழையைவிட 53 விழுக்காடு அதிகமாகும்.

2.15.5. வடகிழக்கு பருவமழை 2015—ன்போது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் மற்றும் துரித நடவடிக்கைகளின் காரணமாக, 2015 பருவமழையின்போது ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் பெருமளவு குறைக்கப்பட்டதுடன், உயிர்சேதமும் தவிர்க்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை கண்காணித்ததுடன், நேரடியாகச் சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16-11-2015 அன்று நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தார்கள். 3-12-2015 அன்று வான் வழியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டு நிவாரண மற்றும் மீட்புப் பணிகளை விரைவுபடுத்தினார்கள். அவ்வாறே மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, பொது மக்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டன.

நிவாரண முகாம்கள்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி வடகிழக்குப் பருவமழை 2015 வெள்ளத்தின்போது, பாதிக்கப்பட்ட 23.51 இலட்சம் நபர்கள் மீட்கப்பட்டு 7,244 நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவ உதவிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள்

ஏற்படுத்தித் தரப்பட்டது. மொத்தம் 1.36 கோடி உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் மற்றும் இளம் சிறார்களுக்கும் 690 மெட்ரிக் டன் பால் பவுடர் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 5 இலட்சம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நாப்கின்கள் மற்றும் டயாப்பர்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மழை வெள்ளத்தின்போது பட்டா, கல்விச் சான்றுகள், ஆதார் அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், வங்கிக் கணக்கு புத்தகங்கள், வாகனப் பதிவுச் சான்றுகள், ஓட்டுநர் உரிமங்கள் போன்ற முக்கிய ஆவணங்களை இழந்தவர்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டன. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த 37,707 மாணவ மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் ஒரு செட்டு பள்ளிச் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன. 31,320 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 32.46 இலட்சம் பேருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

2.15.6. நிவாரணப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வெள்ள நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக தமிழக அரசு பல்வேறு நிதியிலிருந்து ரூ.3,039.24 கோடி ஒதுக்கீடு செய்து போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, வெள்ளப் பாதிப்பிலிருந்து ஒரு சில நாட்களில் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை மீட்டு தரப்பட்டது.

வ. எண்	அரசாணை எண் மற்றும் நாள்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
1.	அரசாணை எண்.403, வருவாய்த் (பே.மே-II) துறை, நாள் 17-11-2015	500.00
2.	அரசாணை எண் 431, வருவாய்த் (பே.மே-II) துறை, நாள் 15-12-2015	300.00
3.	அரசாணை எண் 430, வருவாய்த் (பே.மே-II) துறை, நாள் 15-12-2015	1000.00
4.	அரசாணை எண் 15, வருவாய்த் (பே.மே-II) துறை, நாள் 7-1-2016	500.00
5.	அரசாணை எண் 25, வருவாய்த் (பே.மே-II) துறை, நாள் 11-1-2016	340.79
6.	அரசாணை எண் 84, வருவாய்த் (பே.மே-II) துறை, நாள் 15-2-2016	398.44
	மொத்தம்	3039.24

வெள்ள பாதிப்புகள் குறித்து மதிப்பீடு செய்ய தமிழகம் வந்த மத்திய குழு, வெள்ள பாதிப்புகளை சீர்செய்ய தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பாராட்டு தெரிவித்தது.

2.16. கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டம்

மாநிலத்தின் கடற்கரையை அடிக்கடி பாதிப்பிற்குள்ளாக்கும் பேரிடர்களின் அபாயத்தினைக் குறைப்பதற்காக, தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டம், (Coastal Disaster Risk Reduction Project) என்ற திட்டத்தினை ரூ.1,481.80 கோடி செலவில் தொடங்கியுள்ளது. இது ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட அவசரகால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாகும். இத்திட்டத்திற்கான முக்கூட்டு ஒப்பந்தமானது உலக வங்கி, இந்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறை மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றிற்கிடையே 11-11-2013 அன்று புது டெல்லியில் கையெழுத்தாகியுள்ளது. அரசாணை (நிலை) எண். 23, வருவாய்த் துறை, நாள் 21-1-2014 மூலம் ரூ.1,481.80 கோடிக்கான நிருவாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2016 செப்டம்பர் 1]

கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டத்தில் உள்ள அம்சங்கள்

வ.எண்	விவரிப்பு	ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
I. பேரிடர் அபாயம் குறைப்பு நடவடிக்கைகள்		**1035.00**
அ	கடலோர கிராமங்களில் பலவகை அபாயங்களை தாங்கக் கூடிய பாதுகாப்பான வீடுகள் கட்டுதல்	285.00
ஆ	பாதுகாப்பாக மக்களை வெளியேற்றுவதற்காக பெயர்ப்பலகை தாங்கிய வழிகளை அமைத்தல்	25.00
இ	பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் (121 இடங்களில்)	315.00
ஈ	முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல் (439)	50.00
உள	கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கண்ணியில் தரைக்கு மேலுள்ள மின்கம்பிகளை பூமிக்கு அடியில் கேபிள்கள்மூலம் பதித்தல்	360.00
II. மீன்வளத்துறை பணிகள்		**321.30**
அ	நிலைநிறுத்தப்பட்ட மீன்வளப் பணிகள் / புதிய பணிகள்	210.30
ஆ	FIMSUL II நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை II	
	1. கடல் மீன்வள மேம்பாட்டினை செயல்படுத்துதல்	23.74
	2. அறிவுத்திறன் மற்றும் தகவல்களை மேம்படுத்துதல்	5.00
	3. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவி செய்தல்	6.14
	4. மேலாண்மைக்கான நிதியுதவி	3.98
இ	புதிய மீன்பிடி கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி செய்து கொடுத்தல்.	62.14
ஈ	கடல் துறைமுகங்கள் குறித்து ஆய்வு செய்தல்	10.00
III. பேரிடர் எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடு பணிகள்		**52.50**
அ	மாநில பேரிடர் மேலாண்மை மையம் அமைத்தல்	10.00
ஆ	உலகளாவிய தகவல் தொழில்நுட்பத்தினை உள்ளடக்கிய பிரிவினை மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் அமைத்தல்	17.50
இ	சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம்.	15.00
ஈ	பேரிடர் மேலாண்மை குறித்து பள்ளிகள் மற்றும் பயிற்சி மையங்களின் பாட திட்டங்களில் சேர்த்தல்	2.50
உ	ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்	7.50
IV. திட்டச்செயல்பாட்டிற்கான தொகை		**73.00**
	மொத்தம்	**1481.80**

[2016 செப்டம்பர் 1

2.16.1. கடலோர சமூகத்திற்கான பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள்

I. கடலோர கிராமங்களில் பலவகை அபாயங்களை தாங்கக்கூடிய பாதுகாப்பான வீடுகள் கட்டுதல்

கடலோரம் வசிக்கும் சமுதாயத்தினை பேரிடர் பாதிப்பிலிருந்து காக்கும்பொருட்டு, 448 கடலோர வாழ்விடங்களில் 14,346 பாதுகாப்பான வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த பணி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் செயல்படுத்தப்பட்டது.

II. பாதுகாப்பாக மக்களை வெளியேற்றுவதற்கான சாலைகள் அமைத்தல்

கடற்கரைப் பகுதியிலிருந்து ஆபத்துக் காலங்களில் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான சாலைகள் வழிகாட்டுப் பலகையுடன் 143 கிராமங்களில் ரூ.25 கோடி செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

III. பல்நோக்கு பாதுகாப்பு மையம் கட்டுதல்

கடலோரத்தில் வசிக்கும் மக்கள் ஆபத்துக் காலங்களில் பாதுகாப்பான இடங்களில் தங்குவதற்காகவும், இதர காலங்களில் பொது மக்கள் பள்ளியாகவோ அல்லது சமுதாயக் கூடமாகவோ பயன்படுத்தும் வகையிலும் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் 121 இடங்களில் ரூ.345 கோடி செலவில் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 72 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 49 பாதுகாப்பு மையங்கள் கட்டுமானத்தில் பல்வேறு நிலையில் உள்ளன. அனைத்து பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகளும் இந்நிதியாண்டின் இறுதிக்குள் முடிவடைந்து விடும்.

IV. முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல்

தமிழ்நாடு நீர் மற்றும் காற்று அடிப்படையிலான பேரிடர்களால் பாதிப்பிற்கு இலக்காகும் கடற்கரையை கொண்டதாகும். எனவே, முன்னெச்சரிக்கை கருவி (EWS) அல்லது பேரிடர் குறித்த அறிவிப்பு கருவி (DWAS) ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மாநில அளவில் அதன் செயல்பாட்டினைக் கண்காணிப்பு செய்யும்

விதத்தில் ஒரு புதிய அமைப்பினை உருவாக்கி, இதன்மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு முன்னெச்சரிக்கை விவரங்களையும், பேரிடர் குறித்த செய்திகளையும் தேவைக்கேற்ப தெரிவிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பின் செயல்பாட்டினை சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் (CBDRM) மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் திட்ட மேலாண்மை அலகின்மூலம் ரூ.50 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் செயல்படுத்த திட்ட மேலாளராக ELCOT நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

V. நாகப்பட்டினம், கடலூர் மற்றும் வேளாங்கண்ணி நகரங்களில் தரைக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை பூமிக்கு அடியில் நிறுவுதல்

தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக கழகமானது (TANGEDCO) கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கன்னி ஆகிய நகரங்களில் பூமிக்கு மேல் உள்ள உயர் மற்றும் தாழ்வழுத்த மின் இணைப்புகளை (HT & LT) பூமிக்குக் கீழான இணைப்புகளாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட தானே புயல் காரணமாக கடலூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மிக அதிகமான உட்கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாயின. எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளைத் தவிர்க்கும் விதமாக, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி மற்றும் கடலூர் நகராட்சிகளில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புகளை பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியானது ரூ.360 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசனை நிறுவனம் உட்படுத்தப்பட்டு, ஏழு பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் மாதிரி ஒப்பந்தப்புள்ளி மீது உலக வங்கியின் ஒப்புதலும், சட்டப்பூர்வ அனுமதிகளும் பெற்ற பின் இப்பணிகளை செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதன் பின்பு இறுதி ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்.

[2016 செப்டம்பர் 1

2.16.2. மீன்வளத் துறை பணிகள்

தமிழ்நாடு கடலோரப் பகுதிகளில் 2004 ஆம் ஆண்டின் சுனாமியால் மீனவர்களும் மீன்வள உட்கட்டமைப்புகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. மேற்படி பாதிப்புகளை சரி செய்ய தமிழ்நாடு அரசு பல்வேறு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், இத்திட்டத்தில் நிலையான மீன்வளம் என்ற தலைப்பில் கீழ்க்கண்ட இரண்டு முக்கிய உட்கூறுகளின்கீழ் நடவடிக்கை எடுத்து பணிகள் நடைபெற்று வருகின்றன:

அ. உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும்

ஆ. நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL II)

அ. மீன்வளத் துறையில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் குறிக்கோள் மீன்வளத் துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் ஆகும். இதில் கீழ்கண்ட ஏழு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பணிகளின் விவரம்
1.	பரங்கிப்பேட்டை, அன்னன்கோயில் கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் அமைத்தல்
2.	வெள்ளாறு ஆற்றுமுகத்துவாரத்தை நிரந்தரமாக நிலை நிறுத்துதல்
3.	நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல்
4.	பழையார் மீன்பிடித் துறைமுகம் மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல்
5.	நாகூர் புதிய மீன் இறங்குதளம் அமைத்தல்
6.	உப்பனாறு ஆற்றுமுகத்துவாரத்தை நிரந்தரமாக நிலை நிறுத்துதல்
7.	குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் சின்னமுட்டத்தில் கட்டுதல் (TUBE ICE PLANT)

2016 செப்டம்பர் 1]

மேலும், இத்திட்டத்தில் மீன்வளத் துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் தொடர்பான புதிய கீழ்க்காணும் மூன்று பணிகள் மேற்கொள்ளபடவுள்ளன. இப்பணிகள் தொடங்கி பல்வேறு நிலைகளில் உள்ளன:

வ. எண்	பணியின் வகைகள்
1.	தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்துதல்
2.	தூத்துக்குடி மாவட்டம், புன்னக்காயல் முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல்
3.	எட்டு கடலோர கிராமங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைப்பது குறித்து ஆய்வு செய்தல்

ஆ. நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL II)

இத்திட்டத்தின்கீழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகள் அளித்தல், கடல் மீன்வளத்தை மேம்படுத்துவது குறித்து மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்கள் ஆபத்துக்காலங்களில் தங்களைக் காத்துக்கொள்ள பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

I. கடல் மீன்வள மேம்பாட்டினைச் செயல்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ் கடல் மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக மூன்று முன்மாதிரி பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு கூட்டு மேலாண்மை குழுக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. பாக் நீரிணைப்பில், சூழல் அடிப்படையிலான மேலாண்மை பிரிவு, சென்னையில் மீன்பிடி துறைமுக அடிப்படை மேலாண்மைப் பிரிவு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்வாழ் உயிரின பிரிவு என்றவாறு ஏற்படுத்துவதற்கு ரூ.500 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம் மாதிரிகளின் அடிப்படையில் இத்திட்டம் இதர கடலோர மாவட்டங்களில் 2016-2017 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

இதற்காக கூட்டு மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டு, இத்திட்டத்தை சிறந்த முறையில் பயனுள்ளதாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

II. அறிவுத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ் தொழிற்முறை அறிவு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு துறை அலுவலர்களுக்கான பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சியில் பொறுப்பான மீன்வளத்திற்கு நடத்தை விதிமுறைகள், மீன்பிடி புள்ளிவிவரங்கள், கடல் மீன்வள மேம்பாட்டிற்கான ஒழுங்குமுறை விதிகளை அமைத்தல், ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் பங்கேற்பு முறைகள் ஆகியவை அடங்கும். மேலும், 2016-2017 ஆம் ஆண்டில் அரசு ரூ.412 இலட்சத்தில் மீன்வள ஆணையர் அலுவலகத்தில் உள்ள நூலகத்தை மேம்படுத்துவதற்காக நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், இதன்மூலம் மீன்வளத் துறை அலுவலர்கள் மற்றும் மீனவர்களுக்கான நடைமுறை விதிகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

III. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவி செய்தல்

இத்திட்டத்தில், மீன்வளம் மற்றும் மீன்வளம் அல்லாத செயல்பாடுகளில் தொடர்புடையவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படவுள்ளது. இதில் பங்குதாரர்களுக்கு ஒரு தனிப்பட்ட வாழ்வாதாரத் திட்டத்தில் திறனை மேம்படுத்துதல், வியாபார உறுதுணை மற்றும் நிதியுதவி அளித்தல் போன்ற நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2016-2017 ஆம் நிதியாண்டில் வியாபார தொடரமைப்பை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மேலும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக துறை அலுவலர்களுக்கும் மீனவ கூட்டுறவு உறுப்பினர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

IV. மேலாண்மைக்கான நிதியுதவி

இத்திட்டத்தின்கீழ் ரூ.4 கோடிக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. திட்டத்திற்கான செயலாக்க அலகு அமைத்தல், தலைமையகம் மற்றும் களநிலையில் பணியாளர்களை நியமனம் செய்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

2016 செப்டம்பர் 1]

V. மீனவர்களுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு ஏற்படுத்துதல்

மீனவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், கால நிலை மாற்றங்கள் குறித்த தகவல்களை மீனவர்களுக்கு தெரியப்படுத்தவும், கம்பியில்லா தகவல் தொடர்பு வசதியினை அனைத்து கடலோர மாவட்டத்திற்கும் மீன்பிடிப் படகுகளில் பொருத்துவதற்கு ஏதுவாக ரூ.62.14 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழ்நாடு அரசு, அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒரு கட்டுபாட்டு அறை 13 கடலோர மாவட்டங்களில் நிறுவ உத்தேசித்துள்ளது. இது, அனைத்து கடலோர மாவட்டங்களில் உள்ள மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், மண்டல மீன்வளத் துறை அலுவலகம், மீன்வளத் துறை துணை/இணை இயக்குநர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு செயல்படும். மேலும் கடற்கரை ஓரம் 5 கி.மீ. சுற்றளவில் உள்ள BSNL தொலைபேசி நிறுவன கோபுரங்களைப் பயன்படுத்தி இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

2.17. பேரிடர் மேலாண்மைத் திறன் வளர்த்தல்

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் நிறுவன அமைப்பினை வலிமைப்படுத்துவதற்காக மாநில பேரிடர் மேலாண்மை மையம் ஒன்று ரூ.10 கோடி செலவில் உருவாக்கப்பட உள்ளது. ரூ.17.50 கோடி செலவில் GIS மையம் ஒன்றினை உருவாக்கி, கொள்கை முடிவுகள் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே உருவாக்குவதற்காக பள்ளிப் பாடத்திட்டங்களில் இப்பாடத்திட்டம் சேர்க்கப்பட்டு வருகிறது.

2.17.1. சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் (CBDRM)

இத்திட்டமானது பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன்மூலம் பேரிடர் அபாய குறைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாக பயன்படுத்திக் கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் (SIRD) ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள முக்கியமான செயல்பாடுகள்:

அ) பேரிடர் அபாயம் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் குறித்து மதிப்பீடு செய்தல்

ஆ) சமூகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் திறன் மேம்பாடு

இ) முன்னெச்சரிக்கை கருவிகள் மற்றும் பாதுகாப்பு மைய கட்டடங்கள் பயன்பாட்டினை சமூகத்துடன் இணைத்தல் மற்றும்

ஈ) அவசர காலத்தினை எதிர்கொள்வதற்கான திறன்களை வலிமைபடுத்துதல்

2.17.2. சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின் குறிக்கோள்கள்

❖ கிராம அளவில் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தினை உருவாக்குவதன்மூலம் சமூகத்தின் பேரிடர் அபாயத்தினை குறைப்பது மற்றும் இயற்கை இடர்பாடுகளை தைரியமாகவும் எச்சரிக்கையுடனும் எதிர்கொள்வதற்கு தயார்படுத்துதல்.

❖ கிராம அளவிலான பேரிடர் மேலாண்மைக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் பேரிடர் மேலாண்மை குறித்த முக்கியத்துவத்தினை உணர்த்துதல். இத்திட்டத்தின்மூலம் கிராம அளவில் தேடுதல் மற்றும் மீட்புக் குழு, முதலுதவி குழு, முன்னெச்சரிக்கை குழு ஆகியவற்றை உருவாக்கி இக்குழுக்களுக்கான பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

❖ கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் உட்கட்டமைப்புகள் குறித்து சமூகத்தின் அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ள செய்வதுடன், இப்பொது சொத்துகளை முறையாக பராமரிப்பது மற்றும் அவசர காலங்களில் அவற்றை சிறப்பாக பயன்படுத்துவது குறித்தும் அறிந்து கொள்ளச் செய்தல்.

2016 செப்டம்பர் 1]

2.18. ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் தயாரித்தல் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சித் திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் சுற்றுச்சூழல் துறை மூலமாக ரூ.4.51 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும், மீதமுள்ள ரூ.2.99 கோடி நிதியில் சுற்றுச்சூழல் துறை, அண்ணா பல்கலைகழகத்தின் IRS உதவியுடன் உள்ளூர் அளவில் கடற்கரை பகுதிகள் மேலாண்மைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டப் பணிகள் முடிவுறும்போது, 13 கடலோர மாவட்டங்கள் எதிர்கொள்ளும் பேரிடர்களின் தாக்கத்தைத் தணிக்கும் வகையிலும், அனைத்து பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனை சமுதாயத்திற்கு வழங்குவதாகவும் அமையும்.

3. நில நிருவாகம்

3.1. முன்னுரை

பொருளாதார மேம்பாட்டிற்கு, குறிப்பாக ஏழை மக்களின் நலன் பேணுவதற்கு, வலுவான மற்றும் ஒளிவுமறைவற்ற நில நிருவாகம் இன்றியமையாததொன்றாகும். நில நிருவாகத் துறை, முன்னாள் வருவாய் வாரியத்திலிருந்து உருவாக்கப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களை நிர்வகிப்பதுடன், வீட்டுமனை ஒப்படை, விவசாய நில ஒப்படை, நிலக் குத்தகை மற்றும் கேட்புத்துறை / நிறுவனங்களுக்கு நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் போன்ற முக்கியப் பொருண்மைகளைக் கையாளுகிறது. மேலும், அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்நிலங்களின் பாதுகாப்பை இத்துறை உறுதி செய்கிறது. பொதுப்

பயன்பாட்டிற்காகத் தேவைப்படும் தனியார் நிலங்களை நில எடுப்பு செய்வதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. இவை மட்டுமின்றி, நில உடைமை தொடர்பான பதிவு மாற்றம் (பட்டா மாறுதல்) குறித்த முன்னேற்றத்தினையும் இத்துறை கண்காணித்து வருகிறது.

நிலம் தொடர்பான வருவாய் நிலை ஆணைகள் மற்றும் பல்வேறு சட்டங்களின்கீழ், நில நிருவாக ஆணையர், மேல்முறையீட்டு அதிகாரங்களைச் செயல்படுத்தி வருகிறார். மேலும், தொழில் நோக்கங்களுக்காக பாசன நீரைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணி மற்றும் சிறு பாசனக் கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பு அலுவலகமாகவும் இந்த ஆணையரகம் செயல்பட்டு வருகிறது.

மேற்காணும் பணிகளை நிறைவேற்ற, நில நிருவாக ஆணையருக்கு மூன்று இணை ஆணையர்களும், ஐந்து உதவி ஆணையர்களும் துணை புரிகின்றனர். மாவட்ட அளவில் இப்பணிகள், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அவர்தம் பணியாளர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.2. விரைவுப் பட்டா மாறுதல் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 10.6.2011 நாளைய சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் பட்டா மாறுதல் வேண்டி மனுதாரர்கள் அடிக்கடி செல்வதையும், காலதாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு நடைமுறையில் உள்ள பட்டா மாற்ற முறையை ஒழுங்குபடுத்தும் வகையில், அரசாணை (நிலை) எண் 209, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 9-7-2011-ல் ஆணை வெளியிடப்பட்டு, கிராம நிருவாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவதற்கு ஏதுவாக, வருவாய் நிலை ஆணை எண் 31(8)-ல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டன. அவ்வரசாணையில், பட்டா மாறுதல் விண்ணப்பங்கள்மீது குறித்த கால அளவிற்குள் நடவடிக்கை மேற்கொள்ள கால வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 210, வருவாய்த் [நி.அ.1(1)] துறை, நாள் 8-7-2011-ல் விரைவு பட்டா மாறுதல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவது குறித்தும், அவற்றின்மீது நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்

2016 செப்டம்பர் 1]

விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18-7-2011 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

3.2.1. விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

❖ பட்டா மாறுதல் கோரும் மனுக்கள் கிராம நிருவாக அலுவலரால் பெறப்பட்டு, ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது.

❖ உட்பிரிவு இல்லாத இனங்களில் 15 நாட்களிலும், உட்பிரிவு உள்ள இனங்களில் 30 நாட்களிலும் பட்டா மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தீர்வு காணப்படுகிறது.

❖ பட்டா மாறுதல் விண்ணப்பங்களில் ஆணைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், இணையதளம் மூலம் விவரங்கள் பெறப்பட்டு, காணொலிக் கூட்டம்மூலம் நில நிருவாக ஆணையரால் ஆய்வு செய்யப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 65,67,660 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட வட்டங்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்படும் இணையவழி பட்டா மாறுதல் (Online patta Transfer) நடைமுறை, தற்போது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய நடைமுறையினால், விரைவு பட்டா மாறுதல் திட்டத்தினை மேலும் வலுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் விதமாகவும், குடிமக்களுக்கான சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் ஏதுவாக அமையும்.

3.2.2. பதிவுத் துறையுடன் பட்டா மாற்றம் குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

சார்–பதிவாளர் அலுவலகங்கள்மூலம் பெறப்படும் பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்களைத் தீர்வு காணும் வகையில், வருவாய் மற்றும் பதிவுத் துறைகளை ஒருங்கிணைத்து செயல்பட ஒரு செயல்திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக, 1-7-2014 முதல் 30-6-2016 முடிய 31,00,665 பட்டா மாறுதல் குறித்த

மனுக்கள் சார்–பதிவாளர் அலுவலகங்கள் மூலமாக வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்பட்டுள்ளன. மேலும், சார்-பதிவாளர் அலுவலகங்கள்மூலம் பெறப்படும் பட்டா மாறுதல் கோரும் விண்ணப்பங்களை இணையவழி பட்டா மாறுதல் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

3.3. அரசு நில விவர வங்கி உருவாக்குதல்

தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் அரசு நில விவர வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் நிலம் மென்பொருளில் “அ” பதிவேட்டில் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு, பிரத்யேக குறியீடு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், அரசு நில விவர வங்கி மூலமாக கிராமம், வட்டம் மற்றும் மாவட்டங்களில் நிலங்களின் வகைபாடு மற்றும் பரப்பளவு அடங்கிய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் இணைய வழி மூலமாகக் காணலாம். மேலும் முன்னோடித் திட்டமாக, பெரம்பலூர் மாவட்டத்தில், கணினியில் பதிவு செய்துள்ள கிராமப் புலப்படங்களை ஒருங்கிணைத்து, புவிக்குறியீட்டின் (Georeferencing) வாயிலாக, செயற்கைக் கோள் படங்களின் உதவியுடன், அரசு நிலங்களை எளிதில் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.4 தொன்மையான நிலப் பதிவுருக்களைக் கணினிமயமாக்கல் (Digitization)

எதிர்காலப் பயன்பாட்டிற்காக, தொன்மைவாய்ந்த நிலப் பதிவுருக்களைப் பாதுகாக்கும்பொருட்டு, முன்னோடித் திட்டமாக, சென்னை மாவட்ட ஆட்சியரகம் மற்றும் அதன் வட்ட அலுவலகங்களில் பதிவுருக்களைக் கணினிமயமாக்கும் திட்டம் (Digitization) துவங்கப்பட்டது. இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள நில ஆவணங்கள் மற்றும் ஆவணக் காப்பகத்தில் உள்ள ஒரிஜினல் செட்டில்மென்ட் ரிஜிஸ்டர்கள் (Original Settlement Registers) உள்ளிட்ட ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டன. நாளது தேதிவரையில், 11.95 இலட்சம் பக்கங்கள் கொண்ட பழைய நில ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன (Digitized).

2016 செப்டம்பர் 1]

நில நிருவாக ஆணையரகத்தின் பதிவேடுகள், கோப்புகள் மற்றும் ரீசெட்டில்மென்ட் ரிஜிஸ்டர்கள் (Re-Settlement Registers) கணினிமயமாக்கப்படுவதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.5. வீட்டுமனை ஒப்படை

கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதியுடைய வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. அம்மக்களின் தேவைக்கு கிராம நத்தம் நிலங்கள் போதுமானதாக இல்லாதபோது, ஆட்சேபகரமற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்ய, வருவாய் நிலை ஆணை எண் 21(6)-ன்கீழ், வருவாய்க் கோட்ட அலுவலர்/மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, தகுதியுள்ள வீடில்லா ஏழைகளுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ், கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா குடும்பத்தினர் இலவசமாக வீட்டுமனை பெறத் தகுதியுடையவராவர். இவ்வித வீட்டுமனைகள் குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே ஒப்படை செய்யப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கிராமங்களில் மூன்று சென்ட் நிலம், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் நிலம், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் நிலம் என்ற அளவில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு, பல்வேறு வருவாய்த் துறை அலுவலர்களுக்கு, அரசாணை (நிலை) எண் 248, வருவாய்த் துறை, நாள் 28-7-2009-ன்கீழ், வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பு (ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு) கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

வ. எண்	அலுவலர்கள்	நிதி அதிகார உச்சவரம்பு (நில மதிப்பில்)
1.	வட்டாட்சியர்	ரூ.30,000/- வரை
2.	கோட்டாட்சியர்	ரூ.50,000/- வரை
3.	மாவட்ட வருவாய் அலுவலர்	ரூ.1,00,000/- வரை
4.	மாவட்ட ஆட்சித் தலைவர்	ரூ.4,00,000/- வரை
5.	நில நிருவாக ஆணையர்	ரூ.5,00,000/- வரை
6.	அரசு	ரூ.5,00,000/- க்கும் மேல்

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் 2015-2016 ஆம் நிதியாண்டு வரையில் 10,50,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி, மொத்தம் 12,57,645 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டு	இலக்கு	வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்
2011-2012	1,00,000	1,21,804
2012-2013	1,00,000	1,31,299
2013-2014	2,00,000	2,17,723
2014-2015	3,00,000	3,81,708
2015-2016	3,50,000	4,05,111
மொத்தம்	10,50,000	12,57,645

2016 செப்டம்பர் 1]

2016-2017 ஆம் நிதியாண்டிலும், 3.50 இலட்சம் வீட்டு மனைகள் வழங்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3.6. நில மாற்றம்

அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை எண்கள் 23 மற்றும் 23-ஏ ஆகியவற்றின்கீழ், மத்திய அரசுத் துறைகளுக்கும், மாநில அரசுத் துறைகளுக்கும் முறையே நிலக் கிரையம் வசூலித்துக் கொண்டும், நிலக் கிரையம் இன்றியும், நில மாற்றம் செய்யப்படுகின்றன. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்படின், கேட்புத் துறையானது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்து கொள்வதன் பேரில், கேட்புத் துறையின் தேவை, இருப்பிலுள்ள தகுதியுடைய நிலப்பரப்பு ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், உத்தேச நில மதிப்பினை நிர்ணயம் செய்தும், உரிய முன்மொழிவினை, நில நிருவாக ஆணையர் வழியாக அரசுக்கு மாவட்ட ஆட்சியர் அனுப்பி வைப்பார்.

மாநில அரசுத் துறைகளைப் பொறுத்தமட்டில், ஆட்சேபகரமான நிலங்கள், அதாவது நீர்நிலைப் புறம்போக்கு, மேய்ச்சல் தரை, சுடுகாடு, சாலைகள் போன்றவை நீங்கலாக, அத்தியாவசியத் தேவைகளுக்காக குறைந்தபட்ச நிலப் பரப்பினை நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சேபகரமான வகைபாடுடைய நிலங்கள் தொடர்பாக, நில நிருவாக ஆணையரது பரிந்துரையின்பேரில் அரசு அளவில் உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

நிலமாற்ற இனங்களில், மேய்க்கால் (அல்லது) மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நிலமாற்றம் செய்யப்படும் பரப்புக்கு ஈடான மாற்று நிலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்பு துறையினரால் கூட்டுப் புலத் தணிக்கைமூலம் கண்டறியப்பட வேண்டும். மேலும், மாற்று நிலத்தை மேய்ச்சல் தரையாக மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுக் கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,000/- அல்லது எக்டேர் ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கு கேட்புத்துறை செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பானது, மாற்று நிலத்தை மேம்படுத்தி கால்நடைகள் மேய்வதற்கு அனுமதிக்கும் வகையில், ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மேற்படி மாற்று நிலம் கால்நடைகள் மேய்வதற்கு மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்புவிக்கப்பட்டாலும், அந்நிலத்தின் உரிமை வருவாய்த் துறையிடம்தான் இருக்கும்.

[2016 செப்டம்பர் 1

அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படும் நிலங்கள் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அரசு நிலங்களுக்கு வருவாய்த் துறையே பாதுகாவலராக உள்ளபடியால், வழங்கப்பட்ட நிலங்களின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லையெனில், அந்த நிலங்களை மீளப் பெற்று, தேவையின் அடிப்படையில் இதர துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வருவாய்த் துறைக்கு உள்ளது.

3.7. நில உரிமை மாற்றம்

அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை எண் 24-ன்கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/கழகங்கள்/வாரியங்கள்/ பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. சில அரிதான நேர்வுகளில், பொது நலன் கருதி, தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை மற்றும் அவசியம் போன்றவற்றினை ஆய்வுசெய்து, அரசின்வசம் போதுமான நிலம் இருக்கும்பட்சத்தில், நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. அரசு நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டால், இதன் சந்தை நிலமதிப்பில் ஒரு மடங்கு மட்டுமே நிலக் கிரையமாக வசூல் செய்யப்படும். வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு நிலக் கிரையமாக வசூல் செய்யப்படும். நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்கள் தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால், நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை இழப்பீட்டுத் தொகை ஏதுமின்றி மீளப் பெறப்படும்.

பொது நலன் கருதி, குடிநீர் திட்டப் பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் போன்றவற்றிற்காக உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் போன்றவற்றிற்கு அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அதேபோல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கும், அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

2016 செப்டம்பர் 1]

நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள புலமானது, பிற துறைகள்/உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள்/ஒப்புவிக்கப்பட்ட நிலங்களாக இருக்கும்பட்சத்தில், அம்முன்மொழிவுகளின்மீது விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக, பொதுப் பணித் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய துறைத் தலைவர்களின் இசைவு பெரும்பாலான இனங்களில் தேவைப்படுவதால், அத்துறைத் தலைவர்களை உள்ளடக்கியும், வருவாய்த் துறை செயலரைத் தலைவராகவும், நில நிருவாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர்/உறுப்பினர் செயலராகவும் கொண்ட தலைமைச் செயலக அளவிலான குழு, அரசாணை (நிலை) எண் 426, வருவாய்த்[நி.மு.4]துறை, நாள் 29-9-2014-ன்படி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

3.8. நில குத்தகை

வருவாய் நிலை ஆணை எண் 24ஏ-ன்கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள்/ கட்டடங்கள்/ நிலத்துடன்கூடிய கட்டடங்கள் போன்றவை வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்கு, உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு தற்காலிகமாக குத்தகை அடிப்படையில், கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

- நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ, அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை உள்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடக்கூடாது.
- குத்தகை நிபந்தனை மீறப்படின், குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம், எவ்வித இழப்பீடுமின்றி அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுவாக குத்தகை இனங்கள் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் தற்காலிக அடிப்படையில் வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், பொது நோக்கங்களின் அடிப்படையில் தேவை எனக் கருதும்பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை வழங்கப்படுகிறது.

[2016 செப்டம்பர் 1

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி, ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் குத்தகை கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகைத் தொகை வசூல் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், நிலத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில், எவ்வித நிதி வரம்புமின்றி, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரால் குத்தகை தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் இனங்களில் நில மதிப்பின்படி, வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு, அரசாணை (நிலை) எண் 527, வருவாய்த்[நி.மு.2(1)] துறை, நாள் 28.11.2014-ன்படி கீழ்க்கண்டவாறு திருத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குத்தகை வழங்குவதற்கான நிதி அதிகார வரம்பு

அலுவலர்கள்	நிதி அதிகார வரம்பு
வட்டாட்சியர்	ஏதுமில்லை
வருவாய் கோட்டாட்சியர்	ரூ.50,000/-
மாவட்ட வருவாய் அலுவலர்	ரூ.1,00,000/-
மாவட்ட ஆட்சித் தலைவர்	ரூ.4,00,000/-
நில நிருவாக ஆணையர்	ரூ.5,00,000/-
அரசு	ரூ.5,00,000/-க்கு மேல்

குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் முதன்மை குத்தகைப் பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, வட்ட அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாயம் (Jamabandhi) முடிவுற்றபின்பு, வருவாய்த் தீர்வாய அலுவலரால் (Jamabandhi Officer) இப்பதிவேட்டில் உள்ள

2016 செப்டம்பர் 1]

பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன (Updated). குத்தகைக்கு வழங்கப்பட்ட புலங்களில், குத்தகை நிபந்தனைகள் சரிவர கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதை வட்டாட்சியர்/ வருவாய்க் கோட்டாட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அவ்வப்போது புலத் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

3.9. உப்பள நிலங்களை குத்தகைக்கு வழங்குதல்

உப்பு உற்பத்தி செய்வதற்கு, வருவாய் நிலை ஆணை எண் 24அ-ன்படி, அரசு உப்பள நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1.	குத்தகைத் தொகை	ரூ.5/- வீதம் ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு
2.	உரிமத் தொகை	உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/- வீதம் குறைந்தபட்சமாக ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு ரூ.100/-
3.	தலவரி 100%	ரூ.5/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு
4.	தலமேல் வரி 500%	ரூ.25/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு
	மொத்தம்	ரூ.135/- ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு

தமிழகக் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 27,777 ஏக்கர் அரசு உப்பள நிலங்கள், குத்தகை அடிப்படையில் தனிநபர் மற்றும் பிற நிறுவனங்களுக்கு, உப்பு மற்றும் அதன் தொடர்புடைய பொருட்கள் உற்பத்தி செய்ய வழங்கப்பட்டுள்ளன. சிறு உப்பு உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், உப்பு தயாரித்தல் பணியை ஊக்குவிக்கும் வகையிலும், இதர

மாநிலங்களை ஒப்பிட்டு நோக்குகையில், தமிழகத்தில் உப்பள நிலங்களுக்கு நியாயமான குறைந்தபட்ச குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

3.10. ஆக்கிரமணங்களை அகற்றுதல்

பொது நலனைக் காக்க, அரசு நிலங்களில் உள்ள அனுமதியற்ற ஆக்கிரமணங்கள் தடுக்கப்படல் வேண்டும். மேற்படி ஆக்கிரமணங்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அரசு நிலங்களைப் பாதுகாக்க வேண்டியது வருவாய்த் துறையின் பொறுப்பாகும். அவ்வாறு ஆரம்ப நிலையிலேயே ஆக்கிரமணங்களைத் தடுக்க இயலாத நேர்வுகளில், அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், சட்டத்திற்குப் புறம்பான அத்தகைய ஆக்கிரமணங்களை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன:

1. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
3. தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007
4. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001
5. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994
6. தமிழ்நாடு பொதுக் கட்டடம் (அனுமதிக்கப்படாத ஆக்கிரமிப்பு) சட்டம், 1975
7. தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்து சட்டம், 1958

அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20-1-1987-ல், நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில், மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடை ஆணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண் 186, வருவாய்த் துறை, நாள் 29-4-2003-ல் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண் 20186/2000-ல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான

2016 செப்டம்பர் 1]

ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதனை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகள், பொதுப் பணித் துறை மற்றும் காவல் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 540, வருவாய் [நி.மு.6(2)] துறை, நாள் 4-12-2014-ன்படி ஒவ்வொரு வட்டம்/ கோட்டம்/ மாவட்ட அளவில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் குறித்த மனுக்களை தீர்வு செய்ய, குறை தீர்க்கும் குழுக்கள் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்குமாறும், வரையறைக்குட்பட்ட கால வரம்புக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான இயக்கக் குழுவில் ஆய்வு செய்யுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3.11 நில எடுப்பு

பொது நோக்கத்திற்கான, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும்பொருட்டு, மத்திய, மாநிலத் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. இதுநாள் வரை மத்திய நில எடுப்புச் சட்டம், 1894 (சட்டம் 1/1894)-ன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு சமூகத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற தேவைகளுக்கு நிலம் வழங்கவும், தொழில் உட்கட்டமைப்பு மற்றும் நெடுஞ்சாலை வளர்ச்சிக்காகவும் பின்வரும் மூன்று சட்டங்களை நிறைவேற்றியுள்ளது:

1. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1978)

2. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1999)

[2016 செப்டம்பர் 1

3. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2002).

ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்த மத்திய நில எடுப்பு சட்டம், 1894-ஐ இரத்து செய்துவிட்டு, புதிய நில எடுப்பு சட்டமான "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், 2013 (30/2013)" (The Right to Fair Compensation Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)-ஐ இயற்றி உள்ளது. இச்சட்டம் 1-1-2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி புனர்வாழ்வு மற்றும் மீள் குடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் (Process) ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது.

ஏற்கெனவே மத்திய நில எடுப்பு சட்டம், 1894-ன்கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில், இடைக்கால சரியீட்டுத் தொகை ஏற்கனவே இருந்த மத்திய நில எடுப்பு சட்டம், 1894-ன்கீழ் நிர்ணயம் செய்து வழங்கிடவும், அதன்பின் புதிய மத்திய நில எடுப்பு சட்டத்தின்கீழ் கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்க அறிவுறுத்தி இதற்கான வழிமுறைகள் அரசாணை நிலை எண் 88, வருவாய்த் துறை, நாள் 21-2-2014-ல் வெளியிடப்பட்டுள்ளது. மூன்று மாநில நில எடுப்புச் சட்டங்களின்கீழ் நில எடுப்பு தொடரப்பட்ட இனங்களிலும், இதே போல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட மூன்று மாநிலச் சட்டங்களின்கீழ், நில எடுப்பு நடவடிக்கை தொடர்ந்திடும் வகையில், மாநில அரசு புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1/2015-னை நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின்கீழ், புதிய நில எடுப்புச் சட்டத்தில், 4 ஆம் அட்டவணையில் உள்ள 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்கள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மேற்கண்ட மூன்று மாநிலச் சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையில், பிரிவு 105-ஏ சேர்க்கப்பட்டு, அதன்கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 5 ஆம் அட்டவணையில் இம்மாநிலச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இத்திருத்த மசோதாவுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் 1-1-2015 அன்று பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மத்திய சட்டம் 30/2013-ல் அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள சரியீடு நிர்ணயம் செய்தல் மற்றும் அட்டவணை 2 மற்றும் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு தொடர்பான பிரிவுகள் தமிழ்நாடு அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்படி, 1-1-2014 மற்றும் அதன்பிறகு நில எடுப்பு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்ட இனங்களுக்கும் பொருந்தும் என முடிவெடுக்கப்பட்டு, அதன்படி சம்பந்தப்பட்ட நிருவாகத் தலைமைத் துறையால் செயலாண்மை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

3.12. சிறுபாசனக் கணக்கெடுப்பு புள்ளி விவர பகுத்தாய்வு விவரம் (ஆர்.எம்.ஐ.எஸ்.)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடன், சிறுபாசனப் பிரிவின் விரிவான தகவல்களை ஒருங்கிணைக்க, புள்ளி விவர சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பின் ஒருங்கிணைப்புத் தலைவராக நில நிருவாக ஆணையர் செயல்படுகிறார்.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது:

1. ஒவ்வொரு ஐந்தாண்டும் சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி, அதன்மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களும் கணக்கெடுக்கப்படுகின்றன.

2. சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினை பகுத்தாய்வு செய்து, காலாண்டு மற்றும் ஆண்டறிக்கை தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பப்படுகின்றன.

3.12.1. ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு

5-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு, 2013-14 ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு, ஜூலை, 2014 முதல் தொடங்கப்பட்டு, அதன் தொடர்பான களப்பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. கணினிப் பதிவிற்கான வலைதள மென்பொருள், மத்திய அரசின் நீர்வளத் துறையிடமிருந்து பிப்ரவரி 2016 மாதம் பெறப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் கணினிப் பதிவுகள் முடியும் தருவாயிலுள்ளன.

[2016 செப்டம்பர் 1

5-வது சிறுபாசனக் கணக்கெடுப்புப் பணிக்காக இதுவரையில் ரூபாய் ஒரு கோடியே 45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

4. நிலச் சீர்திருத்தம்

நிலச் சீர்திருத்தம், நில நிருவாகம் மற்றும் வருவாய் நிருவாகம் ஆகிய துறைகள் வருவாய்த் துறையின்கீழ் 1-12-1980 முதல் வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்டன. நிலச்சீர்திருத்தத் துறை, வேளாண் நிலம் (ஊரகம்) சம்பந்தமான சட்டம் மற்றும் விதிகளைச் செயல்படுத்துகிறது. அதாவது நிலச் சீர்திருத்தம், குத்தகைச் சட்டங்கள், பூமிதானம் ஆகியவைகளை செயல்படுத்துவதுடன் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்காக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் எனும் சமூக பாதுகாப்பு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. நிலச்சீர்திருத்த ஆணையர் துறைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச் சீர்திருத்த இயக்குநர், இணை இயக்குநர், இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் உள்ளனர்.


2014-2015 ஆம் ஆண்டில், பொதுமக்கள் தங்களது தேவைகளை விரைவாகவும் எளிதாகவும் அந்தந்த மாவட்டங்களிலேயே பெறும் வகையில் நிலச் சீர்திருத்தத் துறை மறுசீரமைக்கப்படும் என்று அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி மாநிலத்தில் செயல்பட்டு வந்த 6 நிலச்சீர்திருத்த உதவி ஆணையர் அலுவலகங்களுக்குப் பதிலாக 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் (சென்னை நீங்கலாக) ஒரு நிலச் சீர்திருத்தப் பிரிவு உருவாக்கப்பட்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள அதிகாரங்கள் சார்ஆட்சியர்/வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் பணி முன்னேற்றம் நிருவாக ரீதியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் நிலச் சீர்திருத்தப் பிரிவு பணியாளர்களின் உதவியோடு மாவட்ட ஆட்சியரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு குத்தகைச் சட்டங்களை செயல்படுத்துவதற்கு துணை ஆட்சியர்களின்கீழ் 10 வருவாய் நீதிமன்றங்கள், முதன்மை செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையரின் கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றன. மேலும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பூமிதானம் ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர்களின்கீழ் மாவட்ட நிருவாகத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016 செப்டம்பர் 1]

4.1 கட்டமைப்பு

நிலச் சீர்திருத்தத் துறையின் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு:



நிலச் சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு:

[2016 செப்டம்பர் 1

அட்டவணை 4.1

நிலச் சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்

வ. எண்	பணியிடங்கள் வகை	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	முதன்மைச் செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையர்	1
2.	நிலச்சீர்திருத்த இயக்குநர்	1
3.	இணை இயக்குநர்	1
4.	நிதிஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்	1
5.	உதவி ஆணையர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட	12
6.	கண்காணிப்பாளர்கள்/துணை வட்டாட்சியர்கள்	21
7.	உதவியாளர், உதவியாளர் நிலை வருவாய் ஆய்வாளர்கள்	44
8.	சுருக்கெழுத்து தட்டச்சர்/தட்டச்சர்	35
9.	இளநிலை உதவியாளர்	21
10.	இதர பணியிடங்கள்	76
	மொத்தம்	213

2016 செப்டம்பர் 1]

மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிலச்சீர்திருத்த பிரிவில் உள்ள ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் ஒரே சீராக இயங்கும் வகையில் வருவாய் நிருவாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு செயல்படுகிறது.

4.2. நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நில உடைமைகள் ஒரு முக்கிய ஆதாரம் என்பதால், விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களைக் கையகப்படுத்தி, அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்குதல் அவசியமாகின்றது.

எனவே, நில உடைமைகள் ஒருசிலரிடம் குவிந்து கிடப்பதை பரவலாக்குவதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 39-இன் உட்பிரிவு (b) மற்றும் (c)-இன்படி தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 58/1961) இயற்றப்பட்டது.

4.2.1. நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு நில உச்சவரம்பு 15-2-1970 முதல் நடைமுறையில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

அட்டவணை 4.2

நிலச் சீர்திருத்த சட்டத்தின்கீழ் உள்ள உச்சவரம்பு

வ. எண்	விவரம்	அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு
1.	**குடும்பம்**	
	i) ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் அறக்கட்டளை மற்றும் நிறுவனம் உட்பட)	15 தர ஏக்கர்
	ii) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு	5 தர ஏக்கர்
	அதிகபட்ச உச்சவரம்பு	30 தர ஏக்கர்
	iii) இதனைத் தவிர சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியில் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினரும் தங்களது பெயரில் உள்ள நிலங்களில் சீதன நிலமாக 10 தர ஏக்கர் வைத்துக் கொள்ளலாம்.	
2.	பொது அறக்கட்டளைகள் **(Public Trusts)**	
	i) 1–3–1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature)	5 தர ஏக்கர்
	ii) 1–3–972 தேதிக்குப் பிறகு எந்த ஒரு பொது அறக்கட்டளையும் நிலங்களை வாங்க வழிவகை இல்லை. திருத்தச் சட்டம் 29/87–ன்படி நிலங்களை வைத்துக்கொள்ள அரசின் அனுமதி வேண்டும்.	
	iii) 1–3–1972 தேதிக்குமுன் இருந்த மத சார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious Nature) நில உச்சவரம்பு சட்டத்திற்குள் வராது.	

2016 செப்டம்பர் 1]

தர ஏக்கர்

நிலச் சீர்திருத்தச் சட்டப்பிரிவு 3(40)-ன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட நிலத்தின் தீர்வையினை (Assessment) *அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது.*

அட்டவணை 4.3

சாதாரண ஏக்கரிலிருந்து தர ஏக்கராக கணக்கிடும் அட்டவணை

புன்செய் நிலத்திற்கு

தீர்வை (Assessment) ஏக்கருக்கு	சாதாரண ஏக்கர்	தர ஏக்கர்
ரூ.1.25-க்கு கீழ்	4	1
ரூ.1.25-2.00	3	1
ரூ.2.00-க்கு மேல்	2.5	1

நன்செய் நிலத்திற்கு

தீர்வை (Assessment) ஏக்கருக்கு	சாதாரண ஏக்கர்	தர ஏக்கர்
ரூ.4.00-க்கு கீழ்	2	1
ரூ.4.00-6.00	1.75	1
ரூ.6.00-8.00	1.60	1
ரூ.8.00-10.00	1.20	1
ரூ.10.00-15.00	1	1
ரூ.15.00-க்கு மேல்	0.80	1

[2016 செப்டம்பர் 1

4.2.2. தொழில்/ வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப் பிரிவு 3(34)-இன்படி நிறுவனம் என்பது, "தனி நபர்" என்ற பொருள் வரையறைக்குட்பட்டது. இதனால் நிறுவனங்கள் 15.000 தர ஏக்கர் நிலங்கள் வரை வைத்துக் கொள்ளலாம். தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப் பிரிவு 37-A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. திருத்தப்பட்ட சட்டம் 23/2010 மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4.2.3. பொது அறக்கட்டளைக்கு அனுமதி

பொது அறக்கட்டளைகள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப் பிரிவு 37-B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி, திருத்தப்பட்ட சட்டம் 23/2010 மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது பொது அறக்கட்டளை நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4.3. வருவாய் நீதிமன்றங்கள்

நில உடமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை குத்தகைச் சட்டங்கள்கீழ் முடிவு செய்வதற்காக தற்போது மாநிலத்தில் 1. கடலூர், 2. மயிலாடுதுறை, 3. திருவாரூர், 4. தஞ்சாவூர், 5. மன்னார்குடி, 6. திருச்சிராப்பள்ளி, 7. லால்குடி, 8. நாகப்பட்டினம், 9. மதுரை மற்றும் 10. திருநெல்வேலி ஆகிய பத்து இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 4 வருவாய் நீதிமன்றங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2013இல்

தொடங்கப்பட்டவை ஆகும். இந்த 10 வருவாய் நீதிமன்றங்கள், 5 குத்தகை சட்டங்களை செயல்படுத்துகின்றன.

4.3.1. வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

வருவாய் நீதிமன்றங்கள் அனைத்திலும் 9,806 வழக்குகள் 31-5-2011 அன்று நிலுவையில் இருந்தன. 1-6-2011 முதல் 30-6-2016 முடிய உள்ள காலத்தில் 30,670 வழக்குகள் வரப்பெற்று, 33,424 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 30-6-2016 அன்று 7,052 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

4.3.2. குத்தகைச் சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)

நில உடமையாளருக்கு குத்தகைத் தொகைக் கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் 1-6-2011 அன்று 1,590 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 1-6-2011 முதல் 30-6-2016 முடிய 1,465 வழக்குகள் வரப்பெற்றன. 30-6-2016 வரை 2,529 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30-6-2016 அன்று 526 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

II) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள்.

இச்சட்டத்தின்கீழ் 1-6-2011 அன்று 289 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 1.6.2011 முதல் 30.6.2016 முடிய 602 வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் 755 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30-6-2016 அன்று 136 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

III) தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாக மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி, பொது அறக்கட்டளைகளின் நிருவாகத்தினை வரைமுறைபடுத்தி வேளாண் நிலங்களை சொந்த சாகுபடி செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவும் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு, அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம், அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் 1-6-2011 அன்று 7,630 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 1-6-2011 முதல் 30-6-2016 முடிய 27,718 வழக்குகள்

2016 செப்டம்பர் 1]

வரப்பெற்று மேற்படி காலத்தில் 29,110 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30-6-2016 அன்று 6,238 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

IV) தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன்மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ், வட்டாட்சியர் குத்தகை உரிமையினை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார். இதுவரை 2,59,615 நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின்கீழ் 1-6-2011 அன்று 198 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 30-6-2016 முடிய 325 வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் 388 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30.6.2016 அன்று 135 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

V) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, 1.4.1990 தேதியில் அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் 1-6-2011 முதல் 30-6-2016 வரை 642 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30-6-2016 அன்று 17 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

[2016 செப்டம்பர் 1

4.3.3. தனித் துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) அதிகார எல்லைகள்

அட்டவணை 4.4

வருவாய் நீதிமன்ற ஆளுகைக்குட்பட்ட எல்லைகள்

வ.எண்	வருவாய் நீதிமன்றம்	ஆளுகைக்குட்பட்ட எல்லை
1.	கடலூர்	கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும்
2.	திருச்சிராப்பள்ளி	பெரம்பலூர், அரியலூர், சேலம், கரூர், புதுக்கோட்டை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி கிழக்கு மற்றும் மேற்கு, மணப்பாறை, மருங்காபுரி மற்றும் திருவரம்பூர் வட்டங்கள்
3.	லால்குடி	திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில், லால்குடி, முசிறி, மண்ணச்சநல்லூர், துறையூர், தொட்டியம் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டங்கள்
4.	மதுரை	மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும்
5.	திருநெல்வேலி	திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும்
6.	திருவாரூர்	திருவாரூர் வருவாய் மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நன்னிலம் மற்றும் நீடாமங்கலம் வட்டங்கள்
7.	மன்னார்குடி	திருவாரூர் வருவாய் மாவட்டத்தில், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டங்கள்
8.	மயிலாடுதுறை	நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் குத்தாலம் வட்டங்கள்
9.	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில், நாகப்பட்டினம் கீழ்வேளூர், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் வட்டங்கள்
10.	தஞ்சாவூர்	தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் முழுவதும்.

2016 செப்டம்பர் 1]

4.4. நியாய ஊதியங்கள்

தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம்

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஏனைய இதர மாவட்டங்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. இச்சட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.5. பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்டது. ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் 13-3-1956 முதல் 18-4-1957 வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து பூமிதான இயக்கத்திற்கு நிலங்களை தானமாகப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடைமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்க "தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம் 1958" (Tamil Nadu Bhoodan Yagna Act 1958) இயற்றப்பட்டு, அதனைத் தொடர்ந்து விதிகளும் இயற்றப்பட்டன. பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியம் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.

பூமிதான வாரியத்திற்கு 28,050 ஏக்கர் நிலங்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இதில் 20,494 ஏக்கர் நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலங்களில், 7,271 ஏக்கர், வழக்கு, பத்திரப்பதிவு, உறுதியாக்கம் முதலானவைகளின்கீழ் உள்ளன.

2012-2013 ஆம் ஆண்டு முதல் பூமிதானம் தொடர்பான பணிகளில் மாவட்ட நிருவாகம் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருவதால் நிலுவைப் பணிகளிலும், பூமிதான பணிகளைத் தொடர்வதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனையை தடுக்கும் பொருட்டு, பதிவுத் துறை புள்ளி விவரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, சுமார் 20,596 ஏக்கர் பூமிதான நிலங்களின் வழிகாட்டி மதிப்பு '0' (பூஜ்யம்) ஆக மாற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழ்நாட்டில்தான் முதல்முறையாக பூமிதான நிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011

அரசாணை (நிலை) எண் 265, வருவாய்த்[நி.சீ.1(2)] துறை, நாள் 10.9.2011இன்படி 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்' 10.9.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.6.1. தகுதிகள்

விவசாய உறுப்பினர்கள்

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தொழிலாளர்கள், 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து, அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு/சிறு விவசாயிகள், பயிரிடு குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகப் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவார்கள். விவசாயத் தொழில் என்பது, விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பால்பண்ணை தொழில், தீவன பயிர் செய்தல், மேய்ச்சல், நாற்று வளர்த்தல், கோழிப்பண்ணை, மரங்கள் வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன்பிடித்தல் ஆகும்.

சார்ந்து வாழும் உறுப்பினர்கள்

உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியானவர்கள். அவர்கள் உறுப்பினரின்,

2016 செப்டம்பர் 1]

(i) மனைவி அல்லது கணவன் (நேர்விற்கேற்ப)

(ii) குழந்தைகள்

(iii) இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்

(iv) பெற்றோர்

4.6.2. உறுப்பினர்களைக் கணக்கெடுத்தல்

பயனாளிகள் இத்திட்டத்தின் பயன்களைத் தொடர்ந்து பெறும்பொருட்டு 72,40,387 குடும்ப அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் முழுமையான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, அவை வருவாய் கிராம அளவில் கணக்கெடுப்பு பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், கணினியிலும் விவரங்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்:

அட்டவணை 4.5

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011கீழ் உறுப்பினர் கணக்கெடுப்பு விவரம்

1.	விவசாய உறுப்பினர்கள்	1,59,58,265
2.	சார்ந்து வாழும் உறுப்பினர்கள்	1,17,49,934
	மொத்தம்	2,77,08,199

இத்திட்டத்தின்கீழ் திருமணம், புதிய விவசாய உறுப்பினர்/சார்ந்த உறுப்பினர், இறப்பு போன்ற காரணங்களுக்காக உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் நீக்குதல் தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

4.6.3. நிதி உதவி

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நல உதவிகள் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

உறுப்பினர்களுக்காக,

(1) திருமண உதவித் தொகை

(2) முதியோர் ஓய்வூதியம்

(3) உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி

(4) விபத்து நிவாரணம்

(5) இயற்கை மரண உதவித் தொகை

(6) ஈமச் சடங்கு செலவு

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக,

(1) கல்வி உதவித் தொகை

(2) திருமண உதவித் தொகை

(3) எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை

(4) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவர்களுக்கான உதவித் தொகையினை சார்ந்து வாழும் உறுப்பினர்கள் தொடர்ந்து பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் அனைத்து உதவித் தொகைகளும் தனி வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழான உதவித் தொகையின் சிறப்பு அம்சங்கள்:

அ) உறுப்பினர்களுக்காக

1) திருமண உதவி

விவசாய உறுப்பினரின் திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/-மும் பெண்களுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மட்டுமே ஆண்களுக்கு திருமண உதவி

வழங்கப்படுகிறது. முந்தைய தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 திட்டத்தில் ஆண்களுக்கு ரூ.3,000/-மும் பெண்களுக்கு ரூ.5,000/-மும் வழங்கப்பட்டது. 10-9-2011 முதல் 30-6-2016 வரை 25,064 பயனாளிகளுக்கு ரூ.21.11 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2) முதியோர் ஓய்வூதியம்

தகுதியுள்ள விவசாய உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ.1000/- வருவாய் நிருவாகத் துறைமூலம் வழங்கப்படுகிறது.

3) உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித் தொகை

உறுப்பினர்கள் நோய்களால்/கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காலங்களில் உறுப்பினர்கள் விவசாயத் தொழிலுக்கு செல்ல இயலாது. இந்த தற்காலிக உடல் திறனற்ற காலத்தில் வருமானம் இல்லாமல் உறுப்பினரின் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகும். எனவே, மேற்படி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், விவசாய உறுப்பினர்கள், காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி/எய்ட்ஸ், இடைச்சவ்வூடுமூலம் பிரித்தல் (Dialysis), கை, கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, நரம்பு சம்பந்தமான நோய், முதுகு தண்டுவடம் பாதிப்பு, இதய நோய், பார்வை இழத்தல், கல்லீரல் நோய், சிறுநீரக நோய், மனநிலைபாதிப்பு, அரிவாள் செல் ரத்த சோகை, ரத்த அளிவு சோகை, ரத்த உறையா நோய் போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது. இந்த புதிய திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் விரிவாக்கப்படுகிறது. 2012-2013 முதல் 30-6-2016 வரை 1,20,248 பயனாளிகளுக்கு ரூ.65.19 கோடி வழங்கப்பட்டுள்ளது.

4) விபத்து நிவாரணம்

உறுப்பினர் விபத்தில் உயிரிழந்தால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு நிதி உதவிமூலம் துயர்துடைக்கும் வகையில், ரூ.1,00,000/- வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு பேருதவியாக உள்ளது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படுகின்றன

அட்டவணை 4.6
விபத்து காயங்களுக்கு உதவி

வ. எண்	காயங்களின் விபரம்	தொகை (ரூபாயில்)
1.	இரண்டு கை அல்லது இரண்டு கால் இழத்தல்	
2.	ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல்	1,00,000
3.	இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல்	
4.	ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல்	50,000
5.	பக்கவாதம்	50,000
6.	மேலே குறிப்பிட்டுள்ளவை அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக உறுப்புகளை இழத்தல்	20,000

10-9-2011 முதல் 30-6-2016 வரை 17,149 பயனாளிகளுக்கு ரூ.167.95 கோடி விபத்து நிவாரணமாக (ஈமச்சடங்கு செலவு ரூ.2,500/- உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

5) இயற்கை மரணத்திற்கான உதவி

விவசாய உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால், இறந்த விவசாய உறுப்பினரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. 10-9-2011 முதல் 30-6-2016 வரை 2,56,985 பயனாளிகளுக்கு ஈமச்சடங்கு செலவு உட்பட ரூ.318.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

6) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினர் இறந்து விட்டால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/- வழங்கப்படுகிறது.

ஆ) சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கு உதவிகள் கீழ்க்கண்டவாறு:

1) கல்வி உதவி

2016 செப்டம்பர் 1]

உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வியினைத் தொடரும் பொருட்டு இத்திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அட்டவணை 4.7

வ. எண்	கல்வி விவரம்	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்குவோர்	
		ஆண் (ரூ.)	பெண் (ரூ.)	ஆண் (ரூ.)	பெண் (ரூ.)
1.	தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டொன்றுக்கு)	1250	1750	1450	1950
2.	கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1250	1750	1450	1950
3.	இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு)	1750	2250	2000	2500
4.	முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு. (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	3250	3750
5.	சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	2250	2750	4250	4750
6.	முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு)	4250	4750	6250	6750

[2016 செப்டம்பர் 1

கல்வி உதவி

இந்த உதவித் தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகையும் நிறுத்தப்படும். கல்வி உதவித் தொகையினைப் பொறுத்தவரை, பயனாளிகள் வேறு எந்த திட்டத்தின்கீழ் கல்வி உதவி பெற்றிருந்தாலும், இத்திட்டத்தின் கீழும் கல்வி உதவித் தொகையினைப் பெறலாம். 10.9.2011 முதல் 30-6-2016 வரை 12,09,530 மாணவ, மாணவிகளுக்கு ரூ.286.73 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2) திருமண உதவி

விவசாய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்குவது போல், விவசாய உறுப்பினர்களைச் சார்ந்துள்ள குழந்தைகளின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.8,000/-மும் பெண்களுக்கு ரூ.10,000/-மும் வழங்கப்படுகிறது. 10-9-2011 முதல் 30-6-2016 வரை 2,52,638 பயனாளிகளுக்கு ரூ.221.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

3) எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவித் தொகை

விவசாய உறுப்பினர் எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த பிறகு, சில இனங்களில் அவர்களின் குழந்தைகளும் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது ஆதரவற்றவர்களாகி விடுகின்றனர். இந்த மாதிரியான குழந்தைகளுக்கு தங்களின் படிப்பினைத் தொடர இயலாமலும் அல்லது அவர்களின் அடிப்படை தேவைகளை சமாளிக்க முடியாமலும் ஆகிறது. எனவே, 2013-2014 முதல் இவர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ.1000/- வழங்கப்படுகிறது. எச்.ஐ.வி./எயிட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழ்நாடு டிரஸ்டுக்காக, தமிழ்நாடு எயிட்ஸ் கட்டுப்பாடு சங்கம் (Tamil Nadu Aids Control Society) தயாரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட குழு (District Committee) பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த உதவி எச்.ஐ.வி./எயிட்ஸ்-ஆல் பெற்றோரை (ஒருவர்/இருவரையும்) இழந்த 0-18 வயது வரை உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 2013-2014 முதல் 30-6-2016 வரை 3,555 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.2.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

4) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினர்களுக்கு வழங்குவதுபோல், சார்ந்த உறுப்பினர்கள் இறந்தாலும், ஈமச்சடங்கு செலவு தொகையாக ரூ.2,500/- இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

4.6.4. செயலாக்கம் (Performance)

2016-2017 ஆம் ஆண்டில், (30-6-2016 முடிய) 1,53,143 பயனாளிகளுக்கு ரூ.101.61 கோடி (முதியோர் ஓய்வூதியம் நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

அட்டவணை 4.8

2016–2017இல் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள உதவிகள் விவரம் (30-6-2016)

வ. எண்	உதவி விவரம்	தொகை (கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	கல்வி உதவி	19.60	79,099
2.	உறுப்பினர்களின் திருமணம்	2.78	3,240
3.	உறுப்பினர்களின் குழந்தைகள் திருமணம்	19.95	23,073
4.	இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு	31.64	25,971
5.	விபத்து நிவாரணம்	19.66	1,948
6.	தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித் தொகை	7.71	19,197
7.	எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மானிய உதவி	0.27	615
	மொத்தம்	101.61	1,53,143

[2016 செப்டம்பர் 1

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011இன்கீழ் 10-9-2011 முதல் 30-6-2016 வரை வருடாந்திர செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 4.9

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செலவு மற்றும் பயனாளிகள் விவரம்

விவரம்	2011–12 (10.9.2011 முதல் 31.3.2012 வரை)	2012–13	2013–14	2014–15	2015–16	2016–17 (30.6.16 வரை)	மொத்தம்
செலவு (ரூபாய் கோடியில்)	117.69	216.42	224.59	214.91	207.12	101.61	1082.34
பயனாளிகளின் எண்ணிக்கை	164422	399573	404462	379999	383570	153143	1885169

5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறை, வருவாய்த் துறையின் அங்கமாக செயல்பட்டு வருகிறது. அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடிய துறைகளில் இத்துறையும் ஒன்றாகும். இத்துறை, நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978இன்கீழ் 15-6-1999 வரை கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற நிலங்கள் தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. மேலும் இத்துறை, நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச் சட்டம் 1991இன்கீழ் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பின்அடிப்படையில் 24 மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

5.1. பணியாளர் அமைப்பு

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையின் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் இத்துறையின் தலைவர் ஆவார். ஆணையரகத்தின் உதவி ஆணையர் (தலைமையிடம்) அவருக்கு உதவி புரிகிறார். மைலாப்பூர், தண்டையார்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஏழு நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்கள் உள்ளனர். இவர்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகராட்சிகளில் நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978இன்படி கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற மிகைவெற்று நிலங்கள் தொடர்பான பணியினையும் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

5.2. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

ஒரு சில தனிநபர்களின் கைப்பற்றில் விவசாயமல்லாத நிலங்கள் குவிந்து கிடப்பதை சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்குடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் உள்ள நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978இன்படி 15-6-1999 வரையிலும் ஒவ்வொரு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் உள்ள தனி நபர், குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான உச்சவரம்பு விவரம் கீழ்வருமாறு:

அட்டவணை— 5.1

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி உச்சவரம்பு

வ. எண்	நகர்ப்புற கூட்டுப்பகுதி	தனிநபர் ச.மீ	குடும்பம் ச.மீ	தொழில் நிறுவனம் ச.மீ
1	சென்னை	500	2000	2000
2	மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி (ம) சேலம்	1500	3000	3000
3	திருநெல்வேலி	2000	4000	4000

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 ஆனது தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)இன் வாயிலாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு, நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த தேதியில் அரசு வசம் உள்ள நிலங்களுக்கு, இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978இன்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

அட்டவணை—5.2

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978இன்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்

வ எண்	விவரம்	சதுர மீட்டரில்
1.	கையகப்படுத்தப்பட்ட மொத்த பரப்பு	1,89,79,446
2.	அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்த பரப்பு	43,70,050

2016 செப்டம்பர் 1]

வ எண்	விவரம்	சதுர மீட்டரில்
3.	நீதிமன்ற வழக்குகளில் உள்ள பரப்பு	*33,27,312*
4.	அறியாமல் கிரயம் பெற்றவர்களின் கைப்பற்றில் உள்ள பரப்பு	*23,95,785*
5.	ஆக்கிரமிப்பில் உள்ள பரப்பு (நில உரிமையாளர்கள் மற்றும் உரிமையற்ற ஏனையோர்)	*79,53,950*
6.	ஆக்கிரமிப்பு இல்லாத நிலம்	*9,32,349*

5.3. அறியாமல் கிரயம் பெற்றவர்களின் நிலங்களை வரன்முறை செய்தல்

கையகப்படுத்தப்பட்ட அரசு மிகை வெற்று நிலங்களை, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது 1½ மனை வரை குடியிருப்பு நோக்கத்திற்காக வாங்கியிருப்பின், அதனை அரசு நிர்ணயித்துள்ள நிலமதிப்பினைச் செலுத்தி வரன்முறை செய்து கொள்ள அரசாணை (நிலை) எண் 649, வருவாய்த் துறை, நாள் 29-7-1998-இன்படி அனுமதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1½ மனைக்கு மேல் கிரயம் பெற்ற நிலங்களையும், குடியிருப்பு நோக்கம் அல்லாது மற்ற இதர பயன்பாடுகளுக்கும் கிரயம் பெற்றிருப்பின், இரு மடங்கு/ மும்மடங்கு நிலமதிப்புத் தொகை செலுத்தி வரன்முறைப்படுத்திக்கொள்ள அரசாணை (நிலை) எண்.565, வருவாய்த் துறை, நாள் 26-9-2008-இன்படி அனுமதிக்கப் பட்டது. மேற்படி உத்தரவின்படி நிலம் கையகப்படுத்தப்பட்டதை அறியாமல் கிரயம் பெற்றவர்களுக்கு அக்கிரயத்தினை வரன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

5.4. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 திருத்தச் சட்டம், 1991

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966, 1.7.1963-இல் விவசாயம் அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் ஒரு சில நில உடமையாளர் வசம் நகர்ப்புற நிலம் குவிந்து கிடப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் திருச்சி, மதுரை,

[2016 செப்டம்பர் 1

சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், திருநெல்வேலி மாநகராட்சி பகுதி மற்றும் 23 நகராட்சிகளாகிய காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், நாமக்கல், மேட்டூர், ஈரோடு, திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தூத்துக்குடி, இராஜபாளையம், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் அமலாக்கப்பட்டது.

மேற்படி வட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 1-7-1981 ஆம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது.

அட்டவணை – 5.3

நகர்ப்புற நில வரிவிதிப்பு விவரங்கள்

வ. எண்	சென்னை மற்றும் ஏனைய நகர்ப்பகுதியில் உள்ள நகர்ப்புற நிலங்கள்		சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நகர்ப்புற நிலங்கள்	
1.	2 மனைகளுக்குள்	வரி இல்லை	3 மனைகளுக்குள்	வரி இல்லை
2.	2 மனைகளுக்கு மேல் 5 மனைகளுக்குள்	சந்தை மதிப்பில் 0.7 சதவீதம்	3 மனைகளுக்கு மேல் 7 மனைகளுக்குள்	சந்தை மதிப்பில் 0.7 சதவீதம்
3.	5 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள்	சந்தை மதிப்பில் 1 சதவீதம்	7 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள்	சந்தை மதிப்பில் 1 சதவீதம்
4.	10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள்	சந்தை மதிப்பில் 1.5 சதவீதம்	10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள்	சந்தை மதிப்பில் 1.5 சதவீதம்
5.	20 மனைகளுக்கு மேல்	சந்தை மதிப்பில் 2 சதவீதம்	20 மனைகளுக்கு மேல்	சந்தை மதிப்பில் 2 சதவீதம்

2016 செப்டம்பர் 1]

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966, திருத்தச் சட்டம் 1991இன்படி இச்சட்டம் அமலிலுள்ள 24 மாவட்டங்களில் சுமார் 2 இலட்சம் வரிவிதிப்புதாரர்கள் உள்ளனர். பசலி 1425-ன்படி நகர்ப்புற நிலவரி நடப்புக்கேட்பாக ரூபாய் 19.40 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலவரிச் சட்டப் பிரிவு 29 இன்கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன.

(i) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிலங்கள்.

(ii) பொது வழிப்பாட்டுக்கான நிலங்கள்.

(iii) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை உபயோகத்திற்கான நிலங்கள்.

(iv) மயானபூமி நிலங்கள்.

(v) சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்.

(vi) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.

(vii) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகம் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

(viii) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமையப்பெற்ற நிலங்கள்.

தர்ம, சமய மற்றும் லோபோகாரி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு இன்னல் இருப்பின், பிரிவு 27(1)-இன்கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது.

(அ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 விழுக்காடு, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 விழுக்காடு.

(ஆ) அனைத்து சங்கீத நாடக சபைகளுக்கு 50 விழுக்காடு.

(இ) திரையரங்குகளுக்கு 10 விழுக்காடு.

(ஈ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு 100 விழுக்காடு மற்றும்

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து, அது நிலத்தின் உரிமையாளரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 விழுக்காடு.

5.5. நகர்ப்புற நிலவரி சட்டத்தின்கீழ் மேல்முறையீடு/சீராய்வு அதிகாரம்

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு உத்தரவுகளின்பேரில் அதிருப்தி ஏதேனும் இருப்பின், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம், 1966, திருத்தச் சட்டம் 1991-இன் பிரிவு 20(1)-இன்கீழ் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யலாம். தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம், 1966, திருத்தச் சட்டம் 1991-இன் பிரிவு 30(1)-இன்கீழ் முதன்மைச் செயலர்/நிலச் சீர்திருத்த ஆணையருக்கு சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஓர் அறிவிக்கையின்மூலம் நேரடியாக ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, முதன்மைச் செயலர்/ நிலச் சீர்திருத்த ஆணையரால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

6. நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

150 ஆண்டுகளுக்கும் மேலான பெருமைக்குரிய பாரம்பரியத்தையுடைய இத்துறை, நிலஅளவைப் பணிகளில் சங்கிலி, நேர்க்கோணக்கட்டை மற்றும் கோணமாணி போன்ற பழைய கருவிகளுக்குப் பதிலாக, நவீன கருவிகளான நில இயல் நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி ஆகியவற்றையும், கையினால் தயாரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்த பழைய நில ஆவணங்களுக்கு பதிலாக கணினிமூலம் தயாரிக்கப்பட்ட நில ஆவணங்களையும், வட்ட அலுவலகங்களில் பழமை வாய்ந்த பட்டா மாறுதல் முறைகளுக்கு பதிலாக இணையவழி பட்டா மாறுதல் சேவைகளையும் பயன்படுத்தும் வகையில் இத்துறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலால் நவீனமயமாக ஆக்கப்பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 1]

2016 ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சரின் நல் ஆளுமைக்கான விருதும், ரூ.2.00 இலட்சம் ரொக்கப்பரிசும் இத்துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15-8-2016-இல் நடைபெற்ற 70-வது இந்திய சுதந்திர தின விழாவில் வழங்கப்பட்டது. இவ்விருது அனைத்து நில ஆவணங்களையும் கணினிப்படுத்தி இணையவழி பட்டா மாறுதலை நடைமுறைப்படுத்தி, பொதுமக்களுக்கு நிகழ்நிலைப்படுத்தப்பட்ட நில ஆவணங்களை இணையத்தில் எந்நேரத்திலும் எங்கிருந்தும் பார்க்கவும், தேவையானால் அ-பதிவேடு மற்றும் சிட்டா நகலை இணையம்மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டதற்காக வழங்கப்பட்டதாகும். இவ்விருது இத்துறைக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாக உள்ளது.

6.1. நிலஅளவை குறித்த வரலாறு

முறையான நடைமுறைகளுடன்கூடிய நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட பணிகள் தஞ்சையை ஆண்ட முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான கி.பி.985-1011 இல்தான் முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில், கி.பி.1802இல் வில்லியம் லேம்ப்டன் என்பவரால், பெருமுக்கோண நிலஅளவைக்காக பரங்கிமலையிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள பெரும்பாக்கம் (சோழிங்கநல்லூர் அருகிலுள்ள பெரும்பாக்கம்) எனும் இடம்வரை அடிப்படைக்கோடு (base line) *அமைத்து பணி துவங்கப்பட்டது. 'கிரேட் ஆர்க்' நிலஅளவை முறையில் கன்னியாகுமரி முதல் காசுமீரம் வரை நிலஅளவை மேற்கொள்ளப்பட்டபோது, சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த தமிழகத்தை ஆரம்பப் பகுதியாகக் கொண்டு நிலஅளவை மேற்கொள்ளப்பட்டது. உலகப் புகழ்பெற்ற 'கிரேட் ஆர்க்' நிலஅளவை, பரங்கிமலை முதல் பெரும்பாக்கம் வரையான பகுதியின் அளவீட்டுடன் 10.4.1802-இல் துவங்கப்பட்டு, அதே இடத்தில் 62 ஆண்டுகளுக்கு பின்னர் முடிவடைந்தது.*

6.1.1. பல்வேறு வகையில் மேற்கொள்ளப்பட்ட நிலஅளவைப் பணிகள்

பல்வேறு வகை நில அளவை திட்டங்கள், வெவ்வேறு காலங்களில் இத்துறையால் செயல்படுத்தப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:

1. *துவக்க நிலஅளவை : 1826*

[2016 செப்டம்பர் 1


2.	ரயத்துவாரி முதல் நிலஅளவை	:	1858
3.	நகர நிலஅளவையில் உள்ள பிளாக் வரைபடங்கள்	:	1891-1894
4.	மலைக்கிராம நிலஅளவை	:	1883
5.	மறு நிலஅளவை	:	1905 - 1926
6.	நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம்	:	1979 - 1987
7.	நத்தம் நிலஅளவை	:	1989 - 1992
8.	துணை நகர நிலஅளவை	:	1989 - 1997

6.2. துறையின் அமைப்பு நிலை

சென்னை, சேப்பாக்கத்திலுள்ள "நிலஅளவை இல்லத்தில்" நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககம் அமைந்துள்ளது. இவ்வியக்ககத்தில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் எனும் இரு பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் இவ்வியக்ககத்தின்மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மாநில அளவிலான நில அளவை வரைபடம் தயாரித்தலை செயல்படுத்தி வெளியிடும் மத்திய நில அளவை அலுவலகமும் இவ்வியக்ககத்தில்தான் அமைந்துள்ளது. நிலஅளவை பதிவேடுகள் துறையின் உதவி இயக்குநர்களின் தலைமையின்கீழ் செயல்படும் மாவட்ட நிலஅளவை அலுவலகங்கள், ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திலும் அமைந்துள்ளன. நிலஅளவைத் திட்டங்களை அடிப்படை நிலையிலிருந்து செயல்படுத்துவது இவற்றின் பொறுப்பாகும். ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் உள்ள நிலஅளவைப் பிரிவு, நில உரிமை மற்றும் நிலவகைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நில ஆவணங்களை பராமரிப்பதை பொறுப்பாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

2016 செப்டம்பர் 1]

அமைப்பு விளக்கப் படம்



6.3. மாநில அரசின் திட்டங்கள்

6.3.1. நகர அளவை

கிராமங்கள் முன்னேற்றமடையும்போது பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன. அவை மேலும் வளரும்போது, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன. கிராம மற்றும் பேரூராட்சிகளில் மரபு சார்ந்த நடைமுறைகளான மூலைவிட்ட செங்குத்து முறை (Diagonal & Offset) *போன்றவற்றை பின்பற்றி வருவாய் நில அளவை* (Cadastral Survey) *மேற்கொள்ளப்பட்டு, நிலம் சார்ந்த ஆவணங்கள், புலப்படச்சுவடி, 'அ' பதிவேடு, சிட்டா, மற்றும் அடங்கல் ஆகிய வடிவங்களில் பராமரிக்கப்படுகின்றன.*

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில், வார்டுகள், பிளாக்குகள், நகர அளவை எண்கள் வாரியாக நில அளவை மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில், வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகரஅளவை நிலப்பதிவேடு மற்றும் சிட்டா ஆகிய நில ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன. எனவே, பேரூராட்சிகள் அரசால் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்படும்போது, நகர நில அளவை முறையில் புதியதாக நில அளவை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மாநகராட்சிகள்

1.	மொத்த மாநகராட்சிகள்	12
2.	மாநகராட்சியில் பழைய எல்லைகளின்படி நகர நிலஅளவை பணி முடிக்கப்பட்டது (மரபு சார்ந்த நிலஅளவை முறைகளின்படி)	12
3.	மாநகராட்சிகளின் விரிவாக்கப் பகுதிகளில் நவீன நில அளவை முறைப்படி நகர நில அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை	8
4.	நகர அளவைப் பணி துவங்கப்பட உள்ள மாநகராட்சிகள் (நவீன நிலஅளவை கருவிகள் மூலமாக)	4

2016 செப்டம்பர் 1]

நகராட்சிகள்

1.	மொத்த நகராட்சிகள்	152
2.	நகர அளவை முடிக்கப்பட்டது (மரபு சார்ந்த முறைகளின்படி)	84
3.	நகர அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை (நவீன நில அளவை)	12
4.	நகர அளவைப் பணி துவங்கப்பட உள்ள நகராட்சிகள் (நவீன நிலஅளவை கருவிகள்)	56

6.3.2. நத்தம் மற்றும் மலைக் கிராம நிலஅளவை

கிராமத்தில் நத்தம் என்பது குடியிருப்பு பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்டு, நத்தம் புறம்போக்காக வருவாய் ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளாகும். இத்தகைய நத்தம் புறம்போக்கு குடியிருப்புப் பகுதிகளில் வசிப்போருக்கு அவர்களது அனுபோகத்துக்கேற்றவாறு உட்பிரிவு ஆவணங்கள் ஏதும் வருவாய் ஆவணங்களில் இல்லாமல் இருந்தது. எனவே, இத்தகைய நத்தம் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு பட்டா வழங்குவதற்காக நடைபெற்ற நத்தம் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட பணிகள், திருவள்ளூர் மாவட்டம்-அம்பத்தூர், நீலகிரி-பந்தலூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களில் நடைபெற்று வரும் நிலவரித் திட்ட பணிகளைத் தவிர மாநிலத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மலைக் கிராமங்களில் நில அளவை செய்வதற்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், சமவெளிப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தினின்றும் வேறுபட்டதாகும். மலைக் கிராம அளவைப் பணி 6 மாவட்டங்களில் உள்ளடங்கிய 67 மலைக் கிராமங்களில் நிறைவுபெற்றுள்ளது. 60 மலைக் கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி நிறைவுபெற்றுள்ளது. மீதமுள்ள 7 மலைக் கிராமங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

6.3.3. நவீன மறு நில அளவை

நவீன மறு நில அளவை முறையை அறிமுகப்படுத்துவதென்பது, மில்லிமீட்டர் அளவிற்கு துல்லியமான நில ஆவணங்களை உருவாக்குவதை உறுதி செய்வதுடன், நிலங்கள் மற்றும் அவற்றின் வகைப்பாடுகள் குறித்த விவரங்களடங்கிய இலக்கமுறை தரவுத்தளத்தை (Digital database) *உருவாக்கிட வழிவகுக்கும். இது, மக்கள் தமது நிலங்களின் விவரங்களை அறிந்து கொள்வதற்கும் நிலங்களின் பயன்பாடுகளை எளிதாக திட்டமிடுவதற்கும் உதவிகரமாகவும் அமையும். மேலும் இலக்கமுறை தரவு தளத்தில் ஆவணங்களை பராமரிப்பதன்மூலம் முறைகேடான நிலப்பரிவர்த்தனைகள் தடுக்கப்படுவதுடன், இணையவழியில் அரசு நிலங்களை கண்காணித்து பாதுகாக்கவும் இயலும்.*

நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணி நடைபெறும் மாநகராட்சி மற்றும் அதன் விரிவாக்கப் பகுதிகளின் விவரம்:

வ.எண்	மாவட்டம்	நடைபெறும் இடம்
1.	சென்னை	சென்னை
2.	திருப்பூர்	திருப்பூர்
3.	வேலூர்	சத்துவாச்சாரி
4.	மதுரை	திருப்பரங்குன்றம்
5.	கோயம்புத்தூர்	கவுண்டம்பாளையம்
6.	ஈரோடு	பெரியசேமூர்
7.	திருச்சி	துவாக்குடி
8.	திருவள்ளூர்	வளசரவாக்கம்

2016 செப்டம்பர் 1]

நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணி நடைபெறும் நகராட்சிகளின் விவரம்:

வ.எண்	மாவட்டம்	நடைபெறும் இடம்
1.	காஞ்சிபுரம்	பம்மல்
2.		அனகாபுத்தூர்
3.	சேலம்	நரசிங்கபுரம்
4.	தேனி	கூடலூர்
5.	திருநெல்வேலி	அம்பாசமுத்திரம்
6.	தூத்துக்குடி	காயல்பட்டினம்
7.	விருதுநகர்	திருத்தங்கல்
8.	இராமநாதபுரம்	கீழக்கரை
9.	பெரம்பலூர்	பெரம்பலூர் நகரம்
10.	திண்டுக்கல்	ஒட்டன்சத்திரம்
11.	விழுப்புரம்	கள்ளக்குறிச்சி
12.	நாகப்பட்டினம்	வேதாரண்யம்

சட்டமன்றத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்கு ஏற்ப நில இயல் நிலைக்கலன் (ஜி.பி.எஸ்) மற்றும் மின்னணு நில அளவைக் (ஈ.டி.எஸ்) கருவிகளைக் கொண்டு கீழ்க்காணும் மூன்று முன்மாதிரி வட்டங்களில் மறு நில அளவைப் பணி துவங்கப்பட்டுள்ளது.

1.	அகஸ்தீஸ்வரம் வட்டம்	–	கன்னியாகுமரி மாவட்டம்
2.	ஊத்தங்கரை வட்டம்	–	கிருஷ்ணகிரி மாவட்டம்
3.	உதகமண்டலம் வட்டம்	–	நீலகிரி மாவட்டம்

இந்த முன்னோடி ஆய்வு பணி வெற்றிகரமாக முடிவடைந்த பின்னர், மாநிலம் முழுவதும் உள்ள பிற மாவட்டங்களுக்கு மேற்குறிப்பிட்ட நவீன தொழில்நுட்ப மறு நில அளவைப் பணி விரிவாக்கம் செய்யப்படும்.

6.4. நில அளவை ஆவணங்களை கணினிப்படுத்துதல்

6.4.1. கிராம மற்றும் நகர நில ஆவணங்களின் வகைகள்

ஊரகப் பகுதிகளில்...

(1) 'அ' பதிவேடு - புல எண் வாரியான கிராம நில ஆவணங்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. இதில் மாவட்டம், வட்டம், கிராமம், புல எண், உட்பிரிவு எண், நில வகைப்பாடு, பாசன ஆதாரம், தரம், பரப்பளவு, தீர்வை, உரிமையாளர் பெயர் போன்ற விவரங்கள் அடங்கும்.

(2) சிட்டா - பட்டாதாரர் வாரியாக கிராம நில ஆவணங்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. பட்டாதாரர் வாரியாக அவர்தம் உடைமையிலுள்ள நிலப் பரப்பளவு பற்றிய விவரங்கள் மற்றும் நன்செய், புன்செய் நிலங்களுக்கான வருவாய்த்தீர்வை கணக்கீட்டு விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(3) புலப்படப் புத்தகம் - தனிப்புலம் அல்லது உட்பிரிவுகளை உள்ளடக்கிய வரைபடங்களைக் கொண்டது.

(4) அடங்கல் - விளைவிக்கப்படும் பயிர்வகை விவரங்களைக் கொண்டது.

(5) கிராம வரைபடங்கள் - கிராமங்களின் அனைத்து புல எண்களையும் உள்ளடக்கியது. கிராமங்களின் எல்லைப்புறங்களின் மாற்றம் ஏற்படும்போது மட்டுமே கிராம வரைபடங்கள் திருத்தம் செய்யப்படும்.

(6) கோண அளவை (Traverse records) ஆவணங்கள் மற்றும் அது தொடர்பான நிலஅளவை ஆவணங்கள்.

நகரப் பகுதிகளில்...

(i) நகர நில அளவைப் பதிவேடு-நகர நில அளவைப் புல எண் வாரியாக பழைய புல எண்களுடன் இயைந்த

2016 செப்டம்பர் 1]

விவரங்கள் மற்றும் நில வகைப்பாடு, பரப்பளவு, கதவு எண், தெருப்பெயர்கள், நில உரிமைதாரர் பெயர் மற்றும் நிலப் பயன்பாடு போன்ற விவரங்களை உள்ளடக்கியது.

(ii) பிளாக் வரைபடம்-தெருப்பெயர்களுடன்கூடிய நகர நில அளவைப் புல எண்களின் கூட்டு வரைபடங்களைக் கொண்டது.

6.4.2. கணினிப்படுத்துதலில் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள்

மேலே விவரிக்கப்பட்டுள்ள பல்வகைப்பட்ட நில ஆவணங்களைக் கணினிப்படுத்துவதற்கென வெவ்வேறு மென்பொருட்கள் தேவைப்படுகின்றன. கிராம மற்றும் நகர நில ஆவணங்களின் கலங்களின் அமைப்பு வேறுபட்டவையென்பதால் மேற்படி ஆவணங்களைக் கணினிப்படுத்த பொதுவானதொரு மென்பொருளை உபயோகிக்க இயலாது. எனவே, தேசிய தகவல் மையம்மூலம் கீழ்க்காணும் மென்பொருட்களை வெவ்வேறு காலகட்டங்களில் இத்துறை உருவாக்கியுள்ளது.

(i) கிராமப்புற நில ஆவணங்களைக் கணினிப்படுத்துவதற்கென 'தமிழ்நிலம்' (தமிழ்நாடு நில நிருவாகம் மற்றும் மேலாண் தகவல் அமைப்பு) மென்பொருள்.

(ii) புலப்படங்களைக் கணினிப்படுத்துவதற்கென 'கொலாப்லேண்ட்' மென்பொருள்.

(iii) கிராமப்புற நில ஆவணங்களை இணையவழியே பராமரிப்பதற்கென 'இணையம் சார்ந்த தமிழ்நிலம்' மென்பொருள்.

(iv) நகர்ப்புற நில ஆவணங்களை இணையவழியே பராமரிப்பதற்கென 'இணையம் சார்ந்த தமிழ்நிலம்' மென்பொருள்.

6.4.3. நகர்ப்புற நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்

நகர்ப்புற நில ஆவணங்களின் கலங்கள் கிராமப்புற நில ஆவணங்களினின்று வேறுபட்டுள்ளதால், முதலில் கிராமப்புற நில

ஆவணங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டபோது நகர நில ஆவணங்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. பின்னர் நகர நில ஆவணங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது மொத்தமுள்ள 38.13 இலட்சம் நகர நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டு, ஒப்பிடல் பணியும் முழுமையாக நிறைவு பெற்றுள்ளது.

நகர நில ஆவணங்களுக்கான இணையம் சார்ந்த மென்பொருள் தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்டு, அது சென்னையிலுள்ள மாநில தரவு மையத்தில் உள்ள சேவைக் கணினியில் நிறுவப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தில் இதுவரை 6 வட்டங்களில் இணையவழி பட்டா மாறுதல் சேவை சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 வட்டங்களிலும் மிக விரைவில் செயல்படுத்தப்படும். இதர நகர்ப்புற பகுதிகளான நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் இணையவழி பட்டா மாறுதல் திட்டம் 31-1-.2016-க்குள் செயல்படுத்தப்படும்.

6.4.4. நத்தம் நில ஆவணங்களை கணினிப்படுத்துதல்

நத்தம் நில ஆவணங்களை கணினிப்படுத்தும் பணி அனைத்து மாவட்ட நில அளவை அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. மொத்தமுள்ள 1.37 கோடி நத்தம் நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டு, ஒப்பிடல் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கணினிப்படுத்தப்பட்ட நத்தம் நில ஆவணங்கள் இணையம் சார்ந்த தமிழ்நிலம் மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு நத்தம் பட்டாக்களை இணையம் வழியே வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6.4.5. புலப்படங்களைக் கணினிமயமாக்கல்

தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்ட கொலாப்லேண்ட் மென்பொருள்மூலம் புலப்படங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தமுள்ள 54.31 இலட்சம் புலப்படங்களில் 39.40 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள

புலப்படங்களும் 31-12-2016-க்குள் கணினிப்படுத்தப்படும். மேலும், இணையவழி பட்டாவுடன் கணினிப்படுத்தப்பட்ட புலப்படத்தினை இணைத்து வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

6.4.6. கிராம வரைபடங்களைக் கணினிப்படுத்துதல்

அனைத்து கிராம வரைபடங்களின் ஒளி பிம்ப நகல் எடுக்கப்பட்டு இலக்க முறையில் சேமிக்கப்பட்டுள்ளன. புவிசார்ந்த தகவல் தொடர்பு அமைப்பு முறையை வரைபடங்கள் மற்றும் கிராம வரைபடங்களில் உட்புகுத்தி கிராம வரைபடங்களைக் கணினிப்படுத்தும் பணி சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,000 கிராம வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள பணி ஓராண்டு காலத்திற்குள் நிறைவு செய்யப்படும்.


6.4.7. இணையவழி பட்டா மாறுதல் திட்டம்

கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களை இணையவழியில் பராமரிப்பதற்கான மென்பொருள் தேவை குறிப்பு ஆவணம் (Software Requirement Specification Document) *தயாரிக்கப்பட்டு, தேசிய நில ஆவண மேம்பாட்டுத் திட்டத்தின் மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு, இத்துறை அலுவலர்களின் தொடர் கண்காணிப்பு மற்றும் கருத்துக்களின்மூலம் 'இணையம் சார்ந்த மென்பொருள்' தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களைப் பராமரிக்கும் பொருட்டு சென்னை அருகே பெருங்குடியில் உள்ள மாநில தரவு மையத்தில் சேவைக் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன.*

[2016 செப்டம்பர் 1

நில ஆவணங்களை இணையவழி தமிழ்நிலம் மென்பொருள் வழியாக வெளியிடுவதற்குத் தேவையான வழிமுறைகள்

வட்ட அலுவலகங்களால், நிலஆவணங்களை இணையவழியில் கொண்டு வரப்படுவதற்கு கீழ்க்காணும் வழிமுறைகள் தேவைப்படுகின்றன.



2016 செப்டம்பர் 1]

பெரம்பலூர் வட்டம் 9-11-2014 முதல் இணையவழிப் பயன்பாட்டிற்கு சோதனை அடிப்படையில் கொண்டு வரப்பட்ட பிறகு, 1-7-2015 அன்று ஸ்ரீரங்கம் வட்டத்தில் இத்திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தொடர்ச்சியாக 2015 ஆம் ஆண்டிலேயே கூடுதலாக 126 வட்டங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. தற்போது வரையில் மொத்தமுள்ள 285 வட்டங்களில் 267 வட்டங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டம்கூடிய விரைவில் இதர வட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

(அ) பொது மக்களுக்கான பயன்கள்

- பொது மக்கள் அருகாமையில் அமைந்துள்ள பொதுச் சேவை மையத்தின்மூலம் இணைய வழியில்பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- கணினிமூலம் அச்சிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக வழங்கப்படுவதுடன், மனுக்களின் மீதான பரிசீலனையும் முறைப்படி மேற்கொள்ளப்படுகிறது.
- தமது விண்ணப்பத்தின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தையும் அதன் தற்போதைய நிலை குறித்தும் இணையம்மூலம் அறிந்து கொள்ள இயலும்.
- வட்டாட்சியர்/துணை வட்டாட்சியரால் பட்டாவிற்கான விண்ணப்பத்தினை அங்கீகாரம்/நிராகரிப்பு செய்யப்படும் போது விண்ணப்பதாரர்களின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அளிக்கப்படுகிறது.
- இலக்க முறையில் ஒப்பமிடப்பட்ட பட்டாவை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பொது மக்கள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் தவிர்க்கப்படும்.
- நிலம் தொடர்புடைய சேவைகள் அனைத்தும் மின்சேவை மூலமாக உடனுக்குடன் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்படும்.

- *இதுவரை (16-8-2016 வரை) 8,67,488 இணையவழி பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 6,34,675 விண்ணப்பங்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

(ஆ) அலுவலர்களுக்கான பயன்கள்

- *பணித்தொடர் முழுமையும் கணினிப்படுத்தப்பட்டுள்ளதால், அலுவலர்களின் பணிப்பளு வெகுவாக குறைக்கப்படுவதுடன், தமது வழக்கமான பணிகளை எளிதாக மேற்கொள்ளலாம்.*

- *புதிய பொலிவுடன்கூடிய தொழில்நுட்பச் சூழலில் அலுவலர்கள் பணிபுரிய இயலும்.*

- *உயர் அலுவலர்கள் பணியின் நிலையை இணையம் வாயிலாக நெருக்கமாக கண்காணிக்க இயலும்.*

- *நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை அலுவலர்கள் எந்நேரத்திலும் ஆய்வு செய்து, தேவையான அறிவுரைகளை வழங்க இயலும்.*

6.4.8. பதிவுத் துறை தரவு தளத்துடன் நில அளவை ஆவணங்களை ஒருங்கிணைத்தல்

- *இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள கணினிமயப் படுத்தப்பட்ட நில ஆவணங்களில் உள்ள நில உரிமை குறித்த விவரங்களை, உறுதிப்படுத்திக்கொண்ட பின்னரே, நில பரிவர்த்தனைகளை பதிவுத் துறை அனுமதிக்கிறது.*

- *நிலப் பரிவர்த்தனையின்போது நிகழ்நிலைப்படுத்தப்பட்ட நில அளவை ஆவணங்களை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவுத் துறை அலுவலர்கள் பார்வையிடவும், பரிவர்த்தனையின்போது பெறப்பட்ட ஆவணங்களை சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் உபயோகப்படுத்திக்கொள்ளவும் தானியக்கப் பரிமாற்றம்* (automatic transfer) *நடைபெறுவதற்கு வழிவகை செய்யப்படவுள்ளது.*

- *இந்த மென்பொருள் தொகுதி, விரைவில் சோதனைக்குட்படுத்தப்பட்டு, 31-12-2016-க்குள் அனைத்து வட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.*

2016 செப்டம்பர் 1]

6.5. தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்

'நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம்' மற்றும் 'வருவாய் நிருவாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் திட்டம்' ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து 'தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்' என ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (Digital India Land Records Modernization Programme) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு மாநில அரசு தனது பங்களிப்பான நிதி ஆதாரங்களை வழங்கி, பொதுமக்களின் சேவையை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விதமாக நில மேலாண்மையை நவீனப்படுத்துதல், நிலம் சம்பந்தப்பட்ட சொத்துகள் மீதான தாவாக்களை குறைத்தல், நில ஆவணங்களை பராமரித்தலில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், உத்தரவாதத்துடன் கூடிய உரிமை ஆவணத்தை வழங்கும் நிலையை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின்கீழ், அரசினால் இத்துறையின்மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

6.5.1. நில ஆவண மேலாண்மை மையங்கள் (LRMCs)

நில ஆவண மேலாண்மை மையங்கள்/நவீன ஆவண காப்பறைகள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் அனைத்து வட்டங்களிலும் பொது சேவை மையங்களாகச் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்கு வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் ஒற்றைச் சாளர முறையில் நில ஆவண மேலாண்மை மையங்கள் வாயிலாக வழங்கப்படும்.

[2016 செப்டம்பர் 1

நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள விவரம்

வ. எண்.	நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டு	ஒப்பளிப்பு செய்துள்ள மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்)	நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட வட்டங்கள் எண்ணிக்கை
1.	2011–2012	525.00	21
2.	2013–2014	855.00	57
3.	2014–2015	1140.00	76
	மொத்தம்	2520.00	154

தற்போதைய நிலை

(1) இதுவரை பல்வேறு மாவட்டங்களில் உள்ள 65 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் நிறுவப்பட்டு செயலாக்கத்திற்கு வந்துள்ளன.

(2) அனைத்து பழைய ஆவணங்களை பாதுகாக்க தகுந்த உள்கட்டமைப்பு வசதிகள் நில ஆவண மையங்களில் ஏற்படுத்தப்படும்.

(3) அனைத்து பழைய நில ஆவணங்களையும் பொது மக்கள் எளிதாகப் பெறும் வகையில் ஒளிபிம்ப நகல் எடுத்து அட்டவணைப்படுத்தப்பட்டு இலக்க முறையில் பாதுகாக்கப்படும்.

6.5.2. புதிதாக உருவாக்கப்பட்ட வட்ட மற்றும் வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கு கணினி வழங்குதல்

பொது மக்கள் நில ஆவணங்களை எளிதாகப் பெறும் வகையில் தமிழகம் முழுவதும் வட்ட தலைமையகங்களில் வட்ட தரவு மையங்களும், வருவாய் கோட்ட தலைமையகங்களில்

2016 செப்டம்பர் 1]

கோட்ட தரவு மையங்களும் ஏற்படுத்தப்பட்டு, இவற்றிற்கு கணினி உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட 65 வட்ட அலுவலகங்களில் 34 வட்ட அலுவலகங்களுக்கும், 9 வருவாய் கோட்ட அலுவலகங்களில் 8 வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கும் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 31 வட்ட அலுவலகங்கள் மற்றும் ஒரு வருவாய் கோட்ட அலுவலகம் ஆகியவற்றிற்கு கூடியவிரைவில் கணிப்பொறி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

6.5.3. தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்ட பிரிவு (NLRMP Cell)

தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ஒரத்தநாட்டிலுள்ள நில அளவை பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சி பிரிவினை ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நவீன நில அளவை மற்றும் இலக்க முறை படம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி அளிக்க ஒரு பயிற்சி பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக மின்னணு நில அளவை கருவிகள் (Electronic Total Stations) லேசர் ஜெட் அச்சுப்பொறி, நில இயல் நிலைக்கலன் (Global Poistioning), ஆட்டோ கேட் (AutoCad) மென்பொருள், அறைகலன்கள், எழுதுபொருட்கள், நூலக புத்தகங்கள், பயிற்சிக்கு தேவையான பொருட்கள் மற்றும் 10 KVA மின்ஆக்கி (Generator) ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நில அளவை பயிற்சி மையம் தவிர சென்னையிலும், ரூ.2.45 கோடி செலவில் நவீன வசதிகளை கொண்ட நவீன நில அளவை பயிற்சி மற்றும் படம் தயாரித்தல் தொடர்புடைய பயிற்சியினை வழங்கும் பொருட்டு ஒரு பயிற்சி மையம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6.6. நில அளவைத் துறையின் சாதனைகள்

(1) குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்

2013-2014 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி எண். 110-ன்கீழ்

அறிவித்ததன்படி 100 குறுவட்டங்களுக்கு குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனால் பொது மக்கள் தாங்கள் வசிக்கும் குறுவட்டங்களிலேயே குறுவட்ட அளவர்களை எளிதாகத் தொடர்பு கொள்ள இயலும். இத்திட்டம் பொது மக்களுக்கு மட்டுமல்லாது குறுவட்ட அளவர்கள் தங்களின் புல ஆய்வு தொடர்புடைய பணிகளை குறுவட்டத்திலேயே இருந்து மேற்கொள்ளவும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

(2) கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்களை (FMB Sketch) பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாகவும், இணைய வழி (Online) நில ஆவண பராமரிப்பிற்கு உபயோகமாகும் வகையிலும், 1,140 குறுவட்ட அளவர்களுக்கு (Firka Surveyors) மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

(3) பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ள ஏதுவாக குறுவட்ட அளவர்கள் தமது கைப்பேசியில் பொருத்தி, குறிப்பிட்ட எண்களுக்கு மட்டும் பேசக்கூடிய வகையில் BSNL-CUG (Closed User Group) திட்டத்தின்கீழ் குறுவட்ட அளவர்களுக்கும் (Firka Surveyors) ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்கள் ஆகியோருக்கும் 1,600 சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

(4) இணைய வழி பட்டா மாறுதல் திட்டப் பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தில் ஒரு காணொலி காட்சி அமைப்பு (Video Conferencing) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்பின்மூலம் உதவி இயக்குநர்கள் மற்றும் மாவட்ட அளவிலான நில அளவைப் பணியாளர்களுடன் திங்களிருமுறை காணொளி காட்சி ஆய்வுக் கூட்டம் கூட்டப்பட்டு அவர்களின் தேவைகள் உடனுக்குடன் அறியப்படுவதுடன் மட்டுமல்லாமல், அவர்களின் பணியும் ஆய்வு செய்யப்படுகிறது.

(5) நில அளவைப் பதிவேடுகள் துறையில் இதுவரை 1,232 நில அளவர் மற்றும் 455 வரைவாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. தற்போது 224 நில அளவர் மற்றும் 184 வரைவாளர் பணியிடங்களை

2016 செப்டம்பர் 1]

நிரப்பும் நடவடிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. புதிதாக பணி நியமனம் பெற்றவர்களுக்கு புலத்திலும், கணினியிலும் பயிற்சி அளிக்கும் விதமாக ஏற்கெனவே நில அளவைப் பதிவேடுகள் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 100 சார் ஆய்வாளர்களை மறு நியமனம் செய்ய அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஓய்வுபெற்ற அலுவலர்கள் மறுநியமனம் செய்யப்பட்டு புதிய நிலஅளவர், வரைவாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

6.7. கிராம/வட்ட/மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரித்தல்

2014-2015 ஆம் நிதியாண்டில் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராம/வட்ட/மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பணிகளை உரியகாலத்திற்குள் முடித்திட ஏதுவாக தேவையான இடவசதி ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளதுடன் 25 கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை அனைத்து மாவட்ட மற்றும் வட்டங்களின் வரைபடங்களும் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராமங்களின் வரைபடங்களை தமிழில் கணினிப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. முழுவீச்சில் நடைபெற்றுவரும் இப்பணி ஓராண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.

கணினிமயமாக்கப்பட்ட கிராம/வட்ட/மாவட்ட வரைபடங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்ட பின்னர் பொது மக்களுக்கு பயன்பாட்டிற்கு கிடைக்க வசதிகள் செய்யப்படும். மேலும் இந்த வரைபடங்களை இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படும். தமிழ் மொழியிலான இந்த வரைபடங்கள் கிராம மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும்.

மாவட்ட/வட்ட/கிராம வரைப்படங்கள் இணையதளத்தில் வெளியிடப்படுவதால் அவை பொது மக்களுக்கு பயனுள்ளதாக அமைவதுடன் நில அளவை வரைபடங்களை பயன்படுத்தும் இதர அரசுத் துறைகளும் அவற்றை இணையம்மூலம் பதிவிறக்கம் செய்து பயனடையலாம். இது நிலஅளவைத் துறையின் சாதனைகளில் ஒன்றாக அமையும்.

[2016 செப்டம்பர் 1

6.8. நிலவரித் திட்டம்

தொன்று தொட்டு நிலஉடைமையாளர்களிடமிருந்து, நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குரிய பாகமாக பெறும் உரிமை இருந்து வந்துள்ளது. இதற்குரிய பரிமாற்ற பணமதிப்பை 'நிலவரி' என்றும் இதனை கணக்கிடும் முறையை 'வருவாய் நிலவரித் திட்டம்' என்றும் அழைக்கின்றோம். இரயத்துவாரி நிலவரித் திட்டத்தின்கீழ் மண்ணின் கூட்டமைப்பு, மண்ணின் பண்புகளுக்கேற்ப தரம் மற்றும் வகைகளாக பிரித்தல் மற்றும் மண்ணின் விளைவிக்கும் திறனை பாதிக்கக்கூடிய இதர காரணிகள் ஆகியவைகளின் அடிப்படையில் "நிலவரி" நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் காலத்தில், குடியானவர்களிடமிருந்து ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்கள் நிலவரியை அதிகமான அளவில் வசூலித்ததாலும் மண்ணின் விளைவிக்கும் திறன் அடிப்படையில் வரி நிர்ணயிக்கப்படாததாலும், ஜமீன் எஸ்டேட்டுகளில் இருந்த குடியானவர்கள் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தார்கள். நிலவரிச் சுமையை குறைப்பதற்காகவும், குடியானவர்களிடமிருந்து அரசே நேரடியாக வசூலிப்பதற்காகவும் அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித் திட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை சாதிப்பதற்காக, பல இடைத்தரகர் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன.

1. தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXIV/1948)

2. தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

3. தமிழ்நாடு குத்தகை உடைமை (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)

4. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

5. *தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)*

6. *தமிழ்நாடு வரியில்லா நிலங்களில் வரி விதித்தல் சட்டம் 1972 (தமிழ்நாடு சட்டம் 31/1973)*

7. *தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) இரயத்துவாரி நிலவரித் திட்ட சட்டம் 1964 (தமிழ்நாடு சட்டம் 30/1964)*

தமிழ்நாடு சட்டம் 26/1963-இன்கீழ் வரும் 7 எஸ்டேட்கள் மற்றும் தமிழ்நாடு சட்டம் 30/1963-இன்கீழ் வரும் 8 கிராமங்களையும் தவிர இதர அனைத்துப் பகுதிகளிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு சட்டம் 24/1969-இன்கீழ் நீலகிரி மாவட்டம் ஜென்மம் நிலங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

நிலவரித் திட்ட சட்டங்களின்கீழ் பணிகள் நிலுவையிலுள்ள விவரங்கள் பின்வருமாறு:

I. தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த எஸ்டேட்டுகளில் பின்வரும் 10 எஸ்டேட்டுகளைத் தவிர, இதர அனைத்து எஸ்டேட்டுகளிலும் நிலவரித் திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டன. பல்வேறு நீதிமன்ற வழக்குகளினால் நிலவரித் திட்டப் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படவில்லை. தற்போது நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்த இனங்களில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2016 செப்டம்பர் 1

ஒவ்வொரு எஸ்டேட்/கிராமங்களில் பணிகளின்

தற்போதைய நிலை பின்வருமாறு

வ. எண்	கிராமத்தின் பெயர்	வட்டம் மற்றும் மாவட்டம்	தற்போதைய நிலை
1.	அரையபுரம் தட்டிமால் படுகை	பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்	நிலவரித்திட்டப் பணி நடைபெற்று வருகிறது.
2.	சூரிய நாராயணபுரம்	பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்	நிலவரித்திட்டப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.
3.	இராமச்சந்திரன் கோயில்பத்து	தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்	நீதிமன்ற வழக்கின் முடிவினை எதிர்நோக்கி நிலவரித்திட்டப் பணி நிலுவையில் உள்ளது.
4.	கழனிவாய்ப்பட்டி	திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்	நிலவரித்திட்டப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.
5.	சென்னசந்திரம்	ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்	நிலஅளவை ஆவணங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.
6.	திம்மசந்திரம்		
7.	உளியாளம்		
8.	பைரசந்திரம்	ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்	தமிழ்நாடு சட்டம் 26/1963–ஐ வரைவு அறிவிக்கையிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கையில் உள்ளது.
9.	இளையசந்திரம்		
10.	மாரசந்திரம்		

2016 செப்டம்பர் 1]

II. தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றி அவற்றில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இச்சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில் பின்வரும் 5 கிராமங்களில் மட்டும் நிலவரித் திட்டப் பணிகள் நிலுவையில் உள்ளன. பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்குப் பின் தற்போது நிலவரித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

வ. எண்	கிராமத்தின் பெயர்	வட்டம் மற்றும் மாவட்டம்	தற்போதைய நிலை
1.	காரணப்பட்டி	இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்	நிலவரித் திட்டப் பணி நடவடிக்கையில் உள்ளது.
2.	கோதண்டராமபுரம்	இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்	
3.	நிலையப்பட்டி	இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்	நிலஅளவைப் பணி நடவடிக்கையில் உள்ளது.
4.	அகஸ்தியம்பள்ளி	வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்	
5.	தாரிக்கொம்பன்	இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்	மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

III தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்டுகளில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை கைப்பற்றி அவ்வுடமைகளில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது.

இச்சட்டத்தை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9-வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து, சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகள் புதுதில்லி உச்சநீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு வழக்குகள் மற்றும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தனர். இறுதியாக உச்சநீதிமன்ற மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, இந்திய அரசியலமைப்பு சட்டம் 9-வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை உறுதி செய்து வழக்கு முடிக்கப்பட்டது. இதுவரை நிலவரித் திட்டப் பணி முடிக்கப்பட்ட பரப்பளவு விவரம்:

வ.எண்	விவரங்கள்	விஸ்தீரணம் (ஏக்கரில்)
1.	மொத்த ஜென்மம் நிலங்கள்	80,087.74
2.	ஆரம்ப கட்டத்தில் நிலவரித் திட்டப் பணி முடிக்கப்பட்டது	28,087.03
3.	பிரிவு 53ன்கீழ் வனமாக அறிவிக்கப்பட்டது	17,014.43
4.	வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது	11,204.47
5.	வன நிலமாக அறிவிக்கப்பட்ட நிலங்களில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட பகுதி	5,809.96
6.	நிலவரித் திட்டப் பணி முடிக்கப்படவேண்டிய பரப்பு	34,986.28

2016 செப்டம்பர் 1]

இச்சட்டத்தின்கீழ் வனமாக அறிவிக்கப்பட்ட 17,014.43 ஏக்கர் நிலங்களில் 5,809.96 ஏக்கர் பரப்பு நீதிமன்ற வழக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதை தவிர்த்து அரசாணை (நிலை) எண் 363, வருவாய் [நிஅ.(1)] துறை, நாள் 28-11-2011-இன்படி 11,204.47 ஏக்கர் பரப்பு வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிலவரித் திட்டம் அமல்படுத்தப்படவேண்டிய மீதமுள்ள 34,986.28 ஏக்கர் நிலம் தொடர்பாக, உயர் நீதிமன்றம் மனுதாரர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பிரிவு 8 (அ) 9-இன்கீழ் பரிசீலிக்க நிலவரித் திட்ட அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலருக்கு உத்தரவிட்டது. அதன்படி நிலவரித் திட்ட அலுவலருக்கு (கூடலூர் ஜென்மம் நிலங்கள்) 566 மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதன் தற்போதைய நிலை பின்வருமாறு:

பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	566
முடிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	
(a) ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுக்கள் -- 0	
(b) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் -- 420	420
நிலவரித் திட்ட அலுவலரிடம் நிலுவையிலுள்ள மனுக்கள்	146
நிலவரித் திட்ட அலுவலரின் உத்தரவினை எதிர்த்து ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் (JAT) மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்கள்	317
ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்கள்	08
ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் நிலுவையிலுள்ள மனுக்கள்	309
ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தின் உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்கள்	06

6.8.1. திட்டங்கள்

6.8.1.1. நத்தம் நிலவரித் திட்டம்

அரசாணை (நிலை) எண் 1971, வருவாய்த் துறை, நாள் 14-10-1988-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில், மாநிலம் முழுவதும் (பழைய சென்னை நீங்கலாக) நத்தம் வீட்டுமனைப் பகுதிகளிலும் வேளாண்மைக்கு அல்லாத பிற காரணங்களுக்கு பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களிலும் நிலவரித் திட்டப் பணிகளை செயல்படுத்த அரசு, ஆணை பிறப்பித்தது. அதன்படி, 1999 ஆம் ஆண்டு வரையில், 12 வட்டங்களான கன்னியாகுமரி மாவட்டம் (4 வட்டங்கள்), நீலகிரி மாவட்டம் (6 வட்டங்கள்), காஞ்சிபுரம் மாவட்டம் (1 வட்டம்) திருவள்ளூர் மாவட்டம் (1 வட்டம்) மற்றும் சென்னை மாவட்டங்களில் சேர்க்கப்பட்ட 31 கிராமங்களைத் தவிர, இதர அனைத்து மாவட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் 2007 இல் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி, கன்னியாகுமரி மாவட்டம் (4 வட்டம்), காஞ்சிபுரம் மாவட்டம் (1 வட்டம்) மற்றும் சென்னை மாவட்டத்தில் சேர்க்கப்பட்ட 31 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

6.8.1.2. மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி

அரசாணை (நிலை) எண் 113, வருவாய்த் துறை, நாள் 2-2-1995-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் 67 மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி தொடர அரசு ஆணை பிறப்பித்தது. இதில், 60 கிராமங்களில் இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் பச்சமலை கிராமத்தில் விவசாய நிலங்களுக்கு பட்டா வழங்கும் பணி முடிவுற்று மனைப் பகுதிகளில் பட்டா வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், ஆனைமலைக்குன்றுகள் கிராமம், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டத்திலுள்ள 4 மலைக் கிராமங்கள், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மலை கிராமம் ஆகிய இடங்களில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

2016 செப்டம்பர் 1]

6.8.1.3. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின் தொடர் பணி

அரசாணை (1டி) எண் 103, வருவாய் [நி.அ.2(1)] துறை, நாள் 1-3-2007-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் ஆவணங்களின் பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும் நிலஉடமைதாரர்களுக்கு பட்டா வழங்கவும் ஆவணங்கள் தயார் செய்து மாவட்ட வருவாய் நிருவாகத்தின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும் வருவாய் பின் தொடர்பணி தொடங்க அரசால் உத்தரவிடப்பட்டது.

மொத்தமுள்ள 123 நகராட்சிகளில் 65 நகராட்சிகளில் இப்பணி நடைபெற்று வருகிறது மற்றும் 7 நகராட்சிகளில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 12 மாநகராட்சிகளில், 5 மாநகராட்சிகளில் 9 அலகுகளிலும் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி 74 நிலவரித் திட்ட வட்டாட்சியர் அலகுகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. தற்போதுள்ள அலகுகளில் பணி முடிந்தபின் மீதமுள்ள பகுதிகளில் பணி துவங்கப்படும்.

6.9. வக்ஃப் கணக்கெடுப்பு பணி

பொதுவாக வக்ஃப் என்பது இஸ்லாம் மதத்தைச் சார்ந்த வழிபடும் தலம், மதம் மற்றும் தொண்டு நிறுவனங்களை குறிப்பிடுவதாகும். ஒவ்வொரு வக்ஃப் நிறுவனத்திற்கும் உரிய அசையும் மற்றும் அசையா சொத்துகளை அந்தந்த வக்ஃபின் சொத்துகள் என கருதப்படுகிறது.

வக்ஃப் சட்டம் 1995 (மத்திய சட்டம் 43/95), மத்திய அரசால் இந்தியாவிலுள்ள வக்ஃப் மற்றும் அதன் தொடர்பான விஷயங்களை சிறந்த முறையில் நிர்வகிப்பது தொடர்பாக இயற்றப்பட்ட சட்டமாகும்.

இச்சட்டப் பிரிவு 4-இன்படி மாநில அரசு, அந்த மாநிலத்திற்கு ஒரு வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையாளரையும் தேவையான கூடுதல் மற்றும் உதவி வக்ஃப் ஆணையாளர்களையும் நியமித்து மாநிலத்தில் இச்சட்டம் தொடங்கும் நாளன்று மாநிலத்தில் உள்ள வக்ஃப், அதன் ஷியா மற்றும் சன்னி பிரிவு, அந்த வக்ஃபின் நோக்கம், அதன் மொத்த வருமானம், அரசுக்கு செலுத்தும் நிலவரி மற்றும் இதர வரிகள், அதன் செலவுகள் ஆகிய விவரங்களை சேகரிக்க வேண்டும்.

[2016 செப்டம்பர் 1

இதன்படி நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையரை வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையராகவும், அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களை கூடுதல் வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையாளர்களாகவும், அனைத்து வருவாய் வட்டாட்சியர்களை உதவி வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையர்களாகவும் நியமிக்கப்பட்டு இக்கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

இப்பணி இதுவரை 10 மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு படிவ விவரம்

மொத்த மாவட்டங்கள்	**வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்கள்**	**தற்போது முழுமையாக அறிக்கை பெறப்பட்ட மாவட்டங்கள்**	**பணி நடைபெற்று கொண்டிருக் கும் மாவட்டங்கள்**
32	**10**	**18**	**4**
மாவட்டங்கள்	1. விழுப்புரம்	1. விருதுநகர்	1. வேலூர்
	2. திருச்சிராப்பள்ளி	2. தஞ்சாவூர்	2. திருவாரூர்
	3. சிவகங்கை	3. நீலகிரி	3. திருவள்ளூர்
	4. நாமக்கல்	4. நாகப்பட்டினம்	4. சென்னை
	5. கரூர்	5. ஈரோடு	
	6. தேனி	6. திருநெல்வேலி	
	7. சேலம்	7. கன்னியாகுமரி	
	8. புதுக்கோட்டை	8. இராமநாதபுரம்	
	9. திருவண்ணாமலை	9. கிருஷ்ணகிரி	
	10. அரியலூர்	10. தருமபுரி	
		11. மதுரை	
		12. கோயம்புத்தூர்	
		13. திருப்பூர்	
		14. திண்டுக்கல்	
		15. தூத்துக்குடி	
		16. காஞ்சிபுரம்	
		17. பெரம்பலூர்	
		18. கடலூர்	

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.